2015 ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி
நடாத்தப்பட்ட இலங்கையின் பதினைந்தாவது
பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான

# தேர்தல்கள் ஆணையாளரின் அறிக்கை

# 2015 ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நடாத்தப்பட்ட இலங்கையின் பதினைந்தாவது பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான தேர்தல் ஆணையாளரின் அறிக்கை

மஹிந்த தேசப்பிரிய

தேர்தல்கள் ஆணையாளர்

CM 36179 - 25 (2021/05) அரசாங்க அச்சுத் திணைக்களம், இலங்கை.

## முன்னுரை

2015, ஆகஸ்ட் 07 ஆம் திகதி நடைபெற்ற 15 ஆவது பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான தேர்தல்கள் ஆணையாளரின் அறிக்கையை அந்தத் தேர்தல் நடைபெற்று ஒரு வருட காலத்திற்குள் வெளியிடுவதற்கு எதிர்பார்த்த போதிலும் 2015, நவம்பர் 13 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழு நிறுவப்பட்டதன் பின்னர் அதன் நான்கு வருடகால மூலோபாயத் திட்டத்தை தயாரித்தல், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் சட்டத்தில் நிலவிய தொழில்நுட்ப பிழைகளை சரிசெய்தல், உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல்கள் தாமதமடைதல் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியேற்பட்டமை போன்ற காரணங்களினால் இந்த அறிக்கையை தயாரிப்பதற்கு மூன்று வருடங்களிலும் அதிக காலம் எடுத்தமை சம்பந்தமாக மிகவும் கவலையடைகின்றோம்.

இந்த அறிக்கையை தயாரிப்பதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மஹிந்த தேசப்பிரிய,**
தேர்தல்கள் ஆணையாளர்.
(2011 - 2015)

தேர்தல்கள் அலுவலகம்,
இராஜகிரிய,
2019, மாச்சு 31.

# உள்ளடக்கம்

**தலைப்பு** **பக்க இலக்கம்**


பாராளுமன்ற தேர்தலை நடாத்துவதற்குரிய சட்டம் 01

பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 01

பெயர் குறித்த நியமனம் 01

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் 03

தேர்தலுக்கான பூர்வாங்க நடவடிக்கைகள் 05

தேருநர் இடாப்பு 05

வாக்கெடுப்பு பிரிவு, வாக்கெடுப்பு மாவட்டம், வாக்களிப்பு நிலையம் 06

வேறு வாக்களிப்பு நிலையமொன்றில் வாக்களிப்பதற்காக அனுமதி வழங்கல் 06

அஞ்சல் மூல வாக்களிப்புக்கு வசதியளித்தல் 07

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் 09

வாக்காளர்களை அடையாளம் காண்பதற்காக வாக்களிப்பு நிலையத்தில் அடையாள ஆவணங்களை பயன்படுத்தல் 10

துடைத்தழிக்க முடியாத மை 10

மரணமெய்திய அல்லது வெளிநாட்டில் உள்ள வாக்காளர்கள் 11

வலிமையிழப்பிற்குட்பட்டவர்களுக்கான விசேட போக்குவரத்து வசதிகளுக்கு அனுமதியளித்தல் 11

தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வாக்களிப்பதற்கு ஏற்ற வகையில் போதியளவு விடுமுறை வழங்குதல் 11

ஆளணித் தேவைப்பாடு 12

போக்குவரத்து தேவைப்பாடு 13

பாதுகாப்பு நடவடிக்கைகள் 14

போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களுக்கு தேர்தலுடன் தொடர்புடைய ஆவணங்களை இலவசமாக தபாலில் அனுப்புவதற்கான உரிமை 15

வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊடாக அரசியல் பிரச்சாரங்களை மேற்கொள்ளல் 15

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு அரசு உதவியளித்தல் 16

**தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள்**

உள்நாட்டு கண்காணிப்பு நிறுவனங்கள் 17

வெளிநாட்டு கண்காணிப்பு நிறுவனங்கள் 18

முறைப்பாட்டு நிலையங்களை நிறுவுதல் 18

அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்கள் மற்றும் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் 19

அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்வதனை தடுத்தல் 20

இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களினால் பின்பற்றி ஒழுக வேண்டிய வழிகாட்டு நெறிகள் எனும் வழிகாட்டல்கள் 21

அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களினால் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்க நெறிக்கோவை 21

வாக்கெடுப்பு 22

வாக்குச் சீட்டுக்களை எண்ணுதல் 27

பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தலும் வெளியிடுதலும் 30

வாக்களிப்புக்காக செலவு செய்யப்பட்ட செலவினங்கள் 33

**அவதானிப்புக்களும் சிபாரிசுகளும்** 35

தேர்தல் ஆளணி 35

பெயர் குறித்த நியமனங்கள் 35

அஞ்சல் வாக்கு 36

அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்காக அரச சொத்துக்களைப் பயன்படுத்தல் 37

ஊடக அளவுகோள்கள் 38

அவசர மற்றும் அத்தியாவசிய சேவைகளின் அஞ்சல் மூல வாக்களிப்பு வசதி இல்லாமல் ஆக்கப் பட்ட ஊழியர்களின் மற்றும் தனியார் துறை ஊழியர்களின் வாக்குரிமையினை பாதுகாத்தல் 39

தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் 39

தேர்தல் சட்டங்களை அமுல்படுத்தல் 40

நீதிமன்ற நடவடிக்கைகள் 41

முடிவுறை 41

## அட்டவணைகள்


I. பதினான்காவது பாராளுமன்றம் கலைப்பு பற்றிய வர்த்தமானி அறிவித்தல் 45

II. ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் நியமிக்கப்பட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களின் விபரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் 47

III. ஊழியர்களுக்கு வாக்களிப்பதற்கு முடியுமான வகையில் போதியளவு லீவு பெற்றுக்கொடுத்தல் 50

IV. வாக்கெடுப்பை கண்காணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள கண்காணிப்பு நிறுவனங்கள் மற்றும் கண்காணிப்பாளர்களினால் பின்பற்றி ஒழுகவேண்டிய அளவுகோள்கள் 51

V. அமைதிக் காலப்பகுதிக்குள் அறிவித்தல் வழங்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களை நீக்கிக் கொள்ளல் மற்றும் பிரச்சார நடவடிக்கைகளை வரையறுப்பதற்கு ஏற்புடைய போட்டியிடும் கட்சிகள்/குழுக்களின் அதிகாரம் பெற்ற முகவர்கள் மற்றும் சுயாதீனக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் அவர்கள் ஊடாக வேட்பாளர்களை அறிவூட்டுவதற்கு ஏற்புடைய கடிதம் 52

VI. இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்கள் மற்றும் செயற்பாட்டாளர்களினால் பின்பற்றி ஒழுகவேண்டிய ஊடக அளவுகோள்கள் 54

VII. போட்டியிடும் வேட்பாளர்களினால் பின்பற்றி ஒழுகவேண்டிய ஒழுக்க விழுமியக் கோவை 59

VIII. போஸ்டர், கடவுட், பெனர் காட்சிப்படுத்தல் மற்றும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல், வாகனப் பேரணிகள், ஒலிபெருக்கி மூலம் செய்யப்படும் பிரச்சார நடவடிக்கைகள் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளரின் ஊடக அறிவித்தல் 67

IX. அரச சொத்துக்களின் துஷ்பிரயோகத்தை தடுத்தல் மற்றும் தேர்தலை உரிய முறையில் நடாத்துவதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்காக வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் 68

X. ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் பாராளுமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்களின் பெயர்கள் 71

XI. இல.1928/25 மற்றும் 2015.08.21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் அரசியலமைப்பின் 99 அ உறுப்புரையின் கீழான பிரகடனம் (தேசியப் பட்டியல் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஆட்கள்) 81

XII. இல. 1929/4 மற்றும் 2015.08.24 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் அரசியலமைப்பின் 99 அ உறுப்புரையின் கீழான பிரகடனம் (தேசியப் பட்டியல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட ஆட்கள்) 83

## எண்ணிக்கை குறிப்புக்கள்


| | | |
|---|---|---|
| I. | தேர்தல் மாவட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட வேண்டியுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை, நியமனப் பத்திரங்கள் ஒன்றின் மூலம் வேட்புமனு செய்ய வேண்டிய வேட்பாளரின் எண்ணிக்கை மற்றும் சுயாதீனக் குழுவொன்றினால் வைப்புச் செய்யப்பட வேண்டிய கட்டுப்பணத்தின் அளவு தொடர்பான விபரம் | 87 |
| II. | சமர்ப்பிக்கப்பட்ட, ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் நிராகரிக்கப்பட்ட நியமனப் பத்திர வேட்பாளர்களின் எண்ணிக்கை பற்றிய விபரம் | 88 |
| III. | தேருநர் இடாப்புக்களை விற்பனை செய்தல் (இருவட்டுக்கள் மூலம்) | 89 |
| IV. | பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கைக்கமைய வாக்களிப்பு நிலைய வகைப்பாடு | 91 |
| V. | பாராளுமன்றத் தேர்தலுக்காக பயன்படுத்திய வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் பயன்படுத்திய கட்டிடங்களின் வகையீடு | 92 |
| VI. | பாராளுமன்றத் தேர்தலுக்காக கிடைக்கப்பெற்ற அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களின் அளவு மற்றும் அவற்றில் ஏற்றுக்கொள்ளப்பட்ட, நிராகரிக்கப்பட்ட எண்ணிக்கை பற்றிய விபரம் | 93 |
| VII. | பாராளுமன்றத் தேர்தலுக்காக விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகள் பற்றிய விபரம் | 94 |
| VIII. | பாராளுமன்றத் தேர்தலுக்கு ஏற்புடையதாக அந்தந்த மாவட்டங்களின் கீழ் தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்ட ஆயினும் தேர்தல் வாக்கெடுப்பு தினத்திற்கு முன்னர் மரணம் ஏய்தியுள்ள மற்றும் வெளிநாடு சென்றுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்புடைய தகவல்கள் | 95 |
| IX. | ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வாக்கெடுப்பிற்காக ஈடுபடுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை பற்றிய விபரம் | 96 |
| X. | ஒவ்வொரு மாவட்டத்திற்கமைய வாக்கெண்ணும் மண்டபங்களின் எண்ணிக்கை மற்றும் விபரம் | 97 |
| XI. | ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் அமைய முழு நாட்டினதும் பெறுபேறுகள் | 98 |
| XII. | அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் / சுயாதீனக் குழுக்கள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை | 101 |
| XIII. | தேசிய பட்டியல் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை | 102 |
| X IV. | பாராளுமன்ற அறிக்கைக்கேற்புடைய முழுமையான செலவு அறிக்கை | 103 |
| XV. | 2015.08.17 ஆம் திகதிக்கு முறைப்பாடுகள் பற்றிய சாராம்சம் | 105 |
| XVI. | இடம்பெயர்ந்த வாக்காளர்களை பதிவு செய்வதற்கு ஏற்புடைய விபரங்கள் | 106 |

# 2015.08.17 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் பற்றிய தேர்தல்கள் ஆணையாளரின் அறிக்கை

## பாராளுமன்றத் தேர்தல் நடாத்துவது தொடர்பான சட்டம்.

1. 1978 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இரண்டாவது குடியரசு அரசியல் அமைப்புக்கு அமைய பாராளுமன்ற தேர்தல் நடாத்துதல் சம்பந்தமாக நாட்டின் நிறைவேற்று சனாதிபதி அவர்களுக்கு நேரடியாக பாராளுமன்றத்தை கலைப்பதற்கான அறிவித்தலை விடுப்பதற்கும் தேர்தலுக்கான பெயர் குறித்த நியமனங்களை ஏற்றல் மற்றும் தேர்தல் நடைபெறும் தினங்களை தீர்மானிக்கும் அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது. சனாதிபதி தேர்தலின் போதும் உரிய காலப்பிரிவிற்கு முன்னர் சனாதிபதித் தேர்தலை நடாத்துவதற்கு சனாதிபதி அவர்கள் தீர்மானிக்குமிடத்து சனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடாத்துவதற்கான தனது விருப்பத்தை வெளியிடுவதற்கு குடியரசின் சனாதிபதிக்கு அரசியல் அமைப்பினால் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதோடு, அந்த வாக்கெடுப்பிற்கான பெயர் குறித்த நியமனத் திகதி மற்றும் வாக்கெடுப்பு தினம் தேர்தல் ஆணையாளரினால் தீர்மானிக்கப்படும்.

2. 2010 ஏப்பிறல் மாதம் 08 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலுக்கமைய தெரிவு செய்யப் பட்ட 7 வது பாராளுமன்றத்தின் ஆரம்ப அமர்வு 2010 ஏப்பிறல் மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமானது. 7 வது பாராளுமன்றம் 2015 யூன் மாதம் 26 ஆம் திகதி கலைக்கப்பட்டதோடு, அது தொடர்பான அரசியல் அமைப்பின் 70 வது உறுப்புரையின் மற்றும் 1981ஆம் ஆண்டின் இல. 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் சனாதிபதியால் 2015.06.26 ஆம் திகதி இல. 1920/38 எனும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப் பட்டது. அந்த அறிவித்தலுக்கமைய 2015 யூலை மாதம் 06 ஆம் திகதி சூரிய உதயத்தோடு ஆரம்பமாகும் 2015 யூலை மாதம் 13 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கும் காலப் பிரிவாகவும் 2015 ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுப் பதற்கான தேர்தல் நடைபெறும் திகதியாகவும் தீர்மானிக்கப்பட்டது.

## பாராளுமன்றத்தின் பதவிக் காலம்

3. 2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே அதாவது, சனவரி மாதம் 08 ஆம் திகதி சனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட்டது. அந்தத் தேர்தல் முடிவடைந்து 06 மாதத்திற்குள் பாராளுமன்றத் தேர்தலுக்காக தயாராகுவதற்கு தேர்தல்கள் திணைக்களத்திற்கு நேரிட்டதனால் ஏற்புடைய நடவடிக்கைகளை திட்டமிடுவதற்கு இலகுவானது எனக் கருதிய போதிலும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது பாராளுமன்றத் தேர்தல் ஒன்றில் உண்மையாகவே போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தல் மற்றும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இடையில் நிலவும் போட்டியை கருத்திற் கொள்ளும் போது ஏற்பாட்டு நடவடிக்கைகள் மிகவும் சிக்கலாக அமைவதை தவிர்க்க முடியாது. அந்தப் பிண்ணணியை கருத்திற் கொண்டு தேர்தல்கள் செயலகத்தினது நடவடிக்கைகளும் மாவட்ட மட்டத்திலான நடவடிக்கைகளை திட்டமிடுவதும் தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுரைக்கமைய மேற்கொள்ளப்பட்டது.

## பெயர் குறித்த நியமனங்கள்

4. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் பிரிவு 6(1) பிரகாரம் தெரிவத்தாட்சி அலுவலராக மாவட்ட செயலாளர் தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலராக நியமிப்பதற்கும் பெயர் குறித்த நியமனங்களை மாவட்ட செயலகத்தில் ஏற்றுக் கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது. அதற்கு ஏற்புடைய தகவல்கள் இல. 1920/39 மற்றும் 2015 யூன் மாதம் 27 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தேர்தல்கள் ஆணையாளரினால் வெளியிடப் பட்டது. இங்கு நிருவாக மாவட்டங்கள் 3 ஐ உள்ளடக்கிய வன்னி தேர்தல் மாவட்டத்திற்காக வவுனியா நிருவாக மாவட்டத்தின் மாவட்ட செயலாளரும் நிருவாக மாவட்டங்கள் 2 ஐ உள்ளடக்கிய யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலராக யாழ்ப்பாண நிருவாக மாவட்டத்தின் மாவட்ட செயலாளரும் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலராக அம்பாறை நிருவாக மாவட்டத்தின் மாவட்ட செயலாளரும் கடமையாற்றினர். ஏற்புடைய வர்த்தமானி அறிவித்தல் மூலம் அனைத்து மாவட்ட சிரேட்ட பிரதி / உதவி தேர்தல் ஆணையாளர்களை உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக நியமிப் பதற்கு இல. 1920/40 மற்றும் 2015 யூன் மாதம் 27 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தெரிவத்தாட்சி அலுவலருக்கு உதவும் வகையில் மேலதிகமாக மேலும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் சிலரை நியமிப் பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

5. பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 16(1) பிரிவுக்கமைய தேர்தலை நடாத்தும் பொருட்டு ஏற்புடைய பிரகடனம் வெளியிடப்பட்ட 2015 யூன் மாதம் 27 ஆம் திகதி முதல் பெயர் குறித்த நியமனங்களை ஏற்கும் இறுதி தினத்திற்கு முன்னைய தினம் அதாவது 2015 யூலை மாதம் 12 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை சுயேட்சைக் குழுக்களின் வைப்புப் பணம் ஏற்றுக்கொள்வது மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் அல்லது மாவட்ட செயலகங்களில் நடைபெறும்.

6. பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவதற்கான பிரகடனம் சனாதிபதியினால் வெளியிடப்பட்ட திகதிக்கு செல்லுபடியாகும் தேருநர் இடாப்பாக 2014 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு காணப்பட்டது. இந்த தேருநர் இடாப்புக்கமைய அரசியல் அமைப்பின் 98(8) உறுப்புரையின் கீழ் 2014.03.10 ஆம் திகதிய இல. 1853/3 எனும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட பணிப்பின் மூலம் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை இந்த பாராளுமன்றத் தேர்தலில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட இருந்தது. தேர்தல் மாவட்டத்திற்கமைய தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக் கைக்கு ஏற்புடைய தகவல்கள் இல. 1 குறிப்பில் காட்டப்பட்டுள்ளது. அந்தக் குறிப்பின் 3 வது நிரலில் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்காகவும் பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தில் பிரிவு 15(1) பிரகாரம் ஒரு கட்சி அல்லது சுயேட்சைக் குழுவுக்கு பெயரிடப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டதோடு, ஏற்புடைய சட்டத்தின் பிரிவு 16(1) பிரகாரம் ஒவ்வொரு வேட்பாளருக்கும் இரண்டாயிரம் ரூபா வீதம் சுயேட்சைக் குழு வொன்றினால் செலுத்தப்பட வேண்டிய வைப்புப் பணமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

7. பெயர் குறித்த நியமனங்களை ஏற்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் அனைத்து தெரிவத் தாட்சி அலுவல்களையும் அறிவூட்டி அறிவித்தல் கோப்பொன்று 2015.06.29 ஆம் திகதி அனுப்பப் பட்டது. அதன் மூலம் பெயர் குறித்த நியமனங்களை ஏற்கும் முறையும் பெயர் குறித்த நியமனங்களை ஏற்றுக்கொண்ட பின்னர் தேர்தல்கள் ஆணையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கை தொடர்பிலும் தெரிவத்தாட்சி அலுவலர்கள் அறிவூட்டப்பட்டனர். பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் தொடர்பிலான தீர்மானங்களை அறிவிக்கும் சந்தர்ப்பத்திற்கு வருகை தந்துள்ள அரசியல் கட்சிகளின் / சுயேட்சைக் குழுக்களின் பிரதிநிதிகளை அறிவூட்டுவதற்கான அறிவுறுத்தல்கள் அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் 2015.07.12 ஆம் திகதி அனுப்பப்பட்டதோடு, அந்த தகவல்கள் அடங்கிய ஆவணமொன்றை அனைத்து பிரதிநிதிகளுக்கும் வழங்குமாறும் இதன் மூலம் அறிவுரை வழங்கப்பட்டது.

8. கடந்த தேர்தல்களின் போது பெற்றுக்கொண்ட அனுபவங்களை அடிப்படையாக கொண்டு சமர்ப்பிக்கப்படும் பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் நிராகரிக்கப்படாமலிருக்கும் வகையில் எவ்வாறு சமர்ப்பிப்பது? என்பது பற்றி பெயர் குறித்த நியமனங்களை சமர்ப்பிப்பதற்காக வருகை தரும் அதிகாரம் பெற்ற ஆட்களை அறிவூட்டும் முகமாக அறிவுறுத்தல் பத்திரமொன்றை வெளியிடுவதற்கு தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டதோடு, அதற்கு மேலதிகமாக பெயர் குறித்த நியமனங்களை சமர்ப்பிப்பதற்கு அல்லது அடிப்படையாக கவனம் செலுத்த வேண்டிய விடயங்களை தெளிவுப்படுத்துவதற்காக பெயர் குறித்த நியமனப் பத்திரங்களை ஏற்கும் மண்ட பத்தினுள் பிரத்தியேக உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவரை கடமையில் ஈடுபடுத்துவதற்கும் அறிவுரை வழங்கப்பட்டது.

9. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசிய லமைப்பின் 99(அ) உறுப்புரையின் கீழ் சமர்ப்பிக்க வேண்டியப் பட்டியல் எனும் தேசிய பட்டியலை சமர்ப்பிப்பது தொடர்பில் அல்லது போட்டியிடுவதற்கு உத்தேசிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளின் செயலாளர்களையும் அறிவூட்டி 2015.07.03 ஆம் திகதி வேட்புமனு மாதிரிப் படிவத்துடன் கடித மொன்று அனுப்பப்பட்டது. அதற்கிணங்க, நியமனப் பத்திரக் காலப்பிரிவிற்குள் போட்டியிடும் அங்கீகரிக் கப்பட்ட 17 கட்சிகளின் வேட்பாளர்கள் 303 பேரை உள்ளடக்கிய பட்டியலொன்று சமர்ப்பிக்கப்பட்டது. தேசிய பட்டியலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆட்களின் பெயர்கள் மற்றும் கட்சிகளுக்குரிய விபரங்கள் இல. 1923/2 மற்றும் 2015.07.13 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டது.

10. பாராளுமன்றத் தேர்தலுக்கு போட்டியிடுவதற்காக அனைத்து தேர்தல் மாவட்டங்களுக்காகவும் பெயர் குறித்த நியமனக் காலப்பகுதியில் அங்கீகரிக் கப்பட்ட அரசியல் கட்சிகளினால் பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் 312 உம் சுயேட்சைக் குழுக்கள் சார்பில் பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் 225 உம் என பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் 537 கிடைக்கப்பெற்றதோடு, தெரிவத் தாட்சி அலுவலரினால் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் அந்த பெயர் குறித்த நியமனப் பத்திரங்களில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் 12 உம் சுயேட்சைக் குழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் 24 உம் நிராகரிக்கப்பட்ட பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த பெயர் குறித்த நியமனப் பத்திரங்களின் எண்ணிக்கை 501 ஆகும். அவற்றில் 300 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் 201 சுயேட்சைக் குழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் ஆகும். இந்தத் தேர்தலின் போது ஆகக்கூடிய 21 அரசியல் கட்சிகள் கொழும்பு தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டன. அவ்வாறே மிகக்கூடிய சுயேட்சைக் குழுக்கள் 30 மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டன. அனைத்து தேர்தல் மாவட்டங்களுக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுப்பத்திரங்கள் 300 இன் கீழ் 3653 வேட்பாளர் களும் போட்டியிட்ட சுயேட்சைக் குழுக்கள் 201 கீழ் வேட்பாளர்கள் 2498 பேர் என பாராளுமன்றத் தேர்தலுக்காக போட்டியிட்ட மொத்த வேட்பாளர் களின் எண்ணிக்கை 6151 ஆகும். அந்த வேட்பாளர் எண்ணிக்கையில் இருந்து 196 பேர் பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட இருந்தனர். பெயர் குறித்த நியமனப் பத்திரங்களை

சமர்ப்பித்தல், நிராகரிக்கப்பட்ட பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் மற்றும் வேட்பாளர்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள் இல. II குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

**அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள்**

11. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் இல 7(1) பிரிவிற்கமைய பாராளுமன்றத் தேர்தல் பிரகடனப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் 64 காணப்பட்டது. தேர்தலொன்றை நடாத்துமாறு வழங்கப்படும் பணிப்புரை அல்லது கட்டளையொன்று வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக் கப்பட்ட தினத்திற்கு பின்னர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் செயலாளரினால் அந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கு அந்தக் கட்சி உத்தேசிக்குமிடத்து அது தொடர்பில் தேர்தல் ஆணையாளருக்கு எழுத்து மூலம் 7 நாட்களுக்குள் அறிவித்தல் வேண்டும். எவ்வாறெனினும் இது தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளை அறிவூட்டும் நோக்கில் 2015.07.02 ஆம் திகதி தேர்தல் செயலகத்தில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகள், கட்சிகளின் செயலாளர்கள் கூட்டமொன்றுக்காக அழைப்பு விடுக்கப்பட்டனர். அக்கூட்டத்தில் அனைத்து கட்சிகளும் பங்குபற்றின. அந்த நிகழ்வில் சிரேட்ட பொலிஸ் அலுவலர்களும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். பெயர் குறித்த நியமனப் பத்திரங்களை சமர்ப்பிப்பது தொடர்பில் அனைத்து கட்சிகளினதும் செயலாளர்கள் அறிவூட்டப்பட்டனர். தேர்தலில் போட்டியிடுவதற்கான சுயாதீனமான தமது விருப்பத்தை எழுத்து மூலம் அறிவிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது. அதற்கிணங்க தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்து உரிய தினத்திற்கு முன்னர் 35 கட்சிகள் கடிதங்களை சமர்ப்பித்தன.

12. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றுக்கு அனுமதிக்கப்பட்ட சின்னத்திற்கு பதிலாக வேறு புதிய அனுமதிக்கப்படும் சின்னமொன்றுக்கான கோரிக்கையை, தேர்தலை நடாத்துமாறு பணிக்கப் படும் பிரகடனம் அல்லது கட்டளையொன்று வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து 7 நாட்களுக்குள் கட்சி செயலாளரினால் தேர்தல் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கமுடியுமென்ற ஏற்பாடு பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 12(1) பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ளது. அவ்வாறான கோரிக்கையொன்று கிடைக்கப்பெற்ற போது ஆணையாளரினால் அந்தக் கட்சிக்கு அனுமதிக்கப்பட்ட சின்னத்திற்கு பதிலாக வேறு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றுக்கு அனுமதிக்கப்பட்ட சின்னம் அல்லாத வேறு அனுமதிக்கப்பட்ட சின்னமொன்றை ஒதுக்கி பணிப்புரை விடுக்கப்படல் வேண்டும். அதற்கமைய இந்த பாராளுமன்றத் தேர்தலுக்கு ஏற்புடையதாக 6 கட்சிகளினால் இதுவரையில் பயன்படுத்திய தேர்தல் சின்னத்திற்கு பதிலாக புதிய தேர்தல் சின்னமொன்று கோரப்பட்டது. அதற்கு தேர்தல் ஆணையாளரின் அனுமதி கிடைக்கப்பெற்றதோடு, ஏற்புடைய கட்சிகளின் பெயர்கள் இதுவரையில் பயன்படுத்திய தேர்தல் சின்னம் மற்றும் புதிதாக ஒதுக்கப்பட்ட தேர்தல் சின்னம் என்பவற்றின் விபரம் பின்வருமாறு :

| கட்சியின் பெயர் | பயன்படுத்தும் அனுமதிக்கப்பட்ட சின்னம் | புதிதாக அனுமதிக்கப்பட்ட சின்னம் |
|---|---|---|
| 1. ஜாதிக ஹெல உருமய | சங்கு | வைரக்கல் |
| 2. எக்சத் மஹஜன பக்சய | மீன் | கையடக்கத் தொலைபேசி |
| 3. அகில இலங்கை தமிழ் மகா சபை | தோடம்பழம் | கப்பல் |
| 4. ஸ்ரீ லங்கா ஜாதிக பெரமுன | கிரிக்கட் மட்டை | மலர் மொட்டு |
| 5. முற்போக்கு சோசலிசக் கட்சி | விளக்கு | சம்மட்டி |
| 6. பொதுஜன பெரமுன (எக்சத் லங்கா மகா சபா) | ஊற்றுப் பேனா | நாகம் |

13. பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தில் 13.1 பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றுக்கு எதிரான குழுக்களில் இக்குழு அந்த கட்சியாக இருக்க வேண்டுமென கட்டளை யிடுவதற்கு தேர்தல் ஆணையாளருக்கு அதிகார முண்டு. அதற்கிணங்க தேர்தல் ஆணையாளரால் அந்தக் கஷ்டங்களை நீக்குவதற்கு அக்குழுக்களில் இருந்து ஏதேனுமொரு குழு அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி என அல்லது அக்குழுக்களில் எக்குழுவும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியை சார்ந்ததல்ல என தனது முடிவான தற்துணிவின் பிரகாரம் அந்தந்த தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு கட்டளை வழங்க வேண்டும். ஏற்புடைய ஏற்பாடுகளின் கீழ் எதிராக கோரிக்கை விடுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் 02 காணப்பட்டன. ஐக்கிய இலங்கை பொதுஜன கட்சி மற்றும் தேசிய அபிவிருத்தி முன்னணி என்பன அவ்விரு கட்சிகளாகும். பாராளுமன்றத் தேர்தலில் நிகழ முடியுமாகவிருந்த கஷ்டங்கள் காரணமாக எதிராக உரிமை கோரும் எந்தவொரு உரிமை யாளரும் முறையே ஐக்கிய இலங்கை பொதுஜன கட்சி மற்றும் தேசிய அபிவிருத்தி முன்னணி என ஏற்றுக்கொள்ள முடியுமா என பரிசீலித்து முடிவு செய்ய வேண்டியது பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் தேர்தல்கள் ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்டது.

14. அதற்கிணங்க ஐக்கிய இலங்கை பொதுஜன கட்சியின் இருதரப்பினர்களுடன் கலந்துரையாட லொன்று தேர்தல் செயலகத்தில் 2015.07.03 ஆம் திகதி நடாத்தப்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் அவ்விரு தரப்பினர்களும் தவிசாளர் மற்றும் பொருளாளர் பதவிகள் தொடர்பில் இணக்கத்தையும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் நோக்கில் தற்காலிக செயலாளராக திரு. எம்.எம்.எஸ். வீரவர்தன அவர்களை ஏற்றுக்கொள்வதற்கும் இரு தரப்பினரும் இணங்கியதின் பேரில் தேர்தல்கள் ஆணையாளரினால் அதற்கான அனுமதி வழங்கப் பட்டது. எவ்வாறெனினும் இரு தரப்பினருக்கு இடையில் இணக்கப்பாட்டுடன் அல்லது நீதிமன்ற நடைமுறையினால் தீரத்துக்கொள்வதற்கு தவரு மிடத்து இரு தரப்பினர்களைக் கொண்ட ஒரு கட்சியாக கருதி எதிர்காலத்தில் நடவடிக்கை யெடுப்பதற்கு நேரிடும் என்பதை ஏற்புடைய தரப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

15. தேசிய அபிவிருத்தி முன்னணி கட்சி தொடர்பில் இரு தரப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாட லொன்று தேர்தல் செயலகத்தில் 2017.07.06 ஆம் திகதி நடாத்தப்பட்டது. ஆயினும் அந்த கலந்துரை யாடலின் போது தேசிய அபிவிருத்தி முன்னணியின் செயலாளர் பதவி தொடர்பில் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு இரு தரப்பினரும் தவறியதன் காரணமாக நீதிமன்ற அல்லது கலந்துரையாடல் மூலம் பிரச்சினையை தீரத்துக்கொள்ளும் வரை தேசிய அபிவிருத்தி முன்னணி எனும் கட்சி செயலாளர் ஒருவர் இல்லாத கட்சியொன்றாக தீர்மானிக்கப் பட்டது. அதன் காரணமாக அக்கட்சிக்கு பாராளு மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதி கிடைக்கவில்லை.

16. பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினால் பயன்படுத்தப்படும் பெயர் நாமத்தை மாற்றுவதற்கு செய்யப்பட்ட இரண்டு கோரிக்கைகள் தொடர்பில் அனுமதி வழங்கப்பட்டது. “ இலங்கை தேசிய முன்னணி” பொதுச் செயலாளரால் 2015.06.29 ஆம் திகதி செய்யப்பட்ட வேண்டுகோளுக்கமைய அந்தக் கட்சியின் பெயர் எங்கள் இலங்கை சுதந்திர முன்னணி என மாற்றியமைக்கப்பட்டது. “ ஜாதிக ஹெல உறுமய” கட்சியின் பிரதான செயலாளரின் 2015.07.02 ஆம் திகதிய வேண்டுகோளுக்கமைய இந்தக் கட்சியின் பெயர் “ எக்ஸத் யஹபாலன ஜாதிக பெரமுண” என மாற்றம் செய்யப்பட்டது.

17. 2015 ஒகத்து மாதம் 17 ஆம் திகதி நடைபெற வுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கு ஏற்புடைய அரசியல் கட்சிகளை அறிவூட்டுவதற்காக கட்சிச் செயலாளர்களை அழைத்து 2015.07.2 ஆம் திகதி நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் போது பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்றல், அதிகாரம் பெற்ற முகவர்களை நியமித்தல் வாக்கெடுப்பு நிலைய முகவர்களை நியமித்தல் மற்றும் அதற்கான அதிகாரத்தை கையளித்தல், அஞ்சல் மூல வாக்குச் சீட்டுக்களை விநியோகிப்பதற்கும் அஞ்சல் மூல வாக்குச் சீட்டுக்களை (அடையாளம் இடும் இடங்களுக்காக முகவர்களை) நியமித்தல், தேர்தலுடன் தொடர்பான பிரசுரங்களை இலவசமாக அனுப்புவதற்குள்ள வசதிகள் அரசியல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக வானொலி ஒலிபரப்பு வசதிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு கிடைக்கப்பெறும் நிதியுதவிகள் தொடர்பில் அறிவூட்டப் பட்டது.

18. மேலும், 2015.07.04 ஆம் திகதி அனைத்து கட்சி செயலாளர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டு போட்டி யிடும் அனைத்து வேட்பாளர்களினதும் சொத்துக்கள்/ பொறுப்புக்கள் பிரகடனத்தை ஒப்படைக்க வேண்டு மென்றும் 2015.07.06 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பி பெயர் குறித்த நியமனங்கள் கையேற்கும் நடவடிக்கை தொடர்பில் விரிவான அறிவுறுத்தலகள் வழங்கப்பட்டதோடு, விசேடமாக அரசியல் கட்சி பிரச்சார அலுவலகங்களை நடாத்திச் செல்லும் போது பின்பற்றியொழுக வேண்டிய நடைமுறைகள் தொடர்பிலும் தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டன.

19. மேலும் போட்டியிடும் அரசியல் கட்சிகளின் செயலாளர்களை அறிவூட்டுவதற்காக தேர்தல் செயலகத்தில் நிரந்தர பிரதிநிதிகளின் கூட்டம் நடாத்தப்பட்டது. அந்தக் கூட்டத்திற்கு கட்சியின் செயலாளர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகள், தேர்தல்கள் ஆணையாளரினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் பிரதி நிதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட சிரேட்ட பொலிஸ் அலுவலர்களும் பங்குபற்றினர். எனவே அந்தக் கூட்டங்களின் போது தேர்தல் திணைக்களத்திற்கு தேர்தலுக்கு போட்டியிடும் கட்சிகளுக்கு அறிவிக்க வேண்டிய விடயங்களை அறிவிப்பதற்கும் அரசியல் கட்சிகளுக்கு தேவையான அறிவுறுத்தல்களை தேர்தல்கள் ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கும் முடியுமாகியது. அந்தக் கூட்டத்தில் பொலிஸ்மா அதிபர் மற்றும் சிரேட்ட அலுவலர்கள் கலந்து கொண்ட காரணத்தினால் அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யும் போது முகம் கொடுக்க நேரிட்டுள்ள பிரச்சினைகளை முன்வைப்பதற்கும் அவற்றுக்கான அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்வதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

20. 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளு மன்றத் தேர்தல் சட்டத்தின் 127 ஆம் பிரிவிற் கமைய இந்தத் தேர்தலில் போட்டியிடும் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்று ஏதேனும் தேர்தல் மாவட்டத்திற்காக இதற்கு முன்னர்

நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு ஏற்புடைய தேர்தல் மாவட்டத்தின் செல்லுபடியாகும் வாக்குகளின் எண்ணிக்கையில் ஒரு வீதத்திற்கு மேல் வாக்குகளை பெற்றிருப்பின் அவ்வாறான கட்சிகளுக்கு அவ்வாறு பூர்வாங்க பாராளுமன்றத் தேர்தல்களில் பெற்றுக்கொண்ட ஒரு வாக்கிற்கு 50 சதம் வீதம் உதவித் தொகையைப் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கிணங்க 2010 பாராளு மன்றத் தேர்தலில் பெற்றுக்கொண்ட பின்வரும் கீழ் குறிப்பிடப்படும் வாக்குகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் மூன்று (03) அரசியல் கட்சிகளுக்கு அந்தக் கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்கு சந்தரப்பம் கிட்டியது. அவ்வாறு உரிமை பெற்ற கட்சிக்கான அனுமதிக்கப்பட்ட அரசாங்கக் கொடுப்பனவு 70 மற்றும் 71 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### தேர்தலுக்கான பூர்வாங்க நடவடிக்கைகள்

21. 2015 சனவரி 08 ஆம் திகதி சனாதிபதி தேர்தல் நடாத்தப்பட்டு சில மாதங்களுக்குள் பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவதில் இந்தத் தேர்தலுக்கு ஏற்புடைய அடிப்படையான நடவடிக்கைகளை ஒழுங்கு செய்வது இலகுவாக அமைந்தது. எவ்வாறெனினும் அனைத்து மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களும் சிரேஷ்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களும் கொழும்புக்கு அழைக்கப்பட்டு தேவையான அறிவுரைகளை துரிதமாக வழங்குவதற்கும் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை ஏற்பாடு செய்வதில் உதவும் வெளி நிறுவனத் தலைவர்களுடனும் கலந்துரையாடி அந்த நடவடிக்கைகளை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டிய முறை குறித்து துரிதமாக அறிவுரை வழங்கப்பட்டமையினால் இந்தப் பணி மேலும் இலகுபடுத்தப்பட்டது.

22. தேர்தல் திணைக்களத்தைப் போன்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை ஒழுங்கு செய்வதில் உறுதுணை யாகவிருக்கும் அஞ்சல் திணைக்களம், இலங்கை போக்குவரத்துச் சபை, இலங்கை மின்சார சபை, தொலைதொடர்பு வசதிகளை வழங்கும் நிறுவனங் களையும் அழைத்து தேர்தல் ஆணையாளரினால் அறிவுரை வழங்கப்பட்டது. அத்தோடு மாவட்ட மட்டத்தில் பிரதேச மட்ட தலைவர்களை அழைத்து ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை ஒழுங்கு செய்வது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு தேவையான அறிவுரைகள் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் களுக்கு வழங்கப்பட்டது.

23. தேர்தலுக்கான ஆரம்ப ஏற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பத்திலிருந்தே தேர்தல் செயலகம், அரச நிறுவனங்கள் மற்றும் தாமதமின்றி எழுத்தாவணங் களை பரிமாற்றிக் கொள்ளல் மற்றும் இலவச அஞ்சல் வசதிகளை பெற்று கொள்வது தொடர்பில் அஞ்சல் திணைக்களத்துடனும் கலந்துரையாடி “ அவசர தேர்தல் எழுத்தாவணங்கள்” “ முன்னுரிமை சேவை” எனும் தலைப்பின் கீழ் அஞ்சல் கட்டணம் இன்றி கடிதங்களை அனுப்புவதற்கு அஞ்சல் திணைக்களத்தினை அறிவூட்டியதன் பெறுபேறாக அதற்கான வசதி கிடைக்கப்பெற்றது. பொதுத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் சமர்ப்பித்தல், அஞ்சல் மூல வாக்குச்சீட்டுப் பக்கற்றுகளை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் களுக்கும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் அனுப்புதல், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகித்தல், கட்சி செயலாளர் களுக்கும் சுயேட்சைக் குழுக்களின் தலைவர் களுக்கும் தேர்தல் பிரச்சார ஆவணங்களை அஞ்சல் கட்டணம் இன்றி அனுப்புவதற்கான வசதிகளை செய்து கொடுத்தல் போன்ற பாரிய பணியை மிகவும் குறுகிய காலப்பகுதியில் நிறைவேற்றுவதற்கு அஞ்சல் திணைக்களத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டதோடு, அஞ்சல் மா அதிபர் தலைமையிலான அவரது பணியாட் குழுவினரால் அந்த நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவேற்றப் பட்டதன் காரணமாக ஆரம்ப நடவடிக்கைகளை ஒழுங்குசெய்வது இலகுவாகியது.

24. சனாதிபதித் தேர்தலின் போது தேர்தல் மாவட்டங்கள் 22 இற்கும் ஒரே முறையிலான வாக்குச் சீட்டை அச்சிடுவது வசதியாக இருந்த போதிலும் பாராளுமன்றத் தேர்தலில் தேர்தல் மாவட்டங்கள் 22 இற்கும் ஒவ்வொன்றுக்கும் மாற்றமான வாக்குச் சீட்டுக்களை அச்சிடுவதற்கு அச்சுத் திணைக்களத்திற்கு நேரிட்டது. மேலும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையுடன் ஒவ்வொரு வீட்டிற்கும் கையளிப்பதற்கான தேர்தல் மாவட்ட மட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர் பட்டியல்களும் அச்சிடப்பட்டன. இது தொடர்பில் அரசாங்க அழுத்தகருடன் பல கலந்துரையாடல்களை நடாத்தியதன் பெறுபேறாக இந்தப் பணிகளை உரிய நேரத்திற்கு நிறைவு செய்ய சந்தர்ப்பம் கிட்டியது. வாக்களிப்பு நடைபெறும் காலப்பிரிவில் தேர்தல் செயலகத் திற்கும் மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கும் தேவையான மேலதிக தொலைபேசி வசதிகளை பெற்றுக் கொள்வதற்காக ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம், தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குவ தற்காக இலங்கை மின்சார சபை, தேவையான போக்குவரத்து வசதிகளுக்காக இலங்கை போக்கு வரத்து சபை, தனியார் பேருந்து உரிமை யாளர்களின் சங்கம் மற்றும் புகையிரதத் திணைக்களம் ஆகியவற்றுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தேர்தலுக்கான ஆரம்ப நடவடிக்கைகளை வெற்றி கரமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு மேற்குறிப் பிட்ட நிறுவனங்களின் முழுமையான ஒத்துழைப்பு தேர்தல் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### தேருநர் இடாப்பு

25. பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட 2015.06.24 திகதியளவில் 2015 தேருநர் இடாப்பு மீள் திருத்த நடவடிக்கைகள் ஆரம்ப கட்டத்தில் காணப்பட்டத னாலும் அந்த சந்தர்ப்பத்தில் செல்லுபடியானதாக 2014 ஆம் ஆண்டு தேருநர் இடாப்பு காணப்பட்டது.

2015 ஓகத்து மாதம் 27 ஆம் திகதி நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தலுக்கு 2014 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு பயன்படுத்தப்பட்டது. 2014 ஆம் ஆண்டுக்கான தேருநர் இடாப்பு 2015.01.08 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதித் தேர்தலுக்காக பயன்படுத்தப்பட்ட தேருநர் இடாப்பு என்பதனால் 2015 ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தல் நடைபெற்றதனால் அதன் பின்னர் பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கான வாய்ப்பை கருத்திற் கொண்டு இரண்டு தேர்தல்களுக்கும் போதுமான அளவு 2014 தேருநர் இடாப்புப் பிரதிகளைப் பெற்றிருந்த காரணத்தினால் ஆரம்ப நடவடிக்கைகள் இலகுபடுத்தப்பட்டது. 2014 ஆம் ஆண்டு தேருநர் இடாப்புக்கு அமைய பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 15,044,490 ஆக இருந்தது. பாராளுமன்றத் தேர்தலுக்காக போட்டி யிட்ட அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் வேண்டுகோளுக்கு இணங்க கடந்த சனாதிபதித் தேர்தலைப் போன்று தேருநர் இடாப்பின் இருவட்டுக்களாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனை இருவட்டுக்கள் மூலம் வழங்குவது இலகுவாக அமைந்தது. போட்டியிட்ட கட்சிகள், குழுக்களுக்கு விற்பனை செய்யப்பட்ட தேருநர் இடாப்பு இருவட்டுக்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள் இலக்கம் III குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

**வாக்கெடுப்பு பிரிவு, வாக்கெடுப்பு மாவட்டம், வாக்களிப்பு நிலையம்**

26. 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க வாக்காளர்களை பதிவு செய்யும் சட்டத்திற்கமைய தற்காலத்தில் அமுலில் உள்ள ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவுகள் மற்றும் வாக்கெடுப்பு மாவட்டங்கள், பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் மூன்றாம் பிரிவிற்கு ஏற்புடைய செயற்பாடுகளுக்காக வாக்கெடுப்புப் பிரிவொன்று வாக்கெடுப்பு மாவட்ட மொன்றாகக் கருதப்படல் வேண்டும். பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்படும் சந்தர்ப்பத்தில் செல்லுபடி யானதாக காணப்பட்ட 2017 தேருநர் இடாப்பிற்கு ஏற்புடைய வாக்கெடுப்பு பிரிவுகள் மற்றும் வாக்கெடுப்பு மாவட்டங்கள் பாராளுமன்றத் தேர்தல் பணிகளுக்கு செல்லுபடியாகும்.

27. பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 24 (1) பிரிவிற் கமைய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்படும். வாக்கெடுப்பு பற்றிய அறிவித்தலின் ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களிலும் அமைந்துள்ள வாக்கெடுப்பு மாவட்டங்களுக்குரிய வாக்கெடுப்பு நிலையங்களின் விபரங்களும் உள்ளடக்கப்படுதல் வேண்டும். வாக்கெடுப்பு மாவட்டங்களை அமைக்கும் போது வாக்கெடுப்புப் மாவட்டத்தின் வாக்காளர் களின் எண்ணிக்கை 1500 இனை விஞ்ஞாத வகையிலும் வாக்காளர்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை குறைக்கும் வகையிலும் நிறுவ வேண்டுமென சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் சந்தர்ப்ப சூழ்நிலைகளை கருத்திற் கொண்டு வாக்கெடுப்பு மாவட்டங்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலையங்களை அமைப்பதில் அந்த எண்ணிக்கை மாறுபடலாம்.

28. வாக்களிப்பு நிலையங்களில் தகைமை மற்றும் உள்ள வசதிகள் பற்றி தேர்தல்கள் நடைபெறுவ தற்கு அண்மித்த காலத்தில் தெரிவத்தாட்சி அலுவலரினால் பரிசோதிப்பது பொதுவாக நடைபெறும். எவ்வாறெனினும் இந்த பாராளுமன்றத் தேர்தல்களுக்கு சில மாதங்களுக்கு முன்பு 2015 சனவரி மாதம் சனாதிபதித் தேர்தல் நடைபெறல் மற்றும் அதற்காக பயன்படுத்திய வாக்களிப்பு நிலையங்களில் சிறு மாற்றங்களை மாத்திரம் செய்து அந்த வாக்களிப்பு நிலையங்களையே பயன்படுத்துவதற்கு தெரிவத்தாட்சி அலுவலர் களுக்கு முடியுமாகியது. சனாதிபதித் தேர்தலுக்கு பயன்படுத்திய ஆனாலும் வாக்கெடுப்பின் பின்னர் வாக்காளர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் தொண்டர் நிறுவனங்களினால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்களை அடிப்படையாகக் கொண்டு சில வாக்கெடுப்பு நிலையங்களை வேறு இடங்களில் அமைப்பதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

29. வாக்களிப்பு நிலையங்களை தெரிவு செய்தல் மற்றும் வாக்களிப்புக்கு ஏற்றவாறு தயார்படுத்தல் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் பதவிநிலை அலுவலர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப் பட்டதோடு, நடைமுறை காரணங்களினால் ஏதேனும் வாக்கெடுப்பு மாவட்டத்திற்கான வாக்காளரின் எண்ணிக்கை மிக அதிகமான பெறுமானத்தைக் கொண்டுள்ள போது பெண்கள், ஆண்கள் என தனித்தனியான வரிசைகளை அமைப்பது அல்லது வாக்காளர்களின் தொடர் இலக்கத்திற்கமைய வாக்களிப்பு வரிசைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல் அல்லது ஆண், பெண் வாக்காளர் களுக்கான தனியான வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்படும். ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத் திற்காகவும், பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கைக்கமைய வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கை IV குறிப்பிலும் வாக்களிப்பு நிலை யங்களுக்காக பயன்படுத்திய கட்டிடங்களுக் கமைய ஏற்புடைய வகையீடு இலக்கம் V குறிப்பிலும் காட்டப்பட்டுள்ளது.

**வேறு வாக்களிப்பு நிலையமொன்றில் வாக்களிப்பதற்காக அனுமதி வழங்கல்.**

30. பாராளுமன்றத் தேர்தல் சட்டத்திற்கு 1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினால் கொண்டுவரப்பட்ட சட்ட ரீதியான ஏற்பாடுகளின் கீழ் உரிய வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியாது என நியாயமான அச்சம் ஏற்படும் காரணத்தினால் அவ்வாறான வாக்காளர் ஒருவருக்கு பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தில் 127(ஆ) பிரிவின் கீழ் வேறு வாக்களிப்பு நிலைய மொன்றில் தனது வாக்கை அளிப்பதற்கு தேர்தல்கள் ஆணையாளரிடம் அனுமதி கோர முடியும். அவ்வாறான வேண்டுகோள் எவரேனும் வாக்காளரினால் பெயர் குறித்த நியமனங்கள் காலப் பிரிவு பற்றிய அறிவித்தல் வெளியிடப்பட்ட

பின்னரான ஒருவார காலத்திற்குள் சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வாறெனினும் காலப்பிரிவு பெயர் குறித்த நியமனங்கள் காலப்பிரிவின் இறுதித் தினமாகிய 2015.07.13 ஆம் திகதி வரை தேர்தல் ஆணையாளரினால் நீடிக்கப்பட்டது.

31. கடந்த கால தேர்தல்களைப் போன்று இந்தத் தேர்தலிலும் இந்த வசதிகள் வடகிழக்கு மாகாணங்களிலுள்ள தமது வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்வதில் உள்ள நியாயமான அச்சமுள்ள வாக்காளர்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டது. வடகிழக்கு மாகாணங்களில் காணப்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து புத்தளம், அநுராதபுரம், வவுனியா, திருகோணமலை, குருநாகல் ஆகிய மாவட்டங்களில் தற்காலிகமாக தங்கியிருக்கும் அல்லது இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு இதன் கீழ் ஏற்புடைய மாவட்டங்களில் அமைந்துள்ள தேர்தல் அலுவலகங்களுக்கு தமது வேண்டுகோள்களை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இதற்காகத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு தான் ஆரம்பத்தில் வசித்த மாவட்டங்களுக்குரிய தேருநர் இடாப்புக்களை இடம்பெயர்ந்த வாக்காளர்கள் தற்காலிகமாக வதியும் மாவட்டங்களில் பார்வைக்கு விடுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. ஏற்புடைய தகவல்கள் இலக்கம் XVI குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

**அஞ்சல் மூல வாக்களிப்புக்கு வசதியளித்தல்.**

32. அஞ்சல் மூலம் வாக்களிப்பை ஏற்பாடு செய்வது தேர்தல் ஒன்றில் முக்கிய செயற்பாடாகும். பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தில் 26(3) பிரிவிற்கமைய தேர்தலொன்றை நடாத்துமாறு பணிக்கப்படும் அறிவித்தல் அல்லது கட்டளை விடுக்கப்பட்ட தினத்திற்குப் பின் ஏழாவது நாளுக்கு முன்னரும் 14 நாட்களுக்கு பின்னரும் அல்லாத நாளொன்றில் கிடைக்கப்பெறுமாறு அஞ்சல் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அதற்கிணங்க அஞ்சல் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிப்பதற்காக சட்டத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள காலம் ஒரு கிழமைக்கு மட்டுப்படுத்தப்படுகின்றது. எவ்வாறெனினும் பாராளுமன்றத் தேர்தல் சட்டத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ள படி வேட்பாளர் ஒருவருக்கு அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைப்பதனால் மற்றும் அவர் வேட்பாளரா? என தீர்மானிக்கப்படுவது பெயர் குறித்த நியமனக் காலப்பிரிவின் பின்னர் என்பதனாலும் கடந்த தேர்தல்களைப் போன்று இந்தத் தேர்தலிலும் அஞ்சல் மூல வாக்களிப்புக்காக விண்ணப்பங்களை கையேற்பதை பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்கும் இறுதித் தினம் வரையில் அதாவது 2015.07.13 ஆம் திகதி வரை மேற்கொள்வதற்கு தேர்தல்கள் ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்டது.

33. அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு உரிமை பெறுபவர்களுக்கு அதற்கான வசதிகளை செய்து கொடுப்பது தெரிவத்தாட்சி அலுவலர்களின் பொறுப்பாகும். ஆகவே 2015.06.30 ஆம் திகதி அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பி அது தொடர்பான தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டன. அத்தோடு 2015.06.29 ஆம் திகதி முப்படை தளபதிகள், பொலிஸ்மா அதிபர் மற்றும் பணிப்பாளர் நாயகம் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களம் ஆகியோருக்கு கடிதம் அனுப்பி அஞ்சல் மூல வாக்களிப்பு தொடர்பில் அறிவூட்ட நடவடிக்கையெடுக்கப்பட்டது. மேலும் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு 2015.07.01 ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பி தேர்தல் கடமைகளுக்கு தகுதி பெறும் அனைத்து அரச ஊழியர்களும் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குமாறும் அறிவூட்டப்பட்டது.

34. அஞ்சல் மூல வாக்காளர்களுக்கு தமது விண்ணப்பங்களை துரிதமாக பூரணப்படுத்துவதற்கு வசதியளிப்பதற்காக அனைத்து தெரிவத்தாட்சி அலுவலகங்கள், பிரதேச செயலகங்களில் தொகுதிகளாக பெயர்ப்பட்டியல்கள் பார்வைக்கு விடுதல் மற்றும் இருவட்டுக்களைப் பயன்படுத்தி தகவல்களை வழங்கும் வேலைத்திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டது. விசேடமாக கொழும்பு மாவட்டத்தில் அரசாங்கத் துறையைச் சேர்ந்த பெருமளவான எண்ணிக்கையினர் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்கும் போது ஏற்படக் கூடிய நெரிசலுக்குத் தீர்வாக தெரிவு செய்யப்பட்ட 19 நிறுவனங்களில் இருவட்டுக்கள் மூலம் தேவையான தகவல்களை வழங்கும் நிலையங்கள் செயற்படுத்தப்பட்டன. முப்படை தலைமையகங்கள் மற்றும் பொலிஸ் தலைமையகத்திற்கு முழு நாட்டினதும் தேருநர் இடாப்புக்கள் இருவட்டுக்கள் மூலம் வழங்கி துரிதமாக தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு தேவையான வசதிகள் செய்யப்பட்டன. இலங்கை போக்குவரத்துச் சபையின் ஏற்புடைய டிப்போ அலுவலகங்களுக்கு மாவட்டங்களுக்குரிய தேருநர் இடாப்பு பிரதிகள் வழங்கப்பட்டு போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பிப்பதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. அதற்கு மேலதிகமாக இலங்கை தகவல் மையம் 1919 இலக்கத்தினூடாக கிடைக்கப்பெற்ற விண்ணப்பதாரர்களின் வேண்டுகோள்களுக்கு தகவல்கள் வழங்கப்பட்டன. இத்தோடு தேர்தல் செயலகம் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலகங்களின் கணினிப் பிரிவினால், மின்னஞ்சல் அல்லது தொலைநகல் செய்திகள் மூலம் அல்லது தொலைபேசி மூலம் வினவப்பட்ட தகவல்களை வழங்கும் வேலைத் திட்டமொன்றும் நடைமுறைப் படுத்தப்பட்டது. மேற்குறிப்பிட்ட அனைத்து வழிமுறைகளின் மூலமும் தகவல்களை பெற்றுக் கொள்ள முடியுமென அமைச்சுக்கள், திணைக்களத்

தலைவர்கள், இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் மூலம் அஞ்சல் மூல வாக்களிக்கும் விண்ணப்பதாரிகளையும் அறிவூட்டுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

35. கடந்த தேர்தல்களைப் போன்று பாராளுமன்றத் தேர்தல்களிலும் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிப்பதற்கான சட்ட ஏற்பாடுகளின் கீழ் அனுமதி வழங்கப்படாத அரசாங்க மற்றும் அரச சார்பு நிறுவனங்கள் பலவற்றிலிருந்து அதற்கான விண்ணப்பங்கள் முன்வைக்கப்பட்டன. அவர்களில் சுகாதார அமைச்சின் சுகாதார சேவையில் ஈடுபட்டுள்ள ஆளணியினரான விசேடமாக மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் சுகாதார ஆளணியினருக்கு ஏற்புடைய வசதிகளை செய்து தருமாறும், அவ்வாறு செயற்படுத்தாத காரணத்தினால் வாக்கெடுப்புத் தினத்தில் சுகாதார சேவையை உரிய முறையில் நடாத்திச் செல்வதற்கு தடைகள் ஏற்படுவதாகவும், கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இத்தோடு துறைமுகம், விமான நிலையங்கள், அதிவேக நெடுஞ்சாலைகளில் சேவையாற்றுபவர்கள் தொடர்பிலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டன. ஊழியர்கள் வாக்களிப்பதற்காக வெளியில் செல்வதற்கு சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் லீவு அனுமதிக்கப்பட வேண்டும் எனினும் அவ்வாறு செய்யுமிடத்து நிறுவனத்தை நடாத்திச் செல்வதில் ஏற்படும் தடைகளும் சுட்டிக்காட்டப்பட்டது. எவ்வாறெனினும் இது தொடர்பில் எதிர்வரும் தேர்தல்களில் அல்லது தேர்தல் சட்டங்களுக்கு திருத்தங்களை செய்ய வேண்டிய தேவைப்பாட்டை சுட்டிக்காட்டி அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் அறிவூட்டப்பட்டனர். அத்தோடு சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவராமல் அஞ்சல் மூல வாக்களிப்பதற்கான வசதியை வழங்க முடியாதென ஏற்புடைய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டது.

36. உரிய காலப்பகுதிக்குள் கிடைக்கப்பெற்ற அஞ்சல் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை பரீட்சித்த பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட அஞ்சல் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை உள்ளடக்கி அஞ்சல் மூல வாக்களிப்பு பெயர்ப் பட்டியலை தயாரித்து 2015.07.22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது. தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் சகல அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களுக்கு அஞ்சல் மூல வாக்காளர்களின் தகவல்கள் உள்ளடங்கிய இருவட்டொன்று இலவசமாக வழங்கப்பட்டது. பணம் செலுத்தி மேலதிகப் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான வசதிகள் செய்யப்பட்டன. அஞ்சல் மூல வாக்குச் சீட்டுக்கள் விநியோகிக்கும் பணி 2015.07.24 ஆம் திகதி அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களிலும் மேற்கொள்ளப்பட்டதோடு, இதனை கண்காணிப்பதற்காக போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களில் அஞ்சல் மூல வாக்குச் சீட்டுகளை விநியோகிக்கும் ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு முகவர் என்ற வகையில் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்புவதற்கு தயாரிக்கப்பட்ட அஞ்சல் வாக்குச் சீட்டு காப்புறுதி பக்கற்றுகள் அனைத்து தெரிவத்தாட்சி அலுவலகங்களிலும் அமைக்கப்பட்ட தற்காலிக அஞ்சல் அலுவலகங்களில் ஒப்படைக்கும் வேலைத் திட்டமொன்றும் அஞ்சல்மா அதிபருடன் கலந்துரையாடி நடவடிக்கையெடுக்கப்பட்டது.

37. விநியோகிக்கப்பட்ட அஞ்சல் வாக்குச் சீட்டுப் பக்கற்றுகள் காப்புறுதி அஞ்சலில் அத்தாட்சிப் படுத்துபவர்களுக்கு அனுப்பப்பட்டதோடு அஞ்சல் வாக்களிப்பு குறியிடும் தினம் வரையில் அவற்றை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டிய முறை, ஏற்புடைய தகவல்களை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட ஜேர்னல் குறிப்பில் பதியப்பட வேண்டிய முறை மற்றும் அஞ்சல் மூல வாக்களிப்பு திகதிக்கு போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சிகளினதும் அதிகாரம் பெற்ற முகவர்கள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் தலைவர்களுக்கு முகவர் ஒருவரை அனுப்புவதன் மூலம் அந்த சந்தர்ப்பத்தில் அவதானிப்பதற்கு வருகை தர முடியுமென அறிவிக்குமாறு அனைத்து அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அஞ்சல் மூல வாக்களிப்பு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக பெபரல் அமைப்பு மற்றும் CMVE அமைப்புக்களுக்கு ஒரு பிரதிநிதி என்ற வகையில் நியமிப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அஞ்சல் மூல வாக்களிப்பு குறியிடுதல் தொடர்பிலான அறிவுறுத்தல்கள் அஞ்சல் மூலம் வாக்களிக்கும் விண்ணப்பதாரிகள் அறிந்துகொள்வதற்காக ஊடக அறிவித்தல்கள் மூலம் மற்றும் ஏற்புடைய அலுவலர்களுக்கு பொதுவாக கடிதங்களை அனுப்பியும் அறிவூட்டப்பட்டதோடு, அஞ்சல் மூல வாக்களிப்பை குறியிடும் தினத்தில் ஏற்புடைய இடங்களுக்கு பாதுகாப்பை வழங்குமாறு பொலிஸ் மா அதிபர் ஊடாக அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டது. அஞ்சல் மூல வாக்களிப்பிற்காக 2015.08.03 ஆம் திகதி வலயக் கல்வி அலுவலகம், கோட்டக் கல்வி அலுவலகம் மற்றும் தேசிய பாடசாலைகளுக்காக ஒதுக்கப்பட்டது. 2015 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற உயர்தர பரீட்சையின் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்ட ஆசிரியர்களுக்கு சிரமம் இன்றி வாக்களிப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்கும் முகமாக இவ்வாறு வசதியளிக்கப்பட்டது. பொதுவாக ஏனைய அனைத்து அலுவலகங்களிலிருந்தும் அஞ்சல் மூல வாக்களிப்பை குறியிடும் திகதியாக 2015.08.05 மற்றும் 2015.08.06 ஆகிய தினங்கள் ஒதுக்கப்பட்டன. 2015.08.03 05 மற்றும் 06 திகதிகளில் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் அலுவலகங்களில் அஞ்சல் மூலம் வாக்களிப்பு குறியிடப்பட்ட பின்னர் குறியிடப்பட்ட பக்கற்றுகள் அன்றைய தினமே அஞ்சலுக்கு ஒப்படைக்குமாறு அறிவித்தல் வழங்கப்பட்டதோடு 2015.08.03 மற்றும் 2015.08.06 ஆகிய தினங்களில் உரிய திகதிகளில் உரிய அலுவலகங்களில்

அஞ்சல் மூல வாக்களிப்பை குறியிட்டதன் பின்னர் எஞ்சிய பக்கற்றுகள் அன்றைய தினமே அந்த நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக தெரிவத்தாட்சி அலுவலரினால் ஈடுபடுத்தப்பட்ட உதவி தெரிவத் தாட்சி உத்தியோகத்தரிடம் ஒப்படைப்பதற்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் அறிவூட்டப் பட்டனர். உரிய 03 தினங்களிலும் பயன்படுத்தி எஞ்சிய அஞ்சல் மூல வாக்குச் சீட்டு பக்கற்றுகள் தெரிவத்தாட்சி அலுவலரின் பொறுப்பில் எடுத்து ஏற்புடைய அஞ்சல் மூல வாக்காளர்களுக்கு தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகத்திற்கு சமூக மளித்து அஞ்சல் மூல வாக்கை குறியிடுவ தற்காக இன்னும் இரண்டு தினங்கள் ஒதுக்கப் பட்டன.

38. பாராளுமன்றத் தேர்தலுக்காக அஞ்சல் மூலம் வாக்களிப் பதற்கு 627728 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்ற தோடு, அவற்றில் 59368 விண்ணப்பங்கள் பல்வேறு காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்ட பின்னர் 567780 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு தேர்தல் மட்டத்திற்கும் கிடைக்கப்பெற்ற அஞ்சல் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை, அவற்றில் நிராகரிக்கப்பட்டவை ஏற்றுக்கொள்ளப் பட்ட எண்ணிக்கை பற்றிய விபரங்கள் இலக்கம் VI குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

39. கடந்த தேர்தல்களைப் போன்று பாராளுமன்ற வாக்கெடுப்பு நடவடிக்கைகள் முடிவடைந்ததுடன், ஒவ்வொரு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கும் வழங்கப்பட்ட அஞ்சல் மூல வாக்குச் சீட்டு பக்கற்றுக்களின் எண்ணிக்கை அவற்றின் குறியிடப் பட்ட எண்ணிக்கை மற்றும் எஞ்சிய பக்கற்றுகள் திருத்தமாக தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனவா என்று பரிசீலித்து அரசியல் கட்சி களினால் அதிகமான சந்தர்ப்பங்களில் அத்தாட்சிப் படுத்தும் அலுவலர்கள் பக்கற்றுக்களை மீதப்படுத்தி அவற்றை பிழையாக குறியிட்டு பின்னர் சமர்ப்பிக் கின்றனர் எனும் கருத்து தவறானது என்பதை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள்**

40. பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தில் 27(1) இற்கு அமைய தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப் பட்டுள்ள ஒவ்வொரு வாக்காளருக்கும் தேர்தல் மாவட்டத்தின் பெயர் மற்றும் இலக்கம், இடாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள படி வாக்காளரின் பெயர், தகுதி பெறும் முகவரி மற்றும் பதவிலக்கம், வாக்கெடுப்புப் பிரிவு, வாக்கெடுப்புப் மாவட்டம், வாக்காளருக்கென ஒதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையம் வாக்கெடுப்புத் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையொன்று தேர்தல் ஆணையாளரினால் குறித்துரைக்கப்படும் மாதிரிப் படிவம் ஒன்றில் தெரிவத்தாட்சி அலுவல ரினால் அனுப்பப்படல் வேண்டும். ஆயினும் அஞ்சல் மூலம் வாக்களிக்கும் வாக்காளர்களுக்கு மற்றும் சட்டத்தின் 127(ஆ) பிரிவின் கீழ் வேறு வாக்களிப்பு நிலையமொன்றில் வாக்களிப்பதற்கு அனுமதி பெற்றுள்ள வாக்காளர்களுக்கு அவ்வாறான உத்தியோகபூர்வ அட்டையொன்றை அனுப்பக்கூடா தென சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் வாக்காளர் ஒருவருக்கு வாக்கெடுப்பு நடாத்தப்படும் தினத்திற்கு 07 நாட்களுக்கு முன்னராவது கிடைக்குமாறு சாதாரண தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

41. தேருநர் இடாப்பு கணினி மயப்படுத்தப்பட்டிருப் பதனால் அந்த உள்ளீடுகள் மூலம் உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகளையும் கணினித் தரவுகளைப் பயன்படுத்தி அச்சிடும் வசதியுள்ளது. அவ்வாறே சிங்களம் அல்லது தமிழ் மொழியில் வாக்காளருக்கு ஏற்புடையவாறு அச்சிடுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் மாதிரிகளை தெரிவத் தாட்சி உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொண்டு தேர்தல் செயலகத்தினால் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் மூலம் அச்சிட்டு வாக்காளர்களுக்கு விநியோகிப்பதற்காக மீண்டும் தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் ஒப்படைக்கப்படும். தெரிவத்தாட்சி அலுவலரின் பணியாட் தொகுதியினரால் அந்த உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் ஒவ்வொன்றாக பரிசீலிக்கப்பட்டு மரணமெய்திய அல்லது வெளிநாட்டில் உள்ள அல்லது அஞ்சல் மூல வாக்காளர்களுக்குரிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை அடையாளம் காண்பதற்காக அதற்கான இறப்பர் முத்திரைகள் இடப்பட்டு அவற்றை வாக்காளர்களுக்கு விநியோகிப்பதற்காக பிரதேச அஞ்சல் அத்தியட்சக ரிடம் ஒப்படைக்கப்படும். உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை அஞ்சலுக்கு ஒப்படைப்பது 2015.07.21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. இத்தோடு விசேட விநியோகம் 2015.08.02 மற்றும் 2015.08.09 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்டது. விநியோக நடவடிக்கைகளை 2015.08.10 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் அஞ்சல் அத்தியட்சகர்களுக்கு வழங்கப்பட்டது. 2015.08.10 ஆம் திகதிக்கு பின்னர் விநியோகிக்க முடியாது தபாலகங்களில் எஞ்சிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை தமது அடையாளத்தை உறுதிப் படுத்தியதன் பின்னர் அஞ்சல் அலுவலகங் களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு வாக்காளர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. அவ்வாறு அஞ்சல் அலுவலகங்களுக்கு வந்து உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொண்டவர் களின் பெயர் பட்டியலை பரீட்சித்துப் பார்ப்பதற்கு அரசியல் கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் வேண்டும் போது அதற்கான சந்தர்ப்பத்தை வழங்குமாறு அஞ்சல்மா அதிபரினால் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர்களுக்கு அறிவுரை வழங்கப் பட்டிருந்தது.

**வாக்காளர்களை அடையாளம் காண்பதற்காக வாக்களிப்பு நிலையத்தில் அடையாள ஆவணங்களை பயன்படுத்துதல்.**

42. 2004 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கமைய வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்குச் சீட்டொன்றை வாக்காளர் ஒருவருக்கு வழங்குவதற்கு முன்னர் தேசிய அடையாள அட்டைக்கு அமைய வாக்காளர்களை அடையாளம் காணுதல் வேண்டும். ஆயினும் தேசிய அடையாள அட்டை அனைத்து வாக்காளர்களுக்கும் வழங்கப்படாத காரணத்தை கருத்திற் கொண்டு அனைத்து வாக்காளர்களுக்கும் தேசிய அடையாள அட்டை விநியோகிக்கப்பட்டு முடியும் வகையில் வாக்காளர்களை அடையாளம் காண்பதற்காக வேறு அடையாள ஆவணங்களையும் பரிசீலனைக்கு எடுப்பதற்கு நீதிமன்ற நடவடிக்கையொன்றின்போது தேர்தல் ஆணையாளர் இணக்கம் தெரிவித்தார். அதற்கிணங்க தேசிய அடையாள அட்டைக்கு மேலதிகமாக செல்லுபடியாகும் கடவுச்சீட்டு, செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம், அரச சேவை ஓய்வூதிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, ஆட்களைப் பதிவு செய்யும் திணைக் களத்தினால் வழங்கப்படும் மதகுரு அடையாள அட்டை என்பன ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு, அவ்வாறான அடையாள ஆவணங்கள் எதுவும் இல்லாத ஒருவருக்கு வாக்களிப்பு நிலையத்தில் சமர்ப்பிப்பதற்காக தேர்தல் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் தற்காலிக அடையாள அட்டையையோ பெற்றுக்கொள்ள வேண்டுமென பணிக்கப்பட்டது. இது தொடர்பில் வாக்காளர்களை அறிவூட்டுவதற்காக ஊடக அறிவித்தல்கள் வெளியிடுதல் ஊடக கலந்துரையாடல்களை நடாத்துதல் மற்றும் விளம்பரங்களை வெளியிடுதல் மூலம் அறிவூட்டுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

43. 2014 ஆம் ஆண்டு தேருநர் இடாப்பு பாராளுமன்றத் தேர்தலுக்கான செல்லுபடியாகும் தேருநர் இடாப்பாக இருப்பதனால் 2015.01.08 ஆம் திகதி இடம்பெற்ற சனாதிபதி தேர்தலுக்காக பெற்றுக் கொண்ட தற்காலிக அடையாள அட்டைகளை இந்த வாக்கெடுப்பிற்காகவும் மீண்டும் செல்லுபடியாக்கி பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. எவ்வாறெனினும் இது வரையில் தற்காலிக அடையாள அட்டையொன்றோ இல்லாத வாக்காளர்களுக்கு தற்காலிக அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளும் வேலைத் திட்டம் மற்றும் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் ஆகியன ஒன்றிணைந்து தேசிய அடையாள அட்டையை வழங்கும் நிகழ்ச்சித் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டது. விசேடமாக எந்தவித அடையாள அட்டையும் இல்லாத வாக்காளர்களில் அதிகமானோர் தோட்டப் பிரதேசங்களை அண்டி வாழும் தமிழ் மொழி பேசும் மக்கள் என்பதை கருத்திற் கொண்டு தெரிவத்தாட்சி அலுவலர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் தோட்ட அத்தியட்சகர்கள் ஒன்றிணைந்து எந்தவொரு அடையாள அட்டையும் இல்லாத வாக்காளர்களுக்கு தற்காலிக அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சித் திட்டமும் நடைமுறைப்படுத்தப் பட்டது. அதற்கிணங்க மாவட்ட தேர்தல் அலுவலகத்தினால் விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகளின் எண்ணிக்கை 82819 ஆகும். கடந்த வாக்கெடுப்பிற்கு ஏற்புடைய இற்றைவரைப்படுத்தப் பட்ட அடையாள அட்டைகள் 125366 ஆகும். அதற்கு ஏற்புடைய தகவல்கள் இலக்கம் VII குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

**துடைத்தழிக்க முடியாத மை**

44. வாக்களிப்பு நிலையமொன்றில் வாக்குச் சீட்டொன்றைக் கோரும் வாக்காளர் ஒருவரை தகுந்த பரீட்சிப்புக்கு உள்ளாக்குதல் மற்றும் தகுந்த அடையாளத்தைக் கொண்டு அடையாளமிடப்பட வேண்டுமென சட்டத்தின் 38(1) (அ) மற்றும் (ஆ) உட்பிரிவுகளில் குறிப்பிடப் பட்டுள்ளது. " தகுந்த அடையாளம்" என்பது வாக்காளர் ஒருவரின் சுட்டு விரலை துடைத்தழிக்க முடியாத மையினால் அடையாளமிடுதலென பாராளு மன்றத் தேர்தல் சட்டத்தின் 38(3)(ஆ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு வாக்காளர் ஒரு தடவைக்கு மேல் வாக்களிப்பதை தடுப்பது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது வாக்களிப்பு நிலையத்திற்கு வாக்களிப்பதற்காக சமூகமளிக்கும் அனைத்து வாக்காளர்களும் அடையாள ஆவண மொன்றின் மூலம் இனம்காணப்படுவதனால் இவ்வாறான ஒரு தேவைப்பாட்டை தொடர்ந்தும் பேணி வருவது அவசியமா? என்பது தொடர்பில் கலந்துரையாடலுக் குட்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் வாக்காளரை அடையாளம் காண்பதற்காக தற்போது இலங்கையில் பயன்படுத்தப்படும் ஆளடையாள ஆவணங்களை விடவும் வெற்றிகரமான முறைகளை கையாளும் நாடுகளிலும் இன்னும் துடைத்தழிக்க முடியாத மை மூலம் வாக்காளர் அடையாளம் இடப் படுவதனால் சுதந்திரமானதும் நீதியானதுமான வாக்கெடுப்பு என மக்களது நம்பிக்கையை ஏற்படுத்தும் சந்தர்ப்பமாகக் கருதி இதனை நீக்குவது பொறுத்தமற்றதெனக் கருதுகின்றேன்.

45. எவ்வாறெனினும் துடைத்தழிக்க முடியாத மையின் பாவனையின் போது ஒரு வாக்களிக்கும் நிலை யத்தின் வாக்காளர்கள் 350 பேரை ஒரு மைப் பேனாவினால் அடையாளம் இடும் நோக்கில் கோரல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கிணங்க இதன் பொருட்டு பாரிய அண்ணியச் செலாவணியை செலவு செய்வதற்கு ஏற்பட்டுள்ளது. கடந்த வாக்கெடுப்புகளின் போது பயன்படுத்தப்பட்ட துடைத்தழிக்க முடியாத மைப் பேனாக்கள் உரிய முறையில் செயற்படாத காரணத்தினால் வாக்காளர் களினதும் போட்டியிடும் வேட்பாளர்களினதும் குறைகூறலுக்கு ஆளானது. எனவே சுதந்திரமானதும் நீதியானதுமான வாக்கெடுப்பொன்றின் போது வாக்காளர் மற்றும் போட்டியிடும் அரசியல் கட்சிகள் / குழுக்கள் வாக்காளர்கள் துடைத்தழிக்க முடியாதமையினால் அடையாளம் இடப்பட வேண்டுமென நினைக்கும் காலம் வரை இந்த முறையினை நடைமுறைப் படுத்துவது அறிவுபூர்வமானது.

**மரணமெய்திய அல்லது வெளிநாட்டில் உள்ள வாக்காளர்கள்.**

46. மரணமெய்திய அல்லது வெளிநாட்டில் உள்ள வாக்காளர்களுக்கு பதிலாக வேறு ஆட்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிப்பதாக அரசியல் கட்சிகளுக்கு மத்தியில் மற்றும் வாக்காளர்களுக்கு மத்தியில் நிலவும் கருத்தை இல்லாதொழிப்பதற்காக கடந்த வாக்கெடுப்புக்களைப் போன்று வாக்களிப்பு நிலையங்களுக்கு விநியோகிக்கப்படும் தேருநர் இடாப்பில் மரணமெய்திய மற்றும் வெளிநாட்டில் உள்ள வாக்காளர்களின் விபரங்களை குறித்து அனுப்பும் வேலைத் திட்டமொன்று இந்த தேர்தல்களின் போதும் நடைமுறைப்படுத்தப்பட்டது. செல்லுபடியாகும் தேர்தலுக்கு அமைவாக 2014 ஆம் ஆண்டு தேருநர் இடாப்பில் தயாரிக்கும் போது தகுதிபெறும் திகதியான 2014 யூன் மாதம் 01 ஆம் திகதி வரை மரணமெய்தியவர்களின் தகவல்கள் திருத்தப்பட்ட தேர்தல் இடாப்பில் உள்ளடக்கப்பட்ட போதிலும் 2014 யூன் மாதம் 01 ஆம் திகதியின் பின்னர் வாக்கெடுப்பு நடைபெற்ற 2015 ஓகத்து 17 ஆம் திகதிக்கான காலப்பகுதிற்குள் மரணமெய்திய வர்களின் பெயர்களும் தேருநர் இடாப்பில் உள்ளடக் கப்பட்டுள்ளதைக் கருத்திற் கொண்டு தேர்தல் தினத்திற்கு முன்னர் அதாவது 2015.07.15 ஆம் திகதி வரை மரணமெய்திய மற்றும் வெளிநாட்டி லுள்ள வாக்காளர்களின் தகவல்களை 2015.07.23 ஆம் திகதிக்கு முன்னர் கிராம அலுவலர் மூலம் சேகரித்து அந்த விபரங்களுக்கமைய தேருநர் இடாப்பில் ஏற்புடைய வாக்காளர்களின் பெயர் களுக்கு முன்னாள் மரணமெய்தியவருக்கு “ D” எழுத்தினையும் வெளிநாட்டிலுள்ளவருக்கு “ A” எழுத்தினையும் இடுவதற்கும் அதற்கு மேலதிகமாக வாக்களிப்பு நிலையங்களுக்கு வழங்கப்படும் தேருநர் இடாப்பிலும் ஏற்புடைய வாக்காளர்களுக்கு அனுப்பப் படும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையிலும் “ மரணமெய்தியவராக அறிக்கையிடப்பட்டுள்ளார்” அல்லது “ வெளிநாட்டிற்கு சென்றுள்ளவர் என அறிக்கையிடப்பட்டுள்ளது.” என அடையாள மொன்றை பதித்து ஒப்படைப்பதற்கும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. இவ்வாறான ஒரு வாக்காளர் வாக்களிப்பு நிலையத் திற்கு சமூகமளிக்குமிடத்து அவ்வாறானவர்கள் வாக்களிப்பு நிலையத்திற்குப் பொறுப்பான சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் பரீட்சிக்கப்பட்டு வாக்குச் சீட்டொன்றை வழங்க தீர்மானிக்கப்படு மிடத்து பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 43 ஆம் பிரிவிற்கமைய வெளிப்படுத்துகையொன்றை ஒப்பமிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கையெடுக்குமாறு வாக்களிப்பு நிலையங்களுக்குப் பொறுப்பான அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களுக்குரிய உரிய தினத்தில் வெளிநாட்டில் உள்ள மற்றும் மரணமெய்தியவர்களின் எண்ணிக்கை இலக்கம் VIII குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

**உடற் தகுதியீனம் உள்ளவர்களுக்கான விசேட போக்கு வரத்து வசதிகளுக்கு அனுமதியளித்தல்.**

47. பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 83(4) (ஈ) பிரிவிற்கமைய ஏதேனும் உடற் தகுதீயனம் காரணமாக வாக்கெடுப்பு நிலையத்திற்கு மற்றும் வாக்கெடுப்பு நடைபெறும் இடத்திற்கு கால்நடையாக அல்லது பொது போக்குவரத்து முறையொன்றின் மூலம் சென்றுவருவதற்கு முடியாத ஆட்களுக்கு வாக்கெடுப்பு தினத்திற்கு 07 நாட்களுக்கு முன்னர் தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் களுக்கு மருத்துவ சிபாரிசுகளுடன் வேண்டு கோளொன்றை முன்வைத்து வாகனமொன்றை அனுமதியினை பெற்றுக்கொள்ள முடியும். இது தொடர்பில் அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் 2015.07.20 ஆம் திகதி கடிதம் ஒன்று அனுப்பப்பட்டு அறிவுறுத்தல் வழங்கப் பட்டுள்ளதோடு வாக்காளர்களை அறிவூட்டுவதற்காக தேர்தல் ஆணையாளரினால் ஊடக அறிக்கைகள் வெளியிடப்பட்டன. அத்தோடு வாக்களிப்பு நிலையங்களாக கட்டிடங்களை தெரிவு செய்யும் போது முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் வயோதிபர்கள், அங்கவீனர்கள் வாக்களிப்பு நிலையத்திற்கு சமூகமளிப்பதற்கு வசதியான முறையில் வாக்களிப்பு நிலையங்களை தெரிவு செய்யுமாறு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

**ஊழியர்களுக்கு வாக்களிப்பதற்கு ஏற்ற வகையில் போதியளவு விடுமுறை வழங்குதல்.**

48. பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 122 (1) பிரிவுக் கமைய நேரடியாக வாக்களிப்பதற்கு உரித்துடைய வேறு எவரேனும் ஆளின் தொழில் தருநராக யிருப்பவரான எவரேனும் ஆள் அத்தகைய வேறு ஆளினால் அதற்கென எழுத்து மூலம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல் அத்தகைய வேறு ஆள் அவருக்கு வாக்களிப்பதற்கு இயலச் செய்வதற்கு போதியதென கருதக்கூடிய 04 மணித்தியாலங் களுக்கு குறையாத சம்பளக் குறைப்பற்ற லீவினை வழங்குதல் வேண்டும். எவ்வாறெனினும் ஏனைய கடந்த அனைத்து தேர்தல்கள் வாக்கெடுப்புக் களைப் போன்றும் பாராளுமன்றத் தேர்தலிலும் வாக்களிப்பதற்கு தனது வாக்களிப்பு நிலையத்திற்கு செல்வதற்காக போதியளவு லீவினை தனது தொழில் தருநர்கள் வழங்குவதில்லையென ஊழியர் களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. இந்த நிலைமையினை கருத்திற் கொண்டு கடந்த சனாதிபதித் தேர்தல்களின் போது கையாளப் பட்டதைப் போன்று மனித உரிமை ஆணைக்குழு வுடன் கலந்துரையாடி, வாக்களிப்பு நிலையத்திற்கு உள்ள தூரத்தை கருத்திற் கொண்டு அனுமதி வழங்க முடியுமான லீவு நாட்கள் எண்ணிக்கை தொடர்பில் நியதிகள் முன்வைக்கப்பட்டதோடு, அது தொடர்பில் தொழில் திணைக்களத்தினை அறிவூட்டி அதனூடாக தொழில் தருநர்களை அறிவூட்டுவ தற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது. தொழில் அமைச்சினால் தேர்தல் திணைக்களத்தினால்

அறிமுகப்படுத்தப்பட்ட நியதிகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வெண்டுமென பத்திரிகை விளம்பரங்களை வெளியிட்டு தொழில்தருநர்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. ஏற்புடைய பத்திரிகை விளம்பரங்கள் முதலாவது அட்டவணையாக இந்த அறிக்கையோடு இணைக்கப் பட்டுள்ளது.

**ஆளணித் தேவைப்பாடுகள்.**

49. பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு, வாக்கெண்ணல் மற்றும் பூர்வாங்க ஏற்பாடுகளுக்காக தேவையான அலுவலர்கள் மற்றும் வாகன கணக்கெடுப்பிற்கு தேவையான நடவடிக்கை யெடுக்குமாறு அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பிரதி / உதவி தேர்தல் ஆணையாளர்களையும் தேர்தல் செயலகத்திற்கு வரவழைத்து 2015.06.25 ஆம் திகதி அறிவுறுத்தல் வழங்கப்படட்தோடு, அதற்கான எழுத்து மூல அறிவுறுத்தல் 2015.07.02 ஆம் திகதிக்கு பின்னர் அனுப்பப்பட்டது. 2015 சனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட்டு குறுகிய காலத்திற்குள் பாராளு மன்றத் தேர்தலையும் ஏற்பாடு செய்ய நேரிட்டதால் சனாதிபதி தேர்தலுக்கு ஈடுபடுத்திய அலுவலர்களை அந்தக் கணக்கெடுப்பு பட்டியல்களுக்கமைவாக தேர்ந்தெடுக்க வேண்டுமென முன்மொழியப்பட்ட போதிலும் 2015 ஆம் ஆண்டு வருடாந்த இடமாற்றம் பெற்ற உத்தியோத்தர்கள் இடமாற்றம் பெற்றுள்ளதனால் மற்றும் வேறு காரணங்களைக் கருத்திற் கொண்டு ஆளணி மற்றும் வாகன தேவைப்பாடுகளுக்கான கணக்கெடுப்பினை நடாத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அதற்குத் தேவையான மாதிரிப் படிவங்கள் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டது.

50. சனாதிபதித் தேர்தலைப் போன்று இந்த வாக்கெடுப்பும் நாடளாவிய ரீதியிலான வாக்கெடுப்பு என்பதனால் பாரிய எண்ணிக்கையிலான ஆளணியும் வாகனங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டியதை கருத்திற் கொண்டு அனைத்து மாவட்டங்களினதும் அனைத்து திணைக்களத் தலைவர்கள் மற்றும் நிறுவனங்களை அறிவுறுத்தி தகுதிபெற்ற அனைத்து அலுவலர்களையும் நிறுவனங்களிலுள்ள வாகனங்களில் தேர்தல் கடமைகளுக்காக விடுவிப்பதற்கு அறிவுறை வழங்குமாறும் தெரிவத்தாட்சி அலுவலர்கள் அறிவூட்டப்பட்டனர். அத்தோடு கடந்த தேர்தல்களில் முகம் கொடுத்த நிலைமையினையும் கருத்திற் கொண்டு சனாதிபதித் செயலாளர் ஊடாக அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களை விளித்து தேர்தல்கள் ஆணையாளரின் வேண்டுகோளுக்கமைய கடமையில் உள்ள தகுதி பெற்ற அனைத்து அலுவலர்களின் விபரங்களையும், அனைத்து வாகன விபரங் களையும் வழங்குமாறு ஏற்புடைய நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

51. வாக்குகளின் எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட அலுவலர் தேவைப்பாடுகளை கணிப்பீடு செய்து மாவட்ட தேவைப்பாடுகளுக்கு ஏற்புடைய வகையில் அலுவலர் பற்றாக்குறை நிலவுமிடத்து அண்மைய மாவட்டங்கள் அல்லது கொழும்பு அலுவலர் குழாத்திலிருந்து பெற்றுக் கொள்ள நடவடிக்கையெடுக்குமாறு மற்றும் மிகை அலுவலர்களின் பெயர்களை குறைபாடுடைய மாவட்டங்களுக்கு வழங்குவதற்கும் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. வாக்களிப்பு நிலைய தேவைப்பாடுகளை கணிப்பிடும் போது வாக்காளர்களின் எண்ணிக்கை 1200 வரை தனிவரிசையாக அலுவலர்கள் 8/9 அளவில் ஈடுபடுத்துமாறும் வாக்காளர்களின் எண்ணிக்கை 1200 ஐ விட அதிகரிக்கும் போது 2 வரிசைகளாகக் கருதி அலுவலர்கள் 15/16 அளவில் ஈடுபடுத்து மாறும் சாதாரண வாக்கெண்ணலின் போது 1 வாக்கெண்ணும் மண்டபத்திற்கு வாக்குகளின் எண்ணிக்கை 10,000 தொடக்கம் 12,500 இடைப் பட்டதாயின் அலுவலர்கள் 40/50 அளவில் இணைப்பு செய்வதற்கும் அஞ்சல் மூல வாக்கெண்ணலின் போது ஒரு வாக்கெண்ணும் மண்டபத்திற்கு வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய பக்கற்றுகள் 1500 – 2000 அளவுக்கு அலுவலர்கள் 10/15 அளவு ஈடுபடுத்துவ தற்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

52. அனைத்து அரச நிறுவனங்களினதும் அலுவலர் களின் மற்றும் பாடசாலை ஆசிரியர்களின் விபரங்கள் கிடைக்கப் பெற்ற பின்னர் சுற்றிக்கை அறிவுறுத் தலுக்கமைய ஏற்புடைய சம்பள வகுதியின் கீழ் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள், சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள், கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் மற்றும் எழுதுனர்கள் என அலுவலர்களை வகைப்படுத்தி அவ் அலுவலர் களுக்கு பயிற்சியளிக்கும் வேலைத் திட்டத்தை மாவட்ட மட்டத்தில் மேற்கொள்வதற்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. கொழும்பு மாவட்டத்தின் அரசாங்க அலுவலகங்களின் உதவி தெரிவத்தாட்சி அலுவலர் களை பயிற்றுவித்தல் தேர்தல் செயலகத்தில் தேர்தல் ஆணையாளரின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

53. வாக்கெடுப்பு, வாக்கெண்ணல் மற்றும் பூர்வாங்க நடவடிக்கைகளை ஏற்பாடு செய்வதற்கான அனைத்து மாவட்டங்களுக்கும் மற்றும் தேவையான அலுவலர்களின் எண்ணிக்கை 160718 ஆக இருந் ததுடன், இவர்களில் 155100 மாவட்டத்தினுள்ளே தேடிக்கொள்ள முடியுமாகியது. கண்டி, குருநாகல் போன்ற மாவட்டங்களின் மற்றும் கொழும்பு மாவட்டத்திலும் மிகை ஊழியர்கள் அறிக்கையிடப் பட்டனர். அலுவலர் பற்றாக்குறையாகவுள்ள மாவட்டங்களுக்கு அந்த அலுவலர்களை வாக்கெடுப்பு கடமைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. பெரும்பாலான மாவட்டங்களில் வாக்கெண்ணும் நடவடிக்கைகள் மற்றும் வலயங்களுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் கடமைகளுக்கு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் கொழும்பு அலுவலர்

குழாத்திலிருந்து வழங்குவதற்கு நடவடிக்கை யெடுக்கப்பட்டது. வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணல் நடவடிக்கைகளுக்கு மாவட்டத்தின் அலுவலர்களை மாத்திரம் ஈடுபடுத்துவதற்கு பதிலாக முடியுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மாவட்ட அரசியல் அதிகார பீடம் அல்லது வேறு அலுவலர்கள் அறிந்திராத வேறு அண்மைய மாவட்டமொன்றின் அலுவலர்களை ஈடுபடுத்துவ தற்கும் முடியுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நடவடிக்கையெடுக்க வேண்டுமென தெரிவத்தாட்சி அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டனர். ஒவ்வொரு மாவட்டங்களுக்காகவும் வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணல் கடமைகளுக்காக அதற்கான அலுவலர் தேவைப்பாடு இலக்கம் IX குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

**போக்குவரத்து தேவைப்பாடுகள்**

54. வாக்கெடுப்பொன்றின் பூர்வாங்க நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் மற்றும் வாக்கெடுப்பின் போது வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் உள்ளிட்ட பொருட்களை கொண்டு செல்வதற்காகவும் வாக்கெடுப்பு நிறைவடைந்த பின்னர் அவற்றை மீண்டும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களுக்கு எடுத்துவருவதற்கும் வாக்கெடுப்புத் தினத்தன்று வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு இலகுவாகச் சென்றடைவதற்கான வேலைத்திட்டமொன்றை தயாரிப்பது போக்குவரத்து வேலைத் திட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலரின் அடிப்படைப் பொறுப்பாகும். முழு நாட்டிலும் வாக்கெடுப்பு ஒரு நாளில் குறிப்பிட்ட நேரத்திற்குள் மேற்கொள்ளப் படுவதனால் பெரும் எண்ணிக்கையிலான வாகனங்களை தேடிக்கொள்ள வேண்டிய தேவை தேர்தல்கள் திணைக்களத்திற்கு உள்ளது. அதற்கிணங்க மாவட்ட மட்டத்தில் தனது மாவட்டத்திலுள்ள அனைத்து அரசாங்க மற்றும் அரச சார்பு நிறுவனங்களிலிருந்து இணைப்புச் செய்யப்பட்டுள்ள விடுவிக்க முடியுமான அனைத்து வாகனங்களையும் பெற்றுக்கொள்வது மேலும் இலங்கை போக்குவரத்துச் சபை, தனியார் பேருந்து சங்கம் மற்றும் வாடகை அடிப்படையில் தேவையான வாகனங்களை கட்டாயமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். இதன் ஆரம்ப நடவடிக்கையாக தேர்தல் செயலகத்திலும் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களிலும் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் பிராந்திய போக்குவரத்துச் சபைகளின் உயர் அதிகாரிகளை அழைத்து கலந்துரையாடல் நடாத்துவதற்கும் வாடகை வேன் வண்டிகளைப் பெற்றுக்கொள்வதற்காக வேன் வண்டி உரிமையாளர்களுடன் கலந்துரையாடுவ தற்கும் விசேடமாக வாடகை வாகனங்களுக்காக விசேட கட்டண முறையொன்றும் நடைமுறைப் படுத்தப்பட்டது.

55. வாக்களிப்பு நிலையங்களுக்கு பொறுப்பாகச் செல்லக்கூடிய சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கும் வாக்களிப்பு நிலையங்கள் சிலதின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வ தற்காக செல்லக்கூடிய வலயங்களுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் களுக்கும் தனது தனிப்பட்ட மோட்டார் வண்டி மைல் கூலியைப் பெற்றுக்கொள்ளும் அடிப்படையிலும் பயன்படுத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டது. சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் தனது தனிப்பட்ட மோட்டார் வண்டியை பயன்படுத்து மிடத்து வாக்களிப்பு நிலைய பொருட்கள் மற்றும் அலுவலர்களை கொண்டு செல்ல வேண்டி யிருப்பதால் அதற்காக வேன் வண்டி அல்லது ஜீப் வண்டியை மாத்திரம் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதற்காக அரசாங்க அலுவலர் களின் அனுமதிக்கப்பட்ட கட்டணங்களுக்குப் பதிலாக விசேட கட்டண முறையொன்று பின்பற்றப் பட்டது.

56. வாக்கெடுப்பு நடவடிக்கைகளில் அடிப்படையான கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் மற்றும் அஞ்சல் திணைக்களத்திற்கு வாக்கெடுப்பு ஆரம்பித்ததிலிருந்து பொறுப்பளிக்கப்படும் கடமைகளுக்கு அமைய அதிகமான வாகனங்கள் தேவைப்படுகின்றன. தேவையான வாகனங்களை தெரிவத்தாட்சி அலுவலர் களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் எதிர்பார்த்த போதிலும் அதற்கான மிகை வாகனங்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் இல்லாதிருந்த காரணத்தினால் அனுமதிக்கப்பட்ட வாடகை அடிப்படையில் தேவையான வாகனங் களைப் பெற்றுக்கொள்வதற்கு தேர்தல் ஆணையாள ரினால் அனுமதி வழங்கப்பட்டது.

2015 பாராளுமன்றத் தேர்தலின் போது மன்னார் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் தற்காலிகமாக வசிக்கும் வாக்காளர் களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு புத்தளம் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு நேரிட்டது. கற்பிட்டி பிரதேச செயலகப் பிரிவின் தற்காலிகமாக வசிக்கும் ஆயினும் மன்னார் வாக்கெடுப்புப் பிரிவின் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் கோரிக்கைக்கமைய இந்தப் போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டன. அத்தோடு போட்டியிடும் அதிகமான அரசியற் தலைவர்கள் வாக்களிப்பு நாளன்று மன்னார் மாவட்டத்திற்கு செல்லவிருப்பதால் அதற்காகவும் போக்குவரத்து வசதிகளை வழங்குமாறு கோரி பெயர்ப் பட்டியல் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. ஆயினும் பரீட்சிப்பின் போது அவ்வாறானவர்கள் குறை நிரப்புப் பட்டியல் வாக்காளர்களென உறுதிப்படுத்தப்பட்டதனால் இடம் பெயர்ந்த வாக்காளர்கள் இருப்பின் அவர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குமாறும் தெரிவத்தாட்சி அலுவலரினால் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும் குழுவினரோடு, அதற்காக வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பின் கீழ் பயணிப்பதற்கும் அக்குழுவினருக்கு முடியுமென அறிவிக்கப்பட்டது.

57. வாக்களிப்புக்கு ஏற்புடைய போக்குவரத்து வசதிகளை வழங்கும் போது முழு நாட்டினையும் உள்ளடக்கிய வகையிலான வாக்கெடுப்பு என்பதனால் அதிகளவான

எரிபொருளை சேகரித்து வைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அந்த விடயத்தினைக் கருத்திற் கொண்டு தேர்தல்கள் ஆணையாளரினால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களை அழைத்து எரிபொருள் தேவைப்பாடு தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டதோடு, மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கி பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பிரதேச அலுவலர்கள் மற்றும் எரிபொருள் நிலைய உரிமை யாளர்கள் ஆகியோரை அழைத்து எரிபொருள் கையிருப்பை சேகரித்து வைக்க வேண்டியதன் அவசியப்பாட்டை தெளிவுபடுத்துமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

58. வாக்கெடுப்பொன்றின் போது போக்குவரத்து வசதிகளை வழங்கும் போது வாக்காளர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதும் முக்கியமானது. ஏனெனில் அதிகமான வாக்காளர் களுக்கு தனிப்பட்ட வாகனங்கள் இருந்த போதிலும் வாக்களிப்பு தினத்தன்று வாக்களிப்பு நிலையத் திற்கு தனிப்பட்ட வாகனத்தில் செல்ல முடியாத காரணத்தினால் வாக்கெடுப்புத் தேவைப்பாடு களுக்காக இலங்கை போக்குவரத்துச் சபையின் மற்றும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்திற் குரிய பஸ் வண்டிகளும் வாடகை வாகனங்களும் தெரிவத்தாட்சி அலுவலரினால் பெற்றுக்கொண்டு இருப்பதனால் ஆகும். எனவே முறையான வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தாதவிடத்து வாக்காளர்களுக்கு பொதுப் போக்குவரத்து வசதிகள் இல்லாமல் போக்குவரத்துப் பிரச்சினைகள் ஏற்படலாம். ஆகவே விசேடமாக இலங்கை போக்குவரத்துச் சபையின் மற்றும் தனியார் பஸ் வண்டிகள் சங்கத்துடன் கலந்துரையாடி வாக்கெடுப்புத் தினத்தன்று கட்டணம் அறவிட்டு வாக்காளர்கள் தனது வாக்களிப்பு நிலையத்திற்கு செல்வதற்கு தேவையான வசதிகளை செய்வதற்கு தளராது நடவடிக்கையெடுக்கப்பட்டது.

### பாதுகாப்பு நடவடிக்கைகள்

59. வாக்கெடுப்பொன்று பிரகடனம் செய்யப்பட்ட சந்தர்ப் பத்திலிருந்து வாக்கெடுப்பு நிறைவடைந்து பெறுபேறு அறிவிக்கப்பட்டு ஒரு வார காலம் கழியும் வரையில் வாக்கெடுப்புச் சட்டங்களை அமுல்படுத்தும் பொறுப்பு தேர்தல் ஆணையாளரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் பொலிஸ் மா அதிபருக்கு பொறுப்பளிக்கப்படுகின்றது. அரசியல் அமைப்புக்கான 17 ஆவது திருத்தத்திற்கமைய வாக்கெடுப்பொன்று பிரகடனம் செய்யப்பட்ட பின்னர் தேர்தல் ஆணையாளர் வேண்டி நிற்கும் பொலிஸ் அலுவலர் எண்ணிக்கையை வழங்க வேண்டியது பொலிஸ் மா அதிபரின் பொறுப்பாகும். இந்தப் பின்னணியில் தேர்தல்கள் ஆணையாளரினால் தெரிவத்தாட்சி அலுவலர்கள், போட்டியிடும் அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்கள் தேர்தல் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஏற்புடைய கடமைகள் பொலிஸாரினால் உரியமுறையில் நிறைவேற்றப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

60. வாக்கெடுப்பிற்குரிய நியமனப் பத்திரங்களைப் பொறுப்பேற்றல், வாக்கெடுப்பு, வாக்கெண்ணல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதலுக்கு ஏற்புடைய பணிகள் மேற்கொள்ளப்படும் இடங்களுக்கு தேவையானப் பாதுகாப்பினை வழங்குவதும் தேர்தல் சட்டங்களை அமுல்படுத்துவதன் கீழ் சட்ட விரோதமான சுவரொட்டிகள், பதாகைகள், பெனர் போன்றவற்றை அகற்றுவது தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் மற்றும் அரசியல் கட்சிச் செயலாளர்களுடன் கலந்துரையாடி தேவையான தீர்மானங்கள் எடுக்கப்படும். மாவட்ட மட்டத்தில் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் பிரதேச மட்டத்திலான உயர் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் அதிகாரம் பெற்ற முகவர்கள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் தலைவர்களுடன் கலந்துரையாடி மாவட்ட மட்டத்தில் தேவையான பாதுகாப்பு தொடர்பில் ஏற்புடைய தீர்மானங்கள் எடுக்கப்படும். இவ்வாறான கலந்துரையாடல்களின் போது அரசியல் கட்சிகளினால் கடந்த வாக்கெடுப்புக்களின் அனுபவங்களுடன் தேர்தல் சட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பில் அல்லது அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்கள் தேர்தல் நடவடிக்கையின் போது முகம் கொடுக்கும் பிரச்சினைகளை நேருக்கு நேர் கலந்துரையாடி தீர்மானம் எடுப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

61. தேர்தல் சட்டங்களை அமுல்படுத்துவதற்காக தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டவுடன் தேர்தல் செயலகத்தில் பிரதி பொலிஸ் மா அதிபரின் தலைமையில் பிரிவொன்று நிறுவப்பட்டதோடு, மாவட்ட மட்டத்திலான பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் அல்லது உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் தனியான பிரிவொன்று நிறுவப்பட்டது. மேலும் சனாதிபதித் தேர்தல் ஒன்றினைப் போன்று மாவட்டத்தின் பரப்பு மற்றும் விசேட பாதுகாப்பு வழங்க வேண்டுமென தீர்மானிக்கப்படும் பிரதேசங்களை மையப்படுத்தி பிரதேச செயலகங்கள் அல்லது வேறு அரசாங்க நிறுவனங்களின் விசேட பொலிஸ் பிரிவுகளை நிறுவுவதற்கும் நடவடிக்கையெடுக்கப் பட்டது. அவ்வாறு நிறுவப்பட்ட பொலிஸ் பிரிவு களுக்கு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களும் தனியான ஆளணியினரும் இணைப்புச் செய்யப் பட்டனர். இத்தோடு அரசியல் கட்சிகளின் முகவர்களுக்கும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக் களின் பிரதிநிதிகளுக்கும் பங்கேற்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

62. தேர்தல் பிரகடனம் செய்யப்பட்ட சந்தர்ப்பம் முதல் தேர்தல் செயலகத்திற்கு மற்றும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களிற்கு/ மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கு தேவையான பாதுகாப்பினை வழங்குவதற்கும் விசேட பொலிஸ் பாதுகாப்புத் தேவையான வேட்பாளர்களுக்காக பாதுகாப்பினை வழங்குவதற்கும் பொதுவாக

வாக்களிப்புச் சந்தர்ப்பத்தின் போது அனைத்து வாக்களிப்பு நிலையங்களிற்கும் இரண்டு பொலிஸ் அலுவலர்களை கடமையில் ஈடுபடுத்தல் மற்றும் நடமாடும் பொலிஸ் காவல் சேவைகளுக்காக அலுவலர்களை ஈடுபடுத்தல், வாக்கெடுப்பின் பின்னர் பாதுகாப்பாக வாக்குப் பெட்டிகளை வாக்கெண்ணல் நிலையங்களுக்கு கொண்டு செல்லல், பெறுபேறுகளை வெளியிடும் ஏற்புடைய நிலையங்களுக்கு பாதுகாப்பினை வழங்குதல் அத்தோடு பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பின்னர் ஒரு வார காலம் கழியும் வரையில் சட்டத்தினையும் ஒழுங்கினையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கையெடுத்தல் போன்ற பாரிய பணி பொலிஸாரிற்கு பொறுப்பளிக்கப் பட்டுள்ளது. பணிகளை வெற்றிகரமாக நிறை வேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் பொலிஸ் மா அதிபரினால் மேற்கொள்ளப்பட்டது.

**போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களுக்கு தேர்தலுடன் தொடர்புடைய ஆவணங் களை இலவசமாக தபாலில் அனுப்புவதற்கான உரிமை.**

63. 1981 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 125 ஆம் பிரிவுக்கமைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக் குழு ஒரு தேர்தல் மாவட்டத்தின் தேர்தல் ஒன்றில் போட்டியிடு கின்றதோ அவ் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் அல்லது சுயேட்சைக் குழுவின் தலைவர் நியமனக் காலப்பகுதியின் கடைசி நாள் மற்றும் அத்தகைய தேர்தலில் வாக்களிப்பு நடைபெறும் நாளுக்கு முன்னரான 10 ஆம் நாள் ஆகிய இந்த இரு தினங்களுக்கு இடையிலான ஏதேனும் நேரத்தின் அத்தகைய தேர்தல் மாவட்டத்திற்கான தேருநர் இடாப்பில் பெயர் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு தேருநருக்கும் எவ்வித அஞ்சல் கட்டணமுமின்றி அத்தகைய தேர்தல் தொடர்பான விடயத்தினை மாத்திரம் கொண்டுள்ள ஒரேயொரு அஞ்சல் மூலமான செய்தியை சாதாரண அஞ்சலில் அனுப்புவதற்கான உரிமை உண்டு. இது தொடர்பில் 2015.07.21 ஆம் திகதி அஞ்சல் மா அதிபரை அறிவூட்டுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. வாக்காளருக்கு அஞ்சல் செய்தி அனுப்பும் போது அஞ்சலுக்கு ஒப்படைத்தல் மற்றும் அஞ்சல் செய்தியின் நீல அகலம், அதற்கு முத்திரையிடும், அதனைத் தயாரிக்கும் மற்றும் அது தொடர்பில் செயற்படும் முறை அஞ்சல் மா அதிபரினால் தீர்மானிக்கப்பட்ட பின்னர் அந்த அறிவுறுத்தல்கள் போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் தலைவர்களுக்கு 2015.07.14 ஆம் திகதி அஞ்சல் மா அதிபரால் அறிவிக்கப்பட்டது.

64. அஞ்சல் செய்தியினை தபாலகத்தில் ஒப்படைப் பதற்கு அதிகாரமுள்ளவர்கள் மற்றும் ஒப்படைக்க வேண்டிய அஞ்சல் அலுவலகம் பற்றிய தகவல்களும் விசேடமாக இந்த அஞ்சல் செய்திகளை பரீட்சிப்பதற்காக திறந்து வைத்திருக்கப்படல் வேண்டுமென அஞ்சல் மா அதிபரினால் விநியோகிக்கப்பட்ட மேற்படி சுற்றறிக்கையின் மூலம் சுற்றிக்காட்டப்பட்டுள்ளது. அந்த அறிவுறுத்தல்கள் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் தலைவர்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பொறுப்பான தெரிவத்தாட்சி அலுவலரினால் வழங்கப்பட்டது.

65. இலவச அஞ்சல் வசதிகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் முறைக்கேடுகள் இரண்டிற்கும் இடையில் பாராளுமன்றத் தேர்தலின் போது முறைபாடுகள் கிடைத்தன. காலி மாவட்டத்தின் சுயேட்சைக் குழு வேட்பாளர் ஒருவர் காலி மாவட்டத்தின் வேறொரு கட்சியில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் தேர்தல் ஆவணங்களை அஞ்சல் செய்வதற்கு எடுத்த முயற்சி மற்றும் பதுளை மாவட்டத்தில் சுயேட்சைக் குழு வேட்பாளர் ஒருவர் வேறொரு கட்சி வேட்பாளர் ஒருவரின் ஆவணங்களை இலவச அஞ்சல் வசதியின் கீழ் அனுப்புவதற்கு எடுத்த முயற்சி தொடர்பில் அஞ்சல் மா அதிபரினால் ஏற்புடைய அஞ்சல் அத்தியட்சகர்கள் அறிவூட்டப்பட்டு அந்த செய்திகளை விநியோகிப்பதை நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**அரசியல் ரீதியான வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பிரச்சாரங்கள்.**

66. பாராளுமன்றத்தின் தேர்தல் சட்டத்தின் 126 ஆம் பிரிவிற்கமைய பெயர் குறித்த நியமன காலப்பகுதியின் இறுதித் திகதி முதல் ஒரு வார காலத்திற்குள் விடுக்கப்படும் கோரிக்கையின் அடிப்படையில் ஏதேனும் தேர்தல் மாவட்டம் தொடர்பாக நியமனம் பத்திரம் ஒன்றை சமர்ப்பிக் கின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக் குழு ஒவ்வொன்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின், தவிசாளரினாலும் தொலைக்காட்சி கூட்டுத்தாபனத்தின் தவிசாள ரினாலும் தீர்மானிக்கப்படக்கூடியவாரான இத்தகைய நிபந்தனைகளின் கீழ் அந்தக் கோரிக்கை முன்வைக்கப்படவிருக்கும் இறுதித்திகதிக்கு பின்னர் வரும் திகதி முதல் வாக்கெடுப்பு தொடங்குவதற்கு 72 மணித்தியாலத்திற்கு முன்னர் முடிவதுமான காலப்பகுதியில் ஒலிபரப்பு வசதிகளை பயன்படுத்த உரித்துடையதாதல் வேண்டும்.

67. வானொலி ஒலிபரப்பும் விடயத்தில் அத்தகைய கட்சி அல்லது குழு ஆகக் குறைந்தது ஒரு தேர்தல் மாவட்டத்தில் மாத்திரம் நியமப் பத்திரங்களை சமர்ப்பித்திருந்தால், 30 நிமிடம் கொண்ட காலப்பகுதியும் தேர்தல் மாவட்டங்கள் 14 வரை போட்டியிடும் ஏதேனும் கட்சி / அல்லது

ஒரு குழுவில் 132 வேட்பாளர்களுக்கு குறையா தோரை பெயர் குறித்து நியமித்திருந்தால் 60 நிமிடங்களைக் கொண்ட மொத்த காலப் பகுதியும் 14 அல்லது அதற்கு மேற்பட்ட தேர்தல் மாவட்டங்கள் தொடர்பில் நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்திருந்தால் அந்த தேர்தல் மாவட்டங் களுக்கு 132 வேட்பாளர்களுக்கு அதிகமானோரை பெயர் குறித்து நியமித்திருந்தால் 90 நிமிடங்களைக் கொண்ட காலப் பகுதியில் பெற்றுக் கொள்ள உரிமையுள்ளது. இந்த ஒலி / ஒளிபரப்பு வசதிகளைப் பெற்றுக்கொள்ளுதல் தவிர எந்த ஒரு வேட்பாளரும் தமது தெரிவு தொடர்பாக அனுசரணையை பெற்றுக் கொள்வதற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாதென சட்டத்தின் 126 (6) இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

68. பாராளுமன்ற சட்டத்தின் உரிய காலப் பகுதிக்குள் 12 அரசியல் கட்சிகளினால் மற்றும் 02 சுயேட்சைக் குழுக்களினால் வானொலி ஒலிபரப்பிற்காக விண்ணப்பிக்கப்பட்டிருந்த போது அவை தேவையான நடவடிக்கைகளுக்காக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இதுதவிர வானொலி ஒளி / ஒலிபரப்பிற்கு வசதி யளிக்கப்பட்டுள்ள கட்சிகள் மற்றும் குழுக்கள் எவை என்பது பற்றியும் போட்டியிடும் ஒவ்வொரு கட்சிக்கு மற்றும் குழுவிற்கு உரித்துள்ள ஒலிபரப்புக் காலம் பற்றியும் சட்டத்தின் ஏற்புடைய சட்ட ஏற்பாடுகள் மற்றும் தொடர்பிலும் உரிய தவிசாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

69. அரசியல் ஒலிபரப்பு பிரச்சார வசதிகளை இலவசமாக வழங்க வேண்டுமென சட்டத்தில் குறிப்பிடப்படாத காரணத்தினால் அது தொடர்பில் செலவளிக்கப்படும் செலவுகள் தொடர்பில் பிரச்சினைகள் எழுந்த போதிலும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களுக்கு ஒலிபரப்பு வசதிகளை வழங்க வேண்டுமென சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதும், இதற்கு முன்னர் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்களுக்காக இந்த வசதிகள் இலவசமாக வழங்கப்பட்டிருப்பதனையும் கருத்திற் கொண்டு இந்த வாக்கெடுப்பின் போது ஒளி / ஒலிபரப்பு வசதிகளை இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை யெடுக்கப்பட்டது.

**அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு அரசு உதவியளித்தல்.**

70. முன்னர் நிறைவு பெற்ற பொதுத் தேர்தலில் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் மொத்தத் தொகையை ஒரு சதவீதத்திற்கு குறையாத வாக்குகளைப் பெற்றிருந்து மற்றும் அத்தகையை மானியக் கொடை செலுத்தப்பட வேண்டியுள்ள அப் பொதுத் தேர்தல் தொடர்பாக அந்த மாவட்டம் சார்பில் ஒரு நியமனப் பத்திரத்தின் சமர்ப்பித் திருப்பின் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 127 ஆம் பிரிவின் பிரகாரம் அந்த அங்கீகரிக்கப் பட்ட அரசியல் கட்சி அரச உதவியை பெற்றுக் கொள்வதற்கு உரிமை பெறுகின்றது.

71. அத்தகைய கட்சியினால் பெறப்பட்ட வாக்கொன்றுக்கு 50 சதம் எனும் வீதத்தில் கணக்கிடப்பட்ட தொகை யொன்றை பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவ ராதல் வேண்டும். அதற்கிணங்க 2015 பொதுத் தேர்தலில் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனி, ஐக்கிய தேசியக் கட்சி, மற்றும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஆகிய கட்சிகளுக்கு அரச உதவியினைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமை கிடைத்தது. ஒவ்வொரு கட்சிக்காகவும் செலுத்தப் பட்ட அரச நிதி உதவி மற்றும் அக்கட்சிகளுக்காக அரச உதவியாக செலுத்தப்பட்ட மொத்தத் தொகை பின்வருமாறு :

| கட்சியின் பெயர் | போட்டியிட்ட தேர்தல் மாவட்டத்திற்காக 2010 ஆம் ஆண்டு தேர்தலில் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 4846388 | 2423194.00 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2357057 | 1178528.50 |
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 233190 | 116595.00 |
| செலுத்தப்பட்ட மொத்த தொகை | | 3718317.00 |

**தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள்**

## உள்நாட்டு கண்காணிப்பு நிறுவனங்கள்

72. வாக்கெடுப்பு கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்குவதற்கு எந்தவொரு வாக்கெடுப்புச் சட்டத்தினாலும் அனுமதி வழங்கப்படாத போதிலும் போட்டியிடும் அரசியல் கட்சிகளின் இணக்கத்தின் பெயரில் கடந்த தேர்தல்களைப் போன்று இது தொடர்பில் அனுபவம் வாய்ந்த கண்காணிப்பு நிறுவனங்கள் சிலவற்றுக்கு வாக்கெடுப்பினை கண்காணிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டதோடு அந்த கண்காணிப்பு அமைப்புக்களின் பெயர்கள் பின்வருமாறு :

- ❖ சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL)
- ❖ தேர்தல் வன்முறை செயற்பாடுகளை கண்காணிப்பு நிலையம் (CMEV)
- ❖ சுதந்திரமானதும் நீதியுமானதுமான தேர்தலுக்கான அமைப்பு (CaFFE)
- ❖ சுதந்திரமான தேர்தலுக்கான அமைப்பு (MFFE)
- ❖ லக்பிமே மவ்வரு ஸஹ தியனிய (MDL)
- ❖ தேர்தல் கண்காணிப்பு நிலையம் (NPOC)
- ❖ டிரான்ஸ் பிரைன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (TI – SL)
- ❖ இலங்கை புத்திஜீவிகள் மற்றும் தொழில் வான்மை யாளர்களின் சங்கம் (SLAPA)

73. தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் கடமை பொறுப்புக்கள் தொடர்பில் கலந்துரையாடலொன்று தேர்தல் செயலகத்தில் 2015.07.09 நடாத்தப்பட்ட தோடு, வாக்கெடுப்பு கண்காணிப்பிற்காக முன்வந்துள்ள அனைத்து கண்காணிப்பு அமைப்புக் களினதும் செயற்பாடுகள் மற்றும் உறுப்பினர் களுக்கு ஏற்புடைய தகவல்கள் அடங்கிய அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட அமைப்புக்களுக்கு வாக்களிப்பு நிலையத்தில் தங்கியிருந்து தனது கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டதனால், இந்த பொது தேர்தலின் போது தேர்தல் வாக்கெடுப்பை கண்காணிப்பதற்காக அனுமதி வழங்கப்பட்ட கண்காணிப்பு நிறுவனங்கள் மற்றும் கண்காணிப்பாளர்களினால் பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நெறிகள் அறிமுகப்படுத்தப் பட்ட தோடு, ஏற்புடைய வழிகாட்டு நெறிகள் அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

74. வாக்களிப்பு நிலையான கண்காணிப்பு மற்றும் நடமாடும் கண்காணிப்பு ஆகிய இரு வகையிலும் வேறுபடுத்த முடியுமான கண்காணிப்பு நிறுவனங் களாக சுதந்திரமானதும் நீதியுமானதுமான மக்கள் செயற்பாடு (PAFFREL) மற்றும் தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம் (CMEV) அனுமதி வழங்கப்பட்டது. வாக்களிப்பு நிலையத்தின் வளவின் நுழைவாயில் வரை மாத்திரம் நடமாடும் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்துவதற்கு சுதந்திர மானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான அமைப்பு (CaFFE), லக்பிமே மவ்வரு ஸஹ தியனிய (MDL) சுதந்திர, நீதியானதுமான தேர்தலுக்காக அமைப்பு (MFFE) ஆகியவற்றிற்கு அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனங்களின் நிறைவேற்றுப் பணிப்பாளர், இணை ஏற்பாட்டாளர், பிரதான இணைப்பாளர் ஆகிய பதவிகளை வகிப்பவர்களுக்கு நாட்டின் எந்தவொரு வாக்கெடுப்பு நிலையத்தையும் கண்காணிப்புச் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதோடு, ஏற்புடைய அமைப்புக்களின் மாவட்ட பிரதிநிதிக்கு தனது மாவட்டத்தின் எந்தவொரு வாக்களிப்பு நிலை யத்தையும் கண்காணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அவ்வாறே டிரான்ஸ் பிரன்ஸ் இன்டர்நெசனல் ஸ்ரீலங்கா (TI – SL) அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர், தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையத்தின் (NPOC) தேசிய அமைப்பாளர், இலங்கை புத்தி ஜீவிகள் மற்றும் தொழில்வான்மையாளர் சங்கத்தின் (SLAPA) தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளர் ஆகியோருக்கு நாட்டின் எந்தவொரு வாக்களிப்பு நிலையத்தினையும் கண்காணிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

75. கடந்த சனாதிபதித் தேர்தலினைப் போன்று பாராளுமன்றத் தேர்தலிலும் வாக்கெண்ணும் மண்டபங்கள் / மண்டப வளவுகள் பெறுபேறு அட்டவணைப்படுத்தும் மண்டபங்களை கண்காணிப் பதற்கு உள்நாட்டு கண்காணிப்பு நிறுவனங்கள் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. வாக்கெண்ணும் மண்டபங்களை கண்காணிக்கும் போது மாவட்டத் திற்குரிய அனைத்து கண்காணிப்பு அமைப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்தி ஒவ்வொரு கண்காணிப்பு அமைப்புக்களுக்கு மாத்திரம் அந்தந்த மண்டபங் களின் அளவுகளுக்கு அமைய ஒரு மண்டப பிரிவுக்கும் ஒரு முகவர் வீதம் நியமிக்க முடியுமென அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் கண்காணிப்பு அமைப்புக்களுக்கும் அறிவிக்கப் பட்டது. இவ்வாறு நியமிக்கப்படும் முகவர்களின் தகவல்கள் வாக்கெடுப்பு தினத்திற்கு முன்னர் தேர்தல் ஆணையாளர் அல்லது தெரிவத்தாட்சி அலுவலருக்கு சமர்ப்பித்து அனுமதியினை பெற்றுக்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தல் கண்காணிப்பு அமைப்புக்களுக்கு அறிவிக்கப்பட்டது. வாக்களிப்பு மற்றும் வாக்கெண்ணல் நடவடிக்கை களை கண்காணிப்பதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ள அனைத்து கண்காணிப்பு அமைப்புக்

களினதும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் அனைத்து கண்காணிப்பாளர் களினால் வாக்கெடுப்பு கடமைகளில் ஈடுபடுவதற்கு முன்னர் உறுதியுறை வழங்கப்பட வேண்டுமென கட்டளைப்பிறப்பிக்கப்பட்டதோடு, அந்த உறுதியுரை கள் ஏற்புடைய கண்காணிப்பு நிறுவனங்களிலிருந்து தமது பொறுப்பிற்கு எடுத்து வேண்டப்படும் சந்தர்ப் பத்தில் தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**வெளிநாட்டு கண்காணிப்பு நிறுவனங்கள்**

76. பாராளுமன்றத் தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்துமாறு தெற்காசிய தேர்தல் முகாமைத்துவ நிறுவன சங்கத்தினால் (FEMBoSA) கோரப்பட்டது. அதற்கிணங்க அந்த நிறுவனத்தினால் கண்காணிப் பாளர்கள் 35 பேரை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை யெடுக்கப்பட்டது. அந்தக் கண்காணிப்புக் குழு 2015.08.08 மற்றும் 2015.08.09 ஆகிய இரு தினங்களில் இலங்கைக்கு வருகைத் தந்தது. அனைத்து கண்காணிப்பாளர்கள் 2015.08.10 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளரை சந்தித்த போது வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணலுக்கு ஏற்புடைய விடயங்களையும் அந்தந்த மாவட்டங்களுக்கு இணைப்பு செய்ய வேண்டிய வேலைத் திட்டம் தொடர்பிலும் அந்த கலந்துரையாடலின் போது தெளிவுபடுத்தப்பட்டது. கண்காணிப்பாளர்களை அந்தந்த மாவட்டங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டதன் பின்னர் ஒருங்கிணைப்பு அலுவலர்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யுமாறு வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணலினை கண்காணிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டத்தை தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென அறிவுறுத்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டது. அதற்கு மேலதிகமாக பொதுநலவாய நாடுகளின் அமைப்பினால் கண்காணிப்பு குழுவொன்று பங்கேற்றதோடு, அந்த கண்காணிப் பாளர்களுக்காக தேவையான தகவல்களை வழங்கியதை மற்றும் தெரிவத்தாட்சி அலுவலர் களின் உதவியினை அலுவலர்களுக்கு வழங்குவ தற்கு மாத்திரம் தேர்தல் ஆணைக்குழு தலையீடு செய்தது.

**முறைப்பாட்டு நிலையங்களை நிறுவுதல்.**

77. பல்வேறுபட்ட அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் சிவில் அமைப்புக்கள் மற்றும் பொது மக்களினால் வாக்களிப்பு நடைபெறும் சந்தர்ப்பத்தில் செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் வாக்கெடுப்பு சட்டம் உரிய முறையில் அமுல்படுத்தப்படும் என ஏற்புடைய தரப்பினர்களுக்கு உணர்த்துவதற்கு அந்த முறைப்பாடுகளை உடனடியாக விசாரணை செய்யும் மற்றும் தீர்மானமெடுக்கும் முறையொன்று இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத போது முறைப்பாடு செய்வதனால் பலன் கிடையாதெனவும் சட்டத்தை அமுல்படுத்தும் அலுவலர்கள் தமது கடமையினையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றவில்லையெனவும், கருத்தொன்று சமூகமயப்படுத்தப்படும். அந்த நிலைமை தேர்தல் சட்டங்களை மதிக்காது நடந்து கொள்ளும் ஆட்களை ஊக்குவிப்பதற்கும் காரணமாக அமைந்து வாக்கெடுப்பின் நம்பகத் தன்மை இலக்கப்படுவதனையும் தவிர்க்க முடியாது. இந்த நிலைமையைப் புரிந்து கொண்டு கடந்த சனாதிபதித் தேர்தலினைப் போன்று இந்த பாராளுமன்றத் தேர்தலிலும் முறையான முறைப் பாட்டு நிலையங்களை அமைத்து தேர்தல் சட்டங்களை அமுல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கையெடுக்கப்பட்டன.

78. இந்த பாராளுமன்றத் தேர்தலிலும் தேர்தல் ஆணையாளரின் மேற்பார்வையின் கீழ் மேலதிகத் தேர்தல் ஆணையாளர் ஒருவர் மற்றும் ஓய்வுபெற்ற உதவித் தேர்தல் ஆணையாளர் இருவரின் கீழ் தேர்தல் செயலகத்தில் பிரதான முறைப்பாட்டு நிலையங்கள் நிறுவப்பட்டதோடு, இதற்காக பொலிஸ் மா அதிபரை பிரதிநிதித்துவப்படுத்தி பிரதி பொலிஸ் மா அதிபர் ஒருவர் மற்றும் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் கீழ் பொலிஸ் அலுவலர் குழுவொன்றும் இணைப்புச் செய்யப்பட்டது. நியமனப் பத்திரங்களை கையேற்கும் இறுதித் தினத்திலிருந்து ஆரம்பமாகும் இந்த முறைப்பாட்டு நிலைய நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வ தற்காக போட்டியிடும் அரசியல் கட்சிகளின் முகவர்களுக்கும் கண்காணிப்பு அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

79. இதற்கு இணைவாக அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரின் தலைமையில் பொலிஸ் அத்தியட்சகர் அல்லது உதவி பொலிஸ் உதவி அத்தியட்சகர் மட்டத்திலான பொலிஸ் குழுவொன்றின் கீழ் மாவட்ட மட்டத்திலான முறைப்பாட்டு நிலைய மொன்றும் நிறுவப்பட்டது. இந்த முறைப்பாட்டு நிலையங்களில் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான தெரிவத்தாட்சி அலுவலரின் கீழ் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவர் முழு நேர அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பாட்டார். முறைப்பாட்டு நிலையத்தின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக மாவட்டத்தில் போட்டியிடும் அரசியல் கட்சிகளின் முகவர்களுக்கும் கண்காணிப்பு அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் கலந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

80. தேசிய மற்றும் மாவட்ட மட்டத்திலான முறைப்பாட்டு நிலையங்களுக்கு மேலதிகமாக மாவட்டங்களின் பரப்பு மற்றும் போக்குவரத்து கஷ்டங்கள் மற்றும் கடந்த வாக்கெடுப்பின் போது விசேட பாதுகாப்பு வழங்கப்பட்ட பிரதேசங்களை அடையாளம் கண்டு

உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் மற்றும் பொலிஸ் பரிசோதகர் ஒருவரின் கீழ் பொலிஸ் குழுவொன்றைக் கொண்டு பிரதேச மட்டத்திலான முறைப்பாட்டு நிலையங்களும் நிறுவப்பட்டன. இந்த முறைப்பாட்டு நிலையங்கள் நியமனப் பத்திர காலப் பிரிவு முடிவடைந்த பின்னர் நிலைப்படுத்துவதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதோடு, மேலும் வாக்களிப்பு தினத்திற்கு முன் தினம் வாக்களிப்பு தின நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு அனைத்து பிரதேச அலுவலகங்கள் மற்றும் அரசாங்கத்தின் பொது நிலையங்களைப் பயன்படுத்தி உதவித் தெரிவத் தாட்சி அலுவலர் இருவர் மற்றும் மூன்று பொலிஸ் அலுவலர்களின் பங்கேற்புடன் பிரதேச ஒருங்கிணைப்பு அலுவலகங்களும் நிறுவப்பட்டது.

81. இவ்வாறு நிறுவப்பட்ட முறைப்பாட்டு நிலையங்களின் மூலம் எதிர்பார்த்தது யாதெனில் வாக்களிப்பு சட்டங்கள் மீறுகைத் தொடர்பில் உடனடியாக முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கு வசதியினை ஏற்படுத்துவதற்காகும். அத்தோடு அரசியல் கட்சிகள் வேட்பாளர்கள் சிவில் அமைப்புக்கள் விசேடமாக பொது மக்களுக்கு இதன் மூலம் சந்தர்ப்பத்தை வழங்குவதாகும். இதன் மூலம் முறைப்பாடுகளை பொறுப்பேற்று அவை தொடர்பில் உடனடியாக செயற்படும் பொறிமுறையொன்றினை ஏற்படுத்தி அவற்றிற்கு நியாயமான முறையில் தீர்வு வழங்குவதன் மூலம் வாக்காளர்களுக்கு வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று சுதந்திரமாகவும் நியாயமான முறையிலும் வாக்களிப்பதற்கு முடியுமான சூழ்நிலையொன்றை ஏற்படுத்துவது முக்கிய நோக்கமாகும். இந்தப் பாராளுமன்றத் தேர்தலுடன் தொடர்பான முறைப்பாடுகள் பற்றிய பொழிப்பு குறிப்பு xv இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்கள் மற்றும் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள்.**

82. பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 73 ஆம் பிரிவிற்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்காகவும் போட்டியிடக் கூடிய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றுக்கு அல்லது சுயேட்சைக் குழுவொன்றுக்கு தேர்தல் மாவட்ட மட்டத்தில், வாக்கெடுப்பு பிரிவு மட்டத்தில் மற்றும் வாக்கெடுப்பு மாவட்ட மட்டத்தில் தமது கட்சி அலுவலகங்களை அல்லது அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களை நிறுவுவதற்கு உரிமை உண்டு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அவ்வாறு நிறுவப்பட்ட வாக்கெடுப்பு அலுவலகங்கள் தொடர்பில் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரையும் ஏற்புடைய அதிகாரப் பிரதேசதத்தின் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியையும் அறிவூட்டுதல் வேண்டும். இது தொடர்பில் நியமனப் பத்திரங்களை பொறுப்பேற்பதற்காக நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போது கட்சி செயலாளரினால் அறிவூட்டப்பட்டனர். அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்கள் மற்றும் பிரச்சார நடவடிக்கைகள் தொடர்பில் 2015.07.06 ஆம் திகதி அனைத்து கட்சி செயலாளர்களுக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க நிறுவப்படும் அலுவலக வகைக்கமைய உரிய நிறத்திலான மாதிரிப் படிவங்களைப் பயன்படுத்தி மூன்று பிரதிகளில் பூரணப்படுத்துமாறும் அதற்காக கிராம அலுவலரின் சிபாரிசினைப் பெற்றுக்கொண்டு அதன் பின்னர் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு சமர்ப்பித்து தெரிவத்தாட்சி அலுவலரின் அனுமதியுடன் இரண்டு பிரதிகளை மீண்டும் ஒப்படைத்த பின்னர் அவற்றை பிரதேச பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரிக்கு ஒப்படைத்து அவரது அனுமதியுடன் மீண்டும் வழங்கப்பட்ட பிரதியை கட்சி அலுவலகத்தில் வைத்திருக்க வேண்டுமெனவும், முடியுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அனுமதி வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் நிழற்பிரதியொன்றை கட்சி அலுவலகத்தில் காட்சிப்படுத்த வேண்டிய தேவைப்பாடு தொடர்பிலும் போட்டியிடும் கட்சிகள் மற்றும் குழுக்களின் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

83. அறிவிக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களை நிறுவும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறை, அலுவலகங்களை திறந்து வைக்க முடியுமான நேரங்கள் அத்தோடு கட்சி / குழுக்கள் இரண்டின் அலுவலகங்கள் அருகாமையில் இருக்கக் கூடாதென்றும் கட்சியொன்றின் அல்லது குழுவொன்றின் வேட்பாளர் ஒருவரின் ஊக்குவிப்பதற்கோ அல்லது பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வகையிலோ பிரச்சாரங்களை மேற்கொள்ளக்கூடாதென்றும் போட்டியிடும் கட்சி / குழுக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அறிவுறுத்தலுக்கமைய அலுவலகங்களை நிறுவுதல் மற்றும் இதற்குரிய ஏனைய செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதனை பரீட்சிப்பதற்காக தெரிவத்தாட்சி அலுவலரின் பிரதிநிதிகள் மற்றும் ஏற்புடைய பொலிஸ் நடமாடும் சேவைகள் மூலம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அவ்வாறான பரிசோதனைகளின் போது அறிவுறுத்தல் பிரகாரம் நிறுவப்படாத மற்றும் விசேடமாக வேறு கட்சிகள் மற்றும் குழுக்களின் வேட்பாளர்களை ஊக்குவிக்கும் வகையிலான பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அலுவலகங்களது அனுமதிப் பத்திரத்தினை இரத்துச் செய்வதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

84. விசேடமாக வாக்கெடுப்பிற்கு ஏற்புடைய “ அமைதிக் காலத்தில்” அதாவது வாக்களிப்பு தினத்திற்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னரான காலப்பகுதியில் அறிவிக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களை அகற்றிக் கொள்ளல் மற்றும் பிரச்சார நடவடிக்கைகளை வரையறுப்பதற்காக ஏற்புடைய போட்டியிடும் கட்சி / குழுக்களின் அதிகாரம் பெற்ற முகவர்கள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் அவர்கள் மூலம் வேட்பாளர்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. அது தொடர்பில் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கை மூன்றாம் அட்டவணையாக இணைக்கப்பட்டுள்ளது.

85. பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள தேர்தல் சட்டங்கள் அமுல்படுத்துவ தற்காக பொலிஸாருடன் இணைந்து தேர்தல் திணைக்களத்தினால் எடுக்க முடியுமான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதோடு, போட்டியிடும் அரசியல் கட்சிகள் / சுயேட்சைக் குழுக்கள் சிவில் அமைப்புக்கள் மற்றும் பொது மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய செயற்பட்டு சுதந்திரமானதும் நீதியானதுமான வாக்கெடுப்பு ஒன்றிற்கு தேவையான பின்னணியினை ஒழுங்கு செய்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. விசேடமாக பதாகைகள், பெனர் காட்சிப்படுத்தல் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல், வாகன பேரணிகள் ஒலிபெருக்கி மூலம் செயற்படும் பிரச்சார நடவடிக்கைகள் தொடர்பில் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் / சுயேட்சைக் குழுக் களின் தலைவர்களுடன் நடைபெற்ற கலந்துரை யாடலின் போது சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களுக்கு ஏற்புடையதாக இரு தரப்பினரதும் இணக்கப் பாட்டினை கருத்திற் கொண்டு தேர்தல் ஆணை யாளரின் ஊடக அறிக்கையொன்றும் வெளியிடப் பட்டது. அந்த அறிக்கை எட்டாவது அட்டவணை யாக இணைக்கப்பட்டுள்ளது.

**அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்வதனை தடுத்தல்.**

86. அரசியல் அமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் மூலம் திருத்தப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (4) (அ) மற்றும் 104 ஆ (5)(இ)(1) உறுப்புரைக்கமைய வாக்கெடுப்பொன்றின் போது போட்டியிடும் எவரேனும் ஒரு வேட்பாளரை தெரிவு செய்யும் பொருட்டு ஊக்குவிக்கும் நோக்கில் அல்லது தடுக்கும் பொருட்டு அரசாங்கத்திற்கு சொந்தமான ஏதேனும் அசையும் அல்லது அசையாச் சொத்தொன்றை பயன்படுத்துவதே தடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. அவ்வாறே தேர்தலை உரிய முறையில் நடாத்துவதற்காக அரசாங்க அலுவலர்களின் உதவியினை பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகள் இந்தத் திருத்தத்தில் உள்ளடக்கப் பட்டுள்ளது. பாராளுமன்றத் தேர்தல் நடாத்தப்படும் சந்தர்ப்பத்தில் தேர்தல் ஆணைக்குழு ஸ்தாபிக்கப் பட்டிருக்காத போதிலும் தேர்தல் ஆணையாளருக்கு அந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அரசியல் அமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் 49 ஆவது பிரிவின் 3(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் முகம் கொடுக்க நேரிட்ட விடயங்களைக் கருத்திற் கொண்டு அவை மீண்டும் நிகழாதிருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் தேர்தல் திணைக்களத்தினால் அரச வளங்கள் துஷ்பிரயோகம் மற்றும் அரசாங்க அலுவலர்களின் உதவியை தேர்தல் கடமைகளுக் காகப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்புடைய அறிவுறுத்தல் இலக்கம் 1923/4 மற்றும் 2015.07.13 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமாணியில் வெளியிடப்பட்டது. அந்த வர்த்தமானி அறிவித்தல் அட்டவணை 09 ஆக அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக இந்த அறிவுறுத்தல்கள் போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களுக்கு வழங்குவதற்கும் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அஞ்சல் மூலம் அனுப்புவ தற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

87. இதற்கு முன்னர் நடைபெற்ற அனைத்து தேர்தல் களின் போதும் ஆட்சியில் இருக்கும் கட்சி அரச வளங்களை முறைக்கேடாகப் பயன்படுத்தி தனது கட்சியினை பிரதிநிதித்துவம் செய்யும் வேட்பாளரை ஊக்குவிப்பதற்கும் எதிர்கட்சி வேட்பாளர்களை பாதிக்கும் வகையில் உச்சமாக நடவடிக்கை யெடுத்திருப்பது சாதாரண நிலைமை ஆயினும் அரசியல் அமைப்புக்கான பதினேழாவது திருத்தத்தின் பின்னர் அரச வளங்கள் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்காக தேர்தல் ஆணைக்குழுவெனும் தற்போதைய தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்ததனால் ஆட்சியிலிருந்த கட்சி களினால் எடுக்கப்பட்ட அவ்வாறான நடவடிக்கை களை தடுப்பதற்கு உச்ச நடவடிக்கைகளை எடுத்ததன் காரணமாக இந்த தேர்தலின் போது நிலைமை ஓரளவுக்கு சாதகமான மட்டத்தில் காணப்பட்டதென்பதையும், இங்கு ஈன்று குறிப்பிட வேண்டியுள்ளது. அரசாங்க சொத்துக்கள் அரசியல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தி அரசாங்க நிதியினை செலவு செய்து பல்வேறுபட்ட வைபவங்களை ஒழுங்கு செய்தல் மற்றும் பொது மக்களுக்கு பொருட்களைப் பகிர்ந்தளித்தல் மற்றும் விசேட நிவாரணங்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும், அரசாங்க அலுவலர்களை அரசியல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துதல் அரசாங் சேவைக்கு புதிதாக ஆட்களை ஆட்சேர்த்தல் அரசாங்க சேவையில் பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்களை அரசியல் தேவைகளுக்காக மேற்கொள்ளுதல் போன்ற விடயங்களை கடந்த தேர்தலின் போது அதிகமாக காணக்கூடியதாக இருந்தது. அரசியல் அமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் ஏற்புடைய விடயங்கள் தொடர்பில் அரசியல்வாதிகள் மற்றும் அரசாங்க உயர் அதிகாரிகள் அறிவூட்டப் பட்டிருந்ததனால் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் அவ்வாறான நடவடிக்கையிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு அவர்கள் நடவடிக்கை யெடுத்தனர். தேர்தல் ஆணையாளரின் அறிவுறுத்தல் களுக்கமைய தவிர்க்க முடியாத அத்தியாவசிய விடயம் ஒன்றுக்காக ஏதேனும் அரசாங்க நிறுவனத்திற்கு ஊழியர்களை ஆட்சேர்த்தல் அல்லது பதவி உயர்வு அல்லது இடமாற்றம் செய்வதற்கு ஏற்பட்டிருப்பின் அது தொடர்பில் தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்து முன் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். மேலும் இது தொடர்பில் பல்வேறுபட்ட சிவில் அமைப்புக்கள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள்

மற்றும் பொது மக்கள் அறிவூட்டப்பட்டதன் பெறுபேறாக மாவட்ட மட்டத்தில் தேர்தல் செயலகத்தில் அமைந்துள்ள முறைப்பாட்டு நிலையத்திற்கு துரிதமாக இவ்வாறான தகவல்களை வழங்கும் போக்கொன்று காணப்பட்டது. அதிகமான சந்தர்ப்பங்களில் மாற்று அரசியல் கட்சிகளில் போட்டியிடும் வேட்பாளர்களினால் தகவல்களை வழங்குவதற்கு மேலதிகமாக தனது கட்சியின் வேட்பாளர்களின் சிலர் அந்தக் கட்சி வேட்பாளர்கள் அவ்வாறான தவறுகளை செய்யும் போது அது தொடர்பில் தகவல் வழங்கப்படுவதும் விசேடமாகும்.

88. அரசாங்க சொத்துக்கள் துஷ்பிரயோகத்தினை தடுப்பதற்காக மற்றும் தேர்தலினை உரிய முறையில் நடாத்துவதற்காக அரசாங்க அலுவலர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை 09 ஆவது அட்டவணையாக இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களினால் பின்பற்றி ஒழுக வேண்டிய வழிகாட்டுநெறிகள் எனும் வழிகாட்டல்கள்.**

89. கடந்த சில தேர்தல்களின் போது ஊடக வழிகாட்டுநெறி வெளியிடப்பட்ட போதிலும் ஊடக நிறுவனங்கள் அது தொடர்பில் காட்டிய எதிர் விளைவுகள் சிறந்த மட்டத்தில் இருக்கவில்லை. கடந்த சனாதிபதித் தேர்தல்களின் போதும் கைக்கண்ட அனுபவம் யாதெனில் அரசாங்க மற்றும் தனியார் ஊடகங்கள் தேர்தல்கள் ஆணையாளரின் ஊடக வழிகாட்டுநெறி குறித்து கவனம் செலுத்தாது தனது நடவடிக்கைகளை முன்னெடுத்தன இந்த தேர்தலின் போது வழமை போன்று ஊடக வழிகாட்டுநெறி தொடர்பில் தயாரிக்கப்பட்ட வரைவொன்று ஊடக நிறுவனங்களின் தலைவர்களுக்கு சமர்ப்பித்து அதன் பின்னர் ஊடக நிறுவனங்களின் தலைவர்களினால் பெயரிடப்படும் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி பொது இணக்கப்பாட்டுடன் ஊடக வழிகாட்டுநெறி வெளியிடுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. அத்தோடு அரசியல் அமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தினால் திருத்தப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பின் 104 ஆ (5) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல் ஆணைக் குழுவுக்கு / தேர்தல்கள் ஆணையாளருக்கு வாக்கெடுப்பொன்றை சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெறுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்கள் மற்றும் செயற்பாட்டாளர்களினால் பின்பற்றியொழுக வேண்டிய வழிகாட்டுநெறிகளை வெளியிட முடியுமென்பதும் உறுதிப்படுத்தப்பட்டது.

90. அரசியல் அமைப்புக்கான 19 ஆவது திருத்தத்திற்கமைய ஆணைக்குழுவினால் பொறுத்தமெனக் கருதி ஏதேனும் வானொலி அல்லது தொலைக் காட்சி சேவையினை நடாத்திவரும் ஒருவர் அல்லது பத்திரிகை ஒன்றின் உரிமையாளர் அல்லது வெளியீட்டாளருக்கு வழிகாட்டுநெறிகளை வெளியிடும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு / தேர்தல் ஆணையாளருக்கு உண்டு இதன் போது அரசாங்கத்துடன் தொடர்புட்ட அனைத்து நிறுவனங்களுக்கும் வழிகாட்டுநெறிகளை வெளியிடுதல் மற்றும் அவற்றை பின்பற்றாத சந்தர்ப்பங்களில் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரமம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. தனியார் ஊடகங்களுக்கு வழிகாட்டுநெறிகளை வழங்க முடியுமெனினும் அவற்றை பின்பற்றாத சந்தர்ப்பங்களில் நடவடிக்கையெடுக்க வேண்டிய முறை குறித்து தெளிவின்மை காணப்படுகின்றது. எவ்வாறெனினும் இந்த நிலைமையினை கருத்திற் கொண்டு மேற்குறிப்பிட்டவாறு அரசாங்கம் மற்றும் தனியார் ஊடகங்களை பிரதிநிதித்துவப்படுத்தி குழுவொன்றை நியமித்து ஊடக வழிகாட்டுநெறிகளை வரைவு செய்து அவை தயாரிக்கப்பட வேண்டிய முறை குறித்த கலந்துரையாடி ஊடக வழிகாட்டு நெறிகள் ஏற்புடைய நிறுவனங்களுக்கு வழங்கப் பட்டுள்ளது. இந்த நடவடிக்கையின் காரணமாக ஆரம்பத்தில் தனது நிறுவனத்தினால் இணக்கம் தெரிவிக்கப்பட்ட விடயங்களுக்கு இசைவாக பணியாற்றுவதற்கும் மற்றும் சுய கட்டுப்பாட்டை பேணுவதற்கும் அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் ஏற்பட்டது. இந்த நிலைமை பாராளுமன்றத் தேர்தலை சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடாத்துவதற்கு வசதியாக அமைந்தது.

91. தேர்தல் ஆணைக்குழு / தேர்தல்கள் ஆணையாளரால் வாக்கெடுப்பை சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடாத்துவதற்காக விதிக்கப்பட்ட இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் நிறுவனங்கள் மற்றும் செயற்பாட்டாளர்களினால் பின்பற்றியொழுக வேண்டிய வழிகாட்டுநெறிகள் 34 உள்ளடக்கிய அறிவித்தல் இலக்கம் 1925/4 மற்றும் 2015 யூலை மாதம் 27 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடப்பட்டது. ஏற்புடைய வர்த்தமானிப் பத்திரிகையில் இலக்கம் 06 அட்டவணையாக இந்த அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களினால் பின்பற்றி யொழுக வேண்டிய ஒழுக்க நெறிக் கோவை.**

92. 1981 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 08(8) உறுப்புரைக்கமைய தேர்தல் காலத்தில் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களினால் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்க நெறிக் கோவையொன்றில் வெளியிடுவதற்கு ஆணைக்குழுவிற்கு முடியும். விசேடமாக கடந்த காலத்தில் நடைபெற்ற மாகாண சபைகளுக்கான வாக்கெடுப்பினை கருத்திற் கொள்ளும் போது எந்தவிதத்திலாவது வெற்றிபெற வேண்டுமென்ற தனது ஒரே நோக்கத்தினை

வெளிப்படையாகக் கொண்டு அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் நடந்து கொண்ட முறை சிறந்த எடுத்துக்காட்டாகும். அதனுள் சுதந்திர மானதும் நீதியானதுமான வாக்கெடுப்பொன்றை நடாத்துவதற்குள்ள தடைகளை கருத்திற்கொண்டு தேர்தல் ஆணையாளரினால் 2012 ஆம் ஆண்டு மாகாண சபைகள் வாக்கெடுப்பு முதல் வேட்பாளர் ஒழுக்க நெறிக் கோவையொன்று வெளியிடப் பட்டது. அவ்வாறு வெளியிடுவதற்கு முன்னர் அதற்காக அரசியல் கட்சிகளின் நிரந்தர முகவர்கள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் ஒப்புதலினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை யெடுக்கப்பட்டது.

93. அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட வேட்பாளர் ஒழுக்க நெறிக் கோவை 2015 பொதுத் தேர்தலின் போது அரசியல் கட்சிகளின் தலைவர்கள் செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து முக்கிய பதவிகளை வகிப்பவர்கள், போட்டியிடும் வேட்பாளர்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களை பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல்வாதிகளை, அனைத்து அரசியல் கட்சி செயற்பாட்டாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் உதவியாளர்கள் மற்றும் தேர்தலில் போட்டியிடும் சுயேட்சைக் குழுக்கள் வேட்பாளர்களுக்கும் அமுலாகும் வகையில் வெளியிடப்பட்டது. இதன் கீழ் தேர்தல் சட்டத்திற்கு கட்டுப்படுதல், பொது நடத்தை, தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள், வாக்கெடுப்புத் தின மற்றும் வாக்கெண்ணல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் மற்றும் வேறு விசேட விடயங்களின் கீழ் மேற்குறிப்பிட்ட அனைவரும் இவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. இந்த அறிவுறுத்தல்களுக்கு இசைவாக செயற்படுவதற்காக அரசியல் கட்சிகளின் செயற்பாட்டாளர்கள், போட்டியிடும் வேட்பாளர் களினால் பொறிமுறையொன்று தயாரிக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டதோடு, அந்த நோக்கங்களுக்கு மாற்றமாக செயற்படும் கட்சி மற்றும் வேட்பாளர் களுக்கு அந்த நிலைமையினை சுற்றிக்காட்டி திருத்திக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை களை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. வேட்பாளர்களின் ஒழுக்க நெறிக் கோவை வெளியிடப்பட்ட காரணத்தினால் வாக்காளர் களிலிருந்து பல்வேறுபட்ட கட்சிகள் / அமைப்புக் களினாலும் ஒழுக்க நெறிக் கோவைக்கு மாற்றமாக நடவடிக்கையெடுக்கும் சந்தர்ப்பங்களில் அது தொடர்பில் முறைப்பாடு செய்யும் சிறந்த சூழ்நிலையும் உருவாக்கப்பட்டது. இவ்வாறு வெளியிடப்பட்ட போட்டியிடும் வேட்பாளரினால் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்க நெறிக் கோவை கட்டமைப்பு இலக்கம் 1924/44 மற்றும் 2015 யூலை மாதம் 23 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடுவதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது. ஏற்புடைய வர்த்தமானிப் பத்திரிகை இலக்கம் 07 அட்டவணையாக இந்த அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**வாக்கெடுப்பு**

94. சனாதிபதி அவர்களினால் அரசியல் அமைப்பின் 70 ஆவது உறுப்புரை மற்றும் 1981 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 10 ஆவது பிரிவின் கீழான பிரகடனம் 2015.06.26 ஆம் திகதி இலக்கம் 1920/38 எனும் அதிவிசேட வர்த்த மானிப் பத்திரிகை பிரசுரிக்கப்பட்டதற்கமைய இந்த பாராளுமன்றத் தேர்தல் 2015 ஒகத்து மாதம் 17 ஆம் திகதி நடைபெற்றது. வாக்கெடுப்பு நேரம் மு.ப. 07.00 மணி முதல் பி.ப. 04.00 வரை ஆகும்.

95. வாக்கெடுப்பொன்று பிரகடனம் செய்யப்பட்ட பின்னர் வரும் வாக்கெடுப்புத் தினம் மற்றும் வாக்கெண்ணல் பெறுபேறுகளை வெளியிடல் ஆகிய செயற்பாடுகள் வாக்கெடுப்பின் உச்ச கட்டமாக கருதப்படுகின்றது. வாக்கெடுப்பு தினத்திற்கு முன்னர் வாக்கெடுப்பினை நடாத்திச் செல்வதற்காக தேவையான அலுவலர்கள் வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்குச் சீட்டுக்கள் உள்ளிட்ட பாதுகாப்பு பொருட்கள் மற்றும் ஆவணங்கள் அதற்கு முன் தினத்தில் வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்ப வேண்டியது மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு பொறுப்பளிக்கப் பட்டுள்ள அடிப்படைப் பொறுப்பாகும். அதன் கீழ் வாக்களிப்பு நிலையங்களுக்கமைய அலுவலர் களைப் பெயரிட்டு நியமனக் கடிதங்களை அஞ்சலில் அனுப்புதல் மற்றும் வாக்களிப்பு நிலை யங்களுக்குத் தேவையான வாக்குப் பெட்டிகள் வாக்குச் சீட்டுக்கள் உள்ளிட்ட ஏனைய காகிதாகிகளை நிலையங்களுக்கமைய வேறுபடுத்தி கோவையிட்டு வைத்தல் அவற்றைக் கொண்டு செல்வதற்குத் தேவையான வாகனங்களை தயார்படுத்தி வைத்தல் வேண்டும். இந்த தேர்தலின் போது கடந்த வாக்கெடுப்புக்களைப் போன்று வாக்களிப்பு நிலையத்திற்குப் பொறுப்பான சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் தவிர்ந்த ஏனைய வாக்களிப்பு நிலைய ஆளணியினர் வாக்கெடுப்பு தினத்திற்கு முன்னைய தினம் பி.ப. 02.00 மணிக்கு முன்னர் பொதுப் போக்குவரத்து வசதிகளின் கீழ் பிரயாண வசதிகளை செய்து கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதோடு, விசேடமாக யாழ்ப்பாண குடாநாட்டின் தீவுகளில் அமைக்கப் பட்டிருந்த வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று வருவதற்கு கடற்படையின் உதவியும் ஏற்புடைய ஆளணியினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

96. வாக்களிப்பு நிலையங்களுக்கு பொறுப்பாகச் செல்லும் அனைத்து சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கும் வாக்களிப்பு நிலையங்கள் சிலவற்றின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பான வலய உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் தெரிவத்தாட்சி அலுவலரினால் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. வாக்களிப்பு நிலையங்களுக்குப் பொறுப்பாகச் செல்லும் சிரேட்ட தலைமை தாங்கும்

அலுவலர்கள் மற்றும் வாக்களிப்பு நிலையங்களுக்குப் பொறுப்பாகச் செல்லும் வலயங்களுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களும் வாக்கெடுப்பு தினத்திற்கு முன்னைய தினம் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அறிவிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு சமூகமளிக்க வேண்டியது கட்டாயமாகும். ஏனெனில் அந்த அலுவலர்கள் இணைப்புச் செய்யப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையங்கள் பற்றிய தகவல்கள் அவர்கள் அவ்வாறு சமூகமளித்த பின்னரே வழங்கப்படும். அதற்கிணங்க வாக்களிப்பு நிலையங்களுக்குப் பொறுப்பான மற்றும் மேற்பார்வைக்குப் பொறுப்பாகச் செல்லும் எந்தவொரு உத்தியோகத்தரும் வாக்களிப்பு தினத்திற்கு முன்னைய தினம் வரை தான் இணைப்புச் செய்யப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையம் மற்றும் தான் மேற்பார்வை செய்ய வேண்டிய வாக்களிப்பு நிலையங்கள் யாவை என்பது பற்றி அறியமாட்டார்கள். தெரிவத்தாட்சி அலுவலரிடம் வாக்கெடுப்பு தினத்திற்கு முன்னைய தினத்தில் மு.ப சமூகமளித்த பின்னர் அந்த சந்தர்ப்பத்தில் தேர்தல் ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ள விசேட அறிவூட்டல்கள் இருப்பின் அவை தொடர்பிலும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தெரிவத்தாட்சி அலுவலர் மற்றும் மாவட்ட பிரதி / உதவி தேர்தல்கள் ஆணையாளர்களினால் தெளிவுபடுத்தல்கள் வழங்கப்பட்டன. அதன் பின்னர் தனக்குரிய முறையான நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு அதற்குரிய விநியோகிக்கும் நிலையத்திற்குச் சென்று வாக்களிப்பு நிலையத்திற்குரிய வாக்குப் பெட்டி, வாக்குச் சீட்டுக்கள் உள்ளிட்ட ஏனைய காகிதாதிகளைப் பெற்றுக் கொண்டு வாக்களிப்பு நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள வாகனத்தில் தெரிவத்தாட்சி அலுவலரினால் அறிவிக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலைய பாதை விபரத்திற்கமைய அந்த வீதியின் ஊடாக வாக்களிப்பு நிலையத்திற்கு செல்ல வேண்டியது அந்த அலுவலர்களின் பொறுப்பாகும்.

97. வாக்கெடுப்பு தினத்திற்கு முன்னைய தினத்தில் வாக்களிப்பு நிலையத்தினை வாக்கெடுப்பிற்கு பொறுத்தமான ஏற்புடைய வசதிகளைக் கொண்டு தயார்படுத்தி வைத்திருக்க வேண்டியது அந்தந்த பிரிவுகளின் கிராம அலுவலர்களின் பொறுப்பாகும். தெரிவத்தாட்சி அலுவலர்களினால் பிரதேச செயலாளர் ஊடாக கிராம அலுவலர்களை அறிவூட்டி அந்தப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. தனக்குரிய வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்லும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் தனக்குரிய வாக்களிப்பு நிலையம் சுதந்திரமானதும் நீதியானதுமான வாக்கெடுப்பை நடாத்துவதற்கு பொருத்தமான முறையிலுள்ளதா என்பது பற்றியும் வாக்குப் பெட்டி, வாக்குச் சீட்டுக்கள் உள்ளிட்ட பாதுகாப்பு பொருட்களை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டிய வசதிகள் உள்ளதா என்பது பற்றியும் பரிசீலிக்கப்படும். அதன் பின்னர் பி.ப 02.00 மணிக்கு முன்னர் வாக்களிப்பு நிலையத்திற்கு சமூகமளிக்கும் ஏனைய ஆளணியினரை அடையாளம் கண்டு அனைத்து அலுவலர்களுக்கும் ஒன்றாக ஒத்திகையொன்றை நடாத்தி அடுத்த நாள் நடைபெறும் வாக்கெடுப்பின் போது நடந்து செல்ல வேண்டிய முறை பற்றி தெளிவுபடுத்தப்படும். ஒத்திகை நிறைவடைந்த பின்னர் பெண் அலுவலர்களுக்கு தமது வீடுகளுக்கு அல்லது தான் தங்கியுள்ள தற்காலிக இடங்களுக்கு செல்வதற்கான அனுமதி வழங்கப்படும். ஆயினும் வாக்கெடுப்புத் தினம் முற்பகல் 06.00 மணிக்கு முன்னர் வாக்களிப்பு நிலையத்திற்கு சமூகமளிக்க வேண்டியது ஒரு நிபந்தனையாகும். ஆண் அலுவலர்கள் அனைவரும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருடன் ஏற்புடைய வாக்களிப்பு நிலையத்தில் இரவை கழிக்க வேண்டும். ஒத்திகை நிறைவடைந்த பின்னர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் தனது பொறுப்பில் உள்ள பாதுகாப்பான பொருட்கள் காகிதாதிகள், களஞ்சியப் பொருட்கள் ஆகியவை போதியளவில் உள்ளதா என்பதனை மீண்டும் பரிசோதித்து உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். ஏதேனும் குறைப்பாடுகள் இருப்பின் வாக்களிப்பு நிலைய மேற்பார்வை பொறுப்பாக வருகைத்தரும் வலயங்களுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் மூலம் தெரிவத்தாட்சி அலுவலரை அறிவூட்டி வாக்கெடுப்பு ஆரம்பிக்கப் படுவதற்கு முன்னர் அந்த குறைப்பாடுகளை பூரணப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

98. சில வாக்களிப்பு நிலையங்களின் மேற்பார்வைக்கு செல்லக்கூடிய வலயங்களுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் வாக்கெடுப்பு தினத்திற்கு முன்னைய தினம் தெரிவத்தாட்சி அலுவலரிடம் சமூகமளித்து நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் தனக்குரிய வாக்களிப்பு நிலையங்களின் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் விநியோகிக்கும் நிலையங்களுக்குச் சென்று பொருட்களை கையேற்பதை கண்காணித்து அவர்கள் அனைவரும் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு புறப்பட்டுச் சென்றதன் பின்னர் தனக்குரிய வாக்களிப்பு நிலையங்களை மேற்பார்வை செய்வதற்காக களத்திற்குச் செல்ல வேண்டும். தனக்குரிய வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் சென்று ஒத்திகை நடாத்தப்படாதிருந்தால் அதனை நடாத்துமாறு அறிவுறுத்தல் வழங்கி அந்தந்த வாக்களிப்பு நிலையங்களை கண்காணித்து அடுத்த நாள் வாக்கெடுப்பை உரிய முறையில் நடாத்துவதற்கு தடையேதும் இருப்பின் அது தொடர்பில் கலந்துரையாடி தீர்வுகளைப்

பெற்றுக்கொடுப்பதற்கும் விசேடமாக சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் தெரிவத்தாட்சி அலுவலரிடமிருந்து பெற்றுக்கொண்ட பொருட்கள் உரிய முறையில் உள்ளனவா என்பதனைப் பரீட்சித்து உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அலுவலர்கள் அல்லது பொருட்கள் மற்றும் ஆவணங்களில் ஏதேனும் குறைபாடு இருப்பின் அவற்றை சீர் செய்து கொள்வதும் அவரது பொறுப்பாகும். மேற்பார்வை செய்ய வேண்டிய அனைத்து வாக்களிப்பு நிலையங்களையும் கண்காணித்த பின்னர் மறுநாள் பிற்பகல் 7.00 மணிக்கு வாக்கெடுப்பினை ஆரம்பிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் தயார் நிலையில் உள்ளதாக முதலாவது செய்தியை தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு தொலைபேசி மற்றும் தொலை நகல் மூலம் அறிவித்தல் வேண்டும்.

99. வாக்களிப்புத் தினத்தில் அனைத்து ஆளணியினரும் வாக்களிப்பதற்கு தயார் நிலையில் அன்றைய தினம் மு.ப. 06.00 மணிக்கு வாக்களிப்பு நிலையத்திற்கு வருகைதர வேண்டுமெனவும் வாக்காளருக்கான அறிவுறுத்தல்கள் உள்ளடங்கிய அறிவுறுத்தல்களை காட்சிப்படுத்துவதற்கும் வாக்களிக்கும் அறைகளை நிலைப்படுத்துவதற்கும் மற்றும் வாக்குப் பெட்டிகளை பொறியிடுவதற்குத் தேவையானவற்றை தயார்படுத்திக்கொள்ளல் போன்ற அடிப்படையான நடவடிக்கைகளை வாக்கெடுப்பிற்கு உரிய நேரத்திற்கு முன்னர் நிறைவு செய்ய வேண்டுமென தெரிவத்தாட்சி அலுவலரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. போட்டியிடும் அனைத்து கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களுக்கு ஒரு வாக்களிப்பு நிலையத்திற்கு முகவர்கள் இருவர் வீதம் நியமிப்பதற்கு சட்டத்தினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதனால் வாக்களிப்பு நிலைய முகவர்களுக்கு வாக்களிப்புத் தினத்தில் மு.ப 6.30 மணிக்கு முன்னர் வாக்களிப்பு நிலையத்திற்கு சமூகமளிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. வாக்கெடுப்பினை ஆரம்பிப்பதற்கு முன்னர் வாக்கெடுப்பிற்காகப் பயன்படுத்தும் தேருநர் இடாப்புக்கள், வாக்குப் பெட்டி, வாக்குச் சீட்டுக்கள், உத்தியோகபூர்வ இலச்சினை போன்றவற்றில் பரீட்சித்துப் பார்ப்பதற்கும் விசேடமாக வாக்குச் சீட்டின் பின்புறத்தில் பொறிக்கப்படும் உத்தியோகபூர்வ இலச்சினையினை தெரிவு செய்வதை முகவர்களின் பங்கேற்புடன் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் உரிய நடவடிக்கையுடன் பங்கேற்று வாக்கெடுப்பு தொடர்பிலான நம்பகத் தன்மையினை முகவர்களிடத்தில் உறுதிப்படுத்துவதற்கு அவர்களுக்கு இந்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. வாக்குப் பெட்டியினை பொறியிடுவதற்கு முன்னர் வாக்குப் பெட்டியினுள் ஏதுவும் இல்லையென்றும் வாக்குப் பெட்டியை பொறியிடுவதற்கு முன்னர் அல்லது பொறியிடப்பட்ட பின்னர் முகவர்களுக்கு தேவையேற்படின் வாக்குப் பெட்டியுள்ளே அல்லது வெளியே தனது இலச்சினையை அல்லது அடையாளம் காணும் குறியீட்டினை இடுவதற்கும் அனுமதியுண்டு. முகவர்கள் இலச்சினையொன்றை இடுவதாயின் அந்த அனைத்து இலச்சினைகளினதும் மாதிரிகள் அந்த சந்தர்ப்பத்திலேயே விசேட தலைமை தாங்கும் அலுவலரிடம் வழங்குதல் வேண்டும்.

100. 2015 ஓகத்து மாதம் 17 ஆம் திகதி மு.ப. 7.00 மணிக்கு நாடு முழுவதிலும் அமைந்துள்ள 12317 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பை தடையின்றி ஆரம்பிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. வாக்களிப்பதற்கு 15044490 வாக்காளர்கள் தகுதி பெற்றிருந்தனர் கடந்த வாக்கெடுப்புக்களைப் போன்று தேர்தல் ஆணையாளரினால் வாக்கெடுப்பு தினத்திற்கு முன்னர் இருந்து வாக்கெடுப்பு தினக் காலையிலேயே வாக்களிப்பு நிலையத்திற்கு சென்று தனது வாக்கினைப் பயன்படுத்தமாறு வாக்காளர்களிடம் கேட்டுக் கொண்டதன் பெறுபேறாக அதிகமான வாக்களிப்பு நிலையங்களில் மு.ப. 7.00 மணி அளவில் வாக்காளர்கள் கூடியிருந்தது அறியக் கிடைத்தது.

101. வலயங்களுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் வாக்களிப்பு தினத்தின் காலை, நண்பகல் மற்றும் மாலை என ஆகக் குறைந்தது 03 சந்தர்ப்பங்களிலாவது வாக்கெடுப்பு நிலையத்தினை மேற்பார்வை செய்து வாக்களிப்பு உரிய நேரத்தில் ஆரம்பிக்கப்பட்டதென இரண்டாவது செய்தியினையும் வாக்களிப்பு நடவடிக்கைகள் நிறைவுபெற்றதாக மூன்றாவது செய்தியினையும் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வாக்களிப்பு நிலைய மேற்பார்வை மற்றும் வாக்களிப்பு நிலையத்திற்கு அருகில் வாக்கெடுப்பு சட்டங்களை மீறும் வகையில் நடவடிக்கைகள் நிகழுமிடத்து பொலிஸாரின் உதவியுடன் அவற்றை தடுப்பதும் அவரது கடமை பொறுப்பாகும். மேலும் வாக்களிப்பு நிலையமொன்றில் ஏதேனும் குழப்பம் / சட்ட விரோதமான சம்பவமொன்று நிகழுமாயின் உடனடியாக அந்த இடத்திற்குச் சென்று பரிசோதித்து அது தொடர்பில் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிக்கையிடுதல் வேண்டும். அத்தோடு வாக்களிப்பு நிலைய அலுவலர்கள் வாக்களிப்பு சட்டத்திற்கு அமைவாக வாக்கெடுப்பு கடமைகளை மேற்கொள்கின்றனரென திருப்தியடைதல் வேண்டும். வாக்கெடுப்பு நிறைவடைந்து தனது மேற்பார்வைக்குரிய அனைத்து வாக்களிப்பு நிலைய சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் வாக்களிப்பு நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றதை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் தெரிவத்தாட்சி அலுவலரின் அலுவலகத்திற்கு அறிக்கையிட்டு

வாக்கெடுப்பிற்காக தான் பேணி வந்த ஜேர்னலை தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைப்பதும் வலயங்களுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

102. தேர்தல் செயலகத்தின் மற்றும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகத்தின் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட விசேட இடங்களில் நிறுவப்பட்ட முறைப்பாட்டு நிலையங்களும் நடவடிக்கைகளில் வாக்களிப்பு தினத்தில் சிறந்த ஒருங்கிணைப்புடன் நடவடிக்கைகளை முறைமைப் படுத்தல் வேண்டும். அதனூடாக வாக்கெடுப்புக்கு ஏற்புடையதாக கிடைக்கப்பெற்ற நடவடிக்கை தொடர்பில் உடனடியாக நடவடிக்கையெடுப்பதற்கு முடியுமாகியது. மேலும் வாக்களிப்பு தினத்திற்கு முன்னைய தினம் முதல் அனைத்து பிரதேச செயலாளர் அலுவலகங்களில் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் இருவர் மற்றும் பொலிஸ் பரிசோதகர் ஒருவரின் பங்கேற்புடன் நிறுவப்பட்ட பிரதேச ஒருங்கிணைப்பு அலுவலகங்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கு கண்காணிப்பு அமைப்புக் களுக்கு அல்லது வாக்காளர்களுக்கு எந்தவொரு முறைப்பாட்டினையும் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அவ்வாறு கிடைக்கப்பெறும் முறைபாடுகள் தொடர்பில் அந்த சந்தர்ப்பத்திலேயே உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் மற்றும் பொலிஸ் அலுவலர்களை ஈடுபடுத்தி விசாரணைகளை மேற்கொள்ளும் வேலைத்திட்டம் ஒன்றும் நடைமுறைப் படுத்தப்பட்டது. அத்தோடு வலயங்களுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலரின் கையடக்க தொலைபேசி இலக்கம் மேற்குறிப்பிட்ட அனைத்து முறைப்பாட்டு நிலையங்களுக்கும் வழங்கப்பட்டு முறைப்பாடுகள் தொடர்பில் துரிதமாக அவர்களை தொடர்புகொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. அந்த வகையில் பொலிஸ் நடமாடும் வண்டி களிலிருந்தும் தகவல்களை துரிதமாகப் பெற்றுக் கொள்ளும் வேலைத் திட்டமொன்றும் நடைமுறைப் படுத்தப்பட்டது.

103. 2014 ஆம் ஆண்டு இலக்கம் 14 எனும் தேர்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வாக்களிப்பு நிலையத்தில் வாக்காளர் ஒருவருக்கு வாக்குச் சீட்டொன்றை விநியோகிப்பதற்கு முன்னர் அடையாள ஆவணமொன்றின் மூலம் வாக்காளரின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வது கட்டாயப் படுத்தப்பட்டுள்ளதனால் வாக்களிப்பு நிலைய நடவடிக்கைகளை மிகவும் அமைதியாக நடாத்திச் செல்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. மேலும் 1988 ஆம் ஆண்டு இலக்கம் 35 தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்திற்கு திருத்தமாக சேர்க்கப்பட்ட 48(அ) பிரிவிற்கமைய வாக்களிப்பு நிலையத்தில் ஏதேனும் சாதாரண சம்பவங்கள் நிகழுவதன் காரணமாக அவ்வாறான வாக்களிப்பு நிலையங்களின் வாக்கெடுப்பை வறிதாக்குவதற்கு தேர்தல் ஆணை யாளருக்கு அதிகாரம் கிடைக்கப்பெற்றது முதல் வாக்களிப்பு நிலையத்தில் அல்லது வளவிற்குள் தடையின்றி வாக்களிப்பை நடாத்திச் செல்வதற்கு முடியுமான சூழலொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு இந்த பாராளுமன்றத் தேர்தலின் போது அந்த நிலைமையினை காணக்கூடியதாக இருந்தது.

104. 2015 ஓகத்து மாதம் 15 ஆம் திகதி மு.ப. 7.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட வாக்களிப்பு அன்றைய தினம் பி.ப. 4.00 மணிக்கு நிறைவடைந்தது. வாக்களிப்பு நிறைவடைந்த பின்னர் வாக்குச் சீட்டுக்கள் உள்ளடங்கிய வாக்குப் பெட்டிகள் பொறியிடப்பட்டு தெரிவத்தாட்சி அலுவலரிடம் எடுத்துச் சென்று ஒப்படைப்பது சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் பொறுப்பாகும். அந்தப் பணி உரிய அறிவுறுத்தல்களுக்கமைய நிறைவேற்றப்படு கின்றதாவென மேற்பார்வை செய்வது வலயத்திற்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலரின் பொறுப்பாகும். இதற்கு ஏற்புடைய நடவடிக்கைகளை எடுக்கும் போது அரசியல் கட்சிகள் மற்றும் பொது மக்கள் இடத்தில் வேறூன்றியுள்ள மூட நம்பிக்கைகள் அதாவது வாக்கெடுப்பு நிறைவடைந்து வாக்குப்பெட்டிகள் தெரிவத்தாட்சி அலுவலரிடம் எடுத்துச் செல்லும் போது வாக்குப் பெட்டிகளை மாற்றுவது தொடர்பிலான கருத்தை இல்லாமல் ஆக்குவதற்கு வாக்களிப்பு நிலைய பிரதிநிதித்துவப்படுத்தும் அந்தந்த கட்சிகள் / குழுக்களை முகவர்களுக்கு முன்நிலையிலேயே அதற்குரிய விசேட முறைகளை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு தேர்தல் ஆணையாளரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாவன,

- ❖ வாக்களிப்பு நிறைவடைந்த பின்னர் வாக்குப் பெட்டியினை அரச இலச்சினை பொறிக்கப்பட்ட பாதுகாப்பான நாடாக்களினால் பொறியிடுதல்.
- ❖ வாக்களிப்பு நிறைவடைந்த பின்னர் வாக்களிப்பு நிலைய முகவர்களுக்கு மீண்டும் தனது குறியீடொன்றை (ஸ்டிகர் மூலம்) இடமுடியும்.
- ❖ சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் 06 பிரதிகளைக் கொண்ட காபன் தாளில் தயாரித்து வாக்களிப்பு நிலைய முகவர்கள், வாக்களிப்பு நிலைய கண்காணிப்பாளர்கள், வாக்களிப்பு நிலைய ஆளணியின் ஏனைய அலுவலர்கள் மற்றும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் உள்ளடங்களாக அவர்களது பெயர்கள், பதவி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை

உள்ளடக்கிய ஆவணமொன்றை கையொப்ப மிட்டு அந்த ஆவணத்தின் மூலப்பிரதியினை வாக்குப் பெட்டியின் மூடி மற்றும் நடுப்பகுதி உள்ளடக்கிய வகையில் ஒட்டுதல் இரண்டாவது பிரதியினை வாக்குச் சீட்டுக் கணக்கு உறையில் இடுதல் மூன்றாவது பிரதியினை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் ஜேர்னலை இடும் உறையில் இடுதல் எஞ்சிய மூன்று பிரதிகளையும் ஆவணத்தில் கையொப்பமிட்ட மூன்று கட்சிகளின் முகவர்களுக்கு வழங்குவதற்கும் அறிவுறுத்தப்பட்டது. இதன் மூலம் வாக்களிப்பு நிலையத்திற்குரிய வாக்குப்பெட்டியினை வாக்கெண்ணும் மண்டபத்திற்குள் கிடைக்கப் பெற்றுள்ளதா என்பது பற்றி உறுதிப்படுத்திக் கொள்வதற்கு வாக்கெண்ணும் நிலைய அரசியல் கட்சி முகவர்களுக்கு முடியும்.

- ❖ ஐந்து பிரதிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட வாக்குப் பெட்டியிலுள்ள வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கையை குறிப்பிடும் வாக்குச் சீட்டுக் கணக்கின் பிரதியொன்று வாக்களிப்பு நிலைய முகவர்களுக்கு வழங்குதல்.

- ❖ வாக்களிப்பு நிறைவடைந்து பொறியிடப்பட்ட வாக்குப் பெட்டியினை பொலித்தீன் உறை யொன்றினால் மூடி பிளாஸ்டிக் டெக் ஒன்றை யிட்டு அந்த டெக் இணை அடையாளம் காணுவதற்கான இலக்கத்தை வாக்களிப்பு நிலைய முகவர்களுக்கு வழங்குதல்.

- ❖ வாக்குப் பெட்டியினை மீண்டும் வாக்கெண்ணல் நிலையத்திற்கு எடுத்துச் செல்லும் போது விருப்பமான எந்தவொரு அரசியல் கட்சி மற்றும் சுயேட்சைக் குழுக்களுக்கு வாக்களிப்பு நிலைய முகவர் ஒருவர் வீதம் தனது வாகனத்தில் வாக்குப் பெட்டி எடுத்துச் செல்லப்படும் வாகனத்திற்கு பின்னால் வாக்கெண்ணல் மண்டப வளாகத்திற்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ள இறுதி காவலரண் வரை செல்வதற்கு முடியுமான வகையில் அனுமதிப் பத்திரமொன்றை வழங்குதல்.

- ❖ வாக்கெண்ணும் வளவிற்குள் வாக்குப் பெட்டிகள் மாற்றப்படுவதாகவுள்ள சந்தேகத்தை நீக்குவதற்கு வாக்கெண்ணும் மண்டபத்திற்கு அண்மையில் உள்ள இறுதி காவலரணுக்கு வெளியே வாக்கெண்ணும் மண்டபம் வரை காத்திருந்து வாக்கெண்ணுவதற்காக நியமிக்கப்பட்ட முகவர்கள் 05 பேரில் ஒருவருக்கு கண்காணிப்பதற்காக சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

- ❖ அத்தோடு முகவருக்கு பி.ப. 3.00 மணியின் பின்னர் வாக்கெண்ணும் மண்டபத்தை கண்காணிப்பதற்கான சந்தர்ப்பமும் வழங்கப் பட்டது. அதன் மூலம் குறியிடப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய பெட்டிகள் வாக்கெண்ணும் மண்டபத்திற்குள் உள்ளதற்கான சந்தேகத் தினையும் நீக்க முடியுமாகியது.

- ❖ தெரிவத்தாட்சி அலுவலரினால் பணிக்கப் பட்டுள்ள பாதை ஊடாகவே வாக்குப் பெட்டியினை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் எடுத்துக் கொண்டு வருவதனை உறுதிப்படுத்துவதற்காக பிரதேச செயலாளர்கள் / உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் பொலிஸ் அலுவலர்களைக் கொண்ட பரீட்சிப்பு காவலரண்களை நிறுவுதல் மற்றும் அந்த இடங்களில் அரசியல் கட்சி / குழுக்களின் முகவர்களுக்கும் சந்தர்ப்பத்தினை வழங்குவதன் மூலம் கட்சி / குழுக்களுக்கு அது தொடர்பில் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். ஆகிய விடயங்கள் பிரதானமாகும். இதன் மூலம் வாக்களிப்பு நிலையத்தில் பொறியிடப்பட்ட வாக்குப்பெட்டி வாக்கெண்ணும் மண்டபத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது உறுதிப்படுத்திக்கொள்ள கட்சிகள் / குழுக்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

105. பி.ப. 4.00 மணிக்கு வாக்களிப்பு நிறைவடைந்ததன் பின்னர் மேற்குறிப்பிட்டவாறு வாக்குப்பெட்டிகளை பொறியிட்டு எஞ்சிய வாக்குச் சீட்டுக்கள், பயன் படுத்திய தேருநர் இடாப்புக்கள், பயன்படுத்தாத இலச்சினைகள் போன்றவற்றை வாக்களிப்பு நிலைய முகவர்களுக்கு முன்னாள் பொறியிட்டு வாக்களிப்பு நிலையத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் நிறைவு செய்து வாக்குப் பெட்டியினை எடுத்து வந்த பாதையின் ஊடாகவே மீண்டும் பயணித்து தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைத்தல் வேண்டும். இந்த தேர்தலின் போது அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் வாக்குப் பெட்டிகள் வாக்கெண்ணல் நிலையங்களுக்கு வாக்களிப்புத் தின இரவு 10 மணிக்கு முன்னர் கிடைக்கப்பெற்றதாக தெரிவத்தாட்சி அலுவலரினால் அறிக்கையிடப்பட்டது. வாக்கெண்ணல் நடவடிக்கைகள் மாவட்ட தெரிவத் தாட்சி அலுவலர்களின் அறிவுறுத்தல்களுக்கமைய வாக்கெண்ணும் மண்டபங்களுக்கு ஏற்புடைய அனைத்து வாக்குப் பெட்டிகளும் கிடைக்கப் பெற்றிருத்தல், வாக்கெண்ணும் முகவர்கள் மற்றும் ஆளணியினருக்கு அறிவிக்கப்பட்டதற்கு அமைய வாக்கெண்ணல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் படுவதற்குரிய நேரத்தினை அடைதல் ஆகிய விடயங்களை கருத்திற் கொண்டு வாக்கெண்ணல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

**வாக்குச் சீட்டுகளை எண்ணுதல்.**

106. 1981 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் 49 ஆம் பிரிவிலிருந்து 56 ஆம் பிரிவு வரையான பிரிவுகள் மூலம் வாக்குச்சீட்டுக்களை எண்ணுதல் தொடர்பில் அந்தச் சட்டத்தின் 02 ஆவது அட்டவணையின் 18 முதல் 28 வரையிலான கட்டளைகள் மூலம் அஞ்சல் வாக்குகளை எண்ணுதல் தொடர்பிலான கட்டளைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இப் பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 50 ஆவது பிரிவிற்கமைய தெரிவத்தாட்சி அலுவலரினால் போட்டியிடும் ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு அல்லது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மற்றும் சுயேட்சைக் குழுக்களின் தலைவர்களுக்கு வாக்கெண்ணல் நிலையங்களின் அமைப்பு, வாக்கெண்ணும் ஆரம்பிக்கும் திகதி மற்றும் நேரம் மற்றும் ஒவ்வொரு வாக்கெண்ணும் மண்டபங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையங்களின் விபரங்களை அனுப்புதல் வேண்டும்.

107. மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரினால் வாக்கெண்ணும் நிலையங்களை அடையாளம் காணுதல், வாக்கெண்ணும் ஆளணியை நியமித்தல் மற்றும் வாக்கெண்ணும் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக வருகைதரும் வாக்கெண்ணல் முகவர்கள் தொடர்பில் அரசியல் கட்சிகள் / சுயேட்சைக் குழுக்களை அறிவூட்டுதலம் வேண்டும். வாக்கெண்ணும் மண்டபங்களை நிறுவும் போது ஒரு சாதாரண வாக்கெண்ணும் மண்டபத்திற்கு பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 10,000 – 12,500 இற்கு இடைப்பட்ட வகையில் வாக்களிப்பு நிலையங்களுக்கமைய வகைப்படுத்தப்படும். இங்கு வாக்களிப்பு நிலைய எண்களின் தொடரொழுங்கிற்குப் பதிலாக மாற்றமாக வாக்கெடுப்பு பிரிவு எழுமாறாக தெரிவு செய்யப்பட்டு வாக்கெண்ணும் மண்டபங்களுக்கு வழங்குவதற்கும் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

108. அஞ்சல் மூல வாக்குப் பக்கற்றுகள் 1500 – 2000 இற்கு இடைப்பட்ட அளவுக்கு ஒரு அஞ்சல் வாக்கெண்ணல் மண்டபம் வீதம் நிறுவுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. எவ்வாறெனினும் வாக்கெண்ணலுக்காக நியமிக்கப்பட வேண்டிய ஆளணி போட்டியிடும் கட்சிகள் / குழுக்களுக்கமைய நியமிக்க முடியுமான முகவர்களின் எண்ணிக்கையினை கருத்திற் கொள்ளும் போது மேற்குறிப்பிட்ட வரையறைக்குள் வாக்கெண்ணல் மண்டபங்களை நிறுவ முடியாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. ஒரு சாதாரண வாக்கெண்ணல் மண்டபத்தில் ஆளணி 30 – 40 எண்ணிக்கையையும் அஞ்சல் வாக்கெண்ணலுக்காக தலைமை வாக்கெண்ணல் அலுவலர் தவிர ஆகக் குறைந்தது 15 அலுவலர்களை நியமிப்பதற்கும் சாதாரண வாக்கெண்ணல் முகவர்களை ஒரு கட்சிக்கு அல்லது குழுவிற்கு ஒரு வாக்கெண்ணும் நிலையத்திற்காக 05 பேர் வீதம் நியமிப்பதற்கு உள்ள வாய்ப்பை கருத்திற்கொண்டு வாக்கெண்ணும் மண்டபங்களை நிறுவுவதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு ஏற்பட்டது அதற்குரிய காரணமாகும். அனைத்து மாவட்டங்களிலும் ஏற்புடைய வாக்கெண்ணும் மண்டபங்கள் 1600 நிறுவப்பட்டதோடு, அவற்றில் 1283 சாதாரண வாக்கெண்ணும் மண்டபங்களாகும். இத்தோடு 317 மண்டபங்கள் அஞ்சல் மூல வாக்கெண்ணும் மண்டபங்களாகும். ஒவ்வொரு மாவட்டத்திற்கமைய நிறுவப்பட்ட மொத்த வாக்கெண்ணும் மண்டபங்களை எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் இலக்கம் X குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

109. 1981 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தில் 51 ஆம் பிரிவிற்கமைய போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றிற்கு அல்லது சுயேட்சைக் குழுவொன்றுக்கு ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையங்களுக்கும் 05 முகவர்கள் வீதம் நியமிப்பதற்கும் அஞ்சல் வாக்கெண்ணல் நிலையங்களுக்கு 02 முகவர்கள் வீதம் நியமிப்பதற்கும் முடியும். தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் அதிகாரம் பெற்ற முகவர்கள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் தலைவர்களுக்கு அனுப்பப்பட்ட வாக்கெண்ணும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கெண்ணும் மண்டபத்திற்கும் அதற்கமைய முகவர்களை நியமிப்பதற்கும் அவர்களுக்கு தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அனுமதிப் பத்திரங்கள் வாக்கெண்ணல் நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் வழங்குவதற்கும் அதிகாரம் பெற்ற முகவர்கள் / சுயேட்சைக் குழுக்களின் தலைவர்கள் நடவடிக்கையெடுத்தல் வேண்டும். வாக்கெண்ணும் போது விசேடமாக விருப்பு வாக்குகளை எண்ணும் போது முறைக்கேடுகள் நிகழுவதாக எனும் கருதுகோளின் அடிப்படையில் அதிகமான அரசியல் கட்சிகள் இன்னும் நடவடிக்கையெடுப்பதனால் அரசியல் நிரந்தர முகவர்களின் கூட்டங்களின் ஒவ்வொரு வேட்பாளருக்காகவும் முகவர் ஒருவர் வீதம் நியமிப்பதற்கு அனுமதி கோரப்பட்ட போதிலும் அதனை செயன்முறை ரீதியான நடைமுறைப்படுத்த முடியாத காரணத்தினால் தேர்தல் மாவட்டத்திற்கு போட்டியிடும் வேட்பாளர் எண்ணிக்கையினை கருத்திற் கொண்டு விருப்பு வாக்குகளை எண்ணும் போது ஒவ்வொரு கட்சிக்கும் மேலதிக முகவர் ஒருவரை நியமிப்பதற்கு அனுமதி வழங்குவதற்கு தேர்தல் ஆணையாளர் இணக்கம் தெரிவித்தார்.

அந்த மேலதிக முகவருக்கு வாக்கெண்ணும் வளவிற்குள் தங்கியிருப்பதற்கு வசதிகளை செய்வதற்கும் விருப்பு வாக்குகளை எண்ணும் சந்தர்ப்பத்தில் உரிய மண்டபத்திற்கு வருவதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் ஒவ்வொரு வாக்கெண்ணும் வளவிற்காகவும் கட்சி செயலாளருக்கு விசேட முகவர் ஒருவரை நியமிப்பதற்கும் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் தலைவருக்கு உரித்தான விசேட பாதுகாப்புத்துருப்பினர்கள் காரணமாக எந்தவொரு வாக்கெண்ணும் நிலையத்திற்கும் செல்வதற்கு தடையுள்ள போது அதற்கு பதிலாக விசேட முகவர் ஒருவரை நியமிப்பதற்கும் அவருக்கு அனைத்து வாக்கெண்ணும் மண்டபத்திற்கு செல்லவும் அனுமதி வழங்கப்பட்டது. அவ்வாறான கோரிக்கை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஐக்கிய தேசிய கட்சியினால் கிடைக்கப்பெற்றதோடு அதற்கிணங்க குருநாகல் மாவட்டம் சார்பில் அதிகாரம் பெற்ற முகவர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்காகவும் கொழும்பு மாவட்டம் சார்பில் அதிகாரம் பெற்ற முகவரை ரணில் விக்ரமசிங்க அவர்களுக்காகவும் முகவர் ஒருவர் வீதம் நியமிக்கப்பட்டது. வாக்கெண்ணும் வளவிற்குள் / வாக்கெண்ணும் மண்டபத்தில் வாக்குப் பெட்டிகள் மாற்றப்படுகின்றன என்ற கருத்தினை நீக்குவதற்காக ஒவ்வொரு கட்சிக்கும் / சுயேட்சைக் குழுவிற்கும் ஒவ்வொரு சாதாரண வாக்கெண்ணல் மண்டபத்திற்கு இருக்க முடியுமான முகவர்கள் 05 பேரில் ஒருவருக்கு வாக்கெடுப்புத் தினத்தில் பி.ப. 3.00 மணியிலிருந்து ஏற்புடைய வளவிற்குள் / வாக்கெண்ணும் மண்டபத்தில் தரித்திருப்பதற்கு தேவை ஏற்படின் வாக்கெண்ணும் மண்டபத்தை பரீட்சித்துப் பார்ப்பதற்கும் தெரிவத் தாட்சி அலுவலரினால் அனுமதி வழங்கப்பட்டது.

110. வாக்கெடுப்பு நிறைவடைந்த பின்னர் வாக்கெடுப்பு நிலையத்திற்குப் பொறுப்பான தலைமை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களினால் எடுத்துவரப்படும் வாக்குப் பெட்டிகள் உள்ளிட்ட பாதுகாப்பான பொருட்களை பொறுப்பேற்பதற்கான வேலைத் திட்டமொன்று தெரிவத்தாட்சி அலுவலரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டதோடு, பொருட்களை பொறுப்பேற்ற பின்னர் வாக்கெண்ணலுக்கான பொருட்களை தனியாகவும் ஏனைய பொறியிடப்பட்ட உறைகள் மற்றும் ஏனைய பொருட்களை தனியாகவும் வாக்கெண்ணும் அறையினுள் வைக்கப்பட்டது. வாக்களிப்புத் தினத்தின் பிற்பகல் வாக்கெண்ணும் மண்டபத்திற்கு வருகைத் தரும் தலைமை வாக்கெண்ணும் அலுவலரினால் வாக்கெண்ணலுக்கு ஏற்புடையவற்றை எழுத்து மூலம் தனது பொறுப்பிலெடுத்து வாக்கெண்ணலை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை யெடுக்கப்படும்.

111. வாக்கெண்ணும் ஆளணியினருக்கு வாக்கெண்ணும் தினம் பி.ப. 06.00 மணிக்கு முன்னர் வாக்கெண்ணும் மண்டபத்திற்கு சமூகமளிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அஞ்சல் வாக்கெண்ணல் நடவடிக்கைகள் வாக்கெடுப்புத் தினத்தில் பி.ப. 4.30 மணிக்கு ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததனால் அஞ்சல் மூல வாக்கெண்ணல் ஆளணியினர் அன்றைய தினம் பி.ப. 3.00 மணிக்கு ஏற்புடைய வாக்கெண்ணும் மண்டபத்திற்கு சமூகமளித்தல் வேண்டும். வாக்கெண்ணும் ஆளணியினர் அதிகமான மாவட்டங்களில் அந்த மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட அலுவலர்களைக் கொண்டிருந்தது. எவ்வாறெனினும் வாக்கெண்ணலை மேற்பார்வை செய்யும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் கொழும்பு மாவட்டத்திலிருந்து ஏனைய மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டன. அவ்வாறு கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட அனைத்து அலுவலர்களும் தேர்தல் செயலகத்தில் பயிற்றுவிக்கப்பட்டதோடு மாவட்ட மட்டத்தில் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் தேவையான பயிற்சிகள் நடாத்தப்பட்டன. வாக்கெண்ணும் ஏனைய ஆளணியினர் வாக்கெண்ணல் ஆரம்பிப் பதற்கு முன்னர் தலைமை வாக்கெண்ணல் அலுவலரினால் அறிவூட்டப்பட்டனர்.

112. வாக்கெண்ணல் மண்டபங்களை அமைத்து முடித்தது முதல் அந்த இடங்களுக்கு பாதுகாப்பினை வழங்குவது பொலிஸாரின் பொறுப்பாகும். அதற்கிணங்க அந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் வாக்கெண்ணல் நிறைவடைந்த பெறுபேறுகளை வெளியிடும் வகையில் நடைமுறைப்படுத்தப்படும். வாக்கெண்ணும் சந்தர்ப்பத்திலும் ஒரு வாக்கெண்ணும் நிலையத் திற்கு இரண்டு பொலிஸ் அலுவலர்களின் பாதுகாப்பு வழங்கப்பட்டதோடு வளவின் பாதுகாப்பிற்காக மற்றும் தெரிவத்தாட்சி அலுவலர் பெறுபேறுகளை வெளியிடும் இடத்திற்கும் விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டது. ஒவ்வோர் வளவிலிருந்தும் பெறுபேற்று ஆவணங்கள் தெரிவத்தாட்சி அலுவலரிடம் எடுத்துவரும் போது பொலிஸ் உத்தியோகத்தருடன் சமூகமளிக்க வேண்டுமென தலைமை வாக்கெண்ணும் அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

113. வாக்கெண்ணலை ஆரம்பிப்பதற்காக அடிப்படையான 03 நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட வேண்டுமென அனைத்து தலைமை வாக்கெண்ணல் உத்தியோகத் தருக்கான அறிவுறுத்தல் வகுப்புக்களில் அறிவூட்டப்பட்டது. வாக்கெண்ணல் மண்டபத்திற் குரிய அனைத்த வாக்குப் பெட்டிகளும் கிடைக்கப்பெற்றிருத்தல், போட்டியிடும் அரசியல் கட்சிகள் / சுயேட்சைக் குழுக்களுக்கு அறிவிக்கப் பட்டிருந்த வாக்கெண்ணும் நேரம் கடந்திருத்தல்

மற்றும் வாக்களிப்பு நிலையங்களில் குழப்பங்கள் பற்றிய அறிக்கையை பரீட்சித்த பின்னர் வாக்கெண்ணலை ஆரம்பிப்பதற்காக தெரிவத்தாட்சி அலுவலரின் கட்டளை கிடைக்கப்பெற்றிருத்தல் அந்த அடிப்படை நிபந்தனைகள் ஆகும். எவ்வாறெனினும் வாக்கெண்ணலினை ஆரம்பிப்பதற்கு முன்னர் வாக்கெண்ணும் மண்டபங்களுக்கு முகவர்கள் சமூகமளித்துள்ளனரா? இல்லையா? என்பது பற்றி கரிசனை செலுத்தி சமூக மளித்திருக்காதவிடத்து ஒலிபெருக்கி மூலம் ஏற்புடைய வாக்கெண்ணும் மண்டபத்தின் வாக்கெண்ணும் நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு தயார்நிலையில் உள்ளதால் உடனடியாக சமூக மளிக்குமாறு முகவர்களை அறிவூட்டுவதற்கு தலைமை வாக்கெண்ணல் அலுவலர்களுக்கு அறிவுறை வழங்கப்பட்டது. வாக்கெண்ணலினை ஆரம்பிப்பதற்கு முன்னர் வாக்களிப்பு நிலையத்திற்கு பொறுப்பான சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் வாக்களிப்பு நிலைய குழப்பங்கள் பற்றி பேணி வந்த Z உறையில் இடப்பட்ட அறிக்கையைத் திறந்து அங்கு குறிப்பிடப்பட்டுள்ள வாக்களிப்பு நிலைய தகவல்களை ZCCO அறிக்கையில் பதிந்து தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தெரிவத்தாட்சி அலுவலரினால் இந்த அறிக்கை மற்றும் அதுவரையில் தன்னிடம் தேர்தல் ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ள தகவல்களை பரிசீலித்து ஏற்புடைய வாக்களிப்பு நிலையங்களில் எந்தவித குழப்பங்களும் நிகழ வில்லையென உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் ZCCO அறிக்கையின் பிரதியொன்றுடன் வாக்கெண்ணலினை ஆரம்பிப்பதற்கான கட்டளை தலைமை வாக்கெண்ணும் அலுவலருக்கு அனுப்பிவைக்கப்படும். Z அறிக்கை மூலம் அல்லது அது வரையில் தெரிவத்தாட்சி அலுவலரின் அளவு தேர்தல் ஆணையாளரிடம் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளுக்கமைய ஏதேனும் வாக்களிப்பு நிலையமொன்றில் ஏதாவது குழப்பம் நிகழ்ந்திருப்பின் அதற்குரிய வாக்களிப்பு நிலையம் தொடர்பில் வலயத்திற்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலரினால் பேணி வரப்படும் ZARO அறிக்கையை, வாக்களிப்பு நிலைய ஒரு நாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்களினால் பேணிவரப்படும் ZLOB அறிக்கையைப் பரீட்சித்த மற்றும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் உள்ளிட்ட ஏனைய ஏற்புடைய அலுவலர்களின் வாக்கு மூலங்களையும் பெற்றுக் கொண்டு அந்த தகவல்களை தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பித்து ஏற்புடைய வாக்களிப்பு நிலையத்தின் வாக்கெண்ணல் தொடர்பில் அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். சுதந்திரமானதும் நியாயமானதுமான வாக்கெடுப்பிற்கு தடையேற்படும் வகையில் சம்பவங்கள் நிகழ்ந்திருப்பதாக தேர்தல் ஆணையாளரினால் முடிவு செய்யப்படுமிடத்து அவ்வாறான வாக்களிப்பு நிலையங்களின் வாக்களிப்பை வறிதாக்கி மீண்டும் வாக்கெடுப்பை நடாத்துவதற்கும் அந்த ஏற்புடைய வாக்களிப்பு நிலையம் தவிர்ந்த ஏனைய வாக்களிப்பு நிலையங் களின் வாக்கெண்ணலை ஆரம்பிக்க முடியுமென்றும் தெரிவத்தாட்சி அலுவலரினால் அறிவுரை வழங்கப்படும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் வறிதாக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்கள் தவிர்ந்த வாக்கெண்ணப்படும் வாக்களிப்பு நிலையங்களின் ஏற்புடைய பெறுபேறுகள் தெரிவத்தாட்சி அலுவல ரினால் தனியாக பொறியிடப்பட்டு தனது பொறுப்பில் வைத்து வறிதாக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களுக்காக மீண்டும் நடாத்தப்பட்ட வாக்களிப்பின் பின்னர் அந்த வாக்கெடுப்பு நிலை யங்களின் வாக்குகளை எண்ணி அந்த வாக்கெண்ணல் மண்டபத்திற்குறிய ஒவ்வொரு கட்சிகள் / குழுக்கள் பெற்றுக்கொண்ட வாக்கு களின் அளவு தீர்மானிக்கப்படும். அதன் பின்னர் அனைத்து வாக்கெண்ணல் மண்டபங்களிலும் அந்தந்த குழுக்கள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையை கூட்டி தேர்தல் மாவட்டத்தின் ஒவ்வொரு கட்சிகள் / குழுக்கள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை கணக்கிடப்படும்.

114. வாக்கெண்ணல் நடவடிக்கை மூன்று கட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும். முதலாவது கட்டத்தில் ஒவ்வொரு வாக்குப் பெட்டிகளிலுமுள்ள வாக்குகளின் எண்ணிக்கையை வாக்களிப்பு நிலையத்திற்குப் பொறுப்பான சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் ஒப்படைக்கப்பட்டுள்ள வாக்குச் சீட்டுக் கணக்குடன் இணங்கு கின்றதாவென பரீட்சிக்கப்படும். இங்கு ஆரம்பமாக வாக்குச் சீட்டுக் கணக்கு திறக்கப்பட்டு அங்கு குறிப்பிடப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்தின் பெயரிற்கமைய அதற்குறிய வாக்குப் பெட்டியை திறந்து கணக்கிடுவதற்கு தலைமை வாக்கெண்ணல் அலுவலரினால் கட்டளை வழங்கப்படும். இங்கு திறக்கப்பட்ட வாக்குச் சீட்டுக் கணக்கிற்கு ஏற்புடைய தகவல்கள் வாக்கெண்ணும் முகவர் களுக்கு பரீட்சிப்பதற்காக சந்தர்ப்பம் வழங்கப்படும். இங்கு வாக்குச் சீட்டுக் கணக்கில் குறிப்பிடப் பட்டுள்ள எண்ணிக்கையுடன் வாக்குப் பெட்டியிலுள்ள வாக்குகளின் எண்ணிக்கை இணங்குமாயின் அது பிடிப்புச் சட்டகத்தின் மீது வைக்கப்படும். இணங்கவில்லையெனின் மேலும் இரு முறை கணக்கிட்டு அந்த பெறுபேறு வாக்குப் பெட்டியில் உள்ள உண்மையான வாக்குகளென பெற்றுக் கொள்ளப்படும். அந்த வகையில் வாக்கெண்ணும் நிலையத்திற்குரிய அனைத்து வாக்குப்பெட்டியிலு முள்ள வாக்குச் சீட்டுக்கள் முதலாவது கட்டத்தின் கீழ் எண்ணப்படும்.

115. வாக்கெண்ணும் இரண்டாம் கட்டத்தின் கீழ் ஒவ்வொரு கட்சிகள் மற்றும் குழுக்களுக்கமைய வாக்குச் சீட்டுக்களை தெரிவு செய்தல், கணக்கிடுதல், பரீட்சித்தல், மீண்டும் பரீட்சித்தல் மற்றும் எழுமாறாகப் பரீட்சித்தல் ஆகிய 05 தொகுதிகளின் கீழ் வாக்குச் சீட்டுக்கள் எண்ணுதல் மற்றும் பரீட்சித்தலினை மேற்கொண்டு ஒரு கட்சி அல்லது குழுக்கள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை கணக்கிடப்படும். இங்கு அந்தந்த கட்சிகள் / குழுக்களுக்கான வாக்குச் சீட்டுக்களை தெரிவு செய்வது தொடர்பில் கடந்த வாக்கெடுப்பின் போது கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அதாவது வேறு கட்சிகள் அல்லது குழுக்களுக்கான வாக்குச் சீட்டுக்கள் அதற்கல்லாத பெட்டிகளில் இடப்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளைக் கருத்திற் கொண்டு முதலாவது உப கட்டத்தின் கீழ் மொத்த ஆளணியையும் ஈடுபடுத்தி அந்தந்த கட்சிகளுக்கான தெரிவுகளை மீண்டும் பரீட்சித்து இரண்டாவது உப கட்டத்தின் கீழ் மீண்டும் தெரிவு செய்தல், எண்ணுதல், பரீட்சித்தல், மீண்டும் பரீட்சித்தல் மற்றும் எழுமாறாகப் பரீட்சித்து ஒவ்வொரு கட்சிகள் / குழுக்கள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையை கணிப்பிடுவதற்கான அறிவுறுத் தல்கள் தலைமை வாக்கெண்ணும் அலுவலருக்கு வழங்கப்பட்டது. வாக்கெண்ணும் இரண்டாம் கட்டத்தின் இறுதியில் அந்தந்த கட்சிகள் / குழுக்கள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை குறிப்பிடும் பெறுபேறுகளை தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைத்த பின்னர் மூன்றாவது வாக்கெண்ணும் கட்டம் ஆரம்பிக்கப் படும்.

116. வாக்கெண்ணும் மூன்றாவது கட்டத்தில் அந்தந்த கட்சிகள் / குழுக்களின் வேட்பாளர்கள் பெற்றுக் கொண்ட விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடுவதாகும். அதன் போது அதிகூடிய வாக்குகளைப் பெற்றுக் கொண்ட கட்சியிலிருந்து ஒழுங்குமுறையாக அனைத்து கட்சிகள் / குழுக் களிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள கட்சிகள் / குழுக்களின் வேட்பாளர்கள் பெற்றுக் கொண்ட விருப்பு வாக்குகள் எண்ணப்படும். அதற்கிணங்க அதிகூடிய வாக்குகளைப் பெற்றுக் கொண்ட கட்சியின் வாக்குச் சீட்டுக்களை எடுத்து அவற்றை ஆளணியை ஈடுபடுத்தி 06 தொகுதிகளாகக் பிரிக்கப்படும். அதாவது முதலாவது விருப்பு வாக்கு குறியிடப் பட்டுள்ள, இரண்டாவது விருப்பு வாக்கு குறியிடப்பட்டுள்ள, மூன்றாவது விருப்பு வாக்கு குறியிடப்பட்டுள்ள, விருப்புத் தெரிவு குறியிடப்படாத, சந்தேகத்திற்கிடமான மற்றும் மூன்று விருப்பு தெரிவுகளுக்கு மேல் குறியிடப்பட்டுள்ள வாக்குச் சீட்டுக்களென வேறுபடுத்தி அதற்குறிய பெட்டிகளில் இடப்படும் அதன் பின்னர் கணக்கிடுவதற்கு செல்லுபடியாகாத விருப்பு வாக்குகளின் வாக்குச் சீட்டுக்களை தொகுதிகளுக்கமைய தனியான உறைகளில் இட்டு பொறியிட்டு செல்லுபடியாகும் விருப்புத் தெரிவொன்று, விருப்புத் தெரிவு இரண்டு, விருப்புத் தெரிவு மூன்று வாக்குச் சீட்டுக்களை மாத்திரம் எடுத்து மீண்டும் பரீட்சித்த பின்னர் இணக்கப் பத்திரங்களில் பதிதல் மற்றும் மீண்டும் பரீட்சித்தல் மேற்கொள்ளப்படும். அந்த வகையில் அந்தக் கட்சி / குழு வாக்குச் சீட்டுக்களில் உள்ள மற்ற விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையை அந்தக் கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு மத்தியில் பிரிந்து செல்லக்கூடிய முறையை குறிப்பிடும் பெறு பேற்றை ஏற்புடைய மாதிரிப் படிவத்தில் குறிப்பிட்ட தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைத்த பின்னர் ஒழுங்கு முறையாக அடுத்த அதிகூடிய வாக்குகளைப் பெற்றுக் கொண்ட கட்சியின் / குழுவின் விருப்பு வாக்குகள் எண்ணப்படும்.

**பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தலும் வெளியிடுதலும்.**

117. 1988 ஆம் ஆண்டின் இலக்கம் 35 தேர்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 15 மற்றும் 16 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 57 – 62 வரையிலான பிரிவுகள் மற்றும் அரசியலமைப்பின் 99 ஆவது உறுப்புரையின் குறிப்பிடப்பட்டுள்ள படி பாராளு மன்றத் தேர்தலுக்கு ஏற்புடைய பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தல் தொடர்பிலான சட்ட நிலைமை விளக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 57 ஆம் பிரிவிற்கமைய பெறுபேறுகள் வெளியிடப்படும் நேரம் மற்றும் இடம் பற்றிய அறிவித்தல் ஒன்று தெரிவத்தாட்சி அலுவலரினால் கட்சிகளின் செயலாளர்களுக்கு அல்லது அதிகாரம் பெற்ற முகவர்களுக்கு மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கு அனுப்புதல் வேண்டும்.

118. பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 58 ஆம் பிரிவிற்கமைய பெறுபேறுகள் வெளியிடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் கட்சியின் செயலாளர் / அதிகாரம் பெற்ற முகவர் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் தலைவரினால் இரண்டு முகவர்களை இதற்காக நியமிக்க முடியும். எவ்வாறெனினும் வாக்கெண்ணல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக தேர்தல் செயலகத்தில் நடைபெற்ற கட்சி செயலாளர் / நிரந்தர முகவர் கூட்டங்களின் போது ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பட்டின் பிரகாரம் பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தும் நிலையத்திற்கு கட்சியின் செயலாளருக்கு இன்னுமொரு விசேட முகவரை நியமிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதோடு, தேர்தலின் போது உறுப்பினர் ஆசனங்களை

வெற்றிகொள்ளும் கட்சி / குழுக்களின் வேட்பாளர் களுக்கு பெறுபேறுகள் அட்டவணைப்படுத்தும் இடத்திற்கு சமூகமளிப்பதற்கு அனுமதிப் பத்திரங்களை வழங்குமாறு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. மேலும் வளாக ஒருங்கிணைப்பு நிலையங் களுக்காக கணினியொன்றுடன் ஏற்புடைய வளாகத்தில் வாக்கெண்ணும் மண்டபங்களில் தனது கட்சியின் முகவரினால் கொண்டு வந்து ஒப்படைக்கும் பெறுபேற்று அட்டவணைகளுக்கமைய பெறுபேறுகளை சாரம்சப்படுத்தும் நடவடிக்கை களுக்காக மேலும் இரண்டு முகவர்களை நியமிப்பதற்கு கட்சி செயலாளருக்கு அல்லது சுயேட்சைக் குழுக்களின் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டதோடு, அதற்காக கட்சி / குழுக்களுக் காக இடமொன்றும் ஒதுக்கப்பட்டது.

119. மாவட்ட மட்டத்தில் பெறுபேறுகளை அட்டவணைப் படுத்தும் மற்றும் பெறுபேறுகளை வெளியிடும் இடங்களில் தெரிவு செய்யும் போது அனைத்து வாக்கெண்ணும் மண்டபங்களுக்கும் இலகுவில் வந்தடைவதற்கு முடியுமான இடமொன்றாக இருத்தல், போக்குவரத்து வசதிகள், மின்னொலி வழங்குதல், பாதுகாப்பு ஏற்பாடுகளை வழங்குதல், தொலைபேசி, தொலைநகல் வசதிகளை வழங்குதல் ஆகிய விடயங்களோடு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனைத்து நடவடிக்கைகளையும் அடிக்கடி மேற்பார்வை செய்ய முடியுமான இடமொன்றை தெரிவு செய்வதற்கு தெரிவத்தாட்சி அலுவலர் களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களின் அலுவலகத்தை இதன் பொருட்டு தெரிவு செய்வதாயின் கச்சேரியின் கூட்ட மண்டபத்தை பயன்படுத்த வேண்டுமென்றும், மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் வெளியில் ஒரு இடத்தை தெரிவு செய்வதாயின் மேற்கூறப்பட்ட வசதிகள் தொடர்பில் கவனம் செலுத்தி அந்த வாக்கெண்ணும் நிலையங்கள் அமைந்துள்ள வளாகத்தின் ஒரு இடத்தை தெரிவு செய்யுமாறும் அறிவிக்கப்பட்டது. மேலும் பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தும் இடம் அமைக்கப்பட்டுள்ள முறை தொடர்பில் கடந்த வாக்கெடுப்புகளின் போது அரசியல் கட்சிகள் / குழுக்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தி பெறுபேறுகளை கைகளினால் தயாரித்தல் மற்றும் கணினியினால் தயாரிப்பதற்கு அனைத்து விடயங்களையும் முகவர்களுக்கு மற்றும் வேட்பாளர்களுக்கு இலகுவாக கண்காணிக்க முடியுமான வகையில் பெறுபேறுகளை அட்டவணைப் படுத்தும் மண்டபங்களை அமைக்கும் முறை தொடர்பில் எழுத்து மூல அறிவுறுத்தல்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அதற்கமைய பெறுபேறுகள் கைகளினால் மற்றும் கணினியின் மூலம் தயாரிக்கப்படும் மேசைகளை சுற்றி கட்சியால் / குழுக்களின் முகவர்களுக்கு நடமாடுவதற்கு ஏற்ற வகையில் மண்டபங்களை அமைப்பதற்கு முடியுமான எல்லா முயற்சிகளையும் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் எடுக்கப்பட்டது.

120. பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தும் மற்றும் வெளியிடும் செயற்பாடுகளுக்கு ஏற்புடைய பணிகளாக வாக்கெண்ணும் மண்டபங்களிலிருந்து கிடைக்கப்பெறும் பெறுபேற்று அட்டவணைகளை பொறுப்பேற்றல் ஒவ்வொரு கட்சி / சுயேட்சைக் குழு பெற்றுக்கொண்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கையை தீர்மானித்தல், ஒவ்வொரு கட்சி / சுயேட்சைக் குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள்ள வாக்குகளின் எண்ணிக்கைக்கு விகிதாசார முறையில் கிடைக்கப் பெறும் உறுப்பினர்களின் எண்ணிக்கையினை தீர்மானித்தல் மற்றும் ஒவ்வொரு கட்சி / சுயேட்சைக் குழுவின் கீழ் போட்டியிட்ட வேட்பாளர்களினால் பெறப்பட்ட விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை கணக்கிடப்படும். தெரிவத்தாட்சி அலுவலரினால் சாதாரண வாக்கெண்ணும் நிலையம், அஞ்சல் மூல வாக்கெண்ணும் நிலையம் மற்றும் ஏற்புடையதாயின் வேறு வாக்களிப்பு நிலையமொன்றில் வாக்களித்த வாக்காளர்களின் வாக்கெண்ணும் நிலையம் போன்ற அனைத்து நிலையங்களினதும் வாக்கெண்ணலுக்கு பொறுப்பான உத்தியோகத்தரினால் பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 53(7) பிரிவின் கீழ் தயாரிக்கப் படும் எழுத்து மூல கூற்றுக்கள் பெறுபேற்று நிலை யத்திற்கு கிடைத்த பின்னர் இறுதிப் பெறுபேறு கணக்கிடப்படும் வாக்கெண்ணும் மண்டபங்களி லிருந்து பெறுபேற்று அட்டவணைகள் தெரிவத் தாட்சி அலுவலருக்கு கிடைத்த பின்னர் அவற்றை பரிசோதித்தல் சிரேட்ட அலுவலர் குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்டு உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்திய பின்னர் அதன் நிழற் பிரதி யெடுக்கப்பட்டு தெரிவத்தாட்சி அலுவலரின் சான்றித ழையும் பெற்றுக் கொண்ட பின்னர் தேர்தல் ஆணையாளருக்கு தொலைநகல் மூலம் அனுப்பிவைக்கப்படும். மூலப் பிரதி பெறுபேறுகளை கையினால் தயாரிக்கும் பிரிவிற்கு மற்றும் இன்னுமொரு நிழற் பிரதி கணினியின் மூலம் பெறுபேறுகளை தயாரிக்கும் பிரிவிற்கும் வழங்கப் படும். தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பப்பட்ட தொலைநகல் அறிக்கை கிடைத்த பின்னர் தெரிவத்தட்சி அலுவலர் தொலைபேசி மூலம் வினவி தொலைநகல் ஆவணத்தில் உள்ள எண்ணிக்கைகள் சரியானவையென உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர் தேர்தல் செயலகத்திலும் கையினால் மற்றும் கணினி மூலம் பெறுபேறுகள் தயாரிக்கப்படும்.

121. மேற்குறிப்பிட்டவாறு மாவட்ட மட்டத்தில் வாக்கெடுப்பு பிரிவு மட்டத்தில் வாக்கெடுப்பு மாவட்ட மட்டத்தில் அஞ்சல் மூல

பெறுபேறுகளாகவும் தேர்தல் மாவட்ட மட்டத்தில் ஒவ்வொரு கட்சி / குழுக்கள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் அதற்கமைய அந்தந்த கட்சிகள் / குழுவுக்கு உரித்தாக வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும் தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் கணிப்பீடு செய்யப்படும். தேர்தல் பிரிவிற்குரிய அனைத்து வாக்கெண்ணும் மண்டபங்களின் பெறுபேற்று அட்டவணைகள் கிடைக்கப்பெற்ற பின்னர் அந்த வாக்கெடுப்பு பிரிவின் அந்தந்த கட்சிகள் / குழுக்கள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை கணக்கிடப்படும். இங்கு கையினால் தயாரிக்கப்படும் பிரிவிலிருந்து கிடைக்கப்பெறும் பெறுபேறுகள் கணினிப் பிரிவினால் தயாரிக்கப்படும் பெறுபேற்றுடன் ஒப்பிட்டு சரியாக இருக்குமிடத்து மாத்திரம் அந்த பெறுபேறு தேர்தல் செயலகத்திற்கு தொலைநகல் மூலமும் தொலைபேசி மூலமும் அறிவிக்கப்படும். அந்த வகையில் தேர்தல் ஆணை யாளருக்கு மாவட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்ற தேர்தல் பிரதேச மட்டத்திலான பெறுபேறு தேர்தல் செயலகத்தின் கையினால் மற்றும் கணினி மூலம் தயாரிக்கப்பட்ட பெறுபேற்றுக்கும் சமனானதா? என பயிற்சிக்கப்பட்டு சமமாகவிருக்குமிடத்து திருத்தமானதென தெரிவத்தாட்சி அலுவலர் களுக்கு அறிவித்து அதன் பின்னர் ஊடகத்தின் மூலம் பிரச்சாரம் செய்யப்பட்டது. அந்த வகையில் மாவட்டத்தின் அனைத்து வாக்கெடுப்பு பிரிவுகள் மற்றும் அஞ்சல் மூல வாக்குகளின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் அனைத்து வாக்கெடுப்புப் பிரிவுகளின் மற்றும் மாவட்ட அஞ்சல் மூல வாக்குகளில் அந்தந்த கட்சி / சுயேட்சைக் குழு பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டு அதன் மூலம் அந்தந்த கட்சிக்கு / சுயேட்சைக் குழுவிற்கு உரித்தான உறுப்பினர் எண்ணிக்கை கணக்கிடப்பட்டு தேர்தல் ஆணையாள ருக்கு தெரிவத்தாட்சி அலுவலரினால் அனுப்பப் படும். அந்த பெறுபேறு தேர்தல் செயலகத்தினால் தயாரிக்கப்பட்ட பெறுபேறுக்கு சமனாகவிருக்கு மிடத்து மாவட்ட மட்டத்தில் ஒவ்வொரு கட்சிக்கு / சுயேட்சைக் குழுவிற்கு உரித்தான உறுப்பினர் களின் எண்ணிக்கை குறிப்பிடப்படும் பெறுபேறும் ஊடகங்களுக்கு வழங்க நடவடிக்கையெடுக்கப்படும். இந்த பெறுபேறுகள் தேர்தல் செயலகத்தில் மீண்டும் கணக்கிடப்பட்டு பரீட்சித்தல் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு வழங்குதல் தேர்தல் ஆணையாளரினால் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினிப் பாடசாலை உதவியுடன் மேற்கொள்ளப் பட்டது.

122. இந்த பாராளுமன்றத் தேர்தலின் போது ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தின் கீழும் உறுப்பினர் களை தெரிவு செய்வதற்கு உரிமையுள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை, செல்லுபடியாகும் வாக்குகளின் எண்ணிக்கையின் வீதம் மற்றும் கிடைக்கப்பெற்ற உறுப்பினர் எண்ணிக்கை, உறுப்பினர்கள் கிடைக்கப்பெறாத ஏனைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் அனைத்தும் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் அனைத்தும் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் அதன் விகிதம் பற்றிய விபரம் இலக்கம் XI எனும் குறிப்பில் காட்டப்பட்டுள்ளது. அதன் சாராம்சம் இலக்கம் XII குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

123. ஒவ்வொரு கட்சிக்கு / சுயேட்சைக் குழுவிற்கு உரித்தான உறுப்பினர் எண்ணிக்கையை வெளியிட்ட பின்னர் அந்த கட்சி / சுயேட்சைக் குழு சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களின் எந்த வேட்பாளர்கள் உறுப்புரிமைக்கு தகுதி பெறுகின்றனர் என்பது பற்றி ஒவ்வொரு வேட்பாளருக்கும் வழங்கப்பட்ட விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையினை கூட்டி தீர்மானிக்கப்படல் வேண்டும். அதற்கிணங்க உறுப்பினர்களைப் பெற்றுக் கொண்ட கட்சிகள் / சுயேட்சைக் குழுக்களின் வேட்பாளர்களுக்கு வாக்காளர்களினால் வழங்கப்பட்டுள்ள விருப்பு வாக்குகளை அதற்காக கணக்கிடுதல் வேண்டும். ஒரு வாக்காளருக்கு தான் விரும்பும் கட்சிக்கு குறியிடுவதற்கும் அக்கட்சியின் வேட்பாளர்கள் மூவருக்கு மேற்படாதவர்களுக்கு தனது விருப்பு வாக்கை வழங்குவதற்கும் பாராளுமன்றத் தேர்தல் சட்டத்திற்கமைய முடியும். அதற்கிணங்க தலைமை வாக்கெண்ணும் அலுவலரினால் அந்தந்த கட்சி மற்றும் சுயேட்சைக் குழுக்கள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவித்த பின்னர் கூடுதலாக வாக்குகளைப் பெற்றுக் கொண்ட கட்சியிலிருந்து ஆரம்பித்து அந்த கட்சியின் வேட்பாளர்கள் பெற்றுக்கொண்ட விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையினை கணக்கிட்டு விருப்பு வாக்குகளின் பெறுபேறுகளையும் தெரிவத்தாட்சி அலுவலரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த வகையில் அனைத்து வாக்கெண்ணும் மண்டபங் களின் ஒவ்வொரு கட்சி / சுயேட்சைக் குழுக்கள் போட்டியிட்ட வேட்பாளர்கள் பெற்றுக் கொண்ட விருப்பு வாக்குகளின் ஏற்புடைய விபரம் தெரிவத்தாட்சி அலுவலரிற்கு கிடைத்த பின்னர் அவை வாக்கெடுப்பு பிரிவு மட்டத்தில் மற்றும் மாவட்ட மட்டத்தில் தயாரித்து அந்தந்த கட்சிக்கு உரித்தான உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு அமைய அந்தந்த கட்சி / சுயேட்சைக் குழுவில் போட்டியிட்டு அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்ட இணைப்பாளர்களிடமிருந்து தெரிவு செய்யப்படும் வேட்பாளர்களினது பெயர்கள் தெரிவத்தாட்சி அலுவலரினால் வெளியிடப்படும்.

124. ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் உரிய அனைத்து வாக்கெடுப்பு பிரிவிலும் எந்தவித தடையுமின்றி வாக்கெடுப்பு நடைபெறுமாயின் மற்றும் போட்டியிட்ட அனைத்து கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களுக்குரிய வாக்குகள் மற்றும் அந்தக் கட்சி / சுயேட்சைக் குழுக்களின் போட்டியிட்ட வேட்பாளர்கள் பெற்றுக்கொண்ட விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை தொடர்பில் இறுதி பெறுபேற்று ஆவண அட்டவணை தயாரிக்கப்பட்டிருப்பின் பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் முதலாவது அட்டவணையின் “ ஔ” படிவத்திற்கமைய சாராம்ச விபரத்திரட்டொன்றை தெரிவத்தாட்சி அலுவலரினால் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்புதல் வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் தேர்தல் ஆணையாளரினால் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரித்து விளம்பரப்படுத்தல் வேண்டும். அதற்கிணங்க ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கமைய 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 62 ஆம் பிரிவிற்கமைய தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் களின் விபரம் இலக்கம் 1928/3 மற்றும் 2015.08.19 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டது. 10 ஆவது அட்டவணையாக ஏற்புடைய வர்த்தமானி அறிவித்தல் இணைக்கப் பட்டுள்ளது.

125. பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொதுத் தேர்தல் ஒன்றின் போது அரசியல் அமைப்பின் 98 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப் பட்டுள்ள நூற்று தொன்னூற்று ஆறு (196) பேரைத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக பிரகடனம் செய்த பின்னர் எஞ்சிய இருபத்தொன்பது (29) உறுப்பினரையும் அந்த தேர்தலில் போட்டியிட்டு ஒவ்வொரு அரசியல் கட்சிக்கு மற்றும் சுயேட்சைக் குழுக்களுக்கு பொதுத் தேர்தலில் வழங்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கையை அந்த பொதுத் தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கைக்கு விகிதாசார முறையில் அரசியல் அமைப்பின் 99 அ உறுப்புரையின் பிரகாரம் தேர்தல் ஆணையாளரினால் பிரித்தொதுக் குதல் வேண்டும். அதற்கிணங்க பாராளுமன்றத் தேர்தலுக்கு ஏற்புடைய வகையில் தேசிய பட்டியல் உறுப்பினர்கள் கிடைக்கப்பெற்ற கட்சி / சுயேட்சைக் குழுக்களின் விபரம் கிடைத்த பின்னர் உறுப்பினர்களின் எண்ணிக்கை இலக்கம் XIII குறிப்பில் காட்டப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் விபரங்கள் இலக்கம் 1928/25 மற்றும் 2015.08.21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டது 11 ஆவது அட்டவணையான ஏற்புடைய வர்த்தமான அறிவித்தல் இணைக்கப்பட்டுள்ளது.

**வாக்களிப்புக்காக செலவு செய்யப்பட்ட செலவினங்கள்.**

126. நாடுமுழுவதிலுமுள்ள தேர்தல் மாவட்டங்கள் 22 இல் (நிருவாக மாவட்டங்கள் 25) நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தலில் வாக்காளர்கள் 15044490 பேருக்காக ஏற்புடைய வசதிகளைச் செய்து வாக்குகளை எண்ணி பெறுபேறுகள் வெளியிடப் பட்டன இதற்காக செலவிடப்பட்ட மொத்த தொகை ரூபா மில்லியன் 2975 ஆகும். அதற்கிணங்க இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட ஒரு வாக்காளருக்காக செலவு செய்யப்பட்ட தொகை ரூபா 197.77 ஆகும்.

127. இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் பொலிஸ் திணைக்களம், அஞ்சல் திணைக்களம், அரசாங்க அச்சுத் திணைக்களம் மற்றும் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் செய்யப்பட்ட செலவுகள் ரூபா மில்லியன் 976 ஆகும். இந்த பாராளுமன்றத் தேர்தலுக்காக செலவு செய்யப்பட்ட மொத்த தொகையான ரூபா மில்லியன் 2975 இல் ரூபா மில்லியன் 1999 அதாவது 67.19% நேரடியாக தேர்தல் திணைக்களத்தினால் செலவு செய்யப்பட்டது.

128. இம்முறை பாராளுமன்றத் தேர்தலுக்காக நிறைவேற்றப்பட்ட சேவைகளுக்காக தேர்தல் ஆணையாளரினால் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்ட அரசாங்கத் திணைக்களங்கள் 05 மூலம் செலவுகள் செய்யப்பட்டது. பொலிஸ் திணைக்களம், அஞ்சல் திணைக்களம், அச்சுத் திணைக்களம், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் மற்றும் கொழும்பு மாவட்ட செயலகம் என்பனவே அவையாகும். பாராளுமன்றத் தேர்தலுக்காக செலவு செய்யப்பட்ட தொகையில் அந்த நிறுவனங்களினால் செலவு செய்யப்பட்ட தொகை சதவீத அடிப்படையில் கீழே காட்டப்பட்டுள்ளது.

| **திணைக்களம்** | **செலவு செய்யப்பட்ட தொகை ரூபா** | **சதவீதம்** |
|---|---|---|
| பொலிஸ் திணைக்களம் | 438,281,416.92 | 14.73% |
| அஞ்சல் திணைக்களம் | 359,964,000.00 | 12.09% |
| அச்சுத் திணைக்களம் | 177,234,422.42 | 5.95% |
| ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் | 556,550.00 | 0.02% |
| கொழும்பு மாவட்ட செயலகம் | 507,110.00 | 0.02% |
| **மொத்தம்** | **976,643,449.34** | **32.81%** |

129. அரசாங்க அச்சுத் திணைக்களம் இந்த தேர்தலுக்காக ரூபா 177,234,422.42 தொகையினை செலவு செய்துள்ளது. அச்சுத் திணைக்களத்தினால் அந்த மொத்தச் செலவில் ரூபா 82,817,848.08 அதாவது 46.73% வாக்குச் சீட்டுக்களை மற்றும் கேட்டுப்பெறும் வாக்குச் சீட்டுக்களுக்காக செலவு செய்துள்ளது. தனியார் பிரிவில் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை அச்சிடுவதற்காக ரூபா 22,683,376.70 தேர்தல் திணைக்களத்தினால் செலவு செய்யப்பட்டுள்ளது.

130. இந்த பாராளுமன்றத் தேர்தலில் பொலிஸ் திணைக்களத்தினால் செய்யப்பட்ட செலவு ரூபா 438,381,416.92 ஆகும். அதில் ரூபா 31,372,850.00 விசேட அதிரடிப்படை, அரச புலனாய்வு சேவை, சிவில் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியவற்றுக்காக செலவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸ் திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளில் செலவு செய்யப்பட்ட தொகையில் ரூபா மில்லியன் 147 பொலிஸ், விசேட அதிரடிப்படை மற்றும் புலனாய்வுப் பிரிவு அலுவலர்களின் இணைந்த படிகளுக்காகவும் தேர்தல் ஆணையாளரின் அனுமதியின் பிரகாரம் தேர்தல் கடமைகளுக்காக பொலிஸ் திணைக்களத்திற்கு தேவையான மேலதிக வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக ரூபா மில்லியன் 132 ரூபா மில்லியன் 60 பொலிஸ் திணைக்களத்தின் வாகனங்களின் எரிபொருளுக்காகவும் செலவு செய்யப்பட்டது. பொலிஸ் திணைக்களத்தினால் சட்ட விரோதமான அறிவித்தல்களை நீக்குவதற்காக ரூபா மில்லியன் 55 உம் பொலிஸ் அலுவலர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக ரூபா மில்லியன் 25 செலவு செய்யப்பட்டுள்ளது.

131. வாக்கெடுப்பின் போது அஞ்சல் திணைக்களத்தினால் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகித்தல், அஞ்சல் மூல வாக்குச்சீட்டுக்கள் அடங்கிய உறைகளை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு விநியோகித்தல் மற்றும் மீண்டும் தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைத்தல், தேர்தல் கடமையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களின் நியமனக் கடிதங்களை விநியோகித்தல் போன்ற நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய விசேட கடமைகள் சில உள்ளன. எனவே அதற்காக இந்த திணைக்களத்திற்கு தேர்தல் ஆணையாளரினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த வகையில் இந்த தேர்தலுக்காக ரூபா 359,964,000.00 அஞ்சல் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டது. அதில் ரூபா மில்லியன் 229 ஊழியர்களின் மேலதிக நேர கொடுப்பனவிற்காகவும் முத்திரை மற்றும் அஞ்சல் செலவிற்காக ரூபா மில்லியன் 104 உம் தொலை பேசிகள் மற்றும் ஏனைய செலவுகளுக்காக ரூபா மில்லியன் 24 உம் ரூபா மில்லியன் 02 காகிதாதிகளுக்காகவும், எரிபொருளுக்காக 01 மில்லியனிற்கு கிட்டிய தொகையும் பிரதான செலவுகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.

132. இந்த தேர்தலின் போது மொத்த செலவின் தன்மைக்கேற்ப பின்வருமாறு வகைப்படுத்திக்காட்ட முடியும்.

| செலவின் தன்மை | செலவு செய்யப்பட்ட தொகை ரூபா | வீதம் |
|---|---|---|
| 1. ஆளணியின் சம்பளம் செலவுகள் மற்றும் மேலதிக நேரம் | 1,515,934,919.48 | 50.95% |
| 2. வாகனங்களுக்கான கூலி | 212,257,231.27 | 7.13% |
| 3. காகிதாகிகள் / அலுவலகப் பொருட்களுக்கான செலவுகள் | 140,426,251.69 | 4.72% |
| 4. எரிபொருள் | 146,519,705.22 | 4.92% |
| 5. நிர்மாணிப்புக்களும் பழுதுபார்ப்பும் | 68,154,804.21 | 2.29% |
| 6. நலன்புரிச் செலவுகள் | 187,058,709.25 | 6.30% |
| 7. அச்சிடல் செலவுகள் | 200,885,124.87 | 6.75% |
| 8. சட்டவிரோத பதாகைகளை நீக்குதல் | 54,756,287.51 | 1.84% |
| 9. முத்திரை மற்றும் அஞ்சல் செலவுகள் | 104,244,862.30 | 3.50% |
| 10. வெளிநாட்டு கண்காணிப்புக்காக வசதிகள் செய்தல் | 16,467,339.50 | 0.55% |
| 11. மின்சாரம் | 120,480,655.93 | 4.05% |
| 12. நீர், தொலைபேசி உள்ளிட்ட சேவைகள் மற்றும் ஏனைய செலவுகள் | 208,212,731.04 | 7% |
| **மொத்தம்** | **2,975,398,622.27** | **100.00%** |

133. அதற்கிணங்க பாராளுமன்றத் தேர்தலுக்காக செலவு செய்யப்பட்ட மொத்த தொகையில் 50.95% அதிக சதவீதம் ஆளணியின் கொடுப்பனவுகளுக்காக செலவிடப்பட்டுள்ளது என்பதனை சுட்டிக்காட்ட முடியும். அடுத்து கூடிய செலவினமாக முறையே வாகனக் கூலிக்காக 7.13% உம் வேறு சேவை களுக்காக 7% உம் அச்சு செலவுகளுக்காக 6.75% உம் நலன்புரி நடவடிக்கைகளுக்காக 6.30% உம் எரிபொருளுக்காக 4.92% உம் காகிதாகிகள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்காக 4.72% உம் மின்சாரத்திற்காக 4.5% உம் முத்திரை மற்றும் அஞ்சல் கட்டணங்களுக்காக செலவிடப்பட்டுள்ளது.

134. சேவை மற்றும் வேறு செலவினங்களின் கீழ் செலவிடப்பட்டுள்ள மொத்த செலவு ரூபா மில்லியன் 208 ஆகும். அதாவது 7% வாக்களிப்பு நிலைய நடவடிக்கைகளுக்காகவும் சேவை நடவடிக்கைகளுக்காகவும் கிராம அலுவலர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா மில்லியன் 104 உம் நீர் வழங்குவதற்காக ரூபா 14 உம் தொடர்பாடல் நடவடிக்கைகளுக்காக ரூபா மில்லியன் 11 உம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

135. பாராளுமன்றத் தேர்தலுக்கான மொத்த செலவின அறிக்கை இலக்கம் XIV காட்டப்பட்டுள்ளது.

**அவதானிப்புக்களும் சிபாரிசுகளும்**

தேர்தல் ஆளணி

136. வாக்கெடுப்பிற்கான ஆரம்ப நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் ஆகிய அனைத்து பணிகளையும் அரசாங்க அலுவலர்களினாலும் ஊழியர்களினாலும் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே வாக்கெடுப்பின் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்படும் அரசாங்க அலுவலர் கணக்கிடும் போது தமது நிறுவனத்தில் சேவையிலுள்ள அனைவரினதும் தகவல்களை தேர்தல்கள் ஆணையாளருக்கு / தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு வழங்க வேண்டியது அந்தந்த நிறுவனத் தலைவர்களது பொறுப்பாகும். ஆயினும் கடந்த தேர்தலின் போது அதிகமான நிறுவனத் தலைவர்கள் தேர்தல் கடமைகளுக்கு பங்கேற்ப தற்கு விருப்பமானவர்கள் யாரென்பதனை தனது ஊழியர்களிடம் வினவி அந்த அலுவலர்கள் / ஊழியர்கள் தகவல்களை தேர்தல்கள் ஆணையாளர் / தெரிவத்தாட்சி அலுவலருக்கு வழங்கியிருப்பதை அவதானிக்க முடிந்தது. இதன் காரணமாக தேர்தல் கடமைகளுக்காக தகமையும் அனுபவமும் உள்ள அலுவலர்களின் பற்றாக்குறைக்கு முகம்கொடுக்க அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் நேரிட்டது. இந்த நிலைமையை குறைத்துக் கொள்வதகாக தனது நிறுவனத்தில் பணியாற்றும் அனைத்து அலுவலர்களினதும் விபரங்களை தேர்தல் ஆணையாளருக்கு வழங்க வேண்டுமென சனாதிபதி செயலாளரினால் நிறுவனத் தலைவர் களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

137. கடந்த வாக்கெடுப்புக்களின் போது இந்த நிலைமை பொதுவாக பாதிப்பை ஏற்படுத்திய ஒரு விடயமாக இருந்ததனால் அதற்கு முகம் கொடுக்கும் நடவடிக்கையாக வாக்கெடுப்பொன்றை இலக்காகக் கொண்டு அரசாங்க அலுவலர்களின் தகவல்களை கோருவதற்கு பதிலாக அரசாங்க அலுவலர்கள் பற்றிய தகவல்களை சேகரித்து வைப்பதற்கும் அடிக்கடி இற்றைவறைப்படுத்துவதற்கும் முடியுமான வகையில் கணினி நிகழ்ச்சித் திட்டம் குறித்து கவனம் செலுத்த வேண்டிய நேரம் வந்துள்ளது. அவ்வாறான ஒரு முறைமை வாக்கெடுப்பின் ஆரம்ப நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்கு உறுதுணையாக அமையும். அரசியல் அமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் மூலம் திருத்தப்பட்ட அரசியல் அமைப்பின் 104 என உறுப்புரைக்கமைய தேர்தல் நடாத்துவதற்கு ஏற்புடைய சகல நடவடிக்கைகளையும் வெற்றிகரமாக நிறைவேற்றுவ தற்கு அரசாங்க ஊழியர்கள் அனைவரும் தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டு மெனும் ஏற்பாடு மற்றும் இவ்வாறு நடவடிக்கை யெடுக்காத அரசாங்க அலுவலர்களுக்கு எதிராக 100000 தண்டப் பணமும் 03 வருட சிறைத் தண்டனையும் வழங்க முடியுமென்ற சட்ட முறையான ஏற்பாடு இந்த நிலைமையை தவிர்ப்பதற்கு எதிர்காலத்தில் உதவியாக அமையும் எவ்வாறெனினும் அவ்வாறான சிறந்த ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு அந்தச் சட்டங்களை அவ்வாறே அமுல்படுத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு எடுக்கும் முயற்சியில் தங்கியுள்ளது. நாட்டில் சனநாயத்தை பேணுவ தற்காக சட்ட ரீதியாக அழுத்தம் கொடுக்காமல் அரசாங்க ஊழியர்களின் பங்களிப்பினை பெற்றுக் கொள்வதை ஆணைக்குழு நிதமும் மெச்சுகின்றது.

**பெயர் குறித்த நியமனங்கள்.**

138. பாராளுமன்றத் தேர்தலுக்காக பெயர் குறித்த நியமனங்களை ஏற்பது பாராளுமன்றம் கலைக்கப் படும் பிரகடனம் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட பின்னர் வரக்கூடிய 10 ஆவது நாளில் ஆரம்பித்து அந்தப் பிரகடனம் வெளியிடப் பட்ட தினத்தின் பின்னர் வரக்கூடிய 17 ஆவது நாள் நண்பகல் 12.00 மணியுடன் நிறைவடையும். அதற்கமைய பெயர் குறித்த நியமனங்களை பொறுப்பேற்பதற்காக 7 ½ நாள் காலம் உள்ளது. ஆயினும் சனி மற்றும் ஞாயிறு தினங்கள் வருவத னால் இக்காலம் 5 ½ நாளுக்கு வரையறுக்கப்பட முடியும். கடந்த வாக்கெடுப்பு தொடர்பில் கவனம் செலுத்துகின்ற போது பெயர் குறித்த நியமனங்களை ஏற்பதற்காக இவ்வாறு ஒரு வார காலம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதிகமான கட்சிகள் / குழுக்கள் தமது பெயர் குறித்த நியமனங்களை இறுதி இரண்டு மூன்று நாட்களில் கையளிப்பதை அவதானிக்க முடியும். எனவே பெயர் குறித்த நியமனங்கள் தொடர்பிலான பின் நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொள்வ தற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு பிரச்சினைகள் எழுகின்றன. இந்தப் பாராளுமன்றத் தேர்தலினை

எடுத்து நோக்கும் போது பெயர் குறித்த நியமனங்கள் காலப் பிரிவிற்குள் அனைத்து கட்சிகள்/ குழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர் குறித்த நியமனங்களைப் பத்திரங்களின் எண்ணிக்கை 537 ஆகும். அவற்றில் அதிகமானவை இறுதி 2 ½ நாட்களிற்குள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. பெயர் குறித்த நியமனங்களை பொறுப்பேற்கும் காலப் பிரிவு தீர்மானிக்கப்பட்ட பின்னர் தெரிவத்தாட்சி அலுவலர் மற்றும் மாவட்ட மட்ட பிரதான உதவித் தெரிவத்தாட்சி அலுவலராக தேர்தல் நடவடிக்கை களை ஏற்பாடு செய்யும் பிரதி / உதவி தேர்தல் ஆணையாளர் அந்த இடத்தில் கட்டாயமாக அலுவலக நேரத்தினுள் தங்கியிருக்க வேண்டுமென தேர்தல் ஆணையாளரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத் தேர்தலில் அனைத்து நடவடிக்கைகளுக்காகவும் 07 கிழமைகள் கொண்ட காலம் ஒதுக்கப்பட்டிருப்பதனால் அதில் ஒரு வாரத்தை இதற்காக வேண்டி அர்ப்பணிப்ப தென்பது உண்மையில் தேர்தல் நடவடிக்கை ஏற்பாடுகளுக்கு தடையாகும். விசேடமாக வாக்கெடுப்பு முறையினுள் காணப்படும். விருப்பு வாக்கு முறை மற்றும் ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்தினால் செய்யப்படும் அழுத்தங்களை கருத்திற் கொண்டு உண்மையிலே போட்டியிடும் சில கட்சிகள் சிறிய கட்சிகளில் அல்லது சுயேட்சைக் குழுக்களின் உதவியினைப் பெற்றுக் கொண்டு வாக்களிப்பு நிலைய முகவர்கள், வாக்கெண்ணும் முகவர்கள் அதிகமானோரை நியமிப்பதனால் அந்த கட்சி / குழுக்கள் போட்டியிலீடுபடுகின்றன. இதனால் தேர்தலுக்காக செலவழிக்கப்படும் செலவுகள் அதாவது பொது நிதி அதிகளவில் தேவையற்ற விதத்தில் செலவு செய்வதற்கு தேர்தல்கள் திணைக்களத்திற்கு ஏற்படுகின்றது.

139. 1981 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் 16 ஆம் பிரிவிற்கமைய அங்கீகரிக்கப் பட்ட அரசியற் கட்சிகளுக்காக வைப்புப் பணம் செலுத்துவது கட்ட வேண்டியதன் தேவைப்பாடு கிடையாது. சுயேச்சைக் குழுக்களுக்காக ஒரு வேட்பாளருக்காக 2000 ரூபா வீதம் வைப்புப் பணம் செலுத்துதல் வேண்டும். இந்த தொகை 1981 ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமை யினை ஓரளவுக்கேனும் தணித்துக் கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுவதாயின் அந்த அனைத்து போட்டியிடும் கட்சியின் / சுயேச்சைக் குழுவின் வேட்பாளர்கள் வைப்புப் பணம் செலுத்த வேண்டுமெனவும் அவ்வாறு செலுத்தப்படும் வைப்புப் பணம் தற்போது அறவிடப்படும் அளவினை விட குறிப்பிட்டளவு வீதத்தில் அதிகரிப்பதற்கும் நடவடிக்கையெடுக்க வேண்டும். அத்தோடு பெயர் குறித்த நியமனங்களை பொறுப்பேற்கும் காலப் பிரிவினை 03 நாட்களுக்கு வரையறுத்து பெயர் குறித்த நியமனங்கள் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்காகவும் அறிவிப்பதற்காகவும் தனியாக வொருநாள் அல்லது அறை நாள் அல்லது ஒதுக்குவது பொறுத்தமாகும். அவ்வாறில்லாத போது பெயர் குறித்த நியமனங்கள் இறுதித் திகதி நண்பகல் 12.00 மணி வரை கூடுதலான பெயர் குறித்த நியமனங்களை பொறுப்பேற்று அன்றைய தினம் நண்பகல் 12.00 முதல் மேலும் 1 ½ மணித்தியால காலத்தினை எதிர்ப்பு தெரிவிப்ப தற்காக சந்தர்ப்பத்தினை வழங்கி எதிர்ப்புக்களை பரீட்சித்து தேவைக்கேற்ப தேர்தல்கள் ஆணை யாளரின் அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொண்டு அதற்கான தீர்வுகளை வழங்கி அது வரையில் கிடைக்கப்பெற்ற பெயர் குறித்த நியமனங்களை பரீட்சித்தது அந்த சந்தர்ப்பத்திலேயே பெயர் குறித்த நியமனங்கள் தொடர்பில் தீரமானம் வழங்கும் போது தெரிவத்தாட்சி அலுவலர் மிகவும் சிரமத்திற்கு உள்ளாவதனை தவிர்க்க முடியாது. இந்த வேலைப்பழுவிற்குள் சிற்சில தவறுகள் இடம்பெறுவதனை தட்டிக்கழிக்க முடியாது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆகக் குறைந்தது சட்டத்தின் உதவியினை நாடுவதற்கு நியாயம் கிடைக்காத தரப்பினருக்கு முடியுமென்பதனால் மிகவும் வேலைப்பழுமிக்க சூழலில் கடமை-களையாற்றும் அரசாங்க அலுவலர்கள் தொடர்பில் பிழையான புரிதல் சமூகமயப்படுத்தப்படுவதனையும் தவிர்க்க முடியாது. இவ்வாறான குற்றச்சாட்டு சுதந்திரமானதும் நீதியானதுமான வாக்கெடுப்பினை நடாத்துவதற்கு பொறுப்பாகவுள்ள தேர்தல் திணைக்களத்தின் மீது சுமத்தப்படுவது எந்த வகையிலும் பொறுத்தமற்றது.

### அஞ்சல் வாக்கு

140. வாக்கெடுப்புத் தினத்தன்று தனக்கென ஒதுக்கப்பட்ட வாக்களிப்பு நிலையத்திற்கு தனிப்பட்ட ரீதியில் சென்று வாக்களிக்க முடியாத ஏதேனும் சேவையில் ஈடுபட்டுள்ள அல்லது தேர்தல் கடமையில் ஈடுபட வேண்டியுள்ள அரசாங்க ஊழியர்களுக்கு அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு வசதி செய்து கொடுக்கப் பட்டுள்ளது. பாராளுமன்றத் தேர்தல் சட்டத்திற் கமைய தேர்தல் பிரகடனப்படுத்திய தினத்திலிருந்து ஒரு வாரத்திற்குப் பின்னர் மற்றும் இரண்டு வாரங்களுக்கு முன்னரான காலப்பகுதிக்குள் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பத்தை தெரிவத்தாட்சி அலுவலரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். ஆயினும் இந்த நியமம் சட்டத்திலே குறிப்பிடப் பட்டுள்ள வேட்பாளர் ஒருவருக்கும் அஞ்சல் மூலம் வாக்களிக்க முடியும் என்ற வாசகத்தோடு முரண்பாட்டினை தோற்றுவிக்கின்றது. அதற்குரிய காரணம் அவர் வேட்பாளரா? வேட்பாளர் இல்லையா என்பது தீர்மானிக்ககப்படுவது பெயர் குறித்த நியமனங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தில் பெயர் குறித்த நியமனங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதா? இல்லையா என்பதன் மீது தங்கியுள்ளது. அவ்வாறு பெயர் குறித்த நியமனப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் மாத்திரம் அவர் வேட்பாளர் ஆவதுடன், அப்போது அவருக்கு தேவையேற்படின் அஞ்சல் மூலம் வாக்களிக்க விண்ணப்பிக்க முடியும். எனினும் சட்டத்தின் நியமத் திற்கமைய அப்போது அஞ்சல் மூலம் வாக்களிக்க விண்ணப்பிக்கும் காலம் முடிவடைந்துள்ளது.

அதற்கிணங்க சட்டத்தில் குறிப்பிடப்படாத போதிலும் தற்போது பின்பற்றப்படுவதனைப் போன்று அஞ்சல் மூல வாக்களிப்பு காலப் பகுதியினை பெயர் குறித்த நியமனங்கள் இறுதித் தினம் வரையென திருத்துவது மிகவும் பொருத்தமானது.

141. அஞ்சல் மூல வாக்களிப்புச் செயன்முறையின் போது அஞ்சல் மூல விண்ணப்பங்களைப் பொறுப்பேற்றல், பரீட்சித்தல், அஞ்சல் மூல பெயர் பட்டியலினை தயாரித்தல், அஞ்சல் மூல வாக்குச் சீட்டுக்களை விநியோகித்தல் அஞ்சல் மூல வாக்களிப்பு மற்றும் ஏற்புடைய பக்கற்றுக்களை பொறுப்பேற்றல் மற்றும் எண்ணுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் மிகவும் குறுகிய காலத்தினுள் நிறைவு செய்ய வேண்டியுள்ளது. விசேடமாக கருத்திட் கொள்ளும் போது தேர்தல் ஏற்பாட்டுச் செயன்முறையின் கூடிய காலப்பகுதி அஞ்சல் மூல வாக்களிப்பிற்காக செலவு செய்யப் படுவதனால் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு ஏனைய ஏற்பாட்டு நடவடிக்கைகளுக்கு அது தடையாகவுள்ளது.

142. கடந்த வாக்கெடுப்பு தொடர்பில் கவனம் செலுத்தும் போது அஞ்சல் மூலம் வாக்களிக்க தகுதி பெறாத ஆயினும் அத்தியாவசிய தேவைகளை மேற்கொண்டு வரும் வைத்தியசாலை ஆளணி, துறைமுகம், விமான நிலையம், அதிவேகப் பாதை ஆகியவற்றில் பணியாற்றும் அதிகமானோருக்கு இதன் காரணமாக வாக்களிப்பதற்குள்ள சந்தர்ப்பம் இல்லாமலாக்கப் பட்டுள்ளது. தேர்தல் சந்தர்ப்பமொன்றில் இவ்வாறு அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு இயலாது போன்ற பல தரப்பினரின் வேண்டுகோளுக்கு செவிசாய்ப் பதற்கு தேர்தல் ஆணையாளருக்கும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் நேர்ந்துள்ளது. இதற்கான அனுமதியினை வழங்குவதற்கு தேர்தல் ஆணையாளருக்கு அல்லது தெரிவத்தாட்சி அலுவலருக்கு முடியாதெனவும் அதற்காக பாராளு மன்றத்தின் ஊடாக சட்டத் திருத்தங்கள் செயற்பட வேண்டுமெனவும் அவர்களுக்கு விளக்கமளிப்பதற்கு காலத்தினை செலவிட வேண்டியுள்ளது. இந்த நிலைமையினை கருத்திற் கொண்ட தேர்தல்கள் ஆணையாளர் சட்ட திருத்தங்களை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள்விடுத்ததோடு, இது தொடர்பில் அனைத்து அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் உள்ளிட்ட அரசியல் யாப்பு வரைபவர்களை அறிவூட்டுவதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

143. இந்த வகையில் தற்போது நடைமுறையில் உள்ள அஞ்சல் வாக்கு செயன்முறையில் உள்ள சிக்கல் நிலைமை காரணமாக அதற்காகச் செலவிடப்படும் காலம், செலவு மற்றும் அஞ்சல் மூலம் வாக்களிப்பு செயன்முறையினுள் உள்ளடக்க முடியுமான அத்தியாவசிய சேவையினை மேற்கொள்ளும் ஊழியர்களை புறக்கணித்தல் எனும் விடயத்தினைக் கருத்திற் கொண்டு இதற்கான பொருத்தமான தீர்வுகளை கட்டாயம் காணவேண்டியுள்ளது. இதற்காக வாக்கெடுப்புத் தினத்திற்கு முன்னர் குறிப்பிட்ட இடங்களை அடையாளம் கண்டு முன்கூட்டியே வாக்களிப்பதற்கு (advance Voting) சந்தர்ப்பத்தினை வழங்குவதும் மிகவும் அறிவுபூர்வமானது அதன் மூலம் அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை விநியோகித்தல், குறியீட்டு பக்கற்றில் இட்டு மீண்டும் தெரிவத்தாட்சி அலுவலரிடம் அனுப்புதல் போன்ற செயற்பாடுகளை நீக்க முடியும். அரசியல் கட்சிகளுக்கு வாக்களிப்பு தினத்தில் வாக்களிப்பு நிலைய முகவர்களை நியமிக்கும் முறைக்கு இலகுவாக அஞ்சல் மூல வாக்களிப்பு நிலையங்களை கண்காணிப்பதற்கு முகவர்களை நியமிக்கவும் இலகுவாக அமையும். தற்போது அத்தாட்சிப்படுத்தும் அலுவலகங்களுக்கு முகவர்கள் நியமிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ள போதிலும் அதன் செயன்முறை மிகவும் சிக்கலானது என்ற காரணத்தினால் அது நிறைவேற்றப்படாத சந்தர்ப்பங்கள் அதிகம். அவ்வாறே அஞ்சல் வாக்களிப்பதற்காக விண்ணப்பிக்கும் அதிகமானவர்கள் அந்த மாவட்டத்திலேயே தேர்தல் கடமைகளுக்காக தெரிவு செய்யப்படுவதனால் வாக்களிப்புத் தினத்தன்று வாக்களிப்பு நிலையத்தில் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு முன்னால் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கவும் முடியும். அதற்காக சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் தெரிவத்தாட்சி அலுவலரினால் வழங்கப்பட்டுள்ள நியமனக் கடிதத்தினை சமர்ப்பித்து தனது அடையாளத்தினை உறுதிப்படுத்த முடியுமென சட்டம் இயற்றுதல் போதுமானது.

**அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களை ஊக்குவிப்ப தற்காக அரசாங்க சொத்துக்களைப் பயன்படுத்துதல்.**

144. அரசியல் அமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் மூலம் திருத்தப்பட்ட அரசியல் அமைப்பின் 104 ஆ உறுப்புரையை திருத்தி அறிமுகப்படுத்தப்பட்ட 104 ஆ (4) (அ) உறுப்புரைக்கமைய அரசாங்கத்திற்கு அல்லது அரசாங்க கூட்டுத்தாபனத்திற்குரிய அசையும் அல்லது அசையா சொத்தொன்றை தேர்தலில் போட்டியிடும் ஏதேனும் அரசியல் கட்சியொன்றின் அல்லது வேட்பாளர் ஒருவரை ஊக்குவிப்பதற்காக அல்லது தடுப்பதற்காக பயன்படுத்துதல், தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கமைய ஆணைக் குழுவின் தவிசாளர் அல்லது தேர்தல்கள் ஆணை யாளர் நாயகத்தின் எழுத்து மூல கட்டளையின் மூலம் தடை செய்யும் அடையாளம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணைக்குழு நிறுவப்படும் வரையில் அந்த அதிகாரங்களை அமுல்படுத்துவதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும் நிலவும் அரசியல் சூழல் மற்றும் அரசாங்க அலுவலர்கள் செயற்படும் விதம் அந்தப் பணியை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவது கடினமாகவுள்ளது. வாக்கெடுப்பு ஆரம்பத்திலேயே தேர்தல்கள் ஆணையாளரினால் அரசாங்க சொத்துக்களின் துஷ்பிரயோகத்தினைத் தடுப்ப தற்கான அறிவுறுத்தல்கள் வர்த்தமானி அறிவித்தல் மூலமும் ஊடகங்கள் மூலமும் வெளியிடுவதற்கு மேலதிகமாக போட்டியிடும் அனைத்து அரசியற் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு அவற்றை நடைமுறைப்

படுத்துவதற்கு கட்டுப்பட்டுள்ள உயர் அரசாங்க அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தல் வழங்கி அறிவுறுத் தப்பட்டுள்ள போதிலும் இது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படவில்லையென்பது அவதானிக்கப் பட்டுள்ளது.

145. வாக்கெடுப்பு காலப் பிரிவிற்குள் இந்த அறிவுறுத் தல்களை மீறி நடவடிக்கையெடுப்பதாக பல்வேறு பட்ட அமைப்புக்களிடமிருந்து, வேட்பாளர்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து முறைப்பாட்டு நிலையத்திற்கு அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதோடு, அது தொடர்பில் விசாரணை செய்து முடியுமானளவு அவற்றை நிறுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் அரசாங்க வாகனங்கள், கட்டிடங்கள், தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்துவ தாகவும் அரசாங்க சேவைக்கு ஆட்சேர்த்தல் மற்றும் அரசாங்க வைபவங்களை ஏற்பாடு செய்தல் மூலம் வேட்பாளரினை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை யெடுப்பதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. இந்த நிலைமைக்கு அரசியல் முகாமைத்துவத்தின் தன்மையும் தாக்கம் செலுத்தியுள்ளது. 1978 ஆம் ஆண்டின் யாப்புக்கு முன்னர் பாராளுமன்றம் மாத்திரம் முக்கியமான அதிகார சபையாக காணப்பட்டது. பாராளுமன்றம் களைக்கப்பட்ட பின்னர் அரசியல் அமைப்புக்கள் வாக்காளருக்கு முன்னாள் தமது சக்தியை உரசிப் பார்க்க வேண்டியிருந்தது. எனவே அரசாங்க சேவைக்கு மற்றும் பாதுகாப்பு சேவைக்கு தமது நடவடிக்கை களை சுயாதீனமாக வழிநடாத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. 1978 ஆம் ஆண்டின் பின்னர் நிலைமை மாறி தற்போது அரசியல் அதிகாரம் கொண்டுள்ள அரசியல் கட்டமைப்பு பிரதான நான்கு கட்டங்களின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அதாவது நிறைவேற்று சனாதிபதி, பாராளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் ஆகும். இவற்றில் ஒரு நிறுவனம் வாக்கெடுப்பில் தேர்தலுக்கு முகம் கொடுக்கும் போது ஏனைய நிறுவனங்கள் அனைத்தும் அரசாங்க அதிகாரத் துடன் அன்றாட நடவடிக்கையில் ஈடுபடுகின்றன. எனவே அரசாங்க அதிகாரத்துடன் உள்ள போட்டியிடும் கட்சி, வேட்பாளர்கள் எந்தக் குற்றத்தினைச் செய்தாலும் பாதுகாப்பு வழங்கப்படும் என்ற நம்பிக்கையில் நடவடிக்கையெடுப்பதும் சட்டத்தினை அமுல்படுத்தும் பிரிவுகளில் காணப்படும் அரசியல் தலையீடுகள் மற்றும் நல்லிணக்கத்துடன் இருப்பதற்கு தூண்டுவதன் மூலமும் இந்த நிலைமை மேலும் தீவிரம் அடைந்துள்ளது. எனவே ஆகக் குறைந்தது பிரதான இரு தேர்தல்களான சனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் ஆகியவற்றினை ஒரே தினத்தில் நடாத்த முடியுமான வரையில் சட்ட திருத்தங்களை கொண்டு வருவதன் மூலம் ஓரளவுக்கு ஏனும் நம்பிக்கையினை கட்டியெழுப்ப முடியும். 19 ஆவது திருத்தத்தின் மூலம் இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல் களை மதிக்காது செயற்படும் அரசாங்க சேவையில் அல்லது அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு தண்டனை வழங்குவதற்கு விதிக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்களும் இந்த அறிவுறுத்தல்களை மீறும் கட்சி / குழுக்களின் வேட்பாளர்களுக்கு அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்யும் அரசாங்க அதிகார பீடங்களுக்கு எதிராகவும் செயற்படும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு வழங்கப்படுமாயின் இதன் மூலம் மிகவும் சிறந்த பெறுபேறுகளை எதிர்பார்க்க முடியும்.

**ஊடக நெறிமுறைகள்.**

146. வாக்கெடுப்பொன்றின் போது போட்டியிடும் வேட்பாளர்கள் நாட்டின் வளர்ச்சிக்காக நடைமுறைப் படுத்த எதிர்பார்க்கும் திட்டங்களை பொது மக்களிடம் கொண்டு செல்வதற்கு (வாக்காளர் களுக்கு) அடிப்படையில் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் வாயிலாக ஊடக நிறுவனங்கள் அரசாங்கத்தின் அல்லது தனியார் துறைக்கு சொந்தமாகவிருக்கினும் அவற்றின் கடமை பொறுப்பு யாதெனில் உண்மையான செய்திகளை அவ்வாறே வாக்காளரிடம் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை யெடுப்பதாகும். அவ்வாறின்றி அரசாங்க ஊடக நிறுவனங்கள் ஆட்சியில் உள்ள அரசாங்கத்தின் குணநலன்களை வர்ணிப்பதும், தனியார் ஊடகங்கள் தனது உரிமையாளர்கள் கொண்டுள்ள அரசியலை அடிப்படையாகக் கொண்டு ஊடகங்கள் வாயிலாக பிரச்சாரம் செய்ய முற்பட்டால் பொது மக்கள் (வாக்காளர்கள்) நிர்க்கதியற்றவர்களாவர். இந்த நிலைமை தொடர்பில் நன்றாக புரிந்து கொண்ட தேர்தல்கள் ஆணையாளரினால் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப் பட்ட ஊடக நெறிமுறைகளை வெளியிடுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. ஊடக நெறிமுறைகளை வெளியிடுவதற்கு முன்னர் அனைத்து ஊடக நிறுவனங்களினதும் கருத்துக்களைப் பெறுவதன் முயற்சியின் பெறுபேறாக பொதுத் தேர்தலில் ஓரளவிற்கு சாதகமான நிலைமையினை கண்டு கொள்ள முடிந்தது. தேர்தல் ஆணைக்குழுவிற்கு அரசாங்க அல்லது தனியார் ஊடகம் என்ற பாகுபாடின்றி ஊடக நெறிமுறைகளை மீறும் சந்தர்ப்பங்களில் செயற்படுத்த தேவையான அதிகாரங்களை வழங்குவது கட்டாயமாகும். ஆரசிய லமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் மூலம் அரசாங்க ஊடகங்கங்கள் தொடர்பில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள போதிலும் தனியார் ஊடகங்கள் மீது உள்ள அதிகாரங்களை செயற்படுத்த முடியாது. பொதுவாக கடந்த வாக்கெடுப்புக்கள் தொடர்பில் கவனம் செலுத்தும் போது அரச ஊடக நிறுவனங்கள் அரசாங்கத்திற்கு பக்கச்சார்பாக நடந்துகொள்கின்றன என்ற நம்பிக்கையில் வாக்காளர்கள் தனியார் ஊடகங்கள் மீது கூடிய கவனம் செலுத்தினர்.இவ்வாறான சந்தர்ப்பங்களில் தனியார் ஊடகங்களும் அரசியல் கட்சியொன்றை அல்லது வேட்பாளர் ஒருவரை ஊக்குவிப்பதற்காக முன்வந்திருக்குமெனில் வாக்காளருக்கு தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பில் தீர்மானம் எடுப்பது மிகவும் கடினமாகும். எனவே அரசாங்க ஊடக நிறுவனங்களைப் போன்று தனியார் ஊடக

நிறுவனங்கள் தொடர்பிலும் தேர்தல் காலப் பிரிவிற்குள் ஊடக நெறிமுறைகளுக்கமைய நடவடிக்கையெடுக்க வேண்டுமென கட்டளை விடுப்பதற்கும் அவற்றை மீறுகின்ற போது ஏற்புடைய அலைவரிசைகளை மூடிவிடுவதற்கு அல்லது தேர்தல் காலப்பிரிவு முழுவதும் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை தடுக்கும் கட்டளை யொன்றை வழங்குவதற்கும் தேர்தல் ஆணைக்குழு விற்கு அதிகாரம் வழங்குவது கட்டாயமாகும்.

**அவசர மற்றும் அத்தியாவசிய சேவைகளின் அஞ்சல் மூல வாக்களிப்பு வசதி இல்லாமல் ஆக்கப்பட்ட ஊழியர்களின் மற்றும் தனியார் துறை ஊழியர்களின் வாக்குரிமையினை பாதுகாத்தல்.**

147. பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 122 ஆம் பிரிவிற்கமைய தனிப்பட்ட ரீதியில் வாக்களிக்க முடியுமான வகையில் தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்குவதற்கு தொழில்தருநர்களின் கடமையென குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறான கோரிக்கை விடுக்கப்படும் போது தொழில் தருநர்களினால் போதுமெனக் கருதும் 04 மணித்தியாலங்களுக்கு குறையாத காலத்தினை சம்பளத்துடனான லீவாக வழங்க முடியும். வாக்கெடுப்பின் போது கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் குறித்து கவனம் செலுத்து கின்ற போது வாக்களிப்பதற்காக செல்வதற்கு போதுமான காலம் தொழில்தருநர்களினால் வழங்கப் படுவதில்லையெனவும் சில சந்தர்ப்பங்களில் சம்பளத்திலிருந்து அந்த நாளுக்கான தொகை குறைக்கப்படுவதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அந்த நிலைமையினை கருத்திற் கொண்டு பாராளுமன்றத் தேர்தலின் போது மனித உரிமை ஆணைக்குழுவுடன் இணைந்து ஊழியர் களுக்கு சேவை நிலையத்திலிருந்து தனக்குரிய வாக்களிப்பு நிலையத்திற்கான தூரத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆகக் குறைவாக வழங்க வேண்டிய லீவு நாட்களின் எண்ணிக்கை தொடர்பில் இணக்கப்பாட்டிற்கு வந்து அதனை தொழில் அமைச்சின் ஊடாக சமர்ப்பித்து அதன் மூலம் உரிமையாளர்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. அந்த தகவல்கள் ஊடகங்கள் வாயிலாகவும் வெளியிடப்பட்டன. தொழில் தருநர்கள் தமது நிறுவனத்தின் நடவடிக்கைகளை மாத்திரம் உரிய முறையில் நடாத்திச் செல்வதற்கு எண்ணுவதோடு, ஊழியர்கள் வாக்களித்த அல்லது வாக்களிக்காதுவிருத்தல் தொடர்பில் கவனம் செலுத்தாதுவிருக்கின்றனர். ஆயினும் கையுதிர முடியாத மக்கள் இறைமையின் கீழ் கருதப்படும் வாக்குரிமையினை நடைமுறைப் படுத்துவதற்கு ஏதோ ஒரு வகையில் தடையாக விருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே ஊழியர்களுக்கு வாக்களிப்பதற்காக தனது வாக்களிப்பு நிலையத்திற்கு செல்வதற்கு போதுமான காலப்பகுதியை சட்டத்தினாலேயே வழங்குவதற்கு தேவையான சட்ட திருத்தங்களை கொண்டு வருவதற்கும் அவற்றை புறக்கணிக்கும் தொழில் தருநர்களுக்கு தண்டனை வழங்கும் நடவடிக்கையும் எடுப்பது கட்டாயமாகும்.

**தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள்.**

148. பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 67 ஆம் பிரிவின் மூலம் 74 ஆம் பிரிவு வரை குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளினால் வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்காக பிரச்சாரக் கூட்டங்களை நடாத்துதல்,பேரணிகளை நடாத்துதல், பிரச்சாரப் பத்திரங்களை அச்சிடுதல் மற்றும் விநியோகித்தல், விளம்பரங்களை காட்சிப் படுத்துதல், மற்றும் தேர்தல் அலுவலகங்களை பேணிவருதல் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. பெயர் குறித்த நியமனங்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டதன் பின்னர் அனைத்து அரசியல் கட்சிகள்/ சுயேச்சைக் குழுக்களின் போட்டியிடும் வேட்பாளர்கள் இது தொடர்பில் அறிவூட்டுவதற்கு நடவடிக்கை யெடுக்கப்பட்டது. அத்தோடு பொலிஸ் மா அதிபர் ஊடாக அனைத்து உயர் பொலிஸ் அதிகாரிகள், பொலிஸ் நிலையப் பொறுப்பு அதிகாரிகளையும் அறிவூட்டுவதற்கும் அதற்கான சட்டங்களை கடுமையாக அமுல்படுத்துவதற்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. ஆயினும் நடைமுறை சூழலில் அரசியல் கட்சிகள் / குழுக்கள் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் பகிரங்கமாக இந்த சட்டங்களை மீறி அறிவித்தல்கள், பதாகைகள், கட்அவுட்களை காட்சிப்படுத்துவது காணக்கிடைத்தது. இந்த நிலைமையின் கீழ் மாவட்ட மட்டத்தில் மற்றும் பிரதேச மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள முறைப் பாட்டு நிலையங்களுக்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு முறைப்பாட்டு நிலையங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள அரசாங்க அலுவலர்கள் மற்றும் பொலிஸ் அலுவலர்களின் உதவியுடன் முடியுமானளவு சட்ட விரோதமான பிரச்சார அறிவித்தல்கள், பதாகைகள் கட்அவுட்களை நீக்கப்பட்டதோடு, தேர்தல் செயலகம் நேரடியாக தொடர்பு கொண்டு விசேட குழுக்களை ஈடுபடுத்தி இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

149. எவ்வாறெனினும் அமுலிலுள்ள தேர்தல் முறை மற்றும் சட்ட விதிகள் குறித்து கவனம் செலுத்துகின்ற போது விருப்பு வாக்கு முறையினுள் வாக்காளர் தனது விருப்பு இலக்கம் தொடர்பில் உரிய முறையில் அறிவூட்டுவது வெற்றிக்கான தேவைப்பாடாகும். அமுலிலுள்ள சட்ட நிலைமைக்குள் வேட்பாளருக்கு அல்லது அவரது குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு வாக்காளர் ஒருவரின் வீட்டுக்கு செல்வதற்கு முடியாத நிலைமையில் வேட்பாளர் தமது வாக்காளரை எவ்வாறு அறிவூட்ட முடியும் என்ற பிரச்சினை தோற்றம் பெறுகின்றது. எனவே சட்டம் தொடர்பில் கவனம் செலுத்தாது தனது வெற்றிகுறித்து மாத்திரம் நினைத்து நடவடிக்கையெடுக்கப்படுகின்றது. சட்ட நிலைமை எவ்வாறிருப்பினும் பாரியளவில் பணத்தை செலவு செய்ய முடியுமான வேட்பாளர்கள் எவ்வாறான தடைகளுக்கு மத்தியிலும் தமது பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வது காண முடியும். அதன் மூலம் ஏனைய வேட்பாளர்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படலாம். பணத்தை அதிகமாக

செலவு செய்ய முடியுமான வேட்பாளர் சட்டம் தொடர்பில் கருத்திற்கொள்ளாது தனது ஆதரவாளர்கள் மூலம் காட்சிப்படுத்தும் பிரச்சார விளம்பரங்கள் சட்டத்தை அமுல்படுத்தும் உத்தியோகத்தரினால் நீக்கப்பட்ட போதிலும் அதற்கு மறுநாள் அதனை விட கூடுதலாக அவற்றை காட்சிப்படுத்தும் ஆற்றல் அவருக்குள்ளது. இவ்வாறான பின்னணியில் அனைத்து வேட்பாளர்களும் தனது தேர்தல் நடவடிக்கைகளை நியாயமாக நடைமுறைப்படுத்துகின்றனரா? என்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

150. மேற்குறிப்பிட்ட நிலைமையின் கீழ் தேர்தல் சட்டத்தினால் பணிக்கப்பட்டுள்ள போதிலும் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஓரளவிற்கேணும் தான் தொடர்பில் பிரச்சாரத்தினை வழங்கும் சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொள்ளும் பொருட்டு போட்டியிடும் அரசியற் கட்சி / சுயேச்சைக் குழுக் களின் தலைவர்களுடன் கலந்துரையாடி பொது இணக்கப்பாட்டிற்கு வந்து அனைத்து வேட்பாளர் களுக்கும் நியாயமான பின்னணியொன்றை ஏற்படுத்திக்கொடுப்பது பொறுத்தமானது இத்தோடு பிரச்சார விளம்பரங்களை காட்சிப்படுத்துவதற்காக குறிப்பிட்ட இடங்கள் தேர்தல்கள் ஆணையாள ரினால் மற்றும் தெரிவத்தாட்சி அலுவலரினால் தீர்மானிக்கப்பட்டு அவை அந்தந்த கட்சி / குழுக் களின் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு நியாயமான முறையில் ஒதுக்கிக்கொடுக்கும் வேலைத்திட்ட மொன்றைத் தயாரிப்பதும் அதிகமான பண பலமுள்ள போட்டியிடும் வேட்பாளருக்கு கூடுதலான அனுகூலத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப் பத்தினை நீக்கி அனைத்து வேட்பாளர்களுக்கும் நியாயமாக தனது தேர்தல் பிரச்சார நடவடிக்கை களை முன்னெடுக்க சந்தர்ப்பம் வழங்கி பிரச்சார நடவடிக்கைகளுக்காக உச்ச செலவு எல்லை யொன்றை வேட்பாளர்களுக்கு விதிப்பதற்கும் அது அவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றதா? என்பதை மேற்பார்வை செய்ய பொறிமுறையொன்றை ஏற்படுத் துவதும் இந்த தேர்தல் முறையில் முக்கியமாகும்.

**தேர்தல் சட்டங்களை அமுல்படுத்தல்.**

151. பாராளுமன்றத் தேர்தலினை நடாத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அமைப்பிலும் 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் சட்டத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 128 ஆம் பிரிவிற்கமைய ஆணை யாளரின் அதிகாரங்கள் விளக்கப்பட்டுள்ளதோடு, அதற்கிணங்க தேர்தலினை நடாத்துதல், நிருவாகம் மற்றும் பொதுவாகத் தேர்தலினை வழிநடாத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் வேண்டும். பாராளு மன்றத் தேர்தல் சட்டத்தின் நோக்கங்களுக்காக குற்றங்கள், ஊழல் மற்றும் சட்ட விரோத செயற்பாடுகள் சட்டத்தின் VI ஆம் பிரிவின் கீழ் விளக்கப்பட்டுள்ளதோடு 66 ஆம் பிரிவு முதல் 76 ஆம் பிரிவு வரையிலான "குற்றங்கள்" தொடர்பிலும் 77 ஆம் பிரிவு தொடக்கம் 82 ஆம் பிரிவு வரை "ஊழல்" தொடர்பிலும் 83 ஆம் பிரிவு முதல் 88 ஆம் பிரிவு வரை "சட்ட விரோதமான செயற்பாடுகள்" தொடர்பிலும் விளக்கப்பட்டுள்ளது.

152. அரசியலமைப்பின் 103 (2) உறுப்புரைக்கமைய நீதியானதும் நியாயமானதுமான தேர்தல் மற்றும் மக்கள் தீர்ப்பு நடாத்துதல் ஆணைக்குழுவின் நோக்கமாக இருக்க வேண்டுமென்றும் அரசிய லமைப்பின் 104 (ஆ) (1) உப உறுப்புரையின் அமைய சனாதிபதி அவர்களை தெரிவு செய்தல், பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்தல், மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்தல், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்தல் மற்றும் மக்கள் தீர்ப்பினை நடாத்துவது தொடர்பில் அமுலிலுள்ள சட்டத்தின் மூலம் தேர்தல்கள் ஆணைக்குழு அல்லது தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள அல்லது விதிக்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங் களும் மற்றும் செயற்பாடுகளும் ஆணைக்குழு வினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தோடு அரசியலமைப்பின் 104 (1) உபஉறுப்புரைக்கமைய தேர்தல் ஒன்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போது ஆணைக்குழு விற்கு தேவையான வசதிகள் மற்றும் பொலிஸ் அலுவலர் எண்ணிக்கையினை தேர்தல் ஆணைக் குழுவின் அறிவுறுத்தலுக்கமைய பொலிஸ் மா அதிபரினால் வழங்க வேண்டுமென்றும் தேர்தல் ஒன்றின் போது ஏதேனும் பாதிப்பான செயல்கள் அல்லது சம்பவங்களை தடுத்தல் மற்றும் கட்டுப் படுத்தும் பொருட்டு ஆயுதம் தாங்கு படைகளை ஈடுபடுத்துவது தொடர்பிலான கோரிக்கையை சனாதிபதியிடம் முன்வைப்பதற்கும் தேர்தல் ஆணைக்குழுவிற்கு முடியும். மேலும் தேர்தல் ஆணைக்குழுவினை நிறுவும் வகையில் இந்த அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அப்போது சேவையிலுள்ள தேர்தல்கள் ஆணையாளருக்கு முடியுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க தேர்தல் சட்டங்களை அமுல்படுத்துவதற்காக தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்கும் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களினதும் பணி மற்றும் பொறுப்பு என்பது அரசியல் அமைப்பின் 104 (2)ஆ மற்றும் 104 இ (4) உறுப்புரையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

153. மேற்குறிப்பிட்டவாறு தேர்தல் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ள சட்ட அதிகாரங்கள் அரசாங்க அலுவலர்கள் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் நடைமுறைப்படுத்துவதன் மூலம் நீதியானதும் நியாயமானதுமான வாக்கெடுப்பொன்றை நடாத்துவது தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பாகும். தேர்தல் சந்தர்ப்பமொன்றில் தேர்தலை சட்ட பூர்வமாக நடாத்திச் செல்வதற்காக தேர்தல்கள் ஆணையாள ருக்கு மற்றும் தெரிவத்தாட்சி அலுவலருக்கு உதவும் பிரதான நிறுவனம் பொலிஸ் என்பதனால் பொலிஸ் மா அதிபர் தொடக்கம் கீழ் நிலை அலுவலர் வரை அனைத்து உத்தியோகத்தரினதும்

உதவி சட்டத்தினை அமுல்படுத்துவதற்காக ஈடுபடுத்துவது மிக முக்கியமாகும். இதற்கு முன்னர் குறிப்பிட்டது போல தேர்தல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் வேறு அரசியல் அதிகார பீடங்களும் இயங்குவதனால் பொலிஸார் மீது பிரயோகிக்கப் படும் அரச தலையீடு காரணமாக தனக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றுவதில் தடையேற்படலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பொலிஸாரினை வழிநடாத்தும் அலுவலர்களும் தேர்தல் ஆணைக் குழுவும் செயற்பட்டு சுதந்திரமானதும் நீதியான துமான வாக்கெடுப்பிற்காக தீர்மானம் எடுப்பதும் சட்டங்களை அமுல்படுத்துவதும் கட்டாயமாகும். அத்தோடு சட்டத்தினை அமுல்படுத்துவதற்காக அமுலிலுள்ள சட்டத்தினுள் தடைகள் உள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு தெரியவருமிடத்து அவற்றை நீக்கிக்கொள்வதற்கு புதிய முறைகளை நோக்கி கவனம் செலுத்துதல் வேண்டும். உதாரணமாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு தேர்தல் காலத்தில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக தனியான நீதிமன்றம் ஒன்றை நிறுவுதல் அல்லது அவ்வாறான முறைப்பாடுகளை சட்ட மா அதிபர் ஊடாக நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வதற்கு பதிலாக தேர்தல் ஆணைக்குழுவின் மூலம் நேரடியாக நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க முடியுமான சூழல் ஒன்றினையும் உருவாக்கிக்கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

**154. நீதிமன்ற நடவடிக்கைகள்.**

பெயர்குறித்த நியமனங்கள் நிராகரிக்கப்பட்டமை சம்பந்தமாக கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

- யாழ்ப்பாண மாவட்டத்தின் திரு. பீ. அன்டன் நிக்குலஸ் என்பவரின் சுயேச்சை குழுவுடன் தொடர்பான பெயர்குறித்த நியமனங்களை ஏற்றுக் கொள்ளுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட CA(Writ) 292/2015 மனுவை கவனத்திற்கொண்டு அதனை நிராகரித்து மதிப்புக்குரிய நீதிமன்றத் தினால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஸ்ரீ லங்கா சுதந்திர முன்னணியின் பெயர்குறித்த நியமனங்கள் நிராகரிக்கப்பட்ட மைக்கு எதிராக அக்கட்சியின் செயலாளர் திரு. சாகர காரியவசம் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கும் [CA(Writ) 300/2015] நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது.

- யாழ்ப்பாண மாவட்டத்தின் சுயேச்சைக் குழு தலைவர் திரு. முருகன் குமாரவேல் என்பவரால் தமது பெயர்குறித்த நியமனங்கள் நிராகரிக்கப் பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட CA(Writ) 296/2015 ஆம் இலக்க மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டதுடன் கண்டி, நுவரெலியா, பதுளை மற்றும் கேகாலை மாவட்டங்களின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பெயர்குறித்த நியமனங்கள் சம்பந்தமாக சிவில் செயற்பாட்டாளரான திரு. ஆனந்தன் மோகன்தாஸ் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட SC/FR/321/2015 ஆம் இலக்க வழக்குடன் தொடர்பான மனு முறைப்பாட்டாளர் களால் வாபஸ் பெறப்பட்டமையின் காரணமாக அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

- திருமதி ரோசி சேனாநாயக்க அவர்களால் கொழும்பு மாவட்டத்தின் ஐக்கிய தேசியக் கட்சியின் விருப்பு வாக்குகளை மீண்டும் எண்ணுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட SC/FR/355/2015 ஆம் இலக்க மனுவானது விருப்பு வாக்குகள் தவறாக கணக்கிடப்பட்டதாக நீதிமன்றத்திற்கு சத்திய கடதாசிகளை முன்வைத்த நபர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் விருப்புவாக்கு பெறுபேறுகள் சரியானதென குறித்த பெறுபேறுகளுக்கான ஆவணங்களில் கைச்சாத்திடப்பட்டிருந்தமை காரணமாக நிராகரிக் கப்பட்டது.

- அத்துடன் 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் சட்டத்திற்கமைய நியமிக்கப்படும் தேசியப்பட்டியல் உறுப்பினர் சம்பந்தமாக திரு. நாகானந்த கொடிதுவக்கு அவர்கள் [SC(Writ) 5/2015], திரு. தர்மபாலகே தொன் சோமவீர சந்திரசிறி [SC/FR/338/2015] திரு. டீ.ஈ.டப்ளிவ். குணசேகர [SC/FR/344/2015] மற்றும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண [SC/FR/358/2015] ஆகியோர் நீதிமன்ற நடவடிக்கை களில் ஈடுபட்டதாக அறியக் கிடைத்துள்ளது. திரு. சோமவீர சந்திரசிறி அவர்கள் மரணித்தமை காரணமாக வாதித் தரப்பினர் வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளதுடன் ஏனைய மனுக்கள் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டன.

**முடிவுரை**

155. பாராளுமன்றத் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து தேர்தல் ஆணையாளரினால் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்கள் எடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு உடனடியாக பதிலளித்து அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் பொலிஸாரினால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பு மெச்சத்தக்கது. விசேடமாக வாக்கெடுப்பொன்றின் பூர்வாங்க நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் தொடக்கம் வாக்கெடுப்பினை நடாத்துதல் வாக்கெண்ணல் மற்றும் பெறுபேறு வெளியிடுதல் வரையிலான பணிகளுக்கு தேவையான ஆளணியினை வழங்குதல், பயிற்சியளித்தல் போன்றவற்றினை வெற்றிகரமாக மேற்கொள்ள அமைச்சுக்கள் மற்றும் திணைக்கள தலைவர்கள்

வழங்கிய ஒத்துழைப்பும் தேர்தல் நடவடிக்கைகளை சுதந்திரமாகவும் நீதியாகவும் நடாத்திச் செல்வதற்கு அமுலில் உள்ள சட்ட வரையறைக்குள் மற்றும் தேர்தல்கள் ஆணையாளரினால் அடிக்கடி வழங்கப் பட்ட அறிவுறுத்தலுக்கமைய பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட ஏனைய பொலிஸ் உத்தியோகத்தரிட மிருந்து கிடைக்கப்பெற்ற உதவி அளப்பரியது. தேர்தல் செயலகத்தின் அனைத்து அலுவலர்கள் மற்றும் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலகங்களின் பணியாட் தொகுதியினர் உள்ளிட்ட ஏனைய அலுவலர்கள், தேர்தல் பிரகடனப்பட்டதிலிருந்து வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு பெறுபேறுகளை வெளியிடும் வரையில் இரவு பகல் வேறுபாடின்றி செய்த அர்ப்பணிப்பை விசேடமாக குறிப்பிட வேண்டியுள்ளது. போட்டியிட்ட அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளரின் அழைப்பின் மீது அல்லது அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சமர்ப்பிப்பதற்காக முன்வந்து தேர்தல் ஆரம்ப நடவடிக்கைகளை ஏற்பாடுகளின் பிரச்சினைக்குரிய சந்தர்ப்பங்களில் ஓரளவிற்கேனும் தீர்த்துக் கொள்வதற்கு வழங்கிய ஒத்துழைப்பை உயர்வாக கருதுகின்றேன். அவ்வாறே உள்நாட்டு கண்காணிப்பு அமைப்புக்கள் தேர்தல் நடவடிக்கைகளின் ஏற்பாட்டின் போது பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் தனது உச்ச பங்களிப்பை வழங்கி செயற்பட்டனர். அதன் மூலம் போட்டியிட்ட கட்சி/ குழுக்களுக்கு வாக்கெடுப்பு சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெற்றதாக உறுதிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. தேர்தல் ஏற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்றுக்கொள்வதற்கு தேர்தலுடன் தொடர்புடைய எழுத்தாவணங்கள் மற்றும் வாக்குச் சீட்டுக்களை அச்சிட்டுத்தருவதில் ஒத்துழைப்பு வழங்கிய அரசாங்க அச்சுத் திணைக்களம், தேர்தல் காலப் பிரிவில் தேர்தல்கள் ஆணையாளரினாலும் தெரிவத்தாட்சி அலுவலரினாலும் அனுப்பிய பாரியள விலான கடிதங்களையும் இலவச அஞ்சல் வசதியின் கீழ் அரசியல் கட்சியின் செயலாளர்கள் அனுப்பிய பாரியளவு கடிதங்களையும் அனைத்து வீடுகளுக்கும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை உரிய காலத்தினுள் அனுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அஞ்சல் திணைக்களத் திற்கும் தேர்தல் ஆளணியினருக்கு போக்குவரத்து வசதிகளைச் செய்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கும் மற்றும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்திற்கும் தொடர்பாடல் வசதிகளை வழங்கிய ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்திற்கும் வாக்கெடுப்பு ஆவணம் முதல் வாக்கெண்ணி பெறுபேறுகளை வெளியிடும் வரையில் தடையின்றி மின்சாரத்தினை வழங்கிய இலங்கை மின்சார சபைக்கும் பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தி வெளியிடுவ தற்காக தேர்தல்கள் திணைக்களத்திற்கு உதவிய கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினிப் பாடசாலையின் இங்கு விசேடமாக ஞாபகப்படுத்த வேண்டும். அத்தோடு வாக்காளர் மற்றும் பொது மக்கள் தேர்தல் செயன்முறை தொடர்பில் மற்றும் கட்சி கொள்கை திட்டங்கள் தொடர்பிலும் அறிவூட்டி தமது பொறுப்பை நிறைவேற்றிய அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் வாக்கெண்ணல் இறுதியில் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு முனைப்புடன் ஒத்துழைப்பு வழங்கிய ஊடகங்களின் சேவையும் மெச்சத்தக்கது.

156. மேற்குறிப்பிட்ட அனைத்து நிறுவனங்கள் மற்றும் ஆட்கள் 2015.08.17 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலினை சுதந்திரமாகவும் நியாய மாகவும் நடாத்துவதற்கும் அதன் மூலம் வாக்காளர், பொது மக்கள், தேர்தல்கள் திணைக்களத்தின் மீது வைத்த நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்துவ தற்காக கிடைத்த சந்தர்ப்பத்திற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மஹிந்த தேசப்பிரிய,**
தேர்தல்கள் ஆணையாளர்.

# அட்டவணைகள்

அட்டவணை I

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1920/38 - 2015 ජුනි මස 26 වැනි සිකුරාදා - 2015.06.26
1920/38 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

எனது இல. : சிஎஸ்ஏ/1/2/3

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் செய்யப்படும் பிரகடனம்**

(முத்திரை)

மைத்திரிபால சிறிசேன

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினது அரசியலமைப்பின் 70 ஆம் உறுப்புரையினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டும், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றியும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், இப்பிரகடனத்தின் மூலம்-

(அ) இன்று நள்ளிரவிலிருந்து பாராளுமன்றத்தைக் கலைத்து, இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு செத்தெம்பர் மாதம் முதலாம் நாளன்று புதிய பாராளுமன்றமொன்றைக் கூடுமாறு அழைக்கின்றேன் ;

(ஆ) இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு ஓகத்து மாதம் பதினேழாம் நாளை பாராளுமன்ற உறுப்பினர்களின் தேர்தலுக்கான திகதியாக நிர்ணயிக்கின்றேன்;

(இ) இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு யூலை மாதம் ஆறாம் நாளன்று தொடங்கி, இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு யூலை மாதம் பதின்மூன்றாம் நாளன்று நண்பகல் பன்னிரண்டு மணியுடன் முடிவடையும் காலப்பகுதியை பெயர்குறித்த நியமனக் காலப்பகுதியாகக் குறித்துரைக்கின்றேன். அக்காலப்பகுதிக்குள் பெயர்குறித்த நியமனப் பத்திரங்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களால் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறிக்கப்பட்டிருக்கும் ஒவ்வோர் இடத்தையும் அவ்வட்டவணையின் II ஆம் நிரலில் உள்ள நேரொத்த பதிவில் குறிக்கப்பட்டிருக்கும் தேர்தல் மாவட்டத்துத் தேர்தலில் நிற்கவிழையும் வேட்பாளர்களின் பெயர் குறித்த நியமன இடமாகக் குறித்துரைக்கின்றேன்

என்பதை சகலரும் அறிவீராக.

இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு யூன் மாதம் இருபத்தாறாம் நாளன்று கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. பீ. அபேகோன்,
சனாதிபதியின் செயலாளர்.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

1A

**அட்டவணை I**



## அட்டவணை

| *நிரல் I* | | *நிரல் II* |
|---|---|---|
| *தேர்தல் மாவட்டம்* | | *பெயர் நியமன இடம்* |
| *இல. 1 -* | *கொழும்பு* | *மாவட்டச் செயலகம், கொழும்பு* |
| *இல. 2 -* | *கம்பஹா* | *மாவட்டச் செயலகம், கம்பஹா* |
| *இல. 3 -* | *களுத்துறை* | *மாவட்டச் செயலகம், களுத்துறை* |
| *இல. 4 -* | *கண்டி* | *மாவட்டச் செயலகம், கண்டி* |
| *இல. 5 -* | *மாத்தளை* | *மாவட்டச் செயலகம், மாத்தளை* |
| *இல. 6 -* | *நுவரெலியா* | *மாவட்டச் செயலகம், நுவரெலியா* |
| *இல. 7 -* | *காலி* | *மாவட்டச் செயலகம், காலி* |
| *இல. 8 -* | *மாத்தறை* | *மாவட்டச் செயலகம், மாத்தறை* |
| *இல. 9 -* | *அம்பாந்தோட்டை* | *மாவட்டச் செயலகம், அம்பாந்தோட்டை* |
| *இல. 10 -* | *யாழ்ப்பாணம்* | *மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்* |
| *இல. 11 -* | *வன்னி* | *மாவட்டச் செயலகம், வவுனியா* |
| *இல. 12 -* | *மட்டக்களப்பு* | *மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு* |
| *இல. 13 -* | *திகாமடுல்ல* | *மாவட்டச் செயலகம், அம்பாறை* |
| *இல. 14 -* | *திருகோணமலை* | *மாவட்டச் செயலகம், திருகோணமலை* |
| *இல. 15 -* | *குருநாகல்* | *மாவட்டச் செயலகம், குருநாகல்* |
| *இல. 16 -* | *புத்தளம்* | *மாவட்டச் செயலகம், புத்தளம்* |
| *இல. 17 -* | *அநுராதபுரம்* | *மாவட்டச் செயலகம், அநுராதபுரம்* |
| *இல. 18 -* | *பொலன்னறுவை* | *மாவட்டச் செயலகம், பொலன்னறுவை* |
| *இல. 19 -* | *பதுளை* | *மாவட்டச் செயலகம், பதுளை* |
| *இல. 20 -* | *மொனராகலை* | *மாவட்டச் செயலகம், மொனராகலை* |
| *இல. 21 -* | *இரத்தினபுரி* | *மாவட்டச் செயலகம், இரத்தினபுரி* |
| *இல. 22 -* | *கேகாலை* | *மாவட்டச் செயலகம், கேகாலை* |

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1920/39 - 2015 ජුනි මස 27 වැනි සෙනසුරාදා - 2015.06.27

1920/39 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்**

6(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் பிரகாரம் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய ஆகிய நான், இவ்வறிவித்தல் வாயிலாக இதற்கான அட்டவணையின் II ஆம் நிரலில் பதவி வழியால் சொல்லப்படும் அலுவலர்களை இவ்வட்டவணையின் I ஆம் நிரலில் இயைந்த பதிவில் குறிக்கப்பட்டுள்ள தேர்தல் மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

இராஜகிரிய,
2015, யூன் 27.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II |
|---|---|
| இல. 01 - கொழும்பு | மாவட்டச் செயலாளர், கொழும்பு நிருவாக மாவட்டம் |
| இல. 02 - கம்பஹா | மாவட்டச் செயலாளர், கம்பஹா நிருவாக மாவட்டம் |
| இல. 03 - களுத்துறை | மாவட்டச் செயலாளர், களுத்துறை நிருவாக மாவட்டம் |
| இல. 04 - மஹநுவர | மாவட்டச் செயலாளர், கண்டி நிருவாக மாவட்டம் |
| இல. 05 - மாத்தளை | மாவட்டச் செயலாளர், மாத்தளை நிருவாக மாவட்டம் |
| இல. 06 - நுவரெலியா | மாவட்டச் செயலாளர், நுவரெலியா நிருவாக மாவட்டம் |
| இல. 07 - காலி | மாவட்டச் செயலாளர், காலி நிருவாக மாவட்டம் |
| இல. 08 - மாத்தறை | மாவட்டச் செயலாளர், மாத்தறை நிருவாக மாவட்டம் |
| இல. 09 - அம்பாந்தோட்டை | மாவட்டச் செயலாளர், அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டம் |
| இல. 10 - யாழ்ப்பாணம் | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், யாழ்ப்பாண நிருவாக மாவட்டம் |
| இல. 11 - வன்னி | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், வவுனியா நிருவாக மாவட்டம் |
| இல. 12 - மட்டக்களப்பு | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், மட்டக்களப்பு நிருவாக மாவட்டம் |

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| இல. 13 - திகாமடுல்ல | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், அம்பாறை நிருவாக மாவட்டம் |
| இல. 14 - திருகோணமலை | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், திருகோணமலை நிருவாக மாவட்டம் |
| இல. 15 - குருநாகல் | மாவட்டச் செயலாளர், குருநாகல் நிருவாக மாவட்டம் |
| இல. 16 - புத்தளம் | மாவட்டச் செயலாளர், புத்தளம் நிருவாக மாவட்டம் |
| இல. 17 - அநுராதபுரம் | மாவட்டச் செயலாளர், அநுராதபுர நிருவாக மாவட்டம் |
| இல. 18 - பொலநறுவை | மாவட்டச் செயலாளர், பொலநறுவை நிருவாக மாவட்டம் |
| இல. 19 - பதுளை | மாவட்டச் செயலாளர், பதுளை நிருவாக மாவட்டம் |
| இல. 20 - மொணராகலை | மாவட்டச் செயலாளர், மொணராகலை நிருவாக மாவட்டம் |
| இல. 21 - இரத்தினபுரி | மாவட்டச் செயலாளர், இரத்தினபுரி நிருவாக மாவட்டம் |
| இல. 22 - கேகாலை | மாவட்டச் செயலாளர், கேகாலை நிருவாக மாவட்டம் |

7-590/1

---

**1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்**

*6(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 6(1)ஆம் பிரிவின் பிரகாரம் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய ஆகிய நான், இவ்வறிவித்தல் வாயிலாக இதற்கான அட்டவணையின் II ஆம் நிரலில் பதவி வழியால் சொல்லப்படும் அலுவலர்களை இவ்வட்டவணையின் I ஆம் நிரலில் இயைந்த பதிவில் குறிக்கப்பட்டுள்ள தேர்தல் மாவட்டங்களின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.*

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

இராஜகிரிய,
2015, யூன் 27.

**அட்டவணை**

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| இல. 01 - கொழும்பு | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், கொழும்பு நிருவாக மாவட்டம் |
| | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், கொழும்பு நிருவாக மாவட்டம் |
| இல. 02 - கம்பஹா | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், கம்பஹா நிருவாக மாவட்டம் |
| | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், கம்பஹா நிருவாக மாவட்டம் |
| | நிருவாக அலுவலர், தேர்தல்கள் அலுவலகம், கம்பஹா நிருவாக மாவட்டம் |
| இல. 03 - களுத்துறை | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், களுத்துறை நிருவாக மாவட்டம் |
| இல. 04 - மஹநுவர | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், கண்டி நிருவாக மாவட்டம் |
| இல. 05 - மாத்தளை | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், மாத்தளை நிருவாக மாவட்டம் |
| இல. 06 - நுவரெலியா | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், நுவரெலியா நிருவாக மாவட்டம் |
| இல. 07 - காலி | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், காலி நிருவாக மாவட்டம் |
| இல. 08 - மாத்தறை | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், மாத்தறை நிருவாக மாவட்டம் |
| இல. 09 - அம்பாந்தோட்டை | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டம் |
| இல. 10 - யாழ்ப்பாணம் | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், வட மாகாணம் |
| | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், யாழ்ப்பாண நிருவாக மாவட்டம் |
| | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், கிளிநொச்சி நிருவாக மாவட்டம் |
| இல. 11 - வன்னி | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், வட மாகாணம் |
| | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், மன்னார் நிருவாக மாவட்டம் |
| | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், முல்லைத்தீவு நிருவாக மாவட்டம் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *இல. 12 - மட்டக்களப்பு* | *உதவித் தேர்தல்கள் ஆணையாளர், மட்டக்களப்பு நிருவாக மாவட்டம்* |
| *இல. 13 - திகாமடுல்ல* | *உதவித் தேர்தல்கள் ஆணையாளர், அம்பாறை நிருவாக மாவட்டம்* |
| *இல. 14 - திருகோணமலை* | *உதவித் தேர்தல்கள் ஆணையாளர், திருகோணமலை நிருவாக மாவட்டம்* |
| *இல. 15 - குருநாகல்* | *உதவித் தேர்தல்கள் ஆணையாளர், குருநாகல் நிருவாக மாவட்டம்* |
| | *நிருவாக அலுவலர், தேர்தல்கள் அலுவலகம், குருநாகல் நிருவாக மாவட்டம்* |
| *இல. 16 - புத்தளம்* | *உதவித் தேர்தல்கள் ஆணையாளர், புத்தளம் நிருவாக மாவட்டம்* |
| *இல. 17 - அநுராதபுரம்* | *உதவித் தேர்தல்கள் ஆணையாளர், அநுராதபுரம் நிருவாக மாவட்டம்* |
| *இல. 18 - பொலநறுவை* | *உதவித் தேர்தல்கள் ஆணையாளர், பொலநறுவை நிருவாக மாவட்டம்* |
| *இல. 19 - பதுளை* | *உதவித் தேர்தல்கள் ஆணையாளர், பதுளை நிருவாக மாவட்டம்* |
| *இல. 20 - மொணராகலை* | *உதவித் தேர்தல்கள் ஆணையாளர், மொணராகலை நிருவாக மாவட்டம்* |
| *இல. 21 - இரத்தினபுரி* | *சிரேட்ட பிரதி தேர்தல்கள் ஆணையாளர், இரத்தினபுரி நிருவாக மாவட்டம்* |
| *இல. 22 - கேகாலை* | *உதவித் தேர்தல்கள் ஆணையாளர், கேகாலை நிருவாக மாவட்டம்* |

*7-590/2*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

**ஊடக அறிவித்தல் இல.–22**

# பாராளுமன்றத் தேர்தல் - 2015.08.17

**தனியார்துறையில் பணிபுரிபவர்களுக்கு, தேசிய ரீதியில் நடாத்தப்படும் தேர்தல்களின் போது சம்பளம் அல்லது தனிப்பட்ட லீவு குறைப்பின்றி வாக்களிப்பதை இயலச்செய்யக்கூடிய விதத்தில் லீவு வழங்குதல்**

தாம் வாக்களிப்பதை இயலச்செய்யக்கூடிய விதத்தில் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு லீவு வழங்குவதற்கு தொழில்தருநர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளு மன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 122 ஆம் பிரிவினால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதுடன், 2015.08.17 ஆம் திகதி நடைபெற விருக்கும் பாராளுமன்றத் தேர்தலின்போதும் குறித்த ஏற்பாடுகள் உரிய முறையில் அமுல்படுத்தப்படுதல் வேண்டும்.

அரசதுறையில், ஊழியர்களின் விசேட லீவு சம்பந்தமாக தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 12:3 ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு, பாராளுமன்றத் தேர்தலொன்றின்போதுஆகக்குறைந்தது 4 மணித்தியாலங்களாக இருக்க வேண்டுமென்றும்,வாக்களிக்கச் செல்வதற்குத் தேவையெனக் கருதும் தொடர்ச்சியான காலப்பகுதிக்கு சம்பளக் குறைப்பின்றி விசேட லீவு வழங்கப்படுதல் வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், தனியார்துறையில் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அவ்வாறான எழுத்திலான கட்டளை பிறப்பிக்கப்பட்ட அவ்வாறான விசேட லீவு வழங்குவதற்கானமுறையொன்று காணப்படாமையால், அநேகமான தொழில்தருநர்கள் தமது தொழிலாளர்களுக்கு வாக்களிக்கச்செல்வதற்கு லீவு வழங்குவதில்லையென கடந்த பல தேர்தல்களின்போது முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளமையால், மேற்போந்த விடயம் தொடர்பில் 2014.12.22 ஆந் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் தொழில் மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சின் செயலாளர், தொழில் ஆணையாளர் நாயகம், தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோரை அழைத்து ஆணைக்குழுவின் கௌரவ தவிசாளர், கௌரவ ஆணையாளர்கள், சட்ட செயலாளர் உள்ளிட்ட ஏனைய அதிகாரிகளுடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவில்நடாத்திய கலந்துரையாடலின்போது ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டிற்கு இணங்க தேசிய ரீதியில் நடாத்தப்படும் தேர்தலொன்றின்போது தனியார்துறை ஊழியர்கள் வாக்களிக்கச்செல்வதற்கும் திரும்பிவருவதற்கும் லீவு வழங்குவதற்கான தூரம், காலம் என்பவற்றிற்கிடையில் தொடர்பொன்றை ஏற்படுத்துமாறு கௌரவ ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிவித்தலுக்கமைய கீழ்க்காணும் அட்டவணைக்கிணங்க தனியார் துறையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வாக்களிக்கச்செல்வதற்காக லீவு வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட தொழில் தருநர்கள் நடவடிக்கை எடுத்தல் உசிதமானதென தேர்தல் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

| வாக்களிப்பதற்கு சேவை நிலையத்திலிருந்து தமது வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்லவேண்டிய தூர அளவு | வழங்கப்பட வேண்டிய ஆகக் குறைந்த லீவு காலம் |
|---|---|
| 40 கி.மீ. அல்லது அதற்குக் குறைவாக இருப்பின் | அரை நாள் |
| 40 கி.மீ. – 100 கி.மீ. இற்கு இடைப்பட்டதாக இருப்பின் | ஒரு நாள் |
| 100 கி.மீ. – 150 கி.மீ. இற்கு இடைப்பட்டதாக இருப்பின் | 1½ நாள் |
| 150 கி.மீ. இற்கு அதிகமாக இருப்பின் | 2 நாட்கள் |

மேலுள்ள அட்டவணையில் வழங்கப்பட வேண்டிய ஆகக்குறைந்த காலம் முன்மொழியப்பட்டுள்ளதுடன், நாட்டில் ஒருசில வாக்காளர்களுக்கு வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று திரும்புவதற்கு மூன்று (3) நாட்கள் தேவைப்படும் சந்தர்ப்பங்களும் குறிப்பிடத்தக்களவில் இருப்பதனால்,வேளைக்கேற்றவாறு மூன்று நாட்கள் லீவு வழங்க வேண்டிய நிலைஏற்படும் என்பதும் கவனத்திற்கொள்ளப்படுதல் வேண்டும்.

இதன்போது தொழிலாளர்கள், எழுத்திலான கோரிக்கையொன்றின் மூலம் லீவு கோரி விண்ணப்பிக்க வேண்டு மென்பதுடன், அனைத்துத் தொழில்தருநர்களும் விசேட லீவு கோரிய நபர்கள், லீவு வழங்கும் காலப்பகுதி போன்ற விபரங்கள் அடங்கிய ஆவணமொன்றைத் தயாரித்து அதனை சேவை நிலையத்தில் காட்சிப்படுத்துதலும் வேண்டும்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வழிகாட்டல்களைக் கவனத்திற்கொண்டு தொழில் மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சின் செயலாளர்,தொழில் ஆணையாளர் நாயகம் என்பவர்களுடன் நான் கலந்துகொண்ட கலந்துரையாட லொன்றின்போது ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் தேசிய அளவிலான தேர்தலொன்றின்போது வாக்களிக்கச் செல்வதும் திரும்பி வருவதும் பற்றிய தனியார்துறைக்காகத் தயாரிக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளுக்கு இணங்கி தமது நிறுவனத்தின் தொழிலாளர்கள் வாக்களிக்கச் செல்வதற்கும் திரும்பிவருவதற்கும் போதியளவு லீவு வழங்குமாறு அனைத்து தொழில் தருநர்களும் தயவாய் வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள்.

**மஹிந்த தேசப்பிரிய,**
**தேர்தல்கள் ஆணையாளர்.**

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2015.07.27.

அட்டவணை IV

## பாராளுமன்றத் தேர்தல் - 2015.08.17

## தேர்தல் கண்காணிப்புக்காக அங்கீகாரம் பெற்ற கண்காணிப்புஅமைப்புக்கள் மற்றும் கண்காணிப்பாளர்களால் பின்பற்றப்பட வேண்டிய ஒழுக்க நெறிகள்

01. தேர்தல் கண்காணிப்பு நிறுவனமொன்றின் பணிப்பாளர் சபை அங்கத்தினர், நடமாடும் கண்காணிப்பாளர்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலைய கண்காணிப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நபர்கள் கடந்த 05 ஆண்டுகளுக்குள் தொழிற்பாட்டு அரசியலில் ஈடுபடாதவர்களாகவிருத்தல் வேண்டும். தேர்தல்களில் வேட்பாளர்களாக போட்டியிடாத வாக்காளர்களாக தகைமை பெற்றுள்ள நடுநிலையாளர்களாகவிருத்தல். அனைத்து அலுவலர்களும் கண்காணிப்பாளர்களும் சத்தியக் கடதாசியொன்றின் / உறுதியுரையொன்றின் மூலம் அதனை உறுதிப்படுத்த வேண்டுமென்பதோடு, தேவைப்படுமிடத்து பரிசீலிக்கத்தக்க விதத்தில் அச்சத்திய வெளிப்படுத்துகைகள் / உறுதியுரைகள் கண்காணிப்பு நிறுவனத்தின் பொறுப்பில் பாதுகாப்பாக வைக்கப்படல் வேண்டும். (சத்தியத்தின் / உறுதியுரையின் மாதிரியின் பிரதியொன்று இத்தோடிணைக்கப்பட்டுள்ளது.)

02. தேர்தல் கண்காணிப்பு நிறுவனமொன்றின் எவரேனுமோர் அலுவலர் அல்லது கண்காணிப்பாளர் அரசியல் தொடர்புகளின் காரணமாக அரசாங்கம் அல்லது வேறேதேனும் நிறுவனமொன்றின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் பதவியை வகிப்பவராகவோ அல்லது கடந்த 05 ஆண்டு காலப்பகுதிக்குள் அத்தகைய பதவியை வகித்த ஒருவராகவோ காணப்படாமை.

03. கண்காணிப்பு நிறுவனங்களினால் அரசியல் கட்சியொன்றிற்கு அல்லது சுயேச்சைக் குழுவொன்றிற்கு உரித்தான கட்டிடங்கள், வாகனங்கள், தொலைபேசி வசதிகள் போன்றவற்றை தமது கண்காணிப்பு நிறுவனத்தின் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தாமை.

04. தேர்தல்கள் கண்காணிப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கத்தினர்கள் அல்லது அலுவலர் குழாத்தின் அங்கத்தினர்கள், கண்காணிப்பாளர்கள் எந்தவோர் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் நோக்கங்களுக்கமைய நடவடிக்கைகளில் ஈடுபடாமை.

05. தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்களினூடாக தேர்தலோடு தொடர்புடைய ஊடக அறிவித்தல்கள் மற்றும் அறிக்கைகள் வெளியிடப்படுகின்ற போது ஏதேனுமொரு கட்சியை அல்லது குழுவை இன்றேல் வேட்பாளரொருவரை ஊக்குவிக்கத்தக்கவாறோ அல்லது பாதிப்புக்களை ஏற்படுத்தத்தக்கவாறோ வெளிப்படுத்துகைகளை வெளியிடாமையும் நடுநிலைத் தன்மையைப் பேணலும்.

06. தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்களினால் தேர்தல் திணைக்களத்தின் பணிகள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரை அறிவூட்டாது ஊடக அறிவித்தல்களையோ அல்லது ஊடக வெளிப்படுத்துகைகளையோ வெளியிடாமை.

07. **கண்காணிப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் குழு, அலுவலர்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் ஆகிய அனைவரும் கண்காணிப்புப் பணிகள் தொடர்பாக ஆற்றுகின்ற அனைத்து அலுவல்களிலும் பக்கச்சார்பற்ற தன்மை முழுமையாக அனுஷ்டிக்க வேண்டுமென்பதோடு, நடத்தையிலும் பேச்சிலும் பக்கச்சார்பற்ற தன்மை வெளிப்படுத்தப்பட வேண்டும். அதேபோன்று பக்கச்சார்பற்ற முறையில் நடந்துகொள்வதை அடுத்தவர்களுக்கும் உணரச் செய்தல் வேண்டும்.**

08. எவரேனும் ஒரு கண்காணிப்பாளர் பக்கச்சார்பாக நடந்துகொள்வதாக ஏதேனும் முறைப்பாடு கிடைக்கப்பெற்றவுடன் அவரை அக்கண்காணிப்புப் பணியிலிருந்து அகற்றி துரிதமாக உரிய முறைப்பாட்டை விசாரித்தல் வேண்டும்.

09. வாக்கெடுப்புக் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள கண்காணிப்பாளர் வாக்கெடுப்பு நிலையப் பணியாட் குழுவினர், வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், வாக்காளர்களோடு தேவையற்ற அளவலாவலில் ஈடுபடக்கூடாது, தேர்தலின் அனைத்து நடவடிக்கைகள் தொடர்பாகவும் இரகசியத்தைப் பேணலும், வாக்கெடுப்பு நிலையத்தில் அது தொடர்பான வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிட்டு சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலருக்குக் கையளித்தலும் அவசியமாகும்.

10. நடமாடும் மற்றும் வாக்கெடுப்பு நிலையக் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள கண்காணிப்பாளர்களை எளிதில் அடையாளம் கண்டுகொள்ள முடியுமான விதத்தில் சீருடையொன்றையோ அல்லது பொருத்தமான விஷேட ஆடையொன்றையோ அணிந்திருத்தலும் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுகின்ற போது மது அருந்தல் மற்றும் புகைபிடித்தல் என்பவற்றைத் தவிர்ந்துகொள்ளலும் அவசியமாகும்.

11. வாக்கெடுப்பு முடிவடைந்ததன் பின்னர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் வசமுள்ள **ZLOB** படிவ அறிக்கையைப் பெற்று உரியவாறு பூர்த்தி செய்து தனது கண்காணிப்பையும் குறிப்பீடு செய்து கண்காணிப்பு அறிக்கையை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் கையளித்தல் வேண்டும்.

12. கண்காணிப்பு அமைப்புக்களால் செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் அனைத்தும் உறுதிப்படுத்தக்கூடிய சாட்சியங்களுடனான விடயங்களுக்கு மாத்திரம் உட்பட்டிருத்தல் வேண்டும்.

13. வாக்கெடுப்பு நிலையத்தில் / வாக்கெண்ணும் மண்டபத்தில் தேர்தலுடன் தொடர்புடையதாக ஏற்படக்கூடிய தாமதங்கள் அல்லது ஏதாவது முறையற்ற செயல்கள் கண்காணிக்கப்படின் அத்தாமதம், தவறுதலான செயல் அல்லது பணிகள் அல்லது நிகழ்வு பற்றி, வாக்கெடுப்பு நிலையத்தில் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்கும், வாக்கெண்ணும் மண்டபத்தில் பிரதம வாக்கெண்ணும் அலுவலரிடமும் உடனடியாக வெளிப்படுத்த வேண்டுமென்பதுடன், அவ்விடயங்களை தமது நிறுவனத்தின் உரிய பொறுப்பு வாய்ந்த அலுவலரைத் தவிர வேறு எவரொருவருக்கும் அவ்வாறான வெளிப்படுத்தல் பற்றிய தகவல்களை வழங்கலாகாது. தேர்தல்கள் திணைக்களத்தை அறிவூட்டுவதைத் தவிர அவ்வாறான தகவல்களை வெளியே வெளியிடாதிருப்பதற்கு கண்காணிப்பு அமைப்புக்களின் முகாமைத்துவம் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

மஹிந்த தேசப்பிரிய
**தேர்தல்கள் ஆணையாளர்**

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2015 யூலை 18 ஆந் திகதி.

அட்டவணை V

ஊடக அறிவித்தல் இல. 27

அரசியற் கட்சிகளின் செயலாளர்களினதும் பொதுமக்களினதும் தயவான தகவலுக்காக.

**பாராளுமன்றத் தேர்தல் - 2015**

**அனுமதி பெற்ற அறிவித்தல் கொடுக்கப்பட்ட பிரச்சார அலுவலகங்கள், அவற்றின் பிரச்சாரப் பலகைகளைக் காட்சிப்படுத்தல், அமைதிக் காலப்பகுதிக்குள் பிரச்சாரப் பலகைகளைக் காட்சிப்படுத்தலை மட்டுப்படுத்தலும் உரிய திகதிகளில் அந்தந்த அலுவலகங்களை அகற்றலும் வேண்டுமென அறிவித்தல்.**

1. அனுமதி பெறப்பட்ட, அறிவித்தல் கொடுக்கப்பட்ட பிரச்சார அலுவலகங்கள் மற்றும் அவற்றில் பிரச்சார பலகைகளைக் காட்சிப்படுத்தல்.

    1.1. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய குறிப்பிட்ட வேட்பாளர் பயணம் செய்கின்ற வாகனத்திலும் அனுமதி பெறப்பட்ட கூட்டமொன்று நடைபெறுகின்ற இடமொன்றில் கூட்டம் நடைபெறுகின்ற சந்தர்ப்பத்திலும் தவிர கட்சி / குழு, வேட்பாளர் ஊக்குவிப்போடு தொடர்புடைய பிரச்சாரப் பலகைகள், கொடி பதாகைகள், ஸ்ரிக்கர்கள். சித்திரங்கள், வேட்பாளர்களின் பெயர்கள், உருவப்படங்கள், விருப்பு இலக்கங்கள் என்பவற்றைக் காட்சிப்படுத்த முடியாது. ஆயினும் நடைமுறையிலுள்ள முறைமையின் கீழ் இலக்கங்களைப் பகிரங்கப்படுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவ தற்காக அனுமதி பெறப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகங்களிலும், முன்பு குறிப்பிடப்பட்ட பிரச்சாரப் பலகை அறிவித்தல்கள், கொடி பதாகைகள் என்பவற்றை காட்சிப்படுத்த அனுமதி வழங்கப் பட்டிருப்பது,

    1.2. அவ்வனுமதி வழங்கப்பட்டிருப்பது சட்டரீதியாக அனுமதி பெறப்பட்ட அலுவலகமொன்றை அமைப்பதற்கும், தேவைப்படின் பிரச்சார காட்சிப்படுத்தல் பலகைகளைக் காட்சிப்படுத்துவதற்குமாகும். அதுவன்றி பிரச்சாரப் பலகைகளை மாத்திரம் காட்சிப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

    1.3. ஆதலால், வெற்றுக் காணிகளில், பாழடைந்த அல்லது மூடப்பட்டுள்ள கட்டிடங்களில் அல்லது அவ்வாறு மூடப்பட்டுள்ள கடைகளில், நிருமாணிக்கப்பட்டு வருகின்ற அல்லது கைவிடப்பட்டுள்ள கட்டிடங்களில் 75 சதுர அடி பரப்பளவையேனும் கொண்டிராத மிகச் சிறிய குடிசைகளில் நிருமாணிக்கப்பட்டுள்ள அல்லது பொருத்தப்பட்டுள்ள பிரச்சாரப் பலகைகளை உடனடியாக அகற்றவேண்டுமென, அகற்றிக் கொள்ள வேண்டு மென குறித்த வேட்பாளர்களுக்கு, விண்ணப்பதாரர்களுக்கு, அவற்றின் உரிமையாளர்களுக்கு தயவன்புடன் அறிவிக்கப்படுகின்றது.

    1.4. அதேபோன்று அலுவலகக் கட்டிடத்திற்கு வெளியே பொருத்தப்பட்டுள்ள அல்லது மின்சார கம்பங்கள், தொலைபேசி கம்பங்கள் ஆகியவற்றில் பொருத்தப்பட்டுள்ள கட்சி / வேட்பாளர் ஊக்குவிப்பு பிரச்சார பலகைகளும் அகற்றப்பட வேண்டும் / அகற்றிக் கொள்ளப்பட வேண்டும்.

    1.5. மேலும் கட்சி / வேட்பாளர் அலுவலகங்கள் முறையான அனுமதிபெறப்பட்டு நிறுவப்பட்டுள்ளனவாவெனத் தெரிந்துகொள்வதற்கு விசாரணைகளை மேற்கொள்ளும் அலுவலர்களுக்குச் சமர்ப்பிப்பதற்காக உத்தரவுப் பத்திரத்தை அல்லது அதன் பிரதியொன்றை உரிய அலுவலகத்தில் வைத்திருத்தல் வேண்டும்.

    1.6. ஏதேனுமொரு கட்சியின் / குழுவின் அலுவலகமொன்றில் அந்தக் கட்சியல்லாத / குழுவல்லாத ஆட்களின் பிரச்சாரப் பலகைகளையும் காட்சிப்படுத்திவைக்க முடியாது.

2. **அமைதிக் காலப்பகுதிக்குள் கட்சி / வேட்பாளர் அலுவலகங்களின் பிரச்சாரப் பலகைகளின் காட்சிப்படுத்தல்களை மட்டுப்படுத்தல்.**

    2.1. 2015.08.14 ஆந் திகதி நள்ளிரவின் பின்னர், தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதாகையால் 2015.08.15 ஆந் திகதி மு.ப. 8.00 மணிக்கு வாக்கெடுப்பு மாவட்ட மட்டத்தில் நிறுவப்பட்டுள்ள அலுவலகங்களில் பிரச்சாரப் பலகைகளை அகற்ற / அகற்றிக்கொள்ள நடவடிக்கையெடுக்க வேண்டும்.

    2.2. தேர்தல்கள் மாவட்டம் அல்லது மாவட்டத்திற்காக நிறுவப்பட முடிந்த ஒரேயொரு மத்திய அலுவலகத்தில் கட்சியின் பெயர் / கட்சியின் சின்னத்துடன் கூடிய பிரச்சாரப் பலகையொன்றைக் காட்சிப்படுத்தலாம். அதில் வேட்பாளர் ஊக்குவிப்பு அறிவித்தல்கள் 2015.08.15 ஆம் திகதி மு.ப. 8.00 மணிக்கு அகற்றப்பட வேண்டும்.

2.3. ஒவ்வொரு வேட்பாளருக்கும் அந்தந்த வாக்கெடுப்புப் பிரிவில் நிறுவுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள மேலதிக பிரச்சார அலுவலகங்கள் அனைத்திலுமுள்ள பிரச்சார அறிவித்தல்களை 2015.08.15 ஆம் திகதி மு.ப. 8.00 மணிக்கு முன்னர் அகற்றிக்கொள்ள வேண்டும்.

2.4. 2015.08.16, 17 மற்றும் 18 ஆகிய மூன்று நாட்களிலும் தேர்தல் மாவட்டத்திற்கு ஒன்று என்றவகையில் வேட்பாளர் ஒருவருக்கு நிறுவ முடிந்த அலுவலகத்தில் மற்றும் வேட்பாளரின் வதிவிடத்தில் கட்சித் தலைவரினதும் கட்சியினதும் பிரச்சாரப் பலகைகளைக் காட்சிப்படுத்த முடியும்.

3. **உரிய தினத்தன்று அந்தந்த அலுவலகங்கள் அகற்றப்பட வேண்டுமென.**

3.1. வாக்கெடுப்பு மாவட்ட மட்டத்தில் நிறுவப்படுகின்ற அலுவலகங்களின் பிரச்சாரப் பலகைகள் 2015.08.15 ஆம் திகதி பி.ப. 8.00 மணிக்கு முன்னர் அகற்றப்படுவதற்கு மேலதிகமாக அவ்வலுவலகங்கள் அன்றைய தினம் நள்ளிரவின் பின்னர், செயற்படுத்தப்படக் கூடாது. அதாவது, அத்தகைய இடமொன்றில் கட்சி / வேட்பாளர் ஊக்குவிப்பு தொடர்பான எந்தவொரு பணியும் அக்காலக்கெடுவின் பின்னர் மேற்கொள்ளப்பட முடியாது.

3.2. மேலதிக வாக்கெடுப்புப் பிரிவு அலுவலகங்களில் உள்ள பலகைகளை 2015.08.15 ஆம் திகதி மு.ப. 8.00 மணிக்கு முன்னர் அகற்றுவதற்கு மேலதிகமாக அவ்வலுவலகங்களின் செயற்பாடுகள் 2015.08.15 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி முதல் நிறைவு செய்யப்படல் வேண்டும்.

4. இவ்வறிவித்தல் கொடுக்கப்படுவது, கட்சியின் / குழுக்களின் அனைத்து வேட்பாளர்கள், முன்னணி செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆதரவாளர்களை அறிவூட்டுவதற்கும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்குத் தேவையான அமைதியான சூழலொன்றைப் பேணும் பொருட்டு அவர்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததென அறிவிப்பதற்காகவேயாகும். இவ்வாறான விதிகள் விதிக்கப்பட்டிருப்பது, எந்தவொரு கட்சியையோ / குழுவையோ அல்லது வேட்பாளரையோ சிரமத்துக்குள்ளாக்குவதற்காகவன்றி தேர்தல் சட்டங்களை செயற்படுத்தல் எமது பொறுப்பென்பதனாலாகுமென்பதை தயவு செய்து கருத்தில் கொள்ளவும்.

5. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு தேர்தல்கள் திணைக்களம் எடுக்கின்ற முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றமைக்கும் அவ்வாறு ஒத்துழைப்பு வழங்குகின்ற அனைத்து சிறந்த அரசியல் வாதிகளுக்கும் எனது நன்றியறிதல் உரித்தாகட்டும்.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர், இராஜகிரிய, தேர்தல்கள் செயலகத்தில்.

குறிப்பு : “அறிவித்தல் கொடுக்கப்பட்ட பிரச்சார அலுவலகங்களை அமைத்தல்”எனும் விடயத்தை பயன்படுத்தி சட்ட விரோதமாக காட்சிப்படுத்தப்படும் பிரச்சார பலகைகளை அப்புறப்படுத்தவும், இவ்வாறு காட்சிப்படுத்துபவர் களுக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பொலிஸ் அலுவலர்களும் தேர்தல் முறைப்பாட்டு விசாரணை பிரிவுகளின் அலுவலர்களும் துரிதமாக செயற்படுவார்கள்.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1925/4 - 2015 ජූලි මස 27 වැනි සඳුදා - 2015.07.27

1925/4 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**மக்கள் தீர்ப்பொன்றிற்கான அல்லது தேர்தலொன்றிற்கான காலக்கெடுவின் போது அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறி அல்லது வழிகாட்டு நெறிகள் (Guidelines )**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பத்தொன்பதாம் திருத்தத்தின் 23 (5) அ ஆம் உறுப்புரைக்கமைய தேர்தல்கள் ஆணைக்குழு/தேர்தல்கள் ஆணையாளரினால் மக்கள் தீர்ப்பொன்று அல்லது தேர்தலொன்று நீதியாகவும், சுதந்திரமாகவும் நடாத்தப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக விதிக்கப்பட்டுள்ள இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்கள் மற்றும் அவற்றின் செயற்பாட்டாளர்கள் பின்பற்றியொழுக வேண்டிய வழிகாட்டு நெறிகள் கீழ்வருமாறானவையாகும்.

1. பிரச்சாரங்களுக்காக செய்திப் பத்திரிகைகளில் இடங்களைக் குறித்தொதுக்குகையிலோ அல்லது வானலைக் காலத்தை வழங்குகையிலோ போட்டியிடுகின்ற எந்தவோர் அரசியற் கட்சிக்கும், சுயேச்சைக் குழுவுக்கும், வேட்பாளரொருவருக்கும் வேறுபாடு காட்டப்படக் கூடாதென்பதோடு, விசேட ஊக்குவிப்பொன்று அல்லது பாதிப்பொன்று ஏற்படாத விதத்தில் அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களும் சமநிலைத் தன்மையையும் கட்சி சார்பற்ற போக்கையும் கடைப்பிடித்தல் வேண்டும்.

2. செய்திகளையும் மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பான இதர நிகழ்ச்சிகளையும் ஒலி/ஒளிபரப்புச் செய்கின்ற போது, அனைத்து ஊடக நிறுவனங்களும் சரியான, சமநிலையான மற்றும் பக்கச்சார்பற்ற தகவல்களை மாத்திரம் ஒலி/ஒளிபரப்புச் செய்தல் வேண்டும். இச்சமநிலை தன்மை மற்றும் பக்கச் சார்பற்ற தன்மை என்பன தேர்தல்கள் முறைப்பாடுகள் தொடர்பான நிரந்தர முகவர் குழு மற்றும் ஊடக வழிகாட்டு நெறிகள் முகவர் குழுவின் கண்காணிப்புக்கு அடிக்கடி இலக்காகும்.

3. செய்திப் பத்திரிகைகளின் ஆசிரியர் கருத்தொன்று குழப்ப நிலையைக் கொண்டதாகவோ சமநிலைத் தன்மையற்றவொன்றாகவோ காணப்படுகின்ற போது, வேறுபாட்டுத் தன்மை நிலவ முடியுமாதலால் ஆசிரியர் கருத்தொன்றை இலத்திரனியல் ஊடகம் ஊடாக ஒலி/ஒளிபரப்பக் கூடாது. ஆயினும் ஏதேனுமொரு காரணத்தினால் அவ்வாறான கருத்தினை ஒலி/ஒளிபரப்பப்படின் அதற்கு எதிரான கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு பாதிக்கப்பட்ட தரப்பினர் அனுமதி கோரினால் அதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல் வேண்டும்.

4. தொலைக்காட்சி அலைவரிசையொன்றின் மூலம் அல்லது வானலை அலைவரிசையொன்றின் மூலம் பத்திரிகை தலைப்பு செய்திகள் தொடர்பாக அல்லது கார்டூன் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற விமர்சனங்கள் மற்றும் கலந்துரையாடலின் போது அந்நிகழ்ச்சியை தொகுத்தளிக்கின்ற நபரின் தனிப்பட்ட கருத்தை தெரிவிக்க விளையும் போது ஒரு தரப்பினர் ஊக்குவிக்கப்படுவதோடு, மற்றொரு தரப்பினர் பாதிக்கப்படுவதால் அவ்வாறான தனிப்பட்ட கருத்துக்களை ஒலி/ஒளிபரப்புச் செய்யாதிருத்தல் வேண்டும்.

1A

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

5. தேர்தல் காலக்கெடுவினுள் முறையான அல்லது சட்டரீதியற்ற அறிவித்தல்களை வெளியிடாதிருத்தல் மற்றும் பக்கச் சார்பான நிகழ்ச்சிகளை ஒலி/ஒளிபரப்புச் செய்யாமலிருப்பது மற்றும் அனுபந்தம் பிரசுரிக்காமல் இருத்தல் அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களின் செய்திப் பிரிவுகள் மற்றும் நடப்புச் செய்திகளுக்குப் பொறுப்பான பிரிவுகளின் பொறுப்பாகும்.

6. ஏதேனுமொரு சம்பவமோ அல்லது நிகழ்ச்சியோ பற்றிய விடயங்களை ஒலி/ஒளிபரப்புச் செய்கையில் ஏதேனுமொரு வேட்பாளரின் கருத்துக்களை சமர்ப்பிக்கின்ற போது அவ்விடயங்கள் தொடர்பான அக்கறையொன்றையோ அல்லது ஆர்வமொன்றையோ காட்டுகின்ற அல்லது அவ்விடயத்தினால் பாதிப்பொன்று ஏற்படக்கூடிய போட்டியிடுகின்ற ஏனைய கட்சிகளுக்கும் விடயங்களைச் சமர்ப்பிக்க அச்செய்தி ஒலி/ஒளிப்பரப்பப்படுகின்ற போதோ அல்லது வேறு சந்தர்ப்பமொன்றிலோ அதற்கான வாய்ப்பை வழங்குதல் வேண்டும்.

7. தேர்தல் காலக்கெடுவினுள் தேர்தலுடன் நேரடியாகத் தொடர்புபடுகின்ற விவரண நிகழ்ச்சியோ அல்லது விசேட நிகழ்ச்சியோ ஒலி/ஒளிப்பரப்பப்படுகின்ற போது பிரதியாக்குநர், அறிவிப்பாளர் மற்றும் தயாரிப்பாளரின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். அவ்வாறியிருப்பினும், ஊடக தர்மத்திற்கிணங்க பிரதியாக்குநர், அறிவிப்பாளர் மற்றும் தயாரிப்பாளர் ஆகியோரின் பெயர்களை வெளியிடாதிருக்கும் உரிமையை வைத்துக் கொள்ள ஏதேனும் நிறுவனமொன்று எதிர்பார்க்குமாயின் அச்சந்தர்ப்பத்தில் ஒலி/ஒளிப்பரப்புக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் அந்நிகழ்ச்சியின் பொறுப்புக் கூறலை பொறுப்பேற்றல் வேண்டும்.

8. தேர்தலொன்றில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கெதிராக செய்யப்படுகின்ற நியாயமாக நிரூபிக்க முடியாத குற்றச்சாட்டுக்களை செய்தி அறிக்கைகளில் அல்லது நிகழ்ச்சிகளில் ஒலி/ஒளிப்பரப்புச் செய்வதிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டும். வேறு வேட்பாளரொருவர் அல்லது ஆதரவாளரொருவரினால் ஏதேனும் ஊடகமொன்றினூடாக தன்னைப் பற்றி செய்யப்பட்ட கூற்றொன்று பொய்யானதென ஏதேனும் போட்டியிடுகின்ற கட்சியொன்று அல்லது வேட்பாளரொருவர் விடயங்களை முன் வைக்குமிடத்து குறித்த கூற்றுக்கு வழங்கிய பிரச்சாரத்திற்கு சமமான சந்தர்ப்பமொன்றில் அது தொடர்பான எதிர்கருத்துக்களை தெரிவிப்பதற்கும் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

9. கடமை ரீதியான வைபவங்கள் மற்றும் குற்றவியல் தொடர்பான சம்பவங்கள் வாக்கெடுப்போடு தொடர்பற்ற செய்திகளைப் பரப்புகின்ற போது, அதன் மூலம் கட்சியொன்றுக்கு/வேட்பாளரொருவருக்கு ஊக்குவிப்பொன்று அல்லது பாதிப்பொன்று ஏற்பட்டுள்ளதாக தெரியவரின் குறித்த மற்றத்தரப்பினரிடமிருந்தும் கருத்துக்களை உசாவி ஒலி/ஒளிப்பரப்புவதற்கு அனைத்து ஊடக நிறுவனங்களும் நுணுக்கமாகவும் சாதுரியமாகவும் நடந்து கொள்ளல் வேண்டும்.

10. சனாதிபதியவர்களோ அல்லது பிரதம மந்திரி அவர்களோ அல்லது அரசாங்கத்தின் அமைச்சர்களோ தொடர்புபடுகின்ற அரசியல் கருத்துக்களை/கொள்கைகளை வெளிப்படுத்துகின்ற தொலைக்காட்சி/வானொலி நிகழ்ச்சிகளை அவர் சார்ந்த அரசியல் கட்சியின் நிகழ்ச்சிகளாகக் கருதுதல் வேண்டும். ஆதலால், அதற்கெதிரான கருத்தைக் கொண்ட அரசியற் கட்சிகளின் தலைவர்களுக்கும் அதற்குச் சமமான நிகழ்ச்சிகளை வழங்குதல் வேண்டும். அச்சு ஊடகங்களும் அதே விதத்தில் அனைத்து அரசியற் கட்சிகள்/வேட்பாளர்களுக்கு விசேட நேர்காணல்களை வழங்கும் போதும், கட்சிக் கூட்டங்கள் பற்றிய அறிக்கைகளை வெளியிடுகின்ற போதும் சம அந்தஸ்தையும் சம உரிமையையும் வழங்குதல் வேண்டும்.

11. எவரேனும் வேட்பாளரொருவருக்கு அல்லது வேட்பாளர்கள் பலருக்கு விசேட கவனம் செலுத்தி அவரை ஊக்குவிக்கின்ற விதத்தில் அல்லது வேறு வேட்பாளரொருவர் பாதிக்கப்படுகின்ற விதத்தில் வானலைக் காலத்தை அல்லது செய்திப் பத்திரிகைகளில் இடங்களைக் குறித்தொதுக்குதல் கூடாது.

12. தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவரின் வெற்றியை ஊக்குவிக்கக் கூடியதான அல்லது வேறு வேட்பாளரொருவரை பாதிப்புக்குட்படுத்தக் கூடியதான விதத்தில் அரச அலுவலர்களால் நடாத்தப்படும் உரைகள், நேர்காணல்கள் போன்ற நிகழ்ச்சிகளை பிரச்சாரம் செய்வதையும் மற்றும் ஒலி/ஒளிபரப்புச் செய்வதையும் அனைத்து ஊடகங்களும் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

13. அரசியல் விடயங்கள் தொடர்பாக செய்யப்படுகின்ற அல்லது தேர்தலோடு தொடர்புடைய குழுக் கலந்துரையாடல்களில் பங்கேற்பவர்களைத் தேர்ந்தெடுக்கின்ற போது அனைத்து இலத்திரனியல் ஊடக நிறுவனங்களும் உண்மையாக போட்டியிடுகின்ற அனைத்து தரப்புக்களுக்கும் நியாயமாக நடந்துகொள்ள வேண்டுமென்பதோடு, அடுத்தவர்களுக்கு பாதிப்பொன்றேற்படாத விதத்தில் நேர்காணலை நெறிப்படுத்தல் வேண்டும். ஏதேனும் நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்ற முகவரொருவருக்கு உரிய மொழிப் புலமை காணப்படாதவிடத்து அவருக்குப் பாதிப்பு ஏற்படக்கூடியவாறு நிகழ்ச்சியை நெறிப்படுத்தக்கூடாது. அச்சு ஊடகங்களில் நேர்காணல்களை வெளியிடும் போது மொழிப் புலமையின்மை கலந்துரையாடலில் கலந்து கொள்கின்ற அரசியல்வாதிக்கு பாதிப்பை ஏற்படுத்தத்தக்கவாறு செயற்படுதல் கூடாது. தெளிவற்ற, புரிந்து கொள்ள முடியாத வினாக்களினூடாகப் பெறப்பட்ட தகவல்களை வெளியிடவும் கூடாது. உறுதி செய்து கொள்ள முடியாத அல்லது இனப் பிரிவுகளிடையில் வெறுப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் அல்லது

முறையற்ற விடயங்களை வெளியிடுவதிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறு கலந்து கொள்வோர்களுக்கு கலந்துரையாடலின் ஆரம்பத்திலேயே பிரசித்தமாக அறிவித்தல் வேண்டுமென்பதோடு, கலந்துரையாடலின் இடையில் அவ்வாறான முறையற்ற செயற்பாடொன்று இடம்பெறுமாயின், நிகழ்ச்சியை இடைநிறுத்தல் வேண்டும்.

14. தொலைபேசி மூலம் வினாக்களும், தகவல்களும் பெறப்பட்டு நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சிகளின் போது, அனைத்துத் தொடர்பாளர்களுக்கும் அவர்களின் வினாக்களிலோ அல்லது முன்மொழிவுகளிலோ உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் எவையாயினும் சமமான சந்தர்ப்பங்கள் வழங்கப்படல் வேண்டும். அந்நிகழ்ச்சிகளின் சமநிலைத் தன்மைக்கு அந்நிகழ்ச்சிகளை நடாத்தும் அனைத்து அலுவலர்களும் வகை கூறுதல் வேண்டும்.

15. எந்தவோர் இலத்திரனியல் அல்லது அச்சு ஊடக நிறுவனத்தின் தவிசாளரொருவர், பணிப்பாளர் சபை அங்கத்தினரொருவர் அல்லது பொறுப்புமிக்க ஊடகவியலாளரொருவர் அரசியல் நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபாடு கொண்டவராகவிருப்பின், அத்தகைய ஈடுபாடு சமநிலையான செய்தி மற்றும் பிரச்சாரங்களின் ஒலி/ஒளிபரப்பைப் பாதிக்கச் செய்யவல்ல சிக்கல்களைத் தோற்றுவிக்க ஏதுவாக அமையலாம். ஆதலால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் கீழ்வரும் விடயங்களை நிறுவனத்தின் முகாமைத்துவத்தினர் அறிந்து கொள்வதற்காக எழுத்து மூலம் நிகழ்ச்சிக்கு முன்னர் உரிய அலுவலர்கள்/ஊழியர்களால் அறிவிக்கப்படல் வேண்டும்.

(அ) அத்தகையயவர்களின் தலையீட்டின் இயல்பு ;

(ஆ) அத்தகையவர்களின் தொழிலின் இயல்பும் மட்டமும் ;

(இ) நிகழ்ச்சிகளைத் தயாரிக்கின்ற போது அத்தகையவர்களின் அழுத்தம் மற்றும் தலையீட்டின் பரப்பெல்லை.

16. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் முக்கிய பதவியொன்றை (தலைவர், தவிசாளர், செயலாளர், தேசிய அமைப்பாளர், பொருளாளர், பிரதித் தலைவர், உப தலைவர், சிரேட்ட பிரதித் தலைவர் அல்லது அதற்குச் சமமான அதிகாரம் கொண்ட) வகிக்கின்ற நபரொருவர் ஊடக நிறுவனமொன்றில் பணிப்பாளர் சபைத் தலைவர், பணிப்பாளர் சபை அங்கத்தவர், பிரதம நிறைவேற்று/பிரதம ஆசிரியர் போன்ற முக்கிய பதவியொன்றை வகிக்கும் போது அந்நபர் ஏதேனும் தேர்தலொன்றில் வேட்பாளராகப் போட்டியிடுவாராயின் அல்லது அவர் முக்கிய பதவியொன்றை வகிக்கின்ற கட்சி தேர்தலில் நேரடியாக அல்லது அங்கீகரிக்கப்பட்ட முன்னணியாகப் போட்டியிடுமாயின் அத்தேர்தல் காலக்கெடுவினுள் அவர் ஊடக நிறுவனத்திற்குரிய பதவியில் மும்முரமாக ஈடுபடுவதைத் தவிர்ந்து கொள்ளல் வேண்டும். மேலும் ஏதேனும் தேர்தலொன்றில் போட்டியிடும் கட்சியொன்றின் முக்கிய பதவியொன்றை வகிக்கும் நபரொருவர் அல்லது தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் நபரொருவர் அத்தேர்தல் காலக்கெடுவினுள் தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடகங்களில் அரசியல் சார்பான நிகழ்ச்சிகளை நெறிப்படுத்துவதிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டுமென்பதோடு, அச்சு ஊடகமொன்றில் நிரந்தர பணியில் ஈடுபட்டிருப்பாராயின் அவ்வூடகத்தினூடாக தனது அரசியல் சார்பான கடிதங்கள்/ஆவணங்கள் என்பனவற்றைப் பிரசுரிப்பதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளல் வேண்டும்.

17. ஏதேனுமொரு ஊடக நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்படுகின்ற கலந்துரையாடலில் அல்லது செவ்வியில் பங்குபற்ற கட்சியொன்று / நபரொருவர் மறுக்கின்ற சந்தர்ப்பமொன்றில் மற்றும் அவ்வாறு மறுப்பதற்கான காரணங்களை முன்வைக்காத சந்தர்ப்பத்தில் ஊடக நிறுவனத்தினால் அத்தகைய கட்சிக்கு/ நபருக்கு வசதியீனமொன்று ஏற்படாத விதத்தில் செயற்படுதல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பங்களில் வெற்றுக் கதிரையொன்றைக் காட்டுவது போன்ற நாடகப் பாணியிலான உத்திகளுக்குப் பதிலாக நேரடியாக மற்றும் எளிய அறிவித்தலொன்றின் மூலம் கலந்து கொள்ளாமையை வெளிப்படுத்துவது பொருத்தமாகும்.

18. கருத்துக் கணிப்பொன்றின் முடிவுகளை இலத்திரனியல் ஊடகமொன்றின் ஊடாக ஒளிபரப்புகையில் அல்லது அச்சக ஊடகமொன்றில் பிரசுரிக்கின்றவிடத்து அக்கருத்துக் கணிப்பை நடாத்திய அமைப்பை அறிமுகப்படுத்தல், அப்பணி பொறுப்புவிக்கப்பட்ட மற்றும் அதற்காக நிதி ஒதுக்கீடு வழங்கிய நிறுவனம் அல்லது நபர், பயன்படுத்தப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை, தவறுகளின் எல்லை மற்றும் களத்தில் பணியாற்றிய நாட்கள் என்பன குறிப்பிடப்படல் வேண்டும். கருத்துத் கணிப்பு நடாத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலவிய மக்கள் கருத்து மாத்திரம் இதன் மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ளதென ஒலி/ஒளிப்பாளர் குறிப்பிடுதல் வேண்டும்.

19. போட்டியிடுகின்ற வேட்பாளரொருவரினால் வேறு கட்சியொன்றின்/குழுவொன்றின் அல்லது எதிர்க்கட்சியொன்றின்/குழுவொன்றின் வேட்பாளரொருவரின் வெற்றியை ஊக்குவிக்கக் கூடியதாக வெளியிடப்படுகின்ற கருத்துக்களை பிரச்சாரம் செய்யக்கூடாது. பிரசுரித்தல் கூடாது.

20. தேர்தல்கள் ஆணைக்குழு/தேர்தல்கள் ஆணையாளரினால் வழங்கப்படும் எழுத்து மூலமான அனுமதியின்றி வாக்கெடுப்பு நிலையத்தினுள் அல்லது அஞ்சல் வாக்களிப்பு நிலையத்தினுள் புகைப்படம் பிடித்தல், காணொளிக் காட்சிகளை எடுத்தல் (வீடியோ) என்பன தடைசெய்யப்பட்டுள்ளதால் அவ்வாறு செய்வதிலிருந்து சகல ஊடகவியலாளர்களும் தவிர்ந்து கொள்ளல் வேண்டுமென்பதோடு, சட்டவிரோதமாக எடுக்கப்படும் புகைப்படங்கள்/ காணொளிக் காட்சிகளை (வீடியோ) பத்திரிகைகளில் பிரசுரித்தல் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் ஒலி/ ஒளிப்பரப்புச் செய்தல் என்பவற்றை தவிர்ந்து கொள்ளல் வேண்டும். அனுமதி பெற்றுக் கொண்டதன் பின்னர், பெறப்படுகின்ற காட்சிகளாயினும், ஒலி/ஒளிப்பரப்புச் செய்யப்பட வேண்டியது தேர்தல் நிறைவடைந்ததன் பின்னராகும்.

21. முன்னைய சந்தர்ப்பங்களில் ஒலி/ஒளிபரப்பப்பட்ட கலந்துரையாடல்கள், விவாதங்கள் மற்றும் அத்தகைய நிகழ்ச்சிகள் முதலியவற்றை தேர்தல் தினத்திற்கு முன்னரான 48 மணித்தியாலங்களுக்குள் மீள் ஒலி/ ஒளிபரப்புச் செய்வதோ வெளியிடுவதோ கூடாது. தேர்தல்களுக்குரியதாக கட்சிகளின்/வேட்பாளர்களின் பிரச்சார நடவடிக்கைகளில் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களினால் வெளிப்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் வாக்குறுதிகள் தொடர்பாக வாக்காளர் நடுநிலையிலிருந்து கருத்திலெடுக்க முடிந்தவாறு அமைதியான சூழ்நிலையொன்றை வாக்கெடுப்புத் தினத்திற்கு முன்னர் ஏற்படுத்துவது முக்கியமாதலால், வாக்கெடுப்புத் தினத்திற்கு முன்னர் அமைதியான காலமொன்றாக (பிரச்சார அலுவல்களிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டிய காலமொன்றாக ) சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ள (48 மணித்தியாலயத்திற்குள்) தேர்தலோடு தொடர்புடைய கலந்துரையாடல், வாதவிவாதங்கள், வர்த்தக அறிவித்தல்கள் என்பவற்றைப் பிரச்சாரம் செய்வதிலிருந்தும் வெளியிடுவதிலிருந்தும் ஊடக நிறுவனங்கள் தவிர்ந்திருத்தல் வேண்டும்.

22. இலங்கையர்களால் பின்பற்றப்படுகின்ற சமயங்கள், பயன்படுத்துகின்ற மொழிகள், அவர்களின் இனக் குழுமம், பழக்கவழக்கங்கள் மற்றும் ஏனைய குலகோத்திர வேறுபாடுகள் தொடர்பாக நபர்களிடம் குரோதம் மற்றும் பொறுமையின்மையை ஏற்படுத்துகின்ற அல்லது உக்கிரமடையச் செய்கின்ற விதத்திலான பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளல் கூடாது.

23. குரோத அரசியல் மனப்பான்மையை கட்சிக்காரர்கள் மற்றும் சமுகத்திலும் விருத்தியடையச் செய்யக்கூடிய விதத்திலான பிரச்சார நடவடிக்கைகளைத் தவிர்ந்து கொள்ளல் வேண்டும்.

24. வேட்பாளரொருவர் அல்லது ஆதரவாளரொருவர் வேறு கட்சியொன்றின் அல்லது குழுவொன்றின் வேட்பாளர் ஒருவர் தொடர்பில் ஏற்கனவே வெளியிட்ட கருத்தொன்று, வெளியிட்ட நபருக்கு பாதிப்பொன்றானவாறு அல்லது அடுத்த நபருக்கு ஊக்குவிப்பொன்றை ஏற்படுத்தக்கூடியவாறு அக்கருத்தை வெளியிட்டவரின் இணக்கப்பாடு அல்லது அங்கீகாரமின்றி மீளப் பிரசுரித்தல் மற்றும் ஒலி/ ஒளிப்பரப்புச் செய்வதிலிருந்து தவிர்ந்திருப்பது பொருத்தமென்பதோடு, அவர் வேறொவருவர் அல்லது கட்சியொன்று தொடர்பில் வெளியிட்ட கருத்தை அடிக்கடி பிரச்சாரம் செய்வதிலிருந்து தவிர்ந்திருக்குமாறு குறித்த கருத்தை வெளியிட்ட நபர் செய்கின்ற கோரிக்கைக்கு இசைவு காட்டல் வேண்டும்.

25. அநாமதேய மற்றும் வெளியீட்டாளரின் பெயர் குறிப்பிடப்படாத போலி நபர் அல்லது அமைப்புக்களின் பெயர்களைப் பயன்படுத்தி வெளியிடப்படுகின்ற அறிவித்தல்களை ஊடக நிறுவனங்கள் ஊடாக பிரச்சாரம் செய்தல் கூடாதென்பதோடு, அதற்கான பொறுப்பு குறித்த ஊடக நிறுவனத்தை சாரும்.

26. தேசிய கீதம், தேசியக் கொடி, சமய சின்னங்கள், சமயக் கொடிகள், சமயக் குரவர்களின் சித்திரங்கள், உருவப்படங்கள் என்பவற்றை கட்சி/குழு அல்லது வேட்பாளர் ஊக்குவிப்புக்காக அல்லது பாதிப்புக்குட்படுத்துவதற்கு ஏதுவான விதத்தில் பிரசுரித்தல் அல்லது ஒலி/ஒளிபரப்புச் செய்தல் கூடாது. அவ்வாறானவைகள் உள்ளடக்கப்பட்ட அறிவித்தல்களை ஒலி/ ஒளிப்பரப்புச் செய்தல் கூடாது.

27. போலியான கருத்துக்கள்/செய்திகளை வெளியிடுதல் தொடர்பான முழுப்பொறுப்பையும் வெளியிடுகின்ற நபரும், அவ்வூடக நிறுவனங்கள் பொறுப்பேற்றல் வேண்டுமென்பதோடு, அது தொடர்பாக எழுகின்ற சட்டரீதியான பிரச்சினைகளுக்கான பொறுப்பும் அவர்களுக்குரியதே.

28. ஊடக ஒழுக்க நெறிகள் மற்றும் வழிகாட்டு நெறிகளுக்கு இசைவாகவும் அவை மீறப்படாத வகையிலும் செயற்படுவது அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களின் பொறுப்பாகும்.

29. அரச ஊடக நிறுவனங்களால் கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்காக அரச ஆதனங்கள் மற்றும் நிதியங்களைப் பயன்படுத்துவது பத்தொன்பதாம் அரசியலமைப்புத் திருத்தத்தின் கீழ் சட்டவிரோதமான செயற்பாடொன்றென்பதோடு, அரசிற்கு செலுத்தப்பட வேண்டிய நிதியை அறவிடாமை அல்லது வேறு விதமொன்றில் நிறுவனத்திற்கு நட்டம் ஏற்படும் விதத்தில் செயற்படுதல் குற்றமொன்றாகும். அதற்கு அரசியலமைப்பின் மூலம் விதிக்கப்பட்டுள்ள தண்டனைகளுக்கு மேலதிகமாக ஒழுக்காற்று நடவடிக்கையெடுப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால் அவ்வாறான நடவடிக்கைகளை சகல அரச மற்றும் அரச சார்பான ஊடக நிறுவனங்கள் தவிர்ந்து கொள்ளல் வேண்டும்.

30. மேலே காட்டப்பட்டுள்ள ஊடக வழிகாட்டு நெறிகளை அதேவிதத்திலேயே பின்பற்ற அனைத்து அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் உரிமையாளர்களின் பொறுப்பாகுமென்பதோடு, அவ்விதத்தில் அந்நிறுவனங்கள் செயற்படுகின்றதென்பதை அவர்கள் உறுதிசெய்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

31. மேலே காட்டப்பட்டுள்ள ஊடக வழிகாட்டு நெறிகளை அதே விதத்தில் தேர்தல் காலக்கெடுவினுள் செயற்படுத்துவதற்கு அனைத்து சமூக இணையத்தளங்களின் உரிமையாளர்களும், தயாரிப்பாளர்களும் நடவடிக்கையெடுப்பார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

32. இவ்வூடக வழிகாட்டி நெறிகளுக்கு இசைவாக செயற்படுவது ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் சமூக இணையத்தளங்களை பேணிச் செல்வோர்/ பயன்படுத்துவோரின் கடமையொன்று மாத்திரமன்றி பொறுப்பொன்றெனவும், கவனத்தில் கொள்வது கட்டாயமாகும். ஏனெனில், நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு இவ்வூடக வழிகாட்டி நெறிகளுக்கு இசைவாக செயற்படுவது கட்டாயமென்பதாலாகும்.

33. மேற்படி ஊடக வழிகாட்டு நெறிகளை செயற்படுத்தும் போது எழக்கூடிய பிரச்சினைகள் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் நிரந்தர முகவர்கள் மற்றும் தேர்தல் முறைப்பாட்டு விசாரணை ஒருங்கிணைப்பு நிலையத்தின் ஒருங்கிணைப்பு அலுவலர்கள் மற்றும் தேர்தல்கள் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் முகவர்களைக் கொண்ட நிரந்தர முகவர்களின் குழுவிலும் கலந்துரையாடி அதன் மூலம் எட்டப்படுகின்ற பரிந்துரைகள் மற்றும் ஏற்புடையவிடத்து மனித உரிமை ஆணைக்குழுவின் கருத்துக்கள்/பரிந்துரைகள் ஆராய்ந்து பார்க்கப்பட்டு தேர்தல்கள் திணைக்களத்தின் அலுவலர்கள் ஊடக அமைச்சின் மற்றும் தகவல் திணைக்களத்தின் முகவர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் நிரந்தர முகவர்களை உள்ளடக்கிய ஊடக வழிகாட்டு நெறிகளை செயல்வலுப்பெறச் செய்யும் குழுவின் தீர்மானங்களுக்கமைய செயற்படல் வேண்டும். அதாவது இவ்வூடக வழிகாட்டு நெறிகளை செயற்படுத்துவதற்குரிய வழிகாட்டல், செயற்படுத்தல் மற்றும் மேற்பார்வை மேலே காட்டப்பட்ட ஊடக வழிகாட்டு நெறிகளை செயல்வலுப்பெறச் செய்யும் குழுவின் பொது இணக்கப்பாட்டோடு, மேற்கொள்ளப்படல் வேண்டும்.

34. அரசியல் கட்சியொன்றினால்/வேட்பாளரொருவரினால் மேலே காட்டப்பட்டுள்ள வழிகாட்டு நெறிகளுக்கு முரணான விதத்தில் செய்யப்படுகின்ற கட்டளையொன்றை, கோரிக்கையொன்றை பிரச்சாரம் செய்வதற்கு அல்லது வெளியிடுவதற்கு ஊடக நிறுவனமொன்று அல்லது ஊடகவியலாளரொருவர் கட்டுப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான சந்தர்ப்பமொன்றின் போது ஊடக நிறுவகமொன்றிற்கு அல்லது ஊடகவியலாளரொருவருக்கு சட்டத்தின் உதவியை கோருவதற்குள்ள உரிமையை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

* இவ்வூடக வழிகாட்டு நெறிகள் வெளியிடப்பட்டிருப்பது நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு அவசியமான சிறந்த நிலைமையொன்றை பேணி செல்வதற்காக என்பதால், இவ்வழிகாட்டு நெறிகளுக்கு இசைவாக செயற்படுவதற்கு ஊடக நிறுவனங்களுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவது மற்றும் இவ்வழிகாட்டு நெறிகளுக்கு இசைவாக செயற்படுவதற்கு தடையேற்படுத்துவதிலிருந்து தவிர்ந்திருப்பது அனைத்து அரசியற் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள், கண்காணிப்பு அமைப்புக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள், அனைத்து பிரசைகள் ஆகியோருக்கு கையளிக்கப்படுகின்ற பொறுப்பொன்றாகும். ஆகையால் இவ்வழிகாட்டி நெறிகளுக்கு இசைவாக செயற்படுவதற்கு அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு உரிய அனைத்து தரப்பினரும் நடவடிக்கைகளையெடுப்பார்களென தேர்தல்கள் ஆணைக்குழு அல்லது தேர்தல்கள் ஆணையாளர் எதிர்பார்த்துள்ளார்.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

2015.07.19.

**குறிப்பு :**

முன்னைய தேர்தல்களின் போது, வெளியிடப்பட்ட ஊடக வழிகாட்டு நெறிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட வரைவு, ஊடக நிறுவனங்களின் தலைவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டதெனவும், அதன் பின்னர் அந்நிறுவனங்களின் தலைவர்களால் பெயர் குறிக்கப்பட்ட நிரந்தர முகவர்களுடன் கலந்துரையாடி எட்டப்பட்ட பொது இணக்கப்பாட்டோடு, இவ்வூடக வழிகாட்டு நெறிகள் வெளியிடப்பட்டுள்ளதென்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1924/44 - 2015 ජූලි මස 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.07.23

*1924/44 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*2015 பாராளுமன்றத் தேர்தலுக்குச் செல்லுபடியாகும் விதத்தில் மீள் விநியோகம் செய்யப்பட்டது*

**தேர்தலொன்றின்போது தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் ஆகியோரினால் பின்பற்றப்படவேண்டிய ஒழுக்க நெறிக்கோவை**

2009 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 8 (8) ஆம் பிரிவுக்கு அமைய இவ்வொழுக்க நெறிக்கோவை வெளியிடப்படுகின்றது. இவ்வொழுக்க நெறிக்கோவை தேர்தலொன்றிற்கான பெயர் குறித்த நியமன அறிவித்தல் வெளியிடப்படுகின்ற தினத்திலிருந்து தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும் வரையிலான காலத்திற்கு செல்லுபடியாகும்.

தேர்தல்கள் சட்டத்திற்கமைய அரசியல் கட்சிகள் அங்கீகரிக்கப்பட முன்னரும் கூட இந்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் காணப்பட்டனவென்பதோடு, இவை தொடர்பான வரலாறு 1931 ஆம் ஆண்டு வரை நீண்டு செல்கிறது. அரசியல் கட்சிகளை அங்கீகரித்தல் தொடர்பான சட்டம் 1959 ஆம் ஆண்டிலிருந்து பல சந்தர்ப்பங்களிலும் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. சமகால சமுகத்தின் இயக்கத்திற்கு அரசியல் கட்சிகளினால் ஆற்றப்படுகின்ற சேவைகளை அர்த்தமுள்ளவையாகவும் விளைபயன் மிக்கவையாகவும் மாற்றுவதற்கு சட்ட விதிகளினூடாக மேற்கொள்ள முடிந்த செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் நீதியானதும் சுதந்திரமானதுமானதேர்தலொன்றை நடாத்துவதற்கான சிறந்த நிலைமையொன்றை பேணி கொள்வதன் பாரிய பொறுப்பு அரசியற் கட்சிகளுக்கே சுமத்தப்படுகின்றது.

அப்பொறுப்பையும் கருத்திலெடுத்து 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலை நோக்காகக் கொண்டு இவ்வொழுக்க நெறிக்கோவை முதல் முதலாக தேர்தல்கள் திணைக்களத்தினால் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்காகவெனப் பிரகடனப்படுத்தப்பட்டது. மேலும், 2012 ஆம் ஆண்டிலிருந்து நடாத்தப்பட்ட தேர்தல்களின் போதும் இவ்வொழுக்க நெறிக் கோவையில் காட்டப்பட்டுள்ள விடயங்களை ஒத்ததாக தயாரிக்கப்பட்ட ஒழுக்க நெறிக்கோவைக்கு கட்சிச் செயலாளர்களின் இணக்கப்பாடும் மற்றும் தேர்தல் முறைபாட்டு விசாரணைக்கான அரசியற் கட்சி முகவர்களின் மற்றும் கண்காணிப்பு அமைப்புக்களின் முகவர்களின் இணக்கப்பாடு கிடைக்கப்பெற்றிருந்தது.

இவ்வொழுக்க நெறிக்கோவை 2015 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியற் கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து முதன்மை பதவி தாங்குநர்களுக்கும், போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கும், மாகாண சபை மற்றும் உள்ளூரதிகார சபை ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளுக்கும் மற்றும் அனைத்து அரசியற் கட்சிகளின் செயற்பாட்டாளர்களுக்கும், வேட்பாளர்களின் ஆதரவாளர்களுக்கும் ஏற்புடையதாகுமென்பதைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். இலங்கையின் தேர்தல்களில் அரசியல் கட்சிகளுக்குப் புறம்பாக வேட்பாளர்களைப் பிரதிநிதித்துவதுப்படுத்துபவை சுயேச்சைக் குழுக்களே என்பதால் இவ்வொழுக்க நெறிக்கோவை அத்தகைய சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களுக்கும் பொருந்தும்.

ஆதலால், இதில் காட்டப்பட்டுள்ள ஒழுக்க நெறிகளுக்கு இசைவாக செயற்படுமாறு மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நபர்களுக்கும் தயவன்புடன் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

அ. சட்டவலு

01. இலங்கை அரசியல் அமைப்பினாலும் ஏனைய நியதிச் சட்டங்களினாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பிரசைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படும் விதத்தில், தேர்தல் சட்டங்களுக்கமைய மக்கள் பிரதிநிதிகளுக்கான வாக்கெடுப்போடும் மக்கள் கருத்துக் கோடலோடும் தொடர்புடைய தேர்தல்களில் வாக்காளருக்கு சுதந்திரமாகவும் எவ்வித வலுக்காட்டாயமின்றியும் தமது வாக்கினை அளிப்பதற்கு அவகாசமளித்தலும் அதற்குத் தேவையான உதவிகளையும் வலுவூக்கங்களையும் அளித்தலும்.

02. தேர்தலொன்றில் போட்டியிட முன்வருகின்ற அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களுக்கும் தேர்தல் செயன்முறையில் உரித்தாக்கப்பட்டுள்ள சமத்துவத்தை அனைத்து கட்டங்களிலும் பாதுகாத்தல்.

03. அனைத்து அரசியற் கட்சிகள், வேட்பாளர்களுக்கு உரித்தான உரிமைகளுக்கும் வாக்காளர்களை அறிவூட்டுவதற்கெனவுள்ள உரிமைக்கும் மதிப்பளிப்பதோடு, எதிர்த் தரப்பினருக்கு அவர்களின் கருத்தைக் கொண்டிருப்பதற்கும் அதற்காக சட்டரீதியாக பிரச்சார அலுவல்கள் / ஊக்குவிப்பு அலுவல்களை மேற்கொள்வதற்குள்ள உரிமையைப் பாதுகாத்தல்.

04. இலங்கையின் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள அரச, அரச சார்பான, தனியார் அல்லது ஏனைய நிறுவனங்களுக்கு சட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டுள்ளவாறான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எவ்விதத்திலும் தடங்கல்களையோ அழுத்தங்களையோ ஏற்படுத்தாமை.

05. நாட்டின் சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாக்கின்ற நியதிச் சட்டப் பொறுப்புச் சாட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கும் அவை பொறுப்புவிக்கப்பட்டுள்ளவர்களுக்குமுரிய கடமைகளை ஆற்றுகையில் தடங்கல்கள் அல்லது அழுத்தங்களை ஏற்படுத்தாமை.

06. பொதுமக்களின் இயல்பான வாழ்விற்கு இடையூறு ஏற்படுத்தாமலும் நடைமுறையிலுள்ள சட்ட திட்டங்கள் மீறப்படாமலும் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தல்.

07. அனைத்து தேர்தல்கள் தொடர்பாகவும் சட்டங்களில் காட்டப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் (பிரிவுகள்) தொடர்பாகவும் அனைத்து வேட்பாளர்களுக்கும் மற்றும் முதன்மை செயற்பாட்டாளர்களுக்கும் தெளிவைப் பெற்றுக் கொடுத்தலும் அச்சட்டங்களில் காட்டப்பட்டுள்ளவாறு தவறுகள், ஊழல் செயற்பாடுகள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறும் அறிவுரை வழங்குதல்.

08. வாக்கெடுப்பு அல்லது வாக்கெண்ணலுக்கு ஏதுவான பொருட்கள், உபகரணங்கள், ஆவணங்கள் என்பவற்றை உரிய அலுவலரொருவரின் அனுமதியின்றி தொடுதல் அல்லது களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள இடத்திலிருந்து வெளியில் எடுத்துச் செல்வதிலிருந்து தவிர்ந்திருத்தல்.

ஆ. பொது நடத்தைகள்

01. இலங்கையர்கள் அனுஷ்டிக்கின்ற சமயங்கள், பேசும் மொழிகள், அவர்களின் இனங்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் குலகோத்திரங்கள் போன்ற வேறுபாடுகள் தொடர்பாக இனப் பிரிவொன்று அல்லது ஆட்களிடையே பகைமையுணர்ச்சி மற்றும் பொறுமையின்மை என்பவற்றை ஏற்படுத்தவல்ல அல்லது தூண்டவல்ல விதத்திலான நடத்தைகளைத் தவிர்த்தல் மற்றும் அவ்வாறான உணர்வு ஏற்படுத்தத்தக்க விதத்தில் கருத்துக்களை அல்லது விடயங்களை வெளியிடுதல்.

02. அரசியல் கட்சிகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் விமர்சனங்கள், அந்தந்த கட்சிகளின் கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள், கடந்து போன நிகழ்வுகள் என்பவற்றிற்கு மட்டுப்படுத்த வேண்டுமென்பதோடு, எதிர்கட்சியினரின் அல்லது வேட்பாளர்களின் பொது நடவடிக்கைகளோடு தொடர்புபடாத, அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையின் அந்தரங்கங்களை விமர்சிப்பதைத் தவிர்த்துக் கொள்ளலும், நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுக்கள், நிரூபிக்கப்படாத விடயங்கள் மற்றும் திரிபுபடுத்தப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் விமர்சனங்களை மேற்கொள்ளாதிருத்தலும்.

03. தேர்ந்தெடுத்தலின் மூலம் நிறுவப்பட எதிர்பார்க்கப்படுகின்ற நியதிச் சட்ட நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதனூடாக இலங்கையர்களின் எதிர்கால அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக அர்ப்பணம் செய்யக்கூடிய வேட்பாளர்களைப் போட்டியிடச் செய்து அவர்களை ஒழுக்க சீலத்துடனும் வினயமாகவும் போட்டியிட வழிகாட்டல்.

04. அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுத் தலைவர்கள் வேட்பாளர்களைப் போட்டியிடுவதற்காகத் தேர்ந்தெடுக்கின்ற போது, அவர்களின் முந்திய செயற்பாடுகளின் நேரிய தன்மை, சட்டத்தை மதித்து

செயலாற்றியமை, சட்டத்தின் முன்னால் குற்றச்சாட்டுக்களுக்காளாகாமை, பொதுமக்கள் சேவைக்கான அர்ப்பணங்களை மேற்கொண்டுள்ளமை, பணபலம் மற்றும் சமுக பலம் என்பவற்றைப் பயன்படுத்தி மக்கள் சமூகத்திற்கு அழுத்தங்களை ஏற்படுத்தாமை போன்ற குணநலன்களின் பால் கவனத்தை ஈர்க்க நடவடிக்கைகளை எடுத்தல்.

05. வேட்புமனுக்களைக் கையளிக்கின்ற போது அல்லது அதன் பின்னரான 30 நாட்கள் முடிவடைவதற்கு முன்னர் அனைத்து வேட்பாளர்களும் அவர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி வெளிப்படுத்துகைகளைத் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கையளித்தல்.

06. வாக்களிப்பு நிலைய வளவிற்குள் அல்லது வாக்கெண்ணல் நிலைய வளவிற்குள் புகைபிடித்தல் அல்லது மது அருந்திவிட்டு வருவதிலிருந்து தவிர்ந்து கொள்ளல் வேண்டுமென வேட்பாளர்கள்/முகவர்கள் ஆகியோரை அறிவூட்டுதல்.

07. வேட்புமனு கையேற்கும் நிலையம் அல்லது வாக்கெடுப்பு நிலையம் அதன் சுற்றுச் சூழல் மற்றும் வாக்கெண்ணல் நிலையம் மற்றும் முடிவுகளை வெளியிடும் நிலையம் என்பவற்றினுள் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள நபர்கள் மாத்திரமே உட்பிரவேசித்தல் மற்றும் அவ்விடங்களுக்கு சுடுகலன்களை எடுத்துவரக்கூடாதென்ற விதிகளுக்கு இசைவாக செயற்படுதல்.

08. தேர்தலுடன் தொடர்புடைய தடுக்கப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுதல் அல்லது தமது ஆதரவாளர்களை அப்பணிகளில் ஈடுபட தூண்டுதல், ஆதரவு தெரிவித்தல் மற்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடாதிருத்தல்.

**இ. தேர்தல் பிரச்சார அலுவல்கள்**

01. தேர்தலில் போட்டியிடுவதற்காக முன்வந்துள்ள அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் என்பன தேர்தல் சட்டத்தில் காட்டப்பட்டுள்ளவாறு தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை சட்டரீதியாகவும் சட்டம், அமைதி என்பன பேணப்படும் விதத்தில் மேற்கொள்ளல், எதிர்த்தரப்பினர்களின் சட்ட ரீதியான தேர்தல் நடவடிக்கைகளுக்கும் இடையூறு விளைவிக்காமை மற்றும் சட்டத்திற்குட்பட்டவாறு தேர்தல் பிரச்சார அலுவலகங்களைப் பேணுதல்.

02. அச்சிடப்பட்ட ஆவணங்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் மூலம் வாக்காளர்களை அறிவூட்டத்தக்க ஆவணங்களை அச்சிடல் மற்றும் பகிர்ந்தளித்தல் தொடர்பாக தேர்தல் சட்டத்துக்கு அமைய நடந்து கொள்ளல்.

   I. அச்சுப் பதிப்பாளரின்/வெளியீட்டாளரின் தகவல்களின்றி துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல், சட்டவிரோத அறிவித்தல்களை அச்சிடல் போன்ற விடயங்களிலிருந்து தவிர்ந்திருத்தல்.

   II. வேட்பாளர் அல்லது வேட்பாளரின் நெருங்கிய உறவினர் (வாழ்க்கைத்துணை, பிள்ளைகள், குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்கள்) துண்டுப் பிரசுரங்களைப் பகிர்ந்தளித்தல் அல்லது வாக்குகளை இரந்து கேட்டல் என்பனவற்றிற்காக வீடுவீடாகச் செல்வதிலிருந்து தவிர்ந்திருத்தல் மற்றும் துண்டுப் பிரசுரங்களை பகிர்ந்தளித்தலுக்காக வீடுவீடாகச் செல்லும் போது பெருந்தொகை மக்கள் கூட்டம் அல்லது இசை முழக்கம் பதாதைகளைப் பயன்படுத்தாதிருத்தல்.

03. தமது கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் அல்லது வேட்பாளர்களின் வெற்றியை இலக்காகக் கொண்டு அல்லது வேறொரு தரப்பினரின் தோல்வியை எதிர்பார்த்து எந்தவொரு தேர்தல் பிரச்சார அறிவித்தலையோ, பிரச்சார பலகைகளை அல்லது அதனோடு தொடர்புடைய புகைப்படத்தையோ, சித்திரங்கள் போன்வற்றை அனுமதியளிக்கப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகங்கள் அல்லது பிரச்சார கூட்டம் நடைபெறும் தினம் கூட்டம் நடைபெறும் காணியில் தவிர மக்களுக்கு தெரியக்கூடியவாறு அரசாங்க அல்லது தனியார் துறைக்குச் சொந்தமான கட்டிடமொன்றில், வதிவிடமொன்றில், வெற்றுக் காணியொன்றில் அல்லது பொதுமக்கள் பிரவேசிப்பதற்கென அனுமதிக்கப்பட்டுள்ள பாதைகளில் அல்லது பொது இடங்களில் சட்டவிரோதமாக காட்சிப்படுத்துவதைத் தவிர்த்தல்.

04. கட்சி/வேட்பாளர் வேறுபாடின்றி சாதாரண நிலைமையின் கீழ் வாடகை அடிப்படையில் வழங்கப்படும் கூட்ட மண்டபங்கள் அல்லது விளையாட்டு மைதானங்கள் தவிர தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக அரசாங்க அல்லது அரச சார்பான நிறுவனங்களுக்குரித்தான காணிகள், கட்டிடங்கள் மற்றும் ஆதனமொன்றை அல்லது சேவையொன்றைப் பயன்படுத்தப்படுவதிலிருந்து தவிர்ந்திருத்தல்.

05. தேர்தல் பிரச்சார/ ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்காக எந்தவொரு சமயத்தலத்தையோ, சமயத்தலமொன்றுக்குரித்தான காணியொன்றையோ, ஆதனமொன்றையோ பயன்படுத்துவதைத் தவிர்ந்து கொள்ளல்.

06. தேர்தலோடு தொடர்புடைய கொடிகள் அல்லது அறிவித்தல்கள் அல்லது ஸ்ரிக்கர்கள் மற்றும் வேட்பாளரின் இலக்கம், பெயர், புகைப்படம் என்பன வேட்பாளர் பயணம் செய்கின்ற வாகனத்தில் மாத்திரம் காட்சிப்படுத்தல் மற்றும் பதிவு செய்யப்படாத வாகனங்களில் அல்லது கராஜ் இலக்க/போலி இலக்கங்களைக் கொண்ட வாகனங்களை தமது சொந்த தேர்தல் பிரச்சாரங்களுக்கு ஈடுபடுத்தாதிருத்தல்.

07. தேர்தல் பிரச்சாரத்திற்காக மேற்கொள்ளப்படுகின்ற சோடனைகள் அனுமதியளிக்கப்பட்டுள்ள தேர்தல் பிரசாரக் கூட்டம் இடம்பெறுகின்ற காணியில் அக்காலப்பகுதிக்குள் மாத்திரம் சூழலை மாசுப்படுத்தாதவாறு மேற்கொள்ளலும் அத்தகைய கூட்ட நடவடிக்கைகளின் பின்னர் தாமதமின்றி அச்சோடனைகளை அகற்ற நடவடிக்கையெடுத்தலும்.

08. தேர்தல் காலக்கெடுவினுள் தேர்தல் பிரச்சார/ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்குரிய ஊர்வலங்களை, மக்கள் ஊர்வலங்களை மற்றும் வாகன ஊர்வலங்களை நடாத்துதல் தேர்தல் சட்டங்களை மீறும் செயல்களென்பதால் அவ்வாறான ஊர்வலங்கள் பாதயாத்திரைகள், வாகனப் பேரணிகள், துவிச்சக்கர வண்டி ஊர்வலங்கள் போன்ற எவற்றையும் தேர்தல் காலக்கெடுவினுள் நடத்தாதிருத்தல்.

09. ஒலிபெருக்கியைப் பயன்படுத்துவதற்கு அனுமதி பெறப்பட்ட கூட்டத்திற்காக மாத்திரம் ஒலிபெருக்கியைப் பயன்படுத்துவது கூட்டக் காலத்திற்கும் அக்காணிக்கும் மாத்திரம் மட்டுப்படுத்தப்படல், வாகனம் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் போது ஒலிபெருக்கியூடாக பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுவதைத் தவிர்த்தல்.

10. தேர்தல் தினத்தன்று வாக்கெடுப்பு ஆரம்பிப்பதற்கு 48 மணித்தியாலயத்துக்கு முன்னர் உரிய தேர்தல் சட்டத்திற்கு அமைய தேர்தல் பிரச்சாரங்களை நிறுத்த நடவடிக்கையெடுத்தல் மற்றும் அவ்வமைதி காலக்கெடுவினுள் அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாண்மையை ஊக்குவிக்கக் கூடியதாக இசை நிகழ்சிகளை நடாத்துதல், அச்சு/இலத்திரனியல் ஊடகங்களுடாகப் பிரச்சாரம் செய்தல் போன்ற பணிகளை இடை நிறுத்தல்.

11. எந்தவொரு கட்சியையும் அல்லது சுயேச்சைக் குழுவையும் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்தில், மாகாண சபையொன்றில் அல்லது உள்ளுர் அதிகார சபையொன்றின் பொதுமக்கள் பிரதிநிதியொருவராகப் பதவி வகிக்கின்றவர், ஏதேனுமொரு கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவை அல்லது அவற்றின் வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்வதற்காக தனக்கு பிரதிநிதியொருவர் என்ற வகையில் கிடைக்கப்பெற்றுள்ள வரப்பிரசாதங்களையும், தத்துங்களையும், வாகனங்களையும் மற்றும் ஏனைய அரசாங்க வளங்களையும் பயன்படுத்தாமை.

12. பொதுமக்கள் பிரதிநிதியொருவரின் பாதுகாப்புக்காக சட்டரீதியாக வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புத்துறை உத்தியோகத்தர்கள் அல்லது அவர்களின் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ள சுடுகலன்கள் ஏனைய பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் கருவிகள் என்பவற்றை குறித்த மக்கள் பிரதிநிதியின் பாதுகாப்புக்காகவன்றி வேறெந்தவொரு சட்டரீதியற்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்துவதைத் தவிர்த்தல்.

13. ஏதேனுமொரு தேர்தல் சட்டத்துக்கமைய இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினூடாகப் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளுக்கும், சுயேச்சைக் குழுக்களுக்கும் தேர்தல் சட்டத்தின் கீழ் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக வழங்கப்படுகின்ற வானலைக் கால எல்லை, உரிய கூட்டுத்தாபனத் தலைவர்கள் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோரால் வெளியிடப்படுகின்ற அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைகளுக்கமையப் பயன்படுத்தப்படல். (மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்குப் பொருந்தாது.)

14. ஏதேனுமொரு தேர்தல் சட்டத்துக்கமைய தேர்தலொன்றின்போது வாக்காளர் பதிவு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் செய்தியொன்றை அனுப்புவதற்குள்ள உரிமையை, உரிய சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அஞ்சல் மா அதிபரினால் விதிக்கப்படுகின்ற நிபந்தனைகள் என்பவற்றுக்கமையப் பயன்படுத்துதல் (இவ்வாய்ப்பு மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்குப் பொருந்தாது.).

15. க.பொ.த. சாதாரண தரம் அல்லது உயர்தரப் பரீட்சைகள் மற்றும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை உட்பட முக்கியமான பரீட்சைகள் இடம்பெறும் பாடசாலைகள் மற்றும் அப்பரீட்சைகளின் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்படும் பாடசாலைகள், பரீட்சை நிலையங்கள் என்பவற்றின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் விதத்தில் அப்பாடசாலைகளின்/ நிலையங்களின் சுற்றுப்புறத்தில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்ந்து கொள்ளல்.

16. எவரேனும் வேட்பாளரொருவரினால் அல்லது வேறு கட்சியொன்று அல்லது வேட்பாளர் ஒருவர் தொடர்பாக முன்னர் தெரிவித்த கூற்றொன்றை அல்லது கருத்தொன்றை தெரிவிப்பதற்கு வேறு கட்சியொன்று அல்லது வேட்பாளரொருவர் ஊக்குவிப்புக்கு அல்லது பாதிப்புக்குட்படுத்துவதற்காக பயன்படுத்தல் தொடர்பில் அக்கூற்று அல்லது கருத்துத் தெரிவித்த நபர் எதிர்ப்பு தெரிவிப்பாராயின், அவ்வாறான கூற்று / கருத்து தெரிவித்தல் என்பனவற்றை பயன்படுத்துவதிலிருந்து தவிர்ந்திருத்தல்.

**ஈ. வாக்கெடுப்புத் தினம்**

01. தேர்தல் தினத்தன்று வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து 500 மீற்றர் தூரத்திற்குள் மேற்கொள்வதற்கு தடைசெய்யப்பட்டுள்ள எந்தவொரு நடவடிக்கையொன்றையும் குறிப்பாக வாக்குகளை இரந்து கேட்டல் போன்ற தேர்தல்கள் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களை இழைக்காமை.

02. வாக்களிப்புக்காக வாக்கெடுப்பு நிலையத்திற்கு வருகை தருகின்ற வாக்காளர்களுக்கு மற்றும் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கினைப் பிரயோகிப்பதற்காக வருகின்ற வாக்காளர்களுக்கு எவ்வித இடைஞ்சலும் ஏற்படுத்தாமையும், வாக்கினைப் பிரயோகிப்பதற்கான அழுத்தங்களை ஏற்படுத்தாமையும் வாக்காளர்களுக்கு தமது வாக்கினை சுதந்திரமாகவும், அந்தரங்கமாகவும் பிரயோகிப்பதற்குள்ள உரிமைக்குப் பங்கம் ஏற்படுத்தாமையும்.

03. தேர்தல் தினத்தன்று வாக்காளர்கள், வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், வேட்பாளர்கள், கண்காணிப்பாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்கள் ஆகியோர் எந்தவோர் அச்சுறுத்தலுக்கும் ஆளாக்கப்படுதல், உடல் ரீதியான சித்திரவதைகளுக்கு இலக்காக்கப்படுதல் அல்லது அவர்களின் ஆதனங்களுக்கு சேதம் விளைவித்தல் என்பவற்றைத் தவிர்ந்து கொள்ளல் மற்றும் வாக்களிக்க வருகின்ற அல்லது வாக்களித்து விட்டுச் செல்கின்ற வாக்காளர்களை அச்சுறுத்துதல், அவர்களுக்கு இடையூறு விளைவிப்பதிலிருந்து தவிர்ந்திருத்தல், வாக்கெடுப்பு நிலைய முகவர்களை வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து விரட்டுவதைத் தவிர்த்தல்.

04. வாக்கெடுப்புத் தினத்தன்று வாக்கெடுப்பு நிலையத்திற்குள் உட்பிரவேசிப்பதற்காக அனுமதியுள்ளவர்கள் மாத்திரம் (போட்டியிடுகின்ற அரசியல் கட்சியொன்றின் செயலாளர், வேட்பாளர்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலைய முகவர்கள்) உட்பிரவேசிக்க வேண்டுமாதலால் அது தொடர்பில் ஒத்துழைப்பு வழங்கி செயற்படுதல் மற்றும் தத்தம் ஆளடையாளத்தை நிரூபித்தல் மற்றும் வாக்கெடுப்பு நிலையத்தினுள் பாதுகாவலர்கள், ஊடகவியலாளர்கள் அல்லது புகைப்படப்பிடிப்பாளர்களை அழைத்து வராதிருத்தல்.

05. தேர்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எத்தகைய குற்றத்தையும், தேர்தல் ஊழல் நடவடிக்கைகளையும் ஆற்றுவதையும் ஒத்துழைப்பு வழங்குவதையும், தவிர்த்தல். (வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குப் பெட்டிகளை வலுகட்டாயமாக நிரப்புதல், வாக்கெடுப்பு நிலையத்திற்குள் அத்துமீறிப் பிரவேசித்தல், ஆள்மாறாட்ட வாக்குகளை அடையாளமிடல் போன்ற தவறான ஊழல் நடவடிக்கைகள்).

06. சட்ட ரீதியற்ற முறையில் வாக்கெடுப்பு நிலையத்திற்கு வாக்காளர்களைப் போக்குவரத்துச் செய்யாமலிருக்க வழிவகை செய்தல்.

07. வாக்கெடுப்பை நடாத்துவதற்காக அந்நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவுள்ள பணியாட்குழுவுக்கு எதிர்பார்க்கப்பட்டவாறு ஒத்துழைத்தலும், அவர்களின் பணிகளுக்கு முகவர்கள் இடையூறு ஏற்படுத்தாமைக்கு வழிவகை செய்தலும்.

08. தேர்தல்கள் ஆணையாளரின் அங்கீகாரத்தோடு, வாக்கெடுப்பு நடவடிக்கைகளைக் கண்காணிக்கின்ற முகவர்களுக்கு கண்காணிப்பு நிறுவனங்களின் முகவர்களுக்கு தடங்கலேற்படுத்தாமையும் அவர்களின் பணிகளை ஆற்றுவதில் ஒத்துழைப்பு வழங்கலும்.

09. வாக்கெடுப்பு நிலைய வளவினுள் புகைப்படமெடுத்தல், கையடக்க தொலைபேசி பாவனை போன்ற தடை செய்யப்பட்ட செயற்பாடுகளை செய்யாதிருத்தல்.

மேற்குறித்த விடயங்கள் ஏற்புடைத்தாகின்றவிடத்து அஞ்சல் வாக்குகள் அடையாளமிடப்படும் தினத்திற்கும் செல்லுபடியாகுமெனக் கருதுதல் பொருத்தமாகும்.

**உ. வாக்குகள் மற்றும் விருப்புக்கள் எண்ணல் (அஞ்சல் வாக்குகள் உள்ளிட்ட) மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல்**

1. வாக்குகள் மற்றும் விருப்புக்களை எண்ணல் (அஞ்சல் வாக்கெண்ணல் உள்ளிட்ட) நடைமுறை தொடர்பாக தமது வாக்கெண்ணல் முகவர்களை அறிவூட்டலும் முறைப்பாடுகளை சமர்ப்பிக்கும் உரிய முறைமை தொடர்பாக தமது முகவர்களை அறிவூட்டலும்.

02. வாக்கெண்ணல் நிலையத்திற்குள்ளேயும் மற்றும் பெறுபேறுகள் தயாரிக்கப்படும் நிலையத்திற்குள்ளேயும் அந்நடவடிக்கைகளை நிருவகித்தல் தொடர்பாக தெரிவித்தாட்சி அலுவலர், தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோரால் விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கையெடுத்தல் இன்றியமையாததென தத்தம் முகவர்களை அறிவூட்டல்.

03. வாக்கெண்ணல் முகவர்களாக முறையாக நியமனஞ் செய்யப்படாவிடின் அதாவது முறையான அனுமதியில்லாது அரசாங்கத்தின் அல்லது மாகாண சபைகளின் அமைச்சர்கள், பாராளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் அதிகார சபை உறுப்பினர்கள் அல்லது ஏனைய அரசியல் அதிகாரிகள் வாக்கெண்ணல் நிலையக் கட்டிடத் தொகுதிக்குள்/நிலையத்திற்குள் உட்பிரவேசிக்காதிருக்க வழிவகை செய்தல்.

04. வாக்கெண்ணல் அல்லது முடிவுகளை வெளியிடுதல் மண்டபங்களின் முகவர்களாக வருகை தருகின்ற எந்தவொரு அரசியல்வாதியினாலும் சுடுகலன்கள் அல்லது சுடுகலன்களின்றி பாதுகாவலர்களை அம்மண்டபங்களினுள் அழைத்துச் செல்வதில் இருந்து தவிர்ந்திருத்தல் மற்றும் வாக்கெண்ணல் மண்டபங்கள், முடிவுகளை வெளியிடும் மண்டப தொகுதி என்பவற்றினுள் சட்டவிரோதமாக ஆட்களை அழைத்து வருவதிலிருந்து தவிர்ந்திருத்தல்.

**ஊ. ஏனைய முக்கிய விடயங்கள்**

01. தேர்தலில் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள் தத்தம் கட்சிகளின் கொள்கைகளையும் ஒரு குறித்த காலப்பகுதிக்குள் தமது கட்சியால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டமொன்றையும் வாக்காளருக்கு முன்வைத்தல் மற்றும் அதன் பிரதிகளை தேர்தல்கள் ஆணையாளருக்கும் அதன் மூலம் ஆவண பாதுகாப்பகத்திற்கும் அனுப்பி வைத்தல்.

02. தேர்தல் பிரச்சாரங்கள் / ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் அரசாங்க ஆதனங்கள், உத்தியோகபூர்வ வாகனங்கள் அல்லது அலுவலர்களை ஈடுபடுத்தாமை மற்றும் அரச அலுவலகங்கள், பாடசாலைகள் போன்ற எந்தவொரு நிறுவனத்தினுள்ளும் அல்லது அத்தொகுதியினுள் வாக்கு இரந்து கேட்டல், துண்டுப் பிரசுர விநியோகம், பதாகை காட்சிப்படுத்தல் அல்லது அறிவித்தல் காட்சிப்படுத்தல் போன்ற பிரச்சாரங்களை மேற்கொள்ளாதிருத்தல்.

03. மக்கள் பிரதிநிதிகள் தமது உத்தியோகபூர்வ கடமை நடவடிக்கைகளூடாக தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொள்வதைத் தவிர்ந்து கொள்ளல்.

04. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காகக் கட்டணமின்றி அரசாங்க உலங்கு வானூர்திகளையோ அல்லது வேறு வாகனங்களையோ பயன்படுத்துவதைத் தவிர்ந்து கொள்ளல்.

05. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காகப் பொதுக்கட்டிடங்கள், விளையாட்டு மைதானங்கள், அரசாங்க சுற்றுலா விடுதிகள் என்பன பயன்படுத்தப்படுமாயின் உரிய கொடுப்பனவுகளை வழங்கி அவற்றைப் பயன்படுத்தலும் மற்றும் அத்தகைய வளங்களை அதேமுறையில் அனைத்துத் தேவையான தரப்பினராலும் பெற்றுக்கொள்ளத்தக்கவாறு நடவடிக்கையெடுத்தலும்.

06. தேர்தல் காலத்தில் அரசியல் செய்திகளையும் , கடிதங்களையும் மற்றும் அறிவித்தல்கள் அனுபந்தங்கள் போன்றவற்றை அரசின் அல்லது அரச நிறுவனங்களின் செலவில் பிரசுரிக்காமை.

07. தேர்தல் காலக்கெடுவிற்குள் வாக்காளர்களை அல்லது அரச அலுவலர்களைத் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தமது தனிப்பட்ட அல்லது உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு அழைத்து உபசரிப்பதைத் தவிர்த்துக் கொள்ளல்.

08. ஏதேனுமொரு விதத்தில் நிதி ஏற்பாடுகளை வழங்கல் அல்லது வாக்குறுதிகளையளித்தல், கருத்திட்டங்கள் அல்லது திட்டங்கள் என்பவற்றிற்காக அடிக்கல் நாட்டல் பாதைகள், நீர், மின்சாரம் ஆகிய வசதிகளை வழங்கல் தொடர்பான வாக்குறுதிகளையளித்தல் மற்றும் தமது கட்சிக்கு அனுகூலம் ஏற்படுத்தத்தக்கவாறு வளைத்துப் பிடித்துக் கொள்ள முடிந்த வாக்காளர்களுக்காக முறையற்ற விதத்தில் மிகத் துரிதகதியில் அரசாங்கத் துறையின் பதவிகள் மற்றும் நியமனங்கள் என்பவற்றை வழங்குவதைத் தவிர்த்தல்.

09. தேர்தல் சட்ட மீறல்கள், தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தல், தேர்தல் மோசடிகள் மற்றும் குற்றங்கள் தொடர்பான சட்டங்களை அமுல்படுத்துகின்ற துறைகளினால் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளில் தலையிடாமையும் அத்துறைகளுக்கு சுயாதீனமாக நடந்துகொள்ளத் தேவையான பின்னணியை உருவாக்கலும்.

10. தேர்தல் காலப்பகுதிக்குள் எதிர்த்தரப்பினர்களுக்கும் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களுக்கும் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களினூடாக உறுதிப்படுத்த முடியாத தவறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு உரிய தரப்பினருக்கு அவற்றிற்கு பதிலளிப்பதற்கான சந்தர்ப்பத்தைக் கூட வழங்காமல் நிகழ்ச்சித் திட்டங்களை பிரச்சாரம் செய்வதற்காக ஊடகங்களைப் பயன்படுத்தாமை.

11. அரசியல் கட்சியொன்று அல்லது அரசியல்வாதிகள் தொடர்பாக செய்யப்படுகின்ற விமர்சனங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிப்பதற்கு வன்முறைத் தன்மையற்ற சட்டரீதியான செயற்பாடுகளை மாத்திரம் பின்பற்றல்.

12. மக்கள் பிரதிநிதிகளின் சட்டரீதியான மெய்பாதுகாவலர்களாகக் கடமையாற்றுகின்ற பொலிசார் மற்றும் ஏனைய பாதுகாப்புத்துறை அதிகாரிகள் உத்தியோகப்பற்றற்ற விதத்தில் அரசியல், தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதையும் எதிர்க்க 'ட்சியினரின் தேர்தல் செயன்முறைகளைச் செயலிழக்கச் செய்வதையும் தவிர்ந்துக் கொள்ளல் அவ்வாறான செயற்பாடுகளை பகிரங்கமாக கண்டித்தல்.

13. எந்தவோர் அரசியல் கட்சியோ அல்லது அரசியல் அமைப்போ தமது தேர்தல் நடவடிக்கைகளில் சட்டரீதியற்ற விதத்தில் ஆயுதந்தாங்கிய நபர்களை ஈடுபடுத்த நடவடிக்கைகள் எடுக்குமாயின் அத்தகைய செயற்பாடுகளைப் பகிரங்கமாகக் கண்டிப்பதும் மற்றும் அவற்றைத் தடுப்பதற்காக உரிய தரப்பினருக்கு அறிவித்தல்.

14. தேர்தல் காலக்கெடுவினுள் நடாத்தப்படுகின்ற அரச வைபவங்களின் போது வேட்பாளர்களை அல்லது அரசியற் கட்சிகளின் முதன்மை செயற்பாட்டாளர்களை பங்குகொள்ள செய்யாதிருத்தல் மற்றும் அவ்வாறான வைபவங்களை கட்சி/வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்கு பயன்படுத்தாதிருத்தல்.

15. அரசியல் தொடர்புபட்ட நியமனங்களை வழங்குதல் மற்றும் பதவியுயர்வு அல்லது இடமாற்றம் செய்தல் என்பனவற்றில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்களிப்புச் செய்வதிலிருந்து தவிர்ந்திருத்தல்.

16. தேர்தல் நடாத்தப்படுகின்ற ஒரு பிரதேசத்தில் அரசாங்கதத்தின் ஆதரவில் களியாட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் பொருட்காட்சிகள், விளையாட்டுப் போட்டிகள் என்பன நடாத்தப்படுமாயின் அச்சந்தர்ப்பங்களை தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களினதும் கட்சிகளினதும் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கோ அல்லது தேர்தல் பிரச்சாரங்களோடு தொடர்புபடுத்துவதற்கோ நடவடிக்கையெடுக்காமை.

17. பகிரங்க பரீட்சைகள் மற்றும் புலமைப் பரிசில் பரீட்சைகளுக்கு ஏற்புடையதாக நடாத்தப்படுகின்ற கல்வி செயலமர்வுகள் ஊடாக கட்சி/வேட்பாளர் ஊக்குவிப்பை மேற்கொள்ளாதிருத்தல்.

**வேறு விடயங்கள்**

➢ தேசிய கீதம், தேசியக் கொடி, சமயச் சின்னம், சமயக் கொடிகள்,சமய குரவர்கள் மற்றும் சமயத் தலைவர்களின் சித்திரங்கள் அல்லது வரைபடங்கள் போன்ற எவற்றையும் அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்காக அல்லது பாதிப்புறச் செய்வதற்காக பயன்படுத்தல் கூடாது. மேலும் முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை கட்சி/குழு அல்லது வேட்பாளர் ஊக்குவிப்புக் கூட்டங்கள் ஆகியவற்றில் அல்லது அறிவித்தல், பிரச்சரப் பலகை என்பனவற்றில் காட்சிப்படுத்தல் கூடாது. மேலும் கட்சி/வேட்பாளர் ஊக்குவிப்புக்காக எந்தவொரு அரச அலுவலரினதும் உருவப்படத்தை அல்லது வரைபடத்தை எவ்விதத்திலும் பயன்படுத்தக் கூடாது.

➢ அரசியற் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்களின் பிரச்சார அலுவல்களுக்காக பொதுவாக பெற்றுக் கொடுக்கப்படுகின்ற அரச இடங்கள் ஒரு கட்சியின் அல்லது ஒரு வேட்பாளரின் பிரச்சார அலுவல்களுக்காக மாத்திரம் குறித்தொதுக்கிக் கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கக் கூடாதென்பதோடு, வேறு கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்களின் பிரச்சார அலுவல்களுக்காகவும் அவ்வாறான இடங்களைப் பெற்றுக்கொள்வதற்கு சம சந்தர்ப்பம் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

➢ உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய விளையாட்டு மைதானங்களை அல்லது மண்டப வசதிகளை குறித்தொதுக்கும் போது ஏற்படக்கூடிய சிக்கல்களை குறைத்துக் கொள்வதற்காக மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் பேணப்பட்டு வருகின்ற மாவட்ட குழுவின் உத்தரவுகளுக்கமைய செயற்படுவதற்கு அனைத்து அரசியல்வாதிகளும் ஆதாரவாளர்களும் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் மற்றும் ஏற்புடையவிடத்து அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள்,வேட்பாளர்களின் முகவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மேற்கூறப்பட்டவிடயங்களுக்கு இசைவாக செயற்படுவார்களென எதிர்பார்க்கப்படுவதோடு, இவ்வொழுக்க நெறிக்கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தமது முகவர்கள், கட்சிக்காரர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பின்பற்றுகிறார்களென திருப்தியடையக்கூடிய விதத்திலான பொறிமுறையொன்று வேட்பாளர்கள் மற்றும் ஏற்புடையவிடத்து கட்சிச் செயலாளர்களினால் நடைமுறைப்படுத்தப்படுமென மேலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.

## பாராளுமன்றத் தேர்தல் - 2015
## அரசியல் பிரச்சார அலுவல்களில் ஈடுபடல்.

01. வீடுவீடாகச் சென்று மேற்கொள்ளப்படுகின்ற பிரச்சார அலுவல்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல் போன்ற பிரச்சார அலுவல்களை இரவு 8.00 மணியின் பின்னர் மேற்கொள்ள வேண்டாமென அறிவிக்கப்பட்டுள்ளதோடு, அவ்வலுவல்களை இருளடைந்ததன் பின்னர் இடைநிறுத்துவது மிகவும் பொருத்தமென அறிவிக்கப்பட்டுள்ளது.

**02. ஏதேனும் அரசியல் கட்சியின் கூட்டமொன்றை நடாத்துகின்ற போது இரவு 10.00 மணிவரை ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதற்காக குறித்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமிருந்து முறையான அனுமதி கிடைக்கப்பெற்றிருப்பின், அவ்வரசியல் கட்சிக் கூட்டங்களை இரவு 10.00 மணிவரை நடாத்துவதற்கு எவ்விதமான தடையும் கிடையாது. இருப்பினும், கூட்டக் காணிக்கு வெளியில் ஒலி விரிவாக்கமடையாதவாறு ஒலியைக் கட்டுப்படுத்தல் வேண்டும்.**

03. இருப்பினும், மிகவும் சன நெரிசல்மிக்க பிரதேசமொன்றில் வீடுகளுக்கு மத்தியில் அமையப் பெற்றுள்ள சிறிய காணியொன்றில் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தி நடாத்தப்படுகின்ற கூட்டங்களின் போது ஒலிபெருக்கிகளுக்கான அனுமதிப் பத்திரங்களின் காலம் மட்டுப்படுத்தப்படும்.

04. அரசியல் கட்சிகள் கூட்டங்களை நடாத்தும் போது சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள காலப்பகுதியினுள் ஒலி கூட்டக் காணிக்கு வெளியில் பரவாதவாறு குறைந்த ஒலியுடன் கூடிய இசைப் பாடலொன்றை அல்லது பாடல்கள் சிலவற்றை மாத்திரம் பாடுவதற்குத் தடையேதுமில்லை.

05. இருப்பினும், இசைக் கச்சேரிகளுக்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டு அதன் மூலம் அரசியல் பிரச்சார அலுவல்களை மேற்கொள்வதற்குச் செய்யப்படுகின்ற முயற்சிகளைத் தவிர்த்துக் கொள்வதற்குப் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதோடு, இத்தேர்தல் காலப்பகுதியினுள் நடாத்தப்படுகின்ற இசைக் கச்சேரிகளின் போது குறித்த காணிக்கு வெளியில் ஒலி விரிவாக்கமடைவதற்கு இடமளிக்க வேண்டாமெனப் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

06. இவ்வறிவித்தல் வெளியிடப்படுவது அரசியல் கட்சிகளின் கூட்டங்கள் இரவு 8.00 மணியின் பின்னர், நிறுத்தப்பட வேண்டுமாவென்பது தொடர்பில் கேட்கப்படுகின்ற விசாரணைகளுக்கான பதிலாகவேயாகும்.

07. 2015.08.15, 16, 17 ஆகிய தினங்களில் எவ்விதமான பிரச்சார அலுவல்களையும் மேற்கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

மஹிந்த தேசப்பிரிய
**தேர்தல்கள் ஆணையாளர்**

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
12.08.2015

குறிப்பு :

இதன் பிரதிகள் தேர்தல் முறைப்பாட்டு விசாரணைப் பணியகத்தினூடாக அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் மற்றும் அரசியல் கட்சிகளுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1923/4 - 2015 ජූලි මස 13 වැනි සඳුදා - 2015.07.13

1923/4 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேர்தல்கள் திணைக்களம்**

*அறிவித்தல்*

**பாராளுமன்றத் தேர்தல் - 2015**

பத்தொன்பதாம் அரசியலமைப்புத் திருத்தத்தினால் திருத்தியமைக்கப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (4) (அ) ஆம் உப உறுப்புரை மற்றும் 104ஆ (5) (இ) (1) ஆம் உப உறுப்புரை என்பவற்றின் கீழ், அரச வளங்களின் துஷ்பிரயோகத்தைத் தவிர்க்கும் பொருட்டும் தேர்தலை முறையாக நடாத்தும் நோக்கிலும் அரசாங்க அலுவலர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்காக அரச நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் அலுவலர்களுக்கு விடுக்கப்படும் பணிப்புரைகள்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104 ஐ ஆம் உப உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் காலப் பகுதிக்குள் அரசிற்கு அல்லது ஏதேனும் அரச கூட்டுத்தாபனத்திற்கு அல்லது நியதிச்சட்ட சபைக்கு உரித்தான அசையும் அல்லது அசையா ஆதனமொன்றை அத்தேர்தலில் போட்டியிடுகின்ற எவரேனும் வேட்பாளரொருவரை அல்லது ஏதேனும் அரசியற் கட்சியொன்றை அல்லது சுயேச்சைக் குழுவொன்றை ஊக்குவிக்கும் அல்லது பாதிப்பினை ஏற்படுத்தும் பணிக்காகப் பயன்படுத்தல், அத்தேர்தலில் போட்டியிடுகின்ற எவரேனும் வேட்பாளர் ஒருவரினால் அல்லது அரசியற் கட்சியொன்றினால் அல்லது சுயேச்சைக் குழுவொன்றினால் பயன்படுத்தப்படல், ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கமைய ஆணைக்குழுவின் தவிசாளரின் அல்லது தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் எழுத்துமூலப் பணிப்புரையொன்றினால் தடைசெய்யப்படும் தத்துவம் ஆணைக் குழுவிற்குரித்தானதென அரசியலமைப்பின் 104ஆ (4) (அ) ஆம் உப உறுப்புரையில் குறிப்பிடப்பட்டிருப்பதாலும், ஆணைக்குழு அமைத்துருவாக்கப்படும் வரை அத்தத்துவங்கள் தேர்தல்கள் ஆணையாளருக்குரித்தாகுமென பத்தொன்பதாம் அரசியலமைப்புத் திருத்தத்தின் 49 ஆம் பிரிவின் (3) (அ) உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதாலும், தேர்தல்கள் ஆணையாளர் வடுகே வருணசிறி மஹிந்த தேசப்பிரிய ஆகிய என்னால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புரைகள் வெளியிடப்படுகின்றன.

அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள்/நியதிச் சட்ட சபைகள் மற்றும் ஏனைய அத்தகைய அரச நிறுவனங்கள், அரச வங்கிகள்/அரசாங்கப் பல்கலைக்கழகங்கள், மாகாண சபைகள், உள்ளூரதிகார சபைகள், அரச கம்பனிகள்/ஆயுதப்படைகள் உள்ளிட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்குச் சொந்தமான அனைத்து நிறுவனங்களுக்குமுரிய வாகனங்கள், கருவிகள், இயந்திரப் பொறிகள், சுற்றுலா வங்களாக்கள், விடுமுறை விடுதிகள் மற்றும் கட்டிடங்கள் உள்ளிட்ட அனைத்து அசையும் மற்றும் அசையா ஆதனங்கள் மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனங்களில் பணியாற்றுகின்ற எந்தவோர் அலுவலரை அல்லது ஊழியரை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற ஏதேனும் அரசியற் கட்சியொன்றை/சுயேச்சைக் குழுவொன்றை அல்லது வேட்பாளரொருவரை ஊக்குவிப்பதில் அல்லது பாதிப்பை ஏற்படுத்துவதில் எவ்விதத்திலும் ஈடுபடுத்தக் கூடாது. அவ்வாறு ஈடுபடுத்துவதற்கு எந்தவோர் அரசியல்வாதிக்கு அல்லது அலுவலருக்கு அல்லது வேறேவரேனும் நபருக்கு இடமளிக்கக் கூடாது.

பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அல்லது பொதுமக்களை அறிவூட்டுவதற்காக அரசாங்கத்தால் அல்லது மாகாண சபைகளால் அல்லது வேறு அரச நிறுவனங்களினால் நடாத்தப்படுகின்ற நடமாடும் சேவைகள், பயிற்சி அமர்வுகள், கண்காட்சிகள்,



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

கருத்தரங்குகள், புலமைப் பரிசில் கையளிப்புக்கள், உதவிகள் அல்லது நிவாரண உதவிகள் என்பவற்றின் கையளிப்பு வைபவங்கள், பல்வேறு அபிவிருத்திக் கருத்திட்டங்களை மக்கள் உடைமையாக்கல் அல்லது திறப்பு விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றைப் பயன்படுத்தி எந்தவோர் அரசியற் கட்சியையும்/சுயேச்சைக் குழுவையும் அல்லது வேட்பாளரொருவரையும் ஊக்குவிக்க அல்லது பாதிக்கச் செய்ய நடவடிக்கையெடுக்கக் கூடாது. உத்தேச பணிகள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிக்கையிட வேண்டுமென்பதோடு, ஒத்திவைக்கப்பட முடியாத அல்லது அத்தேர்தலுக்கு அழுத்தம் கொடுக்காதெனத் தோன்றுகின்ற பணிகள் தொடர்பாக நடவடிக்கையெடுப்பதற்கான முன்னனுமதியைப் பெற்றுக் கொள்ளல் அத்தியவசியமாகும். இயற்கை அனர்த்தமொன்று அல்லது திடீர் அபாயமொன்று அல்லது அவசர இடுக்கண் ஒன்றின்போது நடவடிக்கையெடுப்பதற்கு இவ்விதி ஏற்புடையதாகாத போதிலும் அத்தகைய சந்தர்ப்பங்களிலும் கூட கட்சி/ வேட்பாளர் ஊக்குவிப்புக்கு இடமளித்தல் கூடாது.

அதேபோன்று பாராளுமன்றத் தேர்தலில் வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்ற அரசியல்வாதிகள் ஏதேனும் பதவியொன்றை வகிப்பார்களாயின், அவர்களால் வகிக்கப்படுகின்ற பதவி காரணமாக கட்டாயம் கலந்து கொள்ள வேண்டிய அரச வைபவங்களில் மாத்திரம் அத்தகைய அரசியல்வாதிகளை கலந்து கொள்ளச் செய்ய முடியுமென்பதோடு, அத்தகைய எந்தவொரு வைபவத்திலும் கட்சி/வேட்பாளர் ஊக்குவிப்பை அல்லது பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பணிகளை மேற்கொள்ள எவருக்கும் அவகாசம் அளிக்கக் கூடாது. தேர்தல் காலப்பகுதிக்குள் நடாத்தப்படுகின்ற சம்பிரதாயபூர்வமான உத்தியோகபூர்வ அரச வைபவங்கள் தவிர்ந்த ஏனைய வைபவங்களை நடாத்துகையில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் கலந்து கொள்வார்களாயின் அது தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவித்து இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொள்ள வைபவங்களை ஒழுங்கமைக்கின்ற அரசாங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

சனாதிபதி அவர்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைய மேற்கொள்ளப்படுகின்ற அல்லது நியதிச்சட்ட விதிகளுக்கமைய மேற்கொள்ளப்படுகின்ற அல்லது பாராளுமன்ற நியதிச்சட்டங்களின் மூலம் குறிப்பாக விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள், பதவியுயர்வுகள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அல்லது நீதிமன்றச் சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் கீழ் முறையான பகிரங்க அறிவித்தல்கள் அல்லது வர்த்தமான அறிவித்தல்கள் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள், பதவியுயர்வுகள் தவிர்ந்த இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்குரிய அனைத்து அரச நிறுவனங்கள் தேர்தல் காலப்பகுதிக்குள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அல்லது தேர்தல்கள் ஆணையாளரின் முறையான அனுமதியின்றி எவ்வகையான ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள் மற்றும் பதவியுயர்வுகளையும் மேற்கொள்ளக்கூடாது.

பாராளுமன்றத் தேர்தல் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்படவென எதிர்பார்க்கப்படுகின்ற அரசாங்க அலுவலர்களின் பொதுவான இடமாற்றங்கள் பாராளுமன்றத் தேர்தல் காலப்பகுதி முடிவடையும் வரை இடைநிறுத்தப்பட வேண்டுமென்பதோடு, தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படுகின்ற அரசாங்க அலுவலர்களினதும் ஊழியர்களினதும் வருடாந்த இடமாற்றங்கள் கூட செயற்படுத்தப்பட வேண்டியது, தேர்தல்கள் ஆணைக்குழுவின் இன்றேல் தேர்தல்கள் ஆணையாளரின் அனுமதியுடன் மாத்திரமேயாகும். மருத்துவ சிகிச்சைக்காக மேற்கொள்ளப்படுகின்ற இடமாற்றல்கள், அலுவலர்களிடையே இடம்பெறுகின்ற சிநேகபூர்வ பரஸ்பர இடமாற்றங்கள், ஒழுக்காற்றுக் காரணங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற இடமாற்றங்கள் இன்றியமையாத வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற இடமாற்றங்கள் என்பன தேர்தல்கள் ஆணையாளரின் மேல் அனுமதிக்குட்பட்டு மேற்கொள்ளப்பட முடியுமென்பதோடு, அத்தகைய இடமாற்றங்கள் அரசியல் காரணங்களால் மேற்கொள்ளப்பட்டவையென்ற முறைப்பாடுகள் கிடைக்கக் கூடாது. அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச்சட்ட சபைகள், அரச வங்கிகள் /அரசாங்கப் பல்கலைக்கழகங்கள், அரசாங்கக் கம்பனிகள் போன்ற அரசாங்க நிறுவனங்களில் பணிபுரிகின்ற தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படாத அலுவலர்களின் இடமாற்றங்கள் அரசியல் காரணங்களினால் மேற்கொள்ளப்பட்டனவென முறைப்பாடுகள் கிடைக்காதவாறு மேற்கொள்ளப்பட பொறுப்பாதல் வேண்டும். இக்காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு நியமனமும், பதவியுயர்வும் அல்லது இடமாற்றமும் தேர்தல் சட்டங்களை மீறும் விதத்திலோ அல்லது தேர்தல் செயன்முறைக்கு தடங்கல்களை ஏற்படுத்த தக்க விதத்திலோ மேற்கொள்ளப்படாமை விடயத்திற்குப் பொறுப்பான அலுவலர்களின் கடமையாகும்.

அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச வங்கிகள்/அரசாங்கப் பல்கலைக்கழகங்கள், மாகாண சபைகள், உள்ளூரதிகார சபைகள், அரசாங்கக் கம்பனிகள்/ஆயுதப் படைகள் உள்ளிட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்குரிய ஒவ்வொரு நிறுவனத்திலும் பணியிலீடுபட்டுள்ள அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட அரசியல் உரிமைகள் உரித்தற்ற அரசாங்க அலுவலர்கள் அரசியல் நடவடிக்கைகளிலிருந்து முற்றாக விலகியிருக்க வேண்டுமென்பதோடு, அரசியல் உரிமைகள் உரித்துள்ள அலுவலர்கள் கூட அலுவலக நேரங்களிலோ அல்லது கடமை விடுமுறையைப் பெற்றோ அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. மேலும் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தவிசாளர்கள் மற்றும் பணிப்பாளர்கள் உள்ளிட்ட அந்நிறுவனங்களின் நிரந்தர பணியாட் குழுவில் உள்ளடங்காத பதவி தாங்குநர்களும் அலுவலக நேரத்திலோ அல்லது கடமை விடுமுறையைப் பெற்றோ அல்லது அரச ஆதனங்களைப் பயன்படுத்தியோ அல்லது கடமை நடவடிக்கைகள் என்ற பேரிலோ கட்சியொன்றை அல்லது வேட்பாளரொருவரை ஊக்குவித்தல் அல்லது ஏதேனும் கட்சியொன்றுக்கு, வேட்பாளரொருவருக்கு எதிராக நடந்து கொள்ளல் கூடாது.

தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவதற்கென மேற்கொள்ளப்படுகின்ற அலுவலர்கள் மற்றும் வாகன கணக்கெடுப்பின் போது தத்தம் நிறுவனங்களின் அனைத்து அலுவலர்களினதும், அதிபர்களினதும் மற்றும் ஆசிரியர்களினதும் தகவல்களையும், வாகனங்கள் பற்றிய விபரங்களையும் வழங்குதல் நிறுவனத் தலைவர்களின் பொறுப்பென்பதோடு, அனைத்து அலுவலர்கள், அதிபர்கள் மற்றும்

ஆசிரியர்கள் ஆகியோர் தத்தம் தகவல்களை சந்தர்ப்பத்திற்கேற்றவாறு தேர்தல்கள் ஆணையாளருக்கோ அல்லது தெரிவத்தாட்சி அலுவலருக்கோ சமர்ப்பிக்க பணிக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவதற்கு தகைமையுள்ள அனைத்து அரச அலுவலர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் சேவைத் தேவைப்பாட்டிற்கமைய தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவார்களென்பதோடு, அவ்வாறு தேர்தல் கடமைகளுக்காக அழைப்பு விடுக்கப்படுகின்ற அனைத்து உத்தியோகத்தர்களும், அதிபர்களும் மற்றும் ஆசிரியர்களும் தமக்குக் கையளிக்கப்படுகின்ற கடமைகளைப் புறக்கணிப்பு ஏதுமின்றி ஆற்றுவதற்காக தேர்தல்கள் ஆணையாளர்கள், தெரிவத்தாட்சி அலுவலர்களினால் விதிக்கப்படுகின்றவாறு சேவையிலீடுபடல் வேண்டும்.

தேர்தல் தினத்தன்று மாத்திரமன்றி தேர்தலோடு தொடர்புடைய பூர்வாங்க ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளுக்காகவும் அரசாங்க நிறுவனங்களின் அலுவலர்கள், வாகனங்கள், கருவிகள் மற்றும் ஏனைய வழங்கல் சேவைகள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இன்றேல் தேர்தல்கள் திணைக்களத்திற்கு தேவைப்படுகின்றமையால், அத்தேவைப்பாடுகளை நிறைவேற்ற அரசாங்க/அரச நிறுவனங்களின் தலைவர்கள் பணிக்கப்படுகின்றனர்.

பாராளுமன்றத் தேர்தலோடு தொடர்புடைய அனைத்து சட்டங்களையும் வலுவாக்கம் செய்வதற்கும் பாதுகாப்பதற்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு /தேர்தல்கள் ஆணையாளருக்கு ஒத்துழைப்பு வழங்கத் தவறுகின்ற, உரிய சட்டங்களை வலுவாக்கம் செய்யப் பொறுப்பாகவுள்ள அனைத்து அரசாங்க அதிகாரிகள் தொடர்பாகவும் பத்தொன்பதாம் அரசியலமைப்புத் திருத்தத்தினால் திருத்தியமைக்கப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104 எஎ உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடவடிக்கையெடுக்கப்படும்.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1928/3 - 2015 අගෝස්තු මස 19 වැනි බදාදා - 2015.08.19

1928/3 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்*

இதற்குரிய அட்டவணையின் II ஆம் நிரலில் காணப்படும் பெயர்களையுடைய ஆட்கள் ஒவ்வொருவரும், அட்டவணையின் I ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்துக்கான பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனரென 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 62 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2015, ஓகத்து மாதம் 19.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II |
|---|---|
| தேர்தல் மாவட்டம் | பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள் |
| **இல. 1 - கொழும்பு** | **ஐக்கிய தேசியக் கட்சி** |
| | ரணில் விக்கிரமசிங்க |
| | அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ |
| | ஹர்ஷ த சில்வா |
| | ரவீந்திர சன்ட்ரேஸ் கருணாநாயக்க |
| | அச்சிகே பாட்டலி சம்பிக ரணவக்க |
| | சயிதுல்லா முஸ்தஜாப் மரிக்கார் |
| | மொஹொமட் முஜிபுர் ரஹுமான் |
| | இரான் விக்ரமரத்ன |
| | விஜயதாஸ ராஜபக்ஷ |
| | ஹிருனிகா எராஞ்ஜலி பிரேமச்சந்திர |
| | எம். கணேஷன் |

1A

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *தேர்தல் மாவட்டம்* | *பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள்* |

**இல. *1* - கொழும்பு** *(தொடர்ச்சி)*

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி**

*விமல் வீரவங்ஷ*
*உதய பிரபாத் கம்மன்பில*
*அச்சிகே தொன் சுசில் பிரேமஜயந்த்*
*தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன*
*பந்துல குணவர்தன*
*கொந்தகமகே மொஹான் லால் கிரேரு*
*காமினி குலவங்ஷ லொகுகே*

**மக்கள் விடுதலை முன்னணி**

*அநுர குமார திசாநாயக்க*

**இல. *2* - கம்பஹா**

**ஐக்கிய தேசியக் கட்சி**

*அ. அ. ரஞ்ஜன் ராமநாயக்க சத்த வித்த*
*அர்ஜுன ரணதுங்க*
*தினேந்திர ருவன் விஜேவர்தன*
*ஹர்ஷன சுபுன் ராஜகருணா*
*அ. அஜித் குமார மான்னப்பெரும*
*அமரதுங்க ஜோன் எந்தனி எம்மானுவல்*
*சேனாதீரகே தொன் கவிந்த ஹேஷான் ஜயவர்தன*
*சத்துர சந்தீப சேனாரத்ன நம்புகார ஹெலம்பகே*
*எட்வட் குணசேகர தெஹிவல லியனகே*

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி**

*பிரசன்ன ரணதுங்க*
*புளத்வெலகே பிரசன்ன ரணவீர*
*அந்தனி நிமல் லான்சா வர்ணகுலசூரிய*
*ஆரச்சிலாகே சிசிர ஜயகொடி*
*ஹேரத் ஹிட்டிஹாமி அப்புஹாமிலாகே தொன் இந்திக அநுருத்த*
*பர்பச்சுவா சுதர்சினி பிரனாந்து புள்ளே*
*ஆரச்சிகே கணேபொல துலிப் பண்டுல பெரேரா விஜேசேகர*
*அ. அலகியவன்ன லசந்த*

**மக்கள் விடுதலை முன்னணி**

*எச்.எம். விஜித ஹேரத்*

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *தேர்தல் மாவட்டம்* | *பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள்* |
| **இல. 3 - களுத்துறை** | **ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி** |
| | குமார வெல்கம |
| | அபேகுணவர்தன பஹலகே ரோஹித பியதிஸ்ஸ |
| | ஜயந்த சமரவீர |
| | விதுர விக்கிரமநாயக்க |
| | ஹாதுவாமெரெஞ்ஞு பியல் நிசாந்த த சில்வா |
| | **ஐக்கிய தேசியக் கட்சி** |
| | நம்புகார ஹெலபகே ராஜித ஹரிஸ்சந்திர சேனாரத்ன |
| | அஜித் பத்மகாந்த பெரேரா |
| | பாலித குமார தெவரப்பெரும |
| | லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன |
| | **மக்கள் விடுதலை முன்னணி** |
| | அப்புஹாமிலாகே நளிந்த ஜயதிஸ்ஸ |
| **இல. 4 - மஹநுவர** | **ஐக்கிய தேசியக் கட்சி** |
| | கிரிஎல்ல லக்ஷ்மன் பண்டார |
| | மயந்த யஸ்வன்த் திசாநாயக்க |
| | அப்துல் ஹலீம் மொஹமட் ஹாஷிம் |
| | அ. இபதுல் ரவுப் ஹக்கீம் |
| | ஹேரத் முதியன்சேலாகே லக்கீ திசாநாயக்க ஜயவர்தன |
| | எம். வேலுகுமார் |
| | அலுத்கமகே ஆனந்த அலுத்கமகே |
| | **ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி** |
| | லோஹான் எவின்தர ரத்வத்தே |
| | அலுத்கமகே மஹிந்தானந்த மீதலாவே |
| | திலும் சுராஜ் பண்டார அமுணுகம |
| | அநுராத லங்கா பிரதீப் ஜயரத்ன |
| | கெஹெலிய றம்புக்வெல்ல |
| **இல. 5 - மாத்தளை** | **ஐக்கிய தேசியக் கட்சி** |
| | அலுவிஹாரே வசந்த |
| | அலுவிஹாரே ரஞ்ஜித் |
| | ஜம்புகஹ பிட்டியே கெதர ரோஹினி குமாரி விஜேரத்ன |
| | **ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி** |
| | அச்சிகே தொன் வித்தான லக்ஷ்மன் வசந்த பெரேரா |
| | ஜனக்க பண்டார தென்னகோன் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *தேர்தல் மாவட்டம்* | *பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள்* |
| **இல. 6 - நுவரெலியா** | **ஐக்கிய தேசியக் கட்சி** |
| | *திகம்பரம் பழனி* |
| | *வேலுசாமி ராதாகிருஷ்ணன்* |
| | *திலகராஜா மயில்வாகனம்* |
| | *எரஞ்ஜன் நவீன் திசாநாயக்க* |
| | *கலாந்துகொட கங்கானம்கே பியதாச* |
| | **ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி** |
| | *ஆறுமுக தொண்டமான்* |
| | *ஆர். எம். சீ. பி. ரத்நாயக்க* |
| | *சிவலிங்கம் முத்து* |
| **இல. 7 - காலி** | **ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி** |
| | *சந்திம வீரக்கொடி* |
| | *ரமேஷ் சமிந்த பெந்தொட்ட பத்திரண* |
| | *நிசாந்த முத்துஹெட்டிகமகே* |
| | *மலிகஸ்பெ கோரலேகே நலின் மனூஷ நாணாயக்கார* |
| | *கீதா சமன்மலீ குமாரசிங்ஹ* |
| | *அகம்பொடி மொஹான் பிரியதர்ஸன த சில்வா* |
| | **ஐக்கிய தேசியக் கட்சி** |
| | *கயந்த கருணாதிலக்க* |
| | *அபேவர்தன வஜிர* |
| | *பந்துல லால் பண்டாரிகொட* |
| | *போபாகொட ஹெட்டிஆரச்சிகே விஜேபால* |
| **இல. 8 - மாத்தறை** | **ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி** |
| | *அழஹப்பெரும டலஸ் தஹம் குமார* |
| | *சுத்தச்சாரிகே பிரேமரத்ன* |
| | *அபேவர்தன யாப்பா மஹிந்த* |
| | *கஞ்சன வோதாத விஜேசேகர* |
| | *கஜதீர விதானெ ஆரச்சிகே பான்ஸ் சந்திரசிறி* |
| | **ஐக்கிய தேசியக் கட்சி** |
| | *அகலங்க புத்திக உதித தெத்துவ பத்திரண* |
| | *மங்கள சமரவீர* |
| | *சாகள கஜேந்திர ரத்நாயக்க* |

**அட்டவணை X**



**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *தேர்தல் மாவட்டம்* | *பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள்* |
| **இல. 9 - அம்பாந்தோட்டை** | **ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி** |
| | *நாமல் ராஜபக்ஷ* |
| | *மஹிந்த அமரவீர* |
| | *சமல் ஜயந்த ராஜபக்ஷ* |
| | *தெனகம வித்தாரணகே சானக தினுஷான்* |
| | **ஐக்கிய தேசியக் கட்சி** |
| | *சஜித் பிரேமதாச* |
| | *திலிப் வெதஆரச்சி* |
| | **மக்கள் விடுதலை முன்னணி** |
| | *கலப்பத்தி ஆரச்சிகே நிஹால்* |
| **இல. 10 - யாழ்ப்பாணம்** | **இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி** |
| | *சிவஞானம் சிறீதரன்* |
| | *மாவை சோமசுந்தரம் சேனாதிராசா* |
| | *ஆபிரகாம் சுமந்திரன் மதியாபரணம்* |
| | *தருமலிங்கம் சித்தார்த்தன்* |
| | *ஈஸ்வரபாதம் சரவணபவன்* |
| | **ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி** |
| | *டக்ளஸ் தேவானந்தா* |
| | **ஐக்கிய தேசியக் கட்சி** |
| | *மகேஸ்வரன் விஜயகலா* |
| **இல. 11 - வன்னி** | **இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி** |
| | *இருதயநாதன் சால்ஸ் நிர்மலநாதன்* |
| | *அ. அடைக்கலநாதன்* |
| | *அண்ணாமலை நடேசு சிவசக்தி* |
| | *சிவப்பிரகாசம் சிவமோகன்* |
| | **ஐக்கிய தேசியக் கட்சி** |
| | *அப்துல் ரிஷாட்* |
| | **ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி** |
| | *காதர் காதர் மஸ்தான்* |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *தேர்தல் மாவட்டம்* | *பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள்* |
| **இல. 12 - மட்டக்களப்பு** | **இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி** |
| | *ஞானமுத்து ஸ்ரீநேசன்* |
| | *சதாசிவம் வியாளேந்திரன்* |
| | *சீனித்தம்பி யோகேஸ்வரன்* |
| | **ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்** |
| | *அலி சாஹிர் மௌலானா செயிட்* |
| | **ஐக்கிய தேசியக் கட்சி** |
| | *அமீர் அலி செயிட் முஹம்மத் சிஹாப்தீன்* |
| **இல. 13 - திகாமடுல்ல** | **ஐக்கிய தேசியக் கட்சி** |
| | *தயா கமகே* |
| | *மொஹொமட் காசீம் மொஹமட் பயிசால்* |
| | *ஹபீப் மொஹமட் மொஹமட் ஹரீஸ்* |
| | *இப்ராஹிம் முஹம்மது முஹம்மது மன்சூர்* |
| | **ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி** |
| | *டீ. ரீ. டப். விமலவீர திசாநாயக்க* |
| | *ரதம்பல கமகே சிரியானி விஜேவிக்ரம* |
| | **இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி** |
| | *கவீந்திரன் கோடீஸ்வரன்* |
| **இல. 14 - திருகோணமலை** | **ஐக்கிய தேசியக் கட்சி** |
| | *அப்துல்லாஹ் மஹ்ரூப் முஹம்மது முஹம்மது இம்ரான் மஹ்ரூப்* |
| | **இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி** |
| | *இராஜவரோதயம் சம்பந்தன்* |
| | **ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி** |
| | *சுசந்த கல்கமுவ புஞ்சிநிலமே* |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *தேர்தல் மாவட்டம்* | *பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள்* |
| **இல. 15 - குருநாகல்** | **ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி** |
| | மஹிந்த ராஜபக்ஷ |
| | தயாசிறி ஜயசேகர |
| | ஏக்கநாயக, ரீ. பி. |
| | அநுர பிரியதர்ஷன யாப்பா அப்புஹாமில்லாகே |
| | ஜொன்ஸ்ரன் சேவியர் பர்னாந்து |
| | சாலிந்த திசாநாயக்க |
| | இந்திக பண்டாரநாயக்க |
| | பஸ்நாயக்க முதியன்சேலாகே டில்ஹான் தாராநாத் பஸ்நாயக்க |
| | **ஐக்கிய தேசியக் கட்சி** |
| | அக்கில விராஜ் காரியவசம் |
| | அலவத்துவல, ஜே. சீ. |
| | காமினீ ஜயவிக்ரம |
| | நலின் பண்டார ஜயமஹ |
| | ஆர். எம். எஸ். பி. நாவின்ன |
| | அசோக்க அபேசிங்க |
| | அமரசேன இந்துனில் துஷார கிரான பத்திரென்னெஹெலாகே |
| **இல. 16 - புத்தளம்** | **ஐக்கிய தேசியக் கட்சி** |
| | ஆர். பி. பாலித்த ரங்கே பண்டார |
| | நானாயக்கார வர்ணகுல பட்டபெந்திகே நிரோஷன் அர்ட்லி பிரியந்த பெரேரா |
| | அப்புஹாமி மாக்காவிட்ட ஆரச்சிகே தொன் ஹெக்ரர் ஹைஜினஸ் |
| | அபேசேகர வலிமுனி மெண்டிஸ் பிரியன்ஜித் ஹேமந்த சிசிர குமார |
| | அசோக்க பிரியந்த ஆர். டீ. |
| | **ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி** |
| | குருகமகே சனத் நிசாந்த பெரேரா |
| | பிரியங்கர ஜயரத்ன |
| | அருந்திக பர்னாந்து |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *தேர்தல் மாவட்டம்* | *பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள்* |
| **இல. 17 - அநுராதபுரம்** | **ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி** |
| | சந்திரசேன சமரகோன் முதியன்சேலாகே |
| | வீர குமார் திசாநாயக்க |
| | அசங்க ஷெஹான் சேமசிங்க |
| | துமிந்த திசாநாயக்க |
| | சரத் சந்திரசிறி முத்துகுமாரண |
| | **ஐக்கிய தேசியக் கட்சி** |
| | பேலிஸ்கே ஹெரிசன் |
| | குலதுங்க திசாநாயக்க முதியன்சேலாகே |
| | சந்திராணி ஒபீலியா பண்டார |
| | தொன் சந்திம கமகே |
| | அப்துல் ரஹுமான் இஸ்ஹாக் |
| **இல. 18 - பொலன்னறுவை** | **ஐக்கிய தேசியக் கட்சி** |
| | வசந்த நரேஷ் பராக்கிரம சேனாநாயக்க |
| | நாலக்க பிரசாத் கொலொன்னே |
| | அநுர சிட்னி ஜயரத்ன |
| | **ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி** |
| | அநுருத்த ரணசிங்க ஆரச்சிகே றொஷான் |
| | கமலத் சிறிபால |
| **இல. 19 - பதுளை** | **ஐக்கிய தேசியக் கட்சி** |
| | ஹரீன் பிரனாந்து |
| | ரவீந்திர சமரவீர |
| | லொகுகஸ்தொட்ட வித்தாரணகே சமிந்த விஜேசிறி |
| | அ. அரவிந்த் குமார் |
| | வடிவேலு சுரேஷ் |
| | **ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி** |
| | நிலெத்தி நிமல் சிறிபால த சில்வா |
| | தொன் ஆத்தர் சாமர சம்பத் தசநாயக்க |
| | தேனுக அமித் விதானகமகே |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *தேர்தல் மாவட்டம்* | *பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள்* |
| **இல. 20 - மொணராகலை** | **ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி** |
| | பேருகொட ஆரச்சிகே விஜித |
| | சுமேதா ஜீ. ஜயசேன |
| | ரத்நாயக்க முதியன்சேலாகே பத்ம உதய சாந்த குணசேகர |
| | **ஐக்கிய தேசியக் கட்சி** |
